மே - ஜூன் 2008

விலை ரூ.20/-

# தமிழரசு

செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு



## இரண்டே ஆண்டுகளில் திரண்டுவந்த சாதனைகள்



மேதகு இந்தியக் குடியரசுத்தலைவர் திருமதி.பிரதிபா பாட்டீல் அவர்களுடன்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்



மாண்புமிகு இந்தியப்பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களுடன்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்





மேதகு தமிழக ஆளுநர் திரு.சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களுடன்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்



கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் (அமெரிக்கா)
தெற்காசிய ஆய்வு மைய 'தமிழ்ப்பீடத்தின்' 10ஆம் ஆண்டு விழாவையொட்டி,
கலைஞர் அவர்களின் எழுத்தோவியங்களின் தொகுப்பான
'கலைஞர் களஞ்சியம்' நூலினை சென்னையிலுள்ள
அமெரிக்க துணைத் தூதர் வெளியிட்டார்.

# தமிழரசு

செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2039

சித்திரை-வைகாசி-ஆனி / மே-ஜுன் 2008

மலர் : 39 இதழ் : 11 & 12



## ஆசிரியர் குழு

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :

**கோ. சந்தானம், இ.ஆ.ப.,**
அரசுச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள்
மற்றும் செய்தித்துறை மற்றும்
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு (பொறுப்பு)

நிருவாக ஆசிரியர் :

**துரை. தாமரைச்செல்வம்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர் :

**மு. ஸ்ரீநாகேஷ்**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் :

**க. குமாரவேலு**
**டி.ஆர்.ஜெயஸ்ரீ**
**ஆர். சேகர்**

உதவி ஆசிரியர்கள் :

**க. ராஜராஜேஸ்வரி**
**இரா. சுரேஷ்**
**வீ.இரா.நவநீதகிருஷ்ணகுமார்**
**இரா.இளவரசி**

நிருபர்கள் :

**கோ.சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள் :

**தி.பெரியார் சாக்ரடீசு**
**ஜெ.ஜெயசிம்ஹன்**

புகைப்படக்காரர் :

**வி.இராதாகிருஷ்ணன்**

கணினி வடிவமைப்பு :

**அ.மதன்**, ஒளியச்சுக்கோர்வையாளர்
**ஆர். பாலாஜி** (ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)

அட்டைப்பட ஓவியம் : **மணியம் செல்வன்**



தொகுத்து, வடிவமைத்தது :
தமிழரசு அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 25368926/25364906
தொலைநகல் : 25364906
மின்அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in/tamilarasu




**தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்**
**செல்வருஞ் சேர்வது நாடு**

செழிப்புக் குறையாத விளைபொருள்களும், சிறந்த பெருமக்களும், செல்வத்தைத் தீயவழியில் செலவிடாதவர்களும் அமையப்பெற்றதே நல்ல நாடாகும்.

- திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

## பொருளடக்கம்


1. மாண்புமிகு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
பொதுத்துறை, உள்துறை, தொழிற்சாலைகள், தகவல் தொழில்நுட்பம் 1 - 36

2. மாண்புமிகு நிதி அமைச்சர்
**பேராசிரியர் க. அன்பழகன்** அவர்கள்
நிதி, திட்டம், தமிழ் வளர்ச்சி 37 - 45

3. மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர்
**திரு. ஆற்காடு நா.வீராசாமி** அவர்கள்
மின்சாரம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் 46 - 55

4. மாண்புமிகு ஊரக வளர்ச்சி (ம) உள்ளாட்சித்துறை அமைச்சர்
**திரு. மு.க.ஸ்டாலின்** அவர்கள்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, நகராட்சி நிருவாகம், குடிநீர் வழங்கல் 56 - 82

5. மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்
**திரு.கோ.சி. மணி** அவர்கள்
கூட்டுறவு மற்றும் புள்ளியியல் 83 - 86

6. மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்
**திரு.வீரபாண்டி எஸ்.ஆறுமுகம்** அவர்கள்
வேளாண்மை 87 - 96

7. மாண்புமிகு பொதுப்பணி (ம) சட்டத்துறை அமைச்சர்
**திரு.துரைமுருகன்** அவர்கள்
பொதுப்பணி மற்றும் சட்டம் 97 - 104

8. மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர்
**முனைவர் க. பொன்முடி அவர்கள்**
உயர்கல்வி மற்றும் கனிமவளம் 105 - 108

9. மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்
**திரு.கே.என்.நேரு அவர்கள்**
போக்குவரத்து 109 - 112

10. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
**திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள்**
மக்கள் நல்வாழ்வு 113 - 117

11. மாண்புமிகு ஊரகத்தொழில்துறை (ம) கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்
**திரு.பொங்கலூர் நா.பழனிசாமி அவர்கள்**
சிறுதொழில், கால்நடை பராமரிப்பு 118 - 124

12. மாண்புமிகு வருவாய் (ம) வீட்டுவசதித்துறை அமைச்சர்
**திரு.இ.பெரியசாமி அவர்கள்**
வருவாய், வீட்டுவசதி 125 - 132

13. மாண்புமிகு சுற்றுலா (ம) பதிவுத்துறை அமைச்சர்
**திரு.என்.சுரேஷ்ராஜன்**
சுற்றுலா, பதிவு 133 - 143

14. மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்
**திரு.பரிதி இளம்வழுதி**
செய்தி, நகர்ப்புற வளர்ச்சி 144 - 157

15. மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர்
**திரு.எ.வ.வேலு அவர்கள்**
உணவு 158 - 160

16. மாண்புமிகு குடிசை மாற்று வாரியத்துறை அமைச்சர்
**திரு.சுப.தங்கவேலன் அவர்கள்**
குடிசைமாற்று வாரியம் 161 - 162

17. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்
**திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அவர்கள்**
பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம் 163 - 165

18. மாண்புமிகு தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத்துறை அமைச்சர்
**திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள்**
தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்பு 166 - 168

19. மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர்
**திரு. கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள்**
இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் 169 - 173

20. மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்
திரு.என்கேகே.பி.ராஜா அவர்கள்
கைத்தறி, துணிநூல் 174 - 176

21. மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்
திரு. தங்கம் தென்னரசு அவர்கள்
பள்ளிக்கல்வி 177 - 179

22. மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர்
திரு. எஸ்.என்.எம்.உபயதுல்லா அவர்கள்
வணிகவரி 180 - 181

23. மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர்
திரு.டி.பி.எம்.மைதீன்கான் அவர்கள்
சுற்றுச்சூழல், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு 182 - 188

24. மாண்புமிகு வனத்துறை அமைச்சர்
திரு.என்.செல்வராஜ் அவர்கள்
வனம் 189 - 192

25. மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர்
திரு.வெள்ளக்கோயில் மு.பெ.சாமிநாதன் அவர்கள்
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள் 193 - 196

26. மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்
திருமதி. பி.கீதா ஜீவன் அவர்கள்
சமூக நலம் மற்றும் சத்துணவு 197 - 198

27. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்
திருமதி.ஆ.தமிழரசி அவர்கள்
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் 199 - 210

28. மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர்
திரு.கே.பி.பி.சாமி அவர்கள்
மீன்வளம் 211 - 213

29. மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்
திரு. உ. மதிவாணன் அவர்கள்
பால்வளம் 214 - 216

30. மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர்
திரு. கா.இராமச்சந்திரன் அவர்கள்
கதர், கிராமத்தொழில்கள் 217 - 218



# நுழைவாயில்

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தைத் தந்த அறிஞர் அண்ணா அவர்களின் அடியொற்றி, தொண்டால், தியாகத்தால், திறமையினால், ஓயாத உழைப்பால் தமிழினத்தின் தலைவராக உயர்ந்து ஏழை எளியோரின் பாதுகாவலராகத் திகழ்ந்துவரும் தமிழினத்தின் தலைமகன், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களின் தன்னிகரில்லாத் தலைமையில் தமிழ்நாடு அரசு கடந்த இரண்டு ஆண்டுகளில் படைத்த சாதனைகளைத் தொகுத்து தமிழரசு இதழ் **இரண்டே ஆண்டுகளில் திரண்டுவந்த சாதனைகள்** எனும் மலர்த் தொகுப்பினை வழங்கியுள்ளது.

**படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்**
**உடையான் அரசரு ளேறு**

– எனும் அய்யன் திருவள்ளுவரின் வாக்கியத்திற்கேற்ப ஆற்றல்மிகு படை, அறிவார்ந்த குடிமக்கள், குறையா வளம், குறையற்ற அமைச்சு, முறிபடாத நட்பு, மோதி அழிக்க முடியாத அரண் ஆகிய ஆறு சிறப்புகளும் உடையதே, அரசுகளுக்கிடையே ஆண் சிங்கம் போன்ற அரசாகும் என்பதை மெய்ப்பித்து அரசாளும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் எண்ணத்தில் உதித்த ஈடிணையற்ற திட்டங்களை மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் ஒவ்வொரு துறையும் முனைப்புடன் செயல்படுத்துவதன் மூலம் சிறந்த வழிகாட்டும் மாநிலமாகத் தமிழ்நாடு அரசு திகழ்ந்து, இந்தச் சாதனைச் சிறப்பை நிகழ்த்தியுள்ளது.

ஈராண்டின் இந்தச் சாதனைக் கதிரொளிகளை மின்னி மிளிரும் ஒளித்தொகுப்பாக்கி இந்தச் சிறப்பிதழை வெளியிட்டுள்ளோம்.

இச்சாதனை வரலாற்றைப் படித்துப் பயன்பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பரிதி இளம்வழுதி**
செய்தித்துறை அமைச்சர்



# 11,262 இரண்டாம் நிலைக்காவலர் - 755 உதவி ஆய்வாளர் பணியிடங்களை நிரப்ப ஆணை

கலைஞர் **மு.கருணாநிதி** அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**உள்துறை**

## காவல் துறை

**புதிய நியமனங்கள்**

★ 10,000 இரண்டாம் நிலைக் காவலர்களைத் தேர்வுசெய்ய ஆணையிடப்பட்டு, முதற்கட்டமாக 5,000 இரண்டாம் நிலைக் காவலர்கள் தேர்வு செய்ய, தேர்வுப்பணிகள் முடிவுற்று, தகுதியுள்ள 3,805 இரண்டாம் நிலைக் காவலர்கள் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர். மீதமுள்ளவர்களுக்கு தக்க விசாரணை முடித்து தகுதியுள்ளவர்கள் அடிப்படை பயிற்சிக்கு அனுப்பப்படுவார்கள்.

★ இரண்டாம் கட்டமாக 6,272 இரண்டாம் நிலைக் காவலர்களைத் தேர்வு செய்ய ஆணையிடப்பட்டு, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு ஆணையம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

★ 755 உதவி ஆய்வாளர் பணியிடங்களை நிரப்ப அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

★ 2008–09ஆம் ஆண்டில் மேலும் 4,000 இரண்டாம் நிலைக் காவலர்களை நியமிக்க உரிய நடவடிக்கை ஆணையிடப் பட்டுள்ளது.

**மூன்றாவது காவல் ஆணையம்**

★ காவல்துறையில் பணிபுரிபவர்களின் பணி நிலை, கடமை மற்றும் பொறுப்புகள், நலன் மற்றும் நவீனமயமாக்கல் ஆகிய பிரிவுகளில் ஆராய்ந்து அரசுக்குப் பரிந்துரைகள் வழங்குவதற்காக ஒய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு.ஆர்.பூர்ணலிங்கம் அவர்கள் தலைமையில் மூன்றாவது காவல் ஆணையம் 30.8.2006இல் அமைக்கப்பட்டது. காவல் ஆணையம் தனது முழுமையான அறிக்கையை 13.02.2008இல் அரசுக்குச் சமர்ப்பித்தது. ஆணையத்தின்

பரிந்துரைகளை பரிசீலித்து நடைமுறைப்படுத்த உயர் அதிகாரிகளை உள்ளடக்கிய உயர்நிலைக்குழுவினை அரசு அமைத்து, காவல் ஆணையத்தின் பரிந்துரைகள் உயர்மட்டக் குழுவில் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

★ திருவாரூர் மாவட்டம், திருமக்கோட்டையில் காவல் நிலையம் அமைத்திட 22 புதிய பணியிடங்களுடன் ரூ.34,79,16,000 அனுமதித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது.

★ திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை கிழக்கில் ஒரு காவல் நிலையம் நிறுவிட, ரூ. 22,89,107 அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.

★ கரூர் நகர் காவல் நிலையத்தைப் பிரித்து புதிதாக வெங்கமேடு காவல்நிலையம் 57 பணியாளர்களுடன் ரூ.48,46,000 செலவில் அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது.

★ 116 புறக்காவல் நிலையங்களில், 2006–07இல் 10 புறக்காவல் நிலையங்களும், 2007–08இல் 12 புறக்காவல் நிலையங்களும் முழுக்காவல் நிலையங்களாக நிலை உயர்த்த ஆணையிடப்பட்டுள்ளன.

★ தேசிய நெடுஞ்சாலையில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல், குற்ற நிகழ்வுகள் மற்றும் விபத்துகளைத் தடுக்கும் பொருட்டு தேசிய நெடுஞ்சாலைகளில் முக்கியமான 20 இடங்களில் போக்குவரத்துக் காவல் நிலையங்கள் உருவாக்கப் பட்டுள்ளன.

★ 16 காவல் நிலையங்களில் காவலர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளன. 2007–08ஆம் நிதியாண்டில் 8 இடங்களில் புதிய காவல்நிலையங்கள் உருவாக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

★ 955 பேர் கொண்ட ஒரு தமிழ்நாடு சிறப்புக் காவல் அணி ஒன்று வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம் சுந்தரம்பள்ளியில் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**புதிய கட்டடங்கள்**

★ காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலக வளாகத்தில் 1.71 இலட்சம் சதுர அடியில் புதிய இணைப்புக் கட்டடம் ரூ.20.31 கோடியில் கட்டுவதற்கும்,

★ சென்னை போக்குவரத்துக் காவல் அலுவலக வளாகத்தில் ரூ.20.65 கோடி செலவில் புதிய அலுவலகம் கட்டுவதற்கும்,

★ காவல்துறை நவீனமயமாக்கலின் கீழ் ரூ.18.75 கோடி செலவில் 70 காவல் நிலையங்கள் கட்டுவதற்கும்,

★ சேலம், திருவாரூர் மற்றும் உதகையில் ரூ.10.94 கோடி செலவில் மாவட்ட காவல் அலுவலகங்கள் கட்டுவதற்கும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

★ மேற்கு மண்டல காவல் துறைத் தலைவருக்கு ரூ.31.50 இலட்சம் செலவில் இல்லம் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

★ ரூ.2 கோடி செலவில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அலுவலகம், படை குடியிருப்பு மற்றும் கிடங்கு கட்டுவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்,
சென்னையில், 907 புதிய காவலர் குடியிருப்புகளைத் திறந்துவைத்தார். (13.10.2007)

★ திருவள்ளூர், திருவண்ணாமலை, விழுப்புரம், தருமபுரி, கன்னியாகுமரி மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் ரூ.42 இலட்சம் செலவில் காவலர்களுக்கான 6 ஓய்வு இல்லங்கள் கட்டுவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

★ 25 காவல்நிலையங்களின் கட்டடங்கள் ரூ.1.15 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

★ கமுதியில், ஆயுதப்படை காவலர்களுக்கு ரூ.30 இலட்சம் செலவில் காவலர் ஓய்வு இல்லங்கள் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

★ கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ரூ.1 கோடி செலவில் ஆயுதப்படை வளாகம் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

★ கோவை மாவட்டத்திலுள்ள காவலர் ஓய்வு இல்லத்தில் மேலும் ஒரு மேல் தளம் கட்டுவதற்காக ரூ.86 இலட்சம் ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

★ மன்னார்குடியில் ரூ.15 இலட்சம் செலவில் ரிப்பீட்டர் ஸ்டேஷன் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

★ சென்னையில் மருதம் வளாகத்தில் ரூ.1.44 கோடி செலவில் பெண்களுக்கான அதிரடி பயிற்சிக் கூடம் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

★ உதகையில் ஊர்க்காவல் படைக்காக பயிற்சிக்கூடம் மற்றும் ஓய்வு இல்லங்கள் கட்டுவதற்காக ரூ.40 இலட்சம் ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

★ கோவையில் ரூ.70 இலட்சம் செலவில் கலைக்கூடம் மற்றும் உடற்பயிற்சிக்கூடம் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

★ ரூ.1.80 கோடி செலவில் சிறப்புப் புலனாய்வுப் பிரிவிற்காக பல்வேறு இடங்களில் 18 காவல்நிலையங்கள் கட்டுவதற்கு ஆணைகளிடப்பட்டுள்ளன.

★ உதகையில் ரூ.4 இலட்சம் செலவில் ஊர்க்காவல் படைக்காக மீட்பு கோபுரம் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

★ லஞ்சம் மற்றும் ஊழல் தடுப்புத் துறைக்காக 5 இடங்களில் ரூ.1.02 கோடி செலவில் இணைப்பகம் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

★ குடியாத்தம், திருப்பத்தூர், ஆம்பூர், பென்னாகரம், அரூர், பொள்ளாச்சி, செய்யாறு, திருவாரூர், சமயநல்லூர் மற்றும் ஆலங்குளம் ஆகிய 10 உட்கோட்டங்களுக்கு ரூ.157.25 இலட்சம் செலவில் அலுவலகங்கள் கட்டுவதற்கு ஆணைகளிடப்பட்டுள்ளன.

★ தூத்துக்குடி மாவட்டம், பேரூரணி காவலர் பயிற்சிப் பள்ளியின் கட்டமைப்பு வசதிகளை ரூ.3.39 கோடி செலவில் மேம்படுத்துவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

★ ரூ.260.74 கோடி செலவில் 5,000 குடியிருப்புகள் கட்டுவதற்கு ஆணையிடப் பட்டுள்ளது.

★ ரூ.48.23 கோடி செலவில் ஊனமாஞ்சேரியில் கட்டப்பட்ட காவலர் பயிற்சியகத்தையும்,

★ ரூ.38.98 இலட்சம் செலவில் கட்டப்பட்ட வடக்கு மண்டல காவல் துறை தலைவர் அலுவலகத்தையும் 15.03.2008 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

**புதிய வாகனங்கள்**

★ கடந்த இரண்டு ஆண்டுகளில் காவல்துறைக்கு 2,211 வாகனங்கள் வாங்கிட ரூ.60 கோடி வழங்கப்பட்டது.

★ சென்னை மாநகர காவல்துறையினருக்கு, 100 ஹூண்டாய் ஆக்சென்ட் கார்கள் ஹூண்டாய் மோட்டர்ஸ் நிறுவனத்தாரால் வழங்கப்பட்டன.

★ 101 டி.வி.எஸ். அப்பாச்சி மோட்டார் சைக்கிள்கள் சென்னை நகர காவல் பணிக்காக வழங்கப்பட்டுள்ளன.

**உள்சுற்று இணைப்புத் தொலைக்காட்சி**

★ ரூ.250 இலட்சம் செலவில் சென்னை மாநகரத்தின், 20 முக்கிய சாலைச் சந்திப்புகளில் உள்சுற்று இணைப்புத் தொலைகாட்சி மூலம் போக்குவரத்துகளைக் கண்காணித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**காவலர் நலன்**

★ "காலம் வரையறுக்கப்பட்ட பதவி உயர்வு முறை" அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பயனாக 12,839 இளநிலைக் காவலர்கள், முதுநிலைக் காவலர்களாக நிலை உயர்த்தப்பட்டுள்ளனர். மேலும், 293 முதுநிலைக் காவலர்கள் தலைமைக் காவலர்களாகவும், 94 முதல்நிலைக் காவலர்கள் தலைமைக் காவலர்களாகவும், 49 குழலூதும் முதல் நிலைக் காவலர்கள் தலைமைக் காவலர்களாகவும், 187 தலைமைக் காவலர்கள் சிறப்பு உதவி ஆய்வாளர்களாகவும் நிலை உயர்த்தப்பட்டுள்ளார்கள்.

★ வெடிகுண்டு கண்டறிதல் மற்றும் செயலிழக்கச் செய்தல் படையில் மாதாந்திர ஒப்பந்த ஊதியத்தில் நியமிக்கப்பட்ட 42 முன்னாள் இராணுவத்தினரை நிரந்தரமாகப் பணியமர்த்தி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### தகவுப் பணியாளர்களுக்குக் காலமுறை ஊதியம்

★ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி தொகுப்பூதியமாக மாதம் ரூ.2,500 என்ற விகிதத்தில் பணியமர்த்தப்பட்ட 650 தகவுப் பணியாளர்களுக்கு காலமுறை ஊதிய விகிதமாக ரூ.3000–75–3950–80–4590 என்று நிர்ணயம் செய்து அரசாணை வழங்கப்பட்டது.

### காவல் விருதுகள்

★ "காந்தியடிகள் காவல் விருது" விருதுத் தொகை ரூ.10,000 என்பது ரூ.20,000 என உயர்த்தப்பட்டது.

★ காவல் துறை நாய்ப் படைப் பிரிவு, காவல் துறை புகைப்பட நிபுணர்கள் மற்றும் காவல் வானொலிப் பிரிவு தொழில் நுட்பப் பணியாளர்களில் "தொழில் நுட்பம் மற்றும் சிறப்புப் பிரிவுகளில் உன்னத பணிகளுக்கான தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கங்கள்" வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### விளையாட்டுப் போட்டிகள்

★ 50ஆவது அனைத்திந்திய காவல் திறன் போட்டி, தமிழக அரசு ரூ.25 இலட்சம் பண உதவியில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

★ 55ஆவது காவல் விளையாட்டுப் போட்டிகளில் ஒட்டுமொத்த 'சாம்பியன்' பட்டத்தையும் தமிழ்நாடு காவல் துறை பெற்றது. தங்கம் வென்றோர்க்கு ரூ.50 ஆயிரம், வெள்ளி வென்றோர்க்கு ரூ.30 ஆயிரம், வெண்கலம் வென்றவர்க்கு ரூ. 20 ஆயிரம் ஊக்கப் பரிசுகளாக வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

★ 9ஆவது அனைத்திந்திய காவல் குழலூதும் போட்டிக்கு ரூ.25 இலட்சம் பண உதவி வழங்கி நிகழ்ச்சி சிறப்பாக நடத்தப்பட்டது.

### சென்னை மாநகர காவல் துறையின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழா

★ சென்னை மாநகர காவல் துறையின் 150ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்ந்ததையொட்டி பணியாற்றுபவர்களுக்கும், 14,973 காவல் அதிகாரிகளுக்கும், பணியாளர்களுக்கும் "கைப்பட்டை" வழங்கப்பட்டுள்ளது.

### காவல் துறை நவீனமயமாக்கல்

★ காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் காவல் நிலையங்கள் மற்றும் காவல் அலுவலகங்கள் கட்ட ரூ.2,998 இலட்சம் செலவிலும், காவல்துறையினருக்கான குடியிருப்புகள் ரூ.4,602.50 இலட்சம் செலவில் சம்பவ இடங்களுக்கு விரைந்து செல்ல ஏதுவாக புதிய வாகனங்கள் ரூ.2,997.25 இலட்சம் செலவிலும், நவீனத் தொலைத் தொடர்புக் கருவிகள் ரூ.859.56 இலட்சம் செலவிலும், பயிற்சிப் பிரிவுகளுக்கு உபகரணங்கள் ரூ.459.22 இலட்சம் செலவிலும், தடய அறிவியல் பிரிவிற்கு உபகரணங்கள் ரூ.451.27 இலட்சம் செலவிலும், படிப்பெருக்கி, நிகரி உபகரணங்கள் ரூ.1,219.96 இலட்சம் செலவிலும், கணினி மற்றும் அதைச் சார்ந்த உபகரணங்கள் ரூ.813.06 இலட்சம் செலவிலும், ஊர்க்காவல் படையினருக்கு உபகரணங்கள் ரூ.74.02 இலட்சம் செலவிலும், ஊழல்தடுப்பு மற்றும் விழிப்புத் துறையினருக்கான கட்டடங்கள்





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சென்னை வண்டலூர் அருகில் ஊனமாஞ்சேரியில், தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம் மற்றும் காவல்துறைத் தலைவர் வடக்கு மண்டலம் அலுவலகக் கட்டடத்தைத் திறந்துவைத்தார். (15.03.2008)

கட்டவும் மற்றும் உபகரணங்கள் வாங்கவும் ரூ.200.70 இலட்சம் செலவிடப்பட்டுள்ளன.

**இடதுசாரி தீவிரவாதத் தடுப்பு நடவடிக்கைகள்**

★ தற்போதைய ஆட்சியில் (மே 2006 முதல் 15.4.2008 வரை) 17 நக்சலைட்டுகள் உட்பட 24 நபர்கள் கைது செய்யப்பட்டு 8 பேர் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

**கடத்தல் தடுப்பு நடவடிக்கைகள்**

★ விடுதலைப் புலிகளுக்கென கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் இந்தியர் மற்றும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் மீது சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன.

★ கடந்த ஆட்சியில் 2001 முதல் மே 2006 வரை கடத்தல் தொழிலில் ஈடுபட்டதாக 7 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 4 இலங்கைத் தமிழர்கள் உட்பட 26 பேர் மட்டுமே கைது செய்யப்பட்டுள்ளனர். அதேசமயம் 2006, 2007 மற்றும் 2008ஆம் (15.4.2008 வரை) ஆண்டுகளில் இரண்டு ஆண்டுகளிலேயே, கடத்தல் சம்பந்தமாக 14 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 11 விடுதலைப்புலிகள், 34 இலங்கைத் தமிழர்கள் உட்பட 106 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட 106 பேரில், 14 இலங்கைத் தமிழர்கள், 3 விடுதலைப்புலிகள் உட்பட 43 பேர் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர்.

**குற்றத் தடுப்பு**

★ பாலியல் தொழிலில் ஈடுபடுவோரைத் தடுக்கும் பணிகளை, விபச்சாரத் தொழில் தடுப்புப் பிரிவு, சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது.

★ தற்போது, சென்னை மற்றும் கோயம்புத்தூரில் செயல்பட்டு வரும் கள்ள ரூபாய் நோட்டுக்களைக் கண்டுபிடிக்கும் பிரிவுகளைத் தவிர, புதிதாக, திருச்சி மற்றும் மதுரையில் இப்பிரிவுகள் ஏற்படுத்த இசைவளிக்கப்பட்டுள்ளது.

★ கனிமசார் குற்ற வழக்குகளை விசாரிப்பதற்கென, சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு, கனிமசார் குற்றத் தடுப்புப் பிரிவு ஒன்று செயல்பட்டு வருகிறது.

**பொருளாதாரக் குற்றப்பிரிவு**

★ பொருளாதாரக் குற்றப் பிரிவு மூலம் பணத்தை முதலீடு செய்தவர்களுக்கு பணத்தினைச் சரியாகத் திருப்பித் தராத நிதி நிறுவனங்களில் முதலீடு செய்தவர்களுக்கு ரூ.279.99 கோடித் தொகை 3,33,687 முதலீட்டாளர்களுக்குத் திரும்ப அளிக்கப்பட்டுள்ளது.

★ முதலீட்டாளர்களின் பணத்தினைத் திருப்பித் தராத நிதிநிறுவனங்களின் அசையும் மற்றும் அசையாச் சொத்துகளை முடக்கம் செய்யும் அதிகாரத்தின் கீழ் ரூ.15.91 கோடி மதிப்புடைய சொத்துக்கள் முடக்கம் செய்யப்பட்டுள்ளது.

**கடலோரப் பாதுகாப்புக் குழுமம்**

★ 12 கடலோரக் காவல் நிலையங்கள் கட்டுவதற்காகத் தகுந்த இடம் தேர்வு செய்யப்பட்டு தருவைக்குளம், குளச்சல், கீழையூர், வேதாரண்யம் மற்றும் அதிராம்பட்டினம் ஆகிய ஐந்து கடலோரக் காவல் நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன.

★ 120 தமிழ்நாடு சிறப்புக்காவல் படை ஆளிநர்கள் நான்கு குழுக்களாக, இந்தியக் கடலோரப் பாதுகாப்புப் படையினரால் கப்பல் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## சிறைத் துறைப் பணிகள்

★ பேரறிஞர் அண்ணா அவர்களின் 98–ஆவது பிறந்த நாளையொட்டி 16 பெண் ஆயுள் தண்டனை சிறைவாசிகள் உட்பட 472 ஆயுள் தண்டனை சிறைவாசிகள் முன் விடுதலை பெற்றனர்.

★ சிறைத்துறை காவலர்களுக்கு காவல்துறை காவலர்களுக்கு இணையாக மினை நேரப்பணி ஊதியம் ரூ.100 லிருந்து ரூ.150 ஆக உயர்த்தி வழங்கப்பட்டது.

★ சிறைவாசிகளுக்கு வாரம் ஒருமுறை கோழி இறைச்சி வழங்கவும் சைவ உணவு விரும்பும் சிறைவாசிகளுக்கு ரவா, கேசரி, உருளைக்கிழங்கு மற்றும் வாழைப்பழம் வழங்க ஆணை வெளியிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

★ 3,000 ஆண் மற்றும் பெண் சிறைவாசிகளை அடைக்கத்தக்க இடவசதிகள் கூடிய 211.92 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.77.09 கோடி செலவில் கட்டப்பட்ட புழல் புதிய நவீன சிறை வளாகம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 26.11.2006 அன்று திறந்து வைக்கப்பட்டது.

★ 2006–07 ஆம் ஆண்டு கட்டடப் பணிகள், புதிய குடியிருப்புகள் கட்டுதல், இதர பணிகள் மொத்தம் 336 பணிகளுக்கு ஒதுக்கப்பட்டுத் தொகை ரூ.1906.30 ஆகும்.

★ சிவகங்கை மாவட்டம் முத்துப்பட்டியில் 150 சிறைவாசிகள் அடைப்பு வசதி கொண்ட ஒரு திறந்தவெளி சிறைச்சாலை அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது.

★ 9 பெண்கள் கிளைச் சிறைகள் மற்றும் 2 பெண்கள் தனிக்கிளைச் சிறைகளுக்கு ரூ.23.82 இலட்சம் செலவில் மருத்துவ ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன.

★ சிறைகளில் ரூ.126.14 இலட்சம் செலவில் 6,307 மின் விசிறிகள் பொருத்தப்பட்டுள்ளன.

★ அனைத்து சிறைகளிலும் உள்ள சிறைவாசிகளுக்கு காலையில் தேநீர் வழங்கப்படும்.

★ ரூ.135.20 இலட்சம் செலவில் 12 திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

## தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

★ தீயணைப்புப் பணியாளர்களின் பயன்பாட்டிற்கென 88 மூச்சுக் கருவிகள் மற்றும் 2 உபரி சிலிண்டர்கள் ரூ.74.10 இலட்சம் செலவில் வாங்கப்பட்டது.

★ 10 நீர்தாங்கி வண்டிகள் ரூ.157 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

★ ரூ.32.72 இலட்சம் செலவில் 4 புதிய சீருந்துகள் மற்றும் 4 புதிய ஈப்புகள் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

★ 2 சிறிய பேருந்துகள் மற்றும் 1 பெரிய பேருந்து ரூ.21.52 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன.

★ நோயாளர் ஊர்திகள் வாங்க ரூ.47.60 இலட்சம் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

★ தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் ரூ.55 இலட்சம் செலவில் கம்பியில்லாத் தொடர்பு வசதிகளை நவீனப்படுத்தி அரசு ஆணை வழங்கியுள்ளது.

★ ரூ 24.20 இலட்சம் செலவில் விருதுநகரில் கோட்ட அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

★ நிலையப் பணியாளர்களுக்கு 200 குடியிருப்புகள் ரூ.988.24 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகின்றன.

★ தகவல் தொடர்பு வசதியினை நவீனப்படுத்தும் விதமாக அரசு, ரூ.14.40 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

★ ரூ.46.60 இலட்சம் செலவில் நீர்விடுகுழாய்கள் வாங்கப்பட்டுள்ளன.

★ ரூ.38.70 இலட்சம் செலவில் ஒகேனக்கல் மீட்புப் பணிகள் நிலையம் உள்ளிட்ட 6 நிலையங்களுக்கு புதிய நோயாளர் ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன.

★ ரூ.30 இலட்சம் செலவில் 2 நீர்தாங்கி வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

★ ரூ.7 இலட்சம் செலவில் புதிதாக மத்திய சென்னை கோட்டம் அமைக்கப்பட்டது.

★ 8 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கு தலா ரூ.25 இலட்சம் வீதம் ரூ.2 கோடி செலவில் கட்டடம் கட்ட அரசு ஆணையிட்டுள்ளது.

★ 30 நபர்கள் கருணை அடிப்படையில் தீயணைப்போராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## நீதிமன்றங்கள்

★ சென்னை உயர்நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்திலும் தமிழ் மொழியை வழக்கு மொழியாகப் பயன்படுத்திட வேண்டும் என்ற அரசின் முடிவின் மீது மேதகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலைப் பெற்றுத் தருமாறு மைய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு ஒப்புதலை விரைவில் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மைய அரசிற்கு உயர்மட்ட அளவில் கொண்டு சென்றுள்ளார்.

★ திருநெல்வேலியிலுள்ள 2ஆவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தை மாற்றி வள்ளியூரில் சார்பு நீதிமன்றம் ரூ.10.14 இலட்சம் செலவில் ஏற்படுத்தவும், சென்னை உயர்நீதிமன்றத்திற்கு அருகில் உள்ள தமிழ்நாடு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான பகுதி நிலத்தை சென்னை உயர்நீதிமன்றத்திற்கு வழங்கவும், நிலம் மற்றும் அதிலிருக்கும் கட்டடத்திற்கு மதிப்பீடாக ரூ.5.85 கோடியை போக்குவரத்துக் கழகத்திற்கு வழங்கவும், திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் வழக்கறிஞர் சங்கம் மற்றும் எழுத்தர் சங்கம் ஆகியவற்றிக்குப் புதிய கட்டடம் ரூ.58.35 இலட்சம் செலவில் கட்டுவதற்கும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

★ 2007–2008 ஆம் ஆண்டிற்கான பகுதி 2ன் திட்டத்தின்கீழ் ரூ.61.79 இலட்சம் செலவில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

★ சென்னை உயர்நீதி மன்றத்திற்கு 4 அடிஷனல் மாஸ்டர் பணியிடங்களும் சாட்சிகளைப் பதிவு செய்வதற்கு சென்னை சிட்டி சிவில் நீதிமன்றத்திற்கு 4 கூடுதல் நீதிபதி பணியிடங்களும் மற்றும் சிறு வழக்குகள் நீதிமன்றத்திற்கு 2 கூடுதல் நீதிபதி பணியிடங்களும் மொத்தம் 10 பணியிடங்களுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

★ தருமபுரி, கரூர், இராமநாதபுரம், விருதுநகர், நாமக்கல், சிவகங்கை, ஈரோடு, வேலூர், திருவண்ணாமலை, புதுக்கோட்டை, திருவள்ளூர், கடலூர், தூத்துக்குடி, தஞ்சாவூர் மாவட்டங்களில் ரூ.87.34 கோடி செலவில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

★ ★ ★



# உலகின் கவனத்தை ஈர்க்கும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி

கலைஞர் **மு.கருணாநிதி** அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**தகவல் தொழில் நுட்பவியல் துறை**

**தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பவியலின் வளர்ச்சி**

★ **2005–06**இல், ரூ.**14,115** கோடியாக இருந்த இம்மாநிலத்தின் மென்பொருள் ஏற்றுமதி, **2006–07**இல், ரூ.**21,000** கோடியாகவும், **2007–08**இல், ரூ.**28,000** கோடியாகவும் உயர்ந்துள்ளது.

★ **1226.32** எக்டேர் பரப்பளவில் அமையும் **37** தொழில்நுட்பவியல் மற்றும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு (SEZ), மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இவற்றுள், **19** சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் தங்கள் செயல்பாட்டினைத் தொடங்கியுள்ளன.

★ **121.41** எக்டேரில் ஒரு பன்முகச் சேவை சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கும், **2192.44** எக்டேரில், இரண்டு பன்முக உற்பத்திப் பொருள் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கும் அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், **464.45** எக்டேர் பரப்பளவில் மின்னணு வன்பொருள், மென்பொருள் மற்றும் அவை தொடர்பான சேவைகளுக்கு **6** சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கும் அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளது.

★ மிகப்பெரிய பன்னாட்டு வன்பொருள் உற்பத்தியாளர்களான நோக்கியா (Nokia), பாக்ஸ்கான் (Foxcon), ப்ளெக்ஸ்ட்ரானிக்ஸ் (Flextronics) மற்றும் மோட்டோரோலா (Motorola) போன்ற நிறுவனங்கள், தங்களின் தொழிற்சாலைகளை, ஏற்கெனவே தமிழகத்தில் அமைத்துள்ளன. டெல் கம்ப்யூட்டர்ஸ் (Dell Computers), சாம்சங் (Samsung), ஆஸ்போகாம்ப் (ASPOCOMP), ஸ்பெல்மெக் (Spelmech) செமிகண்டக்டர்ஸ், சால்காம்ப் (SalComp), பெர்லோஸ் (Perlos), ஜாபில் (Jabil), வின்டெக் (Wintek) மற்றும் பல மின்னணு வன்பொருள் தயாரிப்பு நிறுவனங்களும் தமிழகத்தில், தங்களுடைய தொழிற்சாலைகளை அமைக்க விருக்கின்றன.

**தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்கள்**

★ சென்னைக்கு அருகில், தரமணியில் உலகத்தரம் வாய்ந்த தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது. இங்கு,



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ,
மதுரை வடக்கு இலந்தைகுளம் மற்றும் மதுரை தெற்கு வடபழஞ்சி
தொழில்நுட்பப் பூங்காக்களுக்கு அடிக்கல் நாட்டினார். (26.4.2008)

26.64 ஏக்கர் நிலப்பரப்பில், 4.5 மில்லியன் சதுர அடி பரப்பளவுக்கு, கட்டடத்துடன் கூடிய தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைப்பதற்கு, தமிழக அரசின் நிறுவனமான டிட்கோ (TIDCO) நிறுவனம், டி.எல்.எப். (DLF) நிறுவனத்துடன் கூட்டு முயற்சி மேற்கொண்டுள்ளது.

★ சென்னை, தரமணியில் உள்ள 25.27 ஏக்கர் நிலப்பரப்பில், டிட்கோ நிறுவனம் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா மற்றும் ஒருங்கிணைந்த சர்வதேச கன்வென்ஷன் மையம் அமைத்து வருகிறது.

★ சென்னைக்கு அருகில் உள்ள சோழிங்கநல்லூரில், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா (சிறப்புப் பொருளாதார மண்டலம்) உருவாக்கப்பட்டுள்ளது.

★ சென்னை, பெரும்பாக்கம் மற்றும் சோழிங்கநல்லூர் கிராமங்களில் 199 ஏக்கர் நிலப்பரப்பில் ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்பவியல் நகரியம் அமைக்க அனுமதி பெறப்பட்டுள்ளது.

★ சிறுசேரி, சிப்காட் வளாகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கும் பணி வேகமாக நடைபெற்று வருகிறது. இப்பூங்காவில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் அதனைச் சார்ந்த சேவைகளுக்கான 61 நிறுவனங்கள் தங்களுடைய தொழிற்கூடங்களை அமைக்கவுள்ளன.

★ கோயம்புத்தூரில், 17.11 இலட்சம் சதுர அடி பரப்பளவில், தகவல் தொழில்நுட்பவியல் பூங்காவை, தமிழ்நாடு மின்னணு நிறுவனம், தமிழ்நாடு தொழில் முன்னேற்றக் கழகம் (TIDCO), டைடல் பார்க் லிமிடெட் மற்றும் இந்திய மென்பொருள் தொழில்நுட்பவியல் பூங்கா (STPI) ஆகியவை கூட்டாகச் சேர்ந்து நிறுவுகின்றன. 24.2.2007 அன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

★ மதுரை மாவட்டம், இலந்தைக்குளத்திலும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் உள்ள வடபழஞ்சி கிராமத்திலும், தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்களை, தமிழ்நாடு மின்னணு நிறுவனம் அமைத்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 26.4.2008 அன்று இவ்விரு திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டினார்.

★ திருச்சிராப்பள்ளியில், 135.04 ஏக்கர் நிலப்பரப்பில், தமிழ்நாடு மின்னணு நிறுவனம், தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை நிறுவியுள்ளது.

★ சேலத்தில், 164.26 ஏக்கர் நிலப்பரப்பில், தமிழ்நாடு மின்னணு நிறுவனம், தகவல் தொழில்நுட்பவியல் பூங்காவை நிறுவியுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 14.9.2007 அன்று இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

★ தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால், திருநெல்வேலியில், 100 ஏக்கர் நிலப்பரப்பில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 17.6.2007 அன்று இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

★ ஓசூரில் சிறப்புப் பொருளாதார மண்டலம் தகுதியுடைய தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா ஒன்றினை, தமிழ்நாடு மின்னணு நிறுவனம், 172.19 ஏக்கரில் நிறுவ உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 26.2.2008 அன்று, இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

★ தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மற்றும் தனியார் கூட்டு முயற்சியில் வேலூரில் ஒரு புதிய தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கப்படும்.

**தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் மையம்** (ICT Academy)

★ தமிழ்நாட்டின் மனித வளத்தையும், கல்வித் தரத்தையும் மேம்படுத்தும் நோக்கத்துடன் சென்னையில் அமைக்கப்பட்டுள்ள தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் மையத்தை (ICT Academy) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 8.4.2008 அன்று தொடங்கி வைத்தார்.

**இந்திய தகவல் தொழில்நுட்பவியல், வடிவமைத்தல் மற்றும் உற்பத்தி மையம்** (IIITD & M)

★ காஞ்சிபுரம் மாவட்டத்தில், மேலக்கோட்டையூர் மற்றும் நல்லம்பாக்கம் கிராமங்களில், 41.21 எக்டேர் (101.75 ஏக்கர்) நிலம், இந்திய தகவல் தொழில்நுட்பவியல், வடிவமைத்தல் மற்றும் உற்பத்தி மையத்திற்கு (IIITD & M) குத்தகையாக அளிக்கப்பட்டுள்ளது.

**தகவல் தொழில்நுட்பவியல் பணி முனைப்புக் குழு**

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையில், 19.2.2007 அன்று மாநில தகவல் தொழில்நுட்பவியல் பணி முனைப்புக் குழு அமைக்கப்பட்டுத் தகவல் தொழில்நுட்ப தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கப்படுகிறது.

**இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம்**

★ ரூ.1,444 கோடி செலவில் செயல்படுத்தப்படும் இல்வச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் 15.9.2006 அன்று தொடங்கப்பட்டு, முதற்கட்டமாக 30,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும், இரண்டாவது கட்டமாக 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும் வழங்கப்பட்டது. மூன்றாவது கட்டமாக 34,25,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை விநியோகிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**கட்டமைப்பு வளர்ச்சி**

★ தமிழ்நாடு மின்னணு நிறுவனம், இதுவரை, 73 மில்லியனுக்கும் அதிகமான சதுர அடி கொண்ட 213 கட்டடங்கள் கட்டுவதற்காக, தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்குத் தடையில்லாச் சான்றிதழை வழங்கியுள்ளது.

★ மதுரையில், புதிய விமான நிலையத்தை விரிவுபடுத்துவதற்கான பணிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 26.4.2008 அன்று அடிக்கல் நாட்டினார்.

**தகவல் தொழில்நுட்பவியல் மேம்பாடு** (IT Promotion)

★ அரசு, தொழில் நிறுவனங்கள், சேவை வழங்குவோர், கல்வி நிறுவனங்கள் மற்றும் முக்கியமாக இறுதிக் கட்டப் பயனாளிகள், ஆகிய தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் துறையைச் சார்ந்த அனைவரையும், ஒரே இடத்தில் ஒருங்கிணைக்கின்ற அரங்கமாக, விளங்கும் "கனெக்ட் 2007" நிகழ்ச்சி செப்டம்பர் 2007இல் நடத்தப்பட்டது.

★ இரண்டாம் நிலை நகரங்களில் உள்ள, மனிதவளத்தை வெளிக்கொணரவும், மாணவர் சமுதாயத்திற்குத் தன்னம்பிக்கை ஊட்டும் விதமாகவும் "எம்ப்பவர் ஐ.டி." எனும் முகாம், 2008 ஜனவரி 18 மற்றும் 19ஆம் தேதிகளில், திருநெல்வேலியில் நடத்தப்பட்டது.

**மின் ஆளுகை**

★ மைய அரசினால், சமீபத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையில், தமிழகத்தை "முன்னோடி மின்–தயார்" (Leader in e-readiness) மாநிலமாக அறிவித்துள்ளது.

★ நமது மாநிலத்தின் இணையதளமான http://www.tn.gov.in–க்கு, தேசிய மின் ஆளுகை மாநாட்டில், தங்கப்பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.

★ புகழ்பெற்ற Dataquest பத்திரிகையின் "சிறந்த மின் ஆளுகை மாநிலம்" என்ற விருதினையும், நமது மாநிலம் பெற்றுள்ளது.

★ மின் ஆளுகை நடவடிக்கைகளில், தனிக் கவனம் செலுத்த ஏதுவாக, தமிழ்நாடு மின் ஆளுகை முகமை என்ற தன்னாட்சி பெற்ற சங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் (TNSWAN) வர்த்தக ரீதியிலான செயல்பாடுகள், டிசம்பர் 2007இல் தொடங்கின. இந்தியாவில், முதன் முறையாக இத்திட்டத்தைச் செயல்படுத்திய மாநிலம், தமிழ்நாடு ஆகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பினை 8.4.2008 அன்று தொடங்கி வைத்தார்கள்.

★ மாநிலத் தரவு மையம், தேசிய மின் ஆளுகைத் திட்டத்தில் இடம்பெற்றுள்ள ஒரு முக்கியமான கட்டமைப்பு வசதியாகும். இத்திட்டத்திற்கென மைய அரசால், ரூ.55.80 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின், முதற்கட்டம் ரூ.12 கோடி செலவில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் முடிக்கப்பட்டது. இதன் மூலம், இந்தியாவிலேயே, இத்தகைய அதிநவீன வசதி கொண்டுள்ள முதல் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. இந்த மாநிலத் தரவு மையத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 8.4.2008 அன்று தொடங்கி வைத்தார்.

★ பொதுச் சேவை மையத் திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்தும் வெகு சில மாநிலங்களில், தமிழ்நாடும் ஒன்றாகும். தமிழகம் முழுவதும், 5,440 பொதுச் சேவை மையங்கள், 3 கிராமங்களுக்கு ஒரு மையம் என்ற விகிதத்தில் அமைக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 8.4.2008 அன்று முதல் மூன்று மையங்களைத் தொடங்கி வைத்தார்.

★ திருவாரூர், கிருஷ்ணகிரி, பெரம்பலூர், அரியலூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்கள் மின்னணு மாவட்டங்களாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

தேசிய மின் ஆளுகைத் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில், 15 திட்டங்கள் (Mission Mode Projects) தேர்வு செய்யப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு :

1. நில ஆவணங்கள், 2. வணிக வரி, 3. பதிவுத் துறை, 4. வேளாண்மை,
5. உணவு மற்றும் குடிமைப் பொருள் வழங்கல், 6. சுகாதாரம், 7.ஊராட்சிகள்,
8. கல்வி, 9. கருவூலங்கள், 10. நகராட்சிகள், 11. போக்குவரத்து,
12. வேலைவாய்ப்பு, 13. தொழில், 14. சமூக நலம்,
15. தலைமைச் செயலகத் துறைகளைக் கணினி மயமாக்குதல்.

**அரசு கேபிள் டி.வி. நிறுவனம்**

★ தமிழக அரசே முழுவதும் ஏற்று நடத்தும், அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தைத் தமிழ்நாடு அரசு நிறுவியது. இந்நிறுவனம், சென்னைப் பெருநகரில் பன்முக ஏற்பாட்டுத்துறை இயக்குபவராகவும் (Multi System Operators), மாநிலத்தின் பிற பகுதிகளில் கம்பிவட இயக்குபவராகவும் செயல்படும் எண்ணத்தில் நிறுவப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம், தற்போது இருக்கும் கம்பிவட இயக்குபவர்களைக் கொண்டு உயர் தரத்திலான கம்பிவட இணைப்புச் சேவையை, நியாயமான கட்டணத்தில், பொதுமக்களுக்கு அளிப்பதாகும்.

**தமிழ்நாடு மின்னணு நிறுவனம்**

★ பொதுமக்களுக்கு இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ், 14” வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்யும் பணியைத் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம், அரசு ஒப்படைத்துள்ளது.

★ தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்புத் (TNSWAN) திட்டத்திற்குத் தமிழ்நாடு மின்னணு நிறுவனம், ஒருங்கிணைப்பு முகமையாக (Nodal Agency) நியமனம் செய்யப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு மின்னணு நிறுவனம், தனது தலைமை அலுவலகத்திலேயே, திறந்த வழி (Open Source) மென்பொருள் சூழலில், மின் ஆளுகை மென்பொருள் உதவி மையத்தை நிறுவியுள்ளது.

★ தமிழ்நாடு மின்னணு நிறுவனம், மாநில அளவில், 1 கோடியே 85 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களின் அடிப்படை விவரங்களடங்கிய தரவுத் தொகுப்பினை உருவாக்கி, அதனை, ஆன்லைனில் கொண்டு வந்துள்ளது.

★ மின் ஆளுகை மென்பொருள் மேம்பாட்டினை, வலைத்தள சூழல் அடிப்படையில் தயாரிக்கும் பணியினைப் பதிவுத்துறை, தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. 108 சார்பதிவு அலுவலகங்கள், தமிழகத்தில் ஆன்லைன் மூலம் செயல்பட உள்ளன.

★ தமிழ்நாடு மின்னணு நிறுவனம், முற்றிலும் மின்னணு ஆக்கப்பட்ட முறையில், ஏறத்தாழ 70 இலட்சம் விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு அட்டைகளை வெற்றிகரமாகத் தயாரித்து வழங்கியுள்ளது.

★ தமிழகத்தில் உள்ள 86 மையங்களில், மென் தகடால் ஆன கணினி மயமாக்கப்பட்ட ஓட்டுநர் உரிமம் அட்டை தயாரித்து வழங்கும் பணி, போக்குவரத்து ஆணையர் அவர்களால், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

★ மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகளைத் தன்னியக்கமாக்க, இணையதள மென்பொருள் ஒன்றினைத் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் உருவாக்கியுள்ளது.

★ நகர் ஊரமைப்பு இயக்ககம், மனைப்பிரிவு மற்றும் கட்டட வரைபட அனுமதி வழங்குவதற்கான தன்னியக்க மென்பொருளை உருவாக்கும் பணி தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

★ வணிக வரி செலுத்தும் வியாபாரிகள் ஆன்லைன் மூலம் பதிவு செய்யவும், மதிப்புக் கூட்டு வரிக்கான (VAT) அறிக்கையை மாதந்தோறும் வணிக வரித் துறை தாக்கல் செய்யவும் தேவைப்படும் மென்பொருள் உருவாக்கும் பணியினைத் தமிழ் நாடு மின்னணு நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது.

★ 2007–08ஆம் ஆண்டில், தமிழ்நாடு மின்னணு நிறுவனம், ரூ.135.54 கோடி மதிப்பிலான தகவல் தொழில்நுட்பவியல் பொருட்களைக் கொள்முதல் செய்துள்ளது.

**தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் சாதனைகள்**

★ இந்திராகாந்தி தேசிய திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தின் கல்வி வள ஆதாரங்களை, தனது மாணவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்காக, அப்பல்கலைக் கழகத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழ் இணையப் பல்கலைக்கழகம், கையெழுத்திட்டுள்ளது. இளங்கலைப் பட்டப்படிப்பில், விருப்ப மொழி (ஆங்கிலம் பகுதி – 2) கல்விக்கு இவ்வள ஆதாரங்கள் பயன்படுத்தப்படும்.

★ இப்பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பில், மலேசியாவில் உள்ள 40 தமிழாசிரியர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக, கனடாவில் கல்விக்கென உள்ள காமன்வெல்த்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், தமிழ் இணையப் பல்கலைக்கழகம் கையெழுத்திட்டுள்ளது.

★ 59 நாடுகளைச் சேர்ந்த 5,961 மாணவர்கள், பல்வேறு பாடத் திட்டங்களுக்குப் பதிவு செய்துள்ளனர். 2007ஆம் ஆண்டில், 286 மாணவர்கள் சான்றிதழ்த் தேர்விலும், 176 மாணவர்கள் பட்டயத் தேர்விலும், 29 மாணவர்கள் மேற்பட்டயத் தேர்விலும் வெற்றி பெற்றுள்ளனர்.

★ இணையதளக் கல்வித் திட்டத்தில், இந்தியாவில் வழிமுனைவராகச் செயல்பட்டு வரும் தமிழ் இணையப் பல்கலைக்கழகம், 2006–07ஆம் ஆண்டில், 247 இளங்கலைப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு, இணையம் வழியாகத் தேர்வு நடத்தியுள்ளது.

★ இந்த ஆண்டில் (2007–08), 165 மாணவர்களுக்கு இணையம் வழியாகத் தேர்வு நடத்தியுள்ளது. ஜனவரி 2008ஆம் ஆண்டு, 56 மாணவர்கள் எழுத்துத் தேர்வு

எழுதியுள்ளனர். மார்ச் 2008இல் பட்டய மற்றும் பட்டப்படிப்பு மாணவர்களுக்கான எழுத்துத் தேர்வுகள் நடத்தப்பட்டன.

★ இதுவரையில், தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் இணையதளத்தை, ஏறத்தாழ 17 இலட்சம் பேர் பார்வையிட்டுள்ளனர்.

★ 59 நாடுகளைச் சேர்ந்த சுமார் 2,827 மாணவர்கள் சான்றிதழ்ப் படிப்பிற்கும், 3,134 மாணவர்கள் தமிழ் இளங்கலைப் படிப்பிற்கும், பதிவு செய்துள்ளனர். இப்பல்கலைக்கழகம், 12 நாடுகளில் 19 ஒருங்கிணைப்பு மையங்களைக் கொண்டுள்ளது.

★ தமிழில் தயாரிக்கப்படும் மென்பொருள்கள், நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு உடன் பட்டுள்ளனவா என்பதற்குச் சான்றளிக்கும் முகமையாக, தமிழ் இணையப் பல்கலைக்கழகம் செயல்படுகிறது. இதுவரை 20 மென்பொருட்கள் தமிழ் இணைய பல்கலைக்கழகச் சான்றினைப் பெற்றுள்ளன.

★ தமிழ் இணையப் பல்கலைக்கழக மின்–நூலகத்தில், தேடும் வசதிகளைக் கொண்ட திருக்குறளைப் போன்று, அதன் 5 விளக்கவுரைகள் மற்றும் 2 மொழி பெயர்ப்புகளுடன் குறுந்தகடுகள் வடிவில் தயாரிக்கப்பட்டு வருகிறது.

★ மிகச்சிறந்த தமிழ்க் கற்றறிவாளர் தமிழ்த்தாத்தா முனைவர் உ.வே.சா. அவர்கள் தொகுத்து வைத்துள்ள ஓலைச்சுவடிகளைத் தேடும் வசதியுடனும் அவற்றை எளிதில் படிக்கும் வண்ணம் உருஅளவிலான மாற்றம் செய்யும் வசதியுடனும் இணையப்படுத்தியுள்ளது. ஓலைச்சுவடிகளை எளிதில் புரிந்து கொள்ள அவற்றின் தற்காலத் தமிழ் வடிவமும் கொடுக்கப்பட்டுள்ளது.

★ பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற நிறுவனங்களால் தயாரிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப அகராதிகள், தேடும் வசதியுடன், தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தின் இணைய தளத்தில் இடப்பட்டுள்ளன. தற்போது, தமிழ் இணையப் பல்கலைக்கழகம், தொழில்நுட்ப அகராதிகளை மறுசீராய்வு மற்றும் தணிக்கை செய்து அவற்றை 12 நிலையான தொடர் தொகுதிகளாக வெளியிடுவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

★ சென்னை–கோட்டூரில் 2 ஏக்கர் நிலம், தமிழ் இணையப் பல்கலைக்கழகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டிகொள்வதற்காக, நில உரிமை மாற்றம் செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

★ ★ ★



# இரண்டு ஆண்டுகளில் ரூ.18,483 கோடி முதலீட்டில் 14 பெரிய தொழில் நிறுவனங்களுடன் ஒப்பந்தம்

கலைஞர் **மு.கருணாநிதி** அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**தொழில்துறை**

**முதலமைச்சர் தலைமையில் சிறப்புத் தொழில் முனைப்புக்குழு**

* ✶ மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்கு உதவிட, தொழில் மற்றும் வர்த்தக அமைப்புகளின் பிரதிநிதிகளைக் கொண்ட சிறப்புத் தொழில் முனைப்புக்குழு (Special Task Force) 8.11.2006 அன்று அமைக்கப்பட்டது.

**தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளுக்கான உயர்நிலைக்குழு**

* ✶ தொழில் வளர்ச்சியில் பின்தங்கியுள்ள பகுதிகளைக் (Blocks) கண்டறிந்து தொழில்கள் தொடங்கும் வழிமுறைகளை நிர்ணயிப்பதற்காகத் தொழில்துறைச் செயலாளர் தலைமையில் உயர்நிலைக் குழு ஒன்று 20.7.2006 அன்று அமைக்கப்பட்டது.

**புதிய தொழில் கொள்கைகள்**

* ✶ 2011ஆம் ஆண்டிற்குள் 20 இலட்சம் கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் தொழில் வளம் பெருக்கும் புதிய தொழில் கொள்கை–2007 வகுக்கப்பட்டுள்ளது.
* ✶ தமிழ்நாடு அரசின் விரைவான வெளிப்படையான அணுகு முறையினால் இம்மாநிலத்தில் முதலீட்டாளர்கள் அதிக அளவில் முதலீடு செய்கிறார்கள். புதிய முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக உருவெடுத்துள்ளது.






மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சென்னைக்கருகிலுள்ள திருப்பெரும்புதூரில் ஹுண்டாய் மோட்டார் இந்தியா தொழிற்சாலையின் புதிய உற்பத்திப் பிரிவினைத் தொடங்கிவைத்து, தொழிற்சாலையினைப் பார்வையிட்டார். (2.2.2008)

- தொழிற்சாலைகளை அதிக அளவில் அமைக்க சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- தமிழகத்தைத் தொழில்மயமாக்குவதன் மூலம் பயிற்சி பெற்ற மற்றும் பயிற்சிகள் எதுவும் இல்லாத இருவகையினருக்கும் உரிய வேலைவாய்ப்புகளை உருவாக்கிட முடியும். சென்னை மாநகரைச்சுற்றி அமைந்துள்ள உலகத்தரம் வாய்ந்த பல கட்டமைப்பு வசதிகள் மூலமாக முதலீடுகளை ஈர்ப்பதில் சென்னை மாநகரம் பெரிய காந்தம்போல் செயல்பட்டு வருகிறது. தமிழக அரசு தமிழகத்தின் தென்பகுதியில் ஒன்றும் வடபகுதியில் ஒன்றுமாக இரு பெரும் தொழில் மையங்களை உருவாக்கி, அதன்மூலம் முதலீட்டினைப் பெறவும் வளர்ச்சியை எட்டவும் விரும்புகிறது.

- 29.4.2008 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் 17,400 கோடி ரூபாய் முதலீட்டில் 18,750 பேருக்கு நேரடியாகவும், 6,450 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு வழங்கிடும் 13 தொழில் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

- ஒரே அமைச்சரவைக் கூட்டத்தில் இத்தனைத் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது இதுவே முதல் முறையாகும். மேலும் தொழில் வளர்ச்சி வரலாற்றில் இது ஒரு புதிய அத்தியாயம் ஆகும்.

- கடந்த இரண்டு ஆண்டுகளில் டிட்கோ நிறுவனம் 4,43,750 பேருக்கு வேலைவாய்ப்பளிக்கும் வகையில் ரூ.19,881.93 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு கூட்டுத்துறை ஒப்பந்தம் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.

# தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்

## பெருந்தொழில் நிறுவனங்களின் வருகை

✶ தமிழக அரசு வெளிநாடு மற்றும் உள்நாடுகளைச் சேர்ந்த 14 பெரிய தொழில் நிறுவனங்களுடன் ரூ.18,483 கோடி அளவிலான முதலீட்டுடன் 1,50,000 நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பினை ஏற்படுத்தக் கூடிய வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. அதில் 11 நிறுவனங்கள் சிப்காட் வளாகங்களிலேயே நிறுவப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். இதில் சாம்சங், கெபாரோ வெஹிகல்ஸ் மற்றும் டெல் கம்ப்யூட்டர்ஸ் முதலிய 6 தொழில் நிறுவனங்கள் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன.

✶ சிப்காட் நிறுவனம் தற்போது நிலக்கோட்டை தொழில் வளாகத்தில் கெபாரோ என்ஜினியரிங் (பி) லிட் மற்றும் ஃபென்னர் இந்தியா லிட் ஆகிய இரண்டு நிறுவனங்களுடன் ஒவ்வொன்றும் ரூ.25 கோடி முதலீட்டில் தொழில் தொடங்க புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இவ்விரண்டு நிறுவனங்களும் 600 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பினை உருவாக்கும்.

✶ இருங்காட்டுக்கோட்டையில் ஆயத்த ஆடைப் பூங்கா, இருங்காட்டுக்கோட்டை காலணிப் பொருட்கள் தயாரிக்கும் பூங்கா ஆகிய பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## தொழில் வளாகங்கள் / பூங்காக்கள்

✶ தமிழகத்தில் ஏற்பட்டு வரும் மிகப்பெரிய தொழில் வளர்ச்சியின் காரணமாக எழுந்துள்ள நிலத் தேவையினை (குறிப்பாக சென்னைக்கு அருகில் உள்ள பகுதிகளில்) கருத்தில் கொண்டு, சிப்காட் நிறுவனம் சென்னைக்கு அருகில் ஒரகடம், இருங்காட்டுக்கோட்டை மற்றும் செய்யாறு தொழில் வளாகங்கள் / பூங்காக்களை விரிவாக்கம் செய்ய ஏறத்தாழ 4,727.38 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு வருகிறது.

✶ ஏறத்தாழ 25,000 ஏக்கர் நிலப்பரப்பில் 14 புதிய தொழில் வளாகங்களை நிறுவுவதற்காக சிப்காட் நிருவாகக் குழுமத்தின் ஒப்புதலுடன் அரசின் பரிசீலனையில் உள்ளன. இத் தொழில் வளாகங்கள் ஆறு மாவட்டங்களில் அமையப்பெற உள்ளன.

✶ தொழில் முனைவோரின் நிலத் தேவையை உடனடியாக ஈடுசெய்யும் நோக்கில் ஒரு நில வங்கியை ஏற்படுத்த அரசு அதன் புதிய தொழில் கொள்கை 2007இல் அறிவித்தற்கேற்ப, 20,000 ஏக்கர் பரப்பளவில் அவ்வாறான நிலவங்கியை ஏற்படுத்த ஏறத்தாழ 23,000 ஏக்கர் நிலம் ஐந்து மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்

- கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் சிப்காட் நிறுவனம், துறை சார்ந்த ஏழு சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அதன் தொழில் வளாகங்களில் உருவாக்கியுள்ளது.
- கங்கைகொண்டானில் போக்குவரத்துத் துறை சார்ந்த பொறியியல் பொருட்கள் தயாரிக்கும் ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலம் உருவாக்கப்பட்டுள்ளது.

### நீர்ப் பெருக்குத் திட்டம்

- சிப்காட் வளாகங்களிலுள்ள தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் நீரின் அளவினைப் பெருக்கிட மாற்று நீர் ஆதாரங்களை உருவாக்க சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் கழிவுநீரை, நீர் மறுசுழற்சி முறையில் சுத்திகரித்து இருங்காட்டுக்கோட்டை, திருப்பெரும்புதூர் மற்றும் ஒரகடம் தொழில் பூங்காக்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு வழங்குவதற்காக DBOOT அடிப்படையில் சிறப்புத் திட்டத்தினை தனியார் நிறுவனத்தின் மூலம் செயல்படுத்துவதற்காக ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

### தொழில் வளர நெடுஞ்சாலை (Industrial Corridor)

- சென்னை – திருப்பெரும்புதூர் - இராணிப்பேட்டை – ஒசூர் மண்டலத்தில் இரண்டு கட்டமாக இந்த சிறப்புத் தொழில் பெருவழிச்சாலை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

- தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் கடந்த இரண்டாண்டுகளில் மொத்தம் ரூ.**1,094.59** கோடி கடன் அனுமதித்தும், ரூ.**696.56** கோடி கடன் வழங்கியும், ரூ.**739.47** கோடி கடன்தொகையை வசூலித்தும் சாதனை புரிந்துள்ளது. மொத்தம் **40,450** நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

### தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்

- **4,57,515** மெ.டன் அச்சு எழுது காகிதம் உற்பத்தி செய்யப்பட்டு, **104%** விழுக்காடு உற்பத்தித்திறன் எய்தப்பட்டது.
- **2,663.13** இலட்சம் அலகு மின்சாரம் காற்றாலை பண்ணை மற்றும் ஆலையின் சுய மின் உற்பத்தியின் உபரியில் இருந்து மாநில மின் தொகுப்பிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன் மதிப்பு ரூ. **72.44** கோடி ஆகும்.
- ரூ.**320** கோடி மதிப்புள்ள **95,204** மெ. டன் அச்சு எழுது காகிதம் ஏற்றுமதி செய்யப்பட்டது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில்,
தலைமைச் செயலகத்தில், சென்னைக்கு அருகிலுள்ள ஒரகடத்தில்
ரூ.4,000 கோடி முதலீட்டில் ஆண்டுக்கு 4 இலட்சம் கார் உற்பத்தி செய்ய
புதிய கார் தொழிற்சாலை நிறுவப்படுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்
தமிழக அரசிற்கும், ரெனால்–நிசான் நிறுவனத்திற்கும் இடையே கையெழுத்தானது .(22.2.2008)

- இயற்கை எரிவாயு தயாரிக்கும் பிரிவில் இருந்து 105 இலட்சம் கன அடி மீத்தேன் வாயு உற்பத்தி செய்யப்பட்டு ரூ.14.34 கோடி மதிப்புள்ள, 6,274 கி.லிட்டர் உலை எண்ணையின் உபயோகம் தவிர்க்கப்பட்டது.

- தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் தனது கூடுதல் கூழ்மரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நிறுவன மற்றும் விவசாயப் பண்ணைத் திட்டங்களைத் தொடங்கியுள்ளது. 2006–07 மற்றும் 2007–08 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் 20,231 ஏக்கர் நிலத்தில் விவசாயப் பண்ணைத் திட்டத்தைச் செயல்படுத்தியது. இதனால் 4,302 விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

**விருதுகள்**

- தேசிய எரிசக்தி சேமிப்பு விருதை, மத்திய எரிசக்தி அமைச்சகம் 2006ஆம் ஆண்டில் இந்நிறுவனத்திற்கு வழங்கியது.

- தமிழக அரசு எரிசக்தி சேமிப்பு விருதை இந்நிறுவனத்திற்கு டிசம்பர் 2007இல் வழங்கியது.

- தொடர்ந்து 8ஆவது முறையாக மத்திய அரசின் CAPEXIL அமைப்பு வழங்கும் சிறந்த ஏற்றுமதிக்கான விருதை (2006–07) காகித நிறுவனம் பெற்று சாதனை படைத்துள்ளது.

**தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம்**

- ✶ டான்செம் நிறுவனம் 2005–06ஆம் ஆண்டில் அடைந்த நட்டம் ரூ.361.85 இலட்சத்திற்கு எதிராக, 2006–07ஆம் ஆண்டில் ரூ.6.33 கோடி இலாபமாக ஈட்டியுள்ளது.

- ✶ டான்செம் நிறுவனம் 2006–07ஆம் ஆண்டில் ஈட்டிய நிகர இலாபம் ரூ.6.33 கோடியை விட கூடுதலாக 2007–08ஆம் ஆண்டில் ரூ.15.75 கோடி (தற்காலிகமானது) இலாபம் ஈட்டியுள்ளது.

**சிமெண்ட் இறக்குமதி**

- ✶ உயர்ந்து வரும் சிமெண்ட் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்காக தமிழக அரசு வெளிநாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து சிமெண்ட் இறக்குமதி செய்வதற்கு முடிவு எடுத்து, சிமெண்ட் இறக்குமதி செய்து விநியோகித்துள்ளது.

- ✶ டான்செம் நிறுவனம், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் வட்டார கிட்டங்கிகளில் மூட்டை ஒன்றுக்கு ரூ.220 என்ற அளவில் விற்பனை செய்வதற்காக 1 லட்சம் டன் 43 கிரேட் சாதாரண போர்ட்லாண்ட் சிமெண்டை கனிமங்கள் மற்றும் உலோகங்கள் வாணிபக் கழகத்தின் மூலம் (MMTC) இறக்குமதி செய்வதற்கு முடிவு செய்து 10,365 மெ.டன் சிமெண்ட் வரப்பெற்று பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**புவியியல் மற்றும் சுரங்கத்துறை**

- ✶ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்தபடி, தமிழ்நாட்டில் உள்ள கனிமங்களைக் கண்டறிந்து வெளிக்கொணர்வதற்காக இத்துறைக்கெனத் தனியாக ஆய்வுப் பிரிவு ஒன்று தொடங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

## தமிழ்நாடு கனிம நிறுவனம்

- ✶ கடந்த இரண்டாண்டுகளில் 233.94.68 எக்டெர் பரப்பளவுள்ள 15 கிரானைட் சுரங்கக் குத்தகைகளை கிரானைட் வெட்டிஎடுக்க தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்தப் புதிய சுரங்கக் குத்தகைகளைப் பயன்படுத்தி மேலும் பல புதிய குவாரிகளை இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு கனிம நிறுவனம் தொடங்கி அரசுக்கு அதிக லாபம் ஈட்டித் தந்துள்ளது.

- ✶ கடந்த இரண்டாண்டுகளில் 233.94.68 எக்டெர் பரப்பளவுள்ள 15 கிரானைட்

சுரங்கக் குத்தகைகளை கிரானைட் வெட்டிஎடுக்க தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்தப் புதிய சுரங்கக் குத்தகைகளைப் பயன்படுத்தி மேலும் பல புதிய குவாரிகளை இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு கனிம நிறுவனம் தொடங்கி அரசுக்கு அதிக லாபம் ஈட்டித் தந்துள்ளது.

* 2007–08ஆம் ஆண்டில் தமிழ்நாடு கனிம நிறுவனம் 102 கருப்பு மற்றும் பலவண்ணக் கிரானைட் குவாரிகளையும், 8 உயர்வகை கனிமச் சுரங்கங்களையும் இயக்கியது. தமிழ்நாடு கனிம நிறுவனம் 2008–09ஆம் ஆண்டில் 120 குவாரிகள் / சுரங்கங்களை இயக்க உள்ளது.

* தமிழ்நாடு கனிம நிறுவனம் 2007–08ஆம் ஆண்டில் ரூ.115 கோடிக்கு விற்பனை செய்துள்ளது. இது ஒரு சாதனையாகும்.

* சிவகங்கை கிராபைட் தொழிற்சாலை 2007–08ஆம் ஆண்டில் சாதனை விற்பனை ரூ.1,040 இலட்சம் எட்டியுள்ளது.

* எண்ணூரில் உள்ள இந்தியத்தர மணல் பிரிவு, 2007–08ஆம் ஆண்டில் ரூ.126.32 இலட்சம் விற்பனை செய்துள்ளது. இது ஒரு சாதனை விற்பனையாகும்.

* டாமின் நிறுவனத்தில் 2007–08இல் கருணை அடிப்படையில் 69 நபர்களுக்கு வேலை வழங்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தில் சுரங்கச் சட்ட விதிமுறைகள்படி தேவையான 50 சுரங்கப்பணியாளர் பதவிகள் தொகுப்பு ஊதிய முறையில் நவம்பர் 2006இல் உருவாக்கப்பட்டன. இவற்றைக் காலமுறை ஊதிய விகிதத்திற்கு மாற்றி மார்ச் 2008இல் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இந்த பணியிடங்கள் விதிமுறைகளின்படி நிரப்பப்பட்டு வருகின்றன.

* நெடுநாட்களாக முடிக்க முடியாமல் இருந்த ஊதிய இருதரப்பு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த ஊதிய ஒப்பந்தம் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வும், பல உயர் சலுகைகளும், கடந்த 20 ஆண்டுகளில் முதன் முதலாகத் தொழிலாளர்கள் அனைவருக்கும் பதவி உயர்வும் அளித்துள்ளது.

## தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம்

### MMAN திட்டம்

* வெடிமருந்துகள் உற்பத்தி செய்யும் இயந்திரங்களில் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்த இயந்திரங்களைப் பயன்படுத்தவும், மற்றும் இந்த வகை




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்,
சென்னை–திருப்பெரும்புதூரில் மோட்டோரோலா செல்பேசி தயாரிப்புத் தொழிற்சாலையைத் திறந்துவைத்தார். (27.04.2008)

வெடிமருந்துத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள உபரிப் பணியாளர்களுக்குத் தொடர்ந்து வேலை அளிக்கவும், மோனோ மெத்தைல் அமின் நைட்ரேட் வகை வெடிமருந்துகள் தயாரிக்கும் திட்டம் ரூ.88 இலட்சத்தில் 2006-07ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் வெடிமருந்துகளின் வணிக உற்பத்தி 2008-09ஆம் ஆண்டில் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**2EHN திட்டம்**

★ டீசல் எண்ணெயின் பயன்பாட்டை அதிகரிக்கும் இரசாயனப் பொருளான **2EHN** உற்பத்தி செய்யும் திட்டம் ரூ.94 இலட்சத்தில் 2006-07ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.

**மேக்ஸம் நிறுவனத்துடன் செய்யப்பட்டுள்ள தொ[redacted]நுட்ப ஒப்பந்தம்**

★ டெல் நிறுவனம் உலக அளவில் முக்கியமான வெடிமருந்து தயார் செய்யும் ஸ்பெயின் நாட்டைச் [redacted]ஸம் கார்ப்பரேஷன் (முன்னர் யூ.ஈ.ஈ. என அழைக்கப்பட்ட) என்ற [redacted]த்துடன் சேர்ந்து புதிய வெடிமருந்து பொருட்களான ரியோமாக்ஸ், ரியோநெல் மற்றும் ரியோகார்ட் ஆகியவைகளை உற்பத்தி செய்து உள்நாட்டில் விற்பதற்கும் மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும், கூட்டு நிறுவனம் ஒன்று உருவாக்கப்படும்.

**தமிழ்நாடு உப்பு நிறுவனம்**

★ தமிழ்நாடு உப்பு நிறுவனம் கடந்த இரண்டாண்டில் விநியோகத் திட்டத்தின் மூலம் அயோடின் கலந்த அரசு உப்பினை தமிழ்நாட்டில் அனைத்துப் பகுதிகளுக்கும் விற்பனை செய்து வருகிறது. இதன் விற்பனை அளவு மாதத்திற்கு 2,300 டன்னிலிருந்து 2,800 டன்னாக அதிகரித்துள்ளது.

★ ★ ★



# பொதுத்துறையின் பெரும் பணிகள்

கலைஞர் **மு.கருணாநிதி** அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

## பொதுத்துறை

**தமிழ்நாடு அத்தியவசியப் பணிகளை பேணி வருதல் (நீக்கச்) சட்டம்**

★ அரசு ஊழியர்களிடையே நம்பிக்கை ஏற்படுத்துவதற்கும், ஒத்துழைப்புடன் பணி செய்யும் சூழ்நிலை மற்றும் நன்கு புரிந்து கொள்ளும் தன்மையை உருவாக்குவதற்கும் 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணிவருதல் (நீக்கச்) சட்டம், "டெஸ்மா" சட்டமன்ற பேரவையில் இயற்றி, தமிழ்நாடு அரசு அறிவிக்கை எண் 131இல் 7.6.2006ஆம் நாளன்று வெளியிடப்பட்டது.

**2006ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடை (நீக்கச்) சட்டம்**

★ கட்டாயப்படுத்துவதன் மூலமோ அல்லது வயப்படுத்துவதன் மூலமோ அல்லது மோசடிவழிகளின் மூலமோ, ஒரு மதத்திலிருந்து மற்றொரு மதத்திற்கு மாறச் செய்வதைத் கட்டாய மதமாற்றத் தடை அவசரச் சட்டமானது 5.10.2002 அன்று பிறப்பிக்கப்பட்டது. மேற்கண்ட சட்டத்தை நீக்கம் செய்ய இந்த அரசு முடிவு செய்ததைத் தொடர்ந்து, தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் சட்டமன்ற கூட்டத் தொடரில் 31.05.2006 அன்று நிறைவேற்றப்பட்டு, 07.06.2006ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில், தமிழ்நாடு சட்டம் 10 ஆக வெளியிடப்பட்டது.

**தலைமைச் செயலகத்தில் சமூக சீர்திருத்தத் துறை புதுப்பிக்கப்பட்டது**

★ சமூக சீர்திருத்தத் துறை மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இத்துறை தலைமைச் செயலரின் நேரடிப் பார்வையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் துறைகளில் ஒன்றாகச் செயல்படும்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், கொடிநாள் நிதி வசூலை நிதிஅளித்துத் தொடங்கி வைத்தார். (07.12.2007)

★ 20% இட ஒதுக்கீடு கோரி, 1987ஆம் ஆண்டு வன்னியர் சங்கத்தினர் நடத்திய போராட்டத்தில் உயிர் நீத்தவர்களின் குடும்பங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தலா ரூ.3 இலட்சமும், குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.1,500 வழங்க 1998ஆம் ஆண்டு அரசால் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

★ குடும்ப ஓய்வூதியத்தை நவம்பர் 2006 முதல் மாதம் ரூ.1,500லிருந்து ரூ.2,000ஆக உயர்த்தி அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டன. மேற்கண்ட குடும்ப ஓய்வூதியம் தற்போது 21 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

**சாதி மோதல்கள் தொடர்பாக பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளைத் திரும்பப் பெறுதல்**

★ பசும்பொன் தேவர் திருமகனார் நூற்றாண்டை முன்னிட்டு, அவரது பிறந்த நாளான 30.10.2007க்கு முன்பு, தென் மாவட்டங்களில் வாழுகின்ற சில சமூகங்களுக்கு இடையே ஏற்பட்ட குழு மோதல்களைத் (Group clashes) தொடர்ந்து பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளைத் திரும்பப் பெறுவதற்கான மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இவ்வறிவிப்பிற்கிணங்க நாளது தேதி வரை 21வழக்குகள் அரசால் திரும்பப்பெற ஆணையிடப்பட்டுள்ளன.

★ மேற்சொன்ன இனம் தவிர பொதுவாக சாதி மோதல்கள் தொடர்பாக பல்வேறு மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் 9 வழக்குகள் திரும்பப் பெற ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**அரசியல் காரணங்களுக்காகப் பதிவு செய்யப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெறுதல்**

★ 13.05.2006லிருந்து நாளது தேதி வரை அரசியல் காரணங்களுக்காகப் பதிவு செய்யப்பட்டுள்ள 60 வழக்குகள் திரும்பப் பெறுவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**கருணை அடிப்படையிலான வேலை வாய்ப்புகள்**

★ 17.12.2006 அன்று முஸ்லிம் தீவிரவாதிகளால் படுகொலை செய்யப்பட்ட தென்காசி நகர இந்து முன்னணித் தலைவர் திரு.எஸ்.குமார் பாண்டியன் என்பவரின் மனைவி திருமதி எஸ்.ஜெயந்தி என்பவருக்கும் கோயம்புத்தூர் மாநகரில் 14.02.1998இல் ஏற்பட்ட குண்டு வெடிப்பு சம்பவத்தில் உயிரிழந்த திருமதி தனபாக்கியம் என்பவரின் மகள் செல்வி சரண்யா என்பவருக்கும், இளநிலை உதவியாளர் பணி வழங்கப்பட்டுள்ளது. திரு.வி.கே.திருநாவுக்கரசு விசாரணை ஆணையத்தின் பரிந்துரையின் பேரில் 11.05.1996 அன்று தூத்துக்குடி மாவட்டம் இந்திராநகரில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் மரணமடைந்த திரு.எம்.சூசை என்பவரின் மகனும் மறைந்த திரு.எஸ்.ரவிக்குமார் என்பவரின் சகோதரருமான திரு.எஸ்.ராஜேஷ் என்பவருக்கு இளநிலை உதவியாளர் பணி வழங்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம், வீராம்பல் கிராமம், திரு.வின்செண்ட் சாம்சன் என்பவர் 29.10.2007 அன்று அடையாளம் தெரியாத சமூக விரோதிகளால் தாக்கப்பட்டு 30.10.2007 அன்று மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் இறந்ததால், அவரது மனைவி திருமதி. கொ்சியால் சகுந்தலா என்பவருக்கு ஏர்வாடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் செவிலியர் பணி வழங்கப்பட்டுள்ளது.

**முதலமைச்சரின் பொது நிவாரணத் தொகையில் நிவாரணம்**

★ சமூக விரோதிகளால் தாக்கப்பட்டு இறந்த இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம், வீராம்பல் கிராமத்தைச் சேர்ந்த திரு.வின்செண்ட் சாம்சன், என்பவரது மனைவி திருமதி. கெல்சியால் சகுந்தலா என்பவருக்கு ரூ.2 இலட்சம், 20.11.2007 அன்று மரணமடைந்த கடலூர் குள்ளஞ்சாவடி தாலுக்காவைச் சேர்ந்த திரு.இராமலிங்கம் என்பவரின் துணைவியாரான திருமதி.கௌரி என்பவருக்கு ரூபாய் ஒரு இலட்சம், கன்னியாகுமரி மாவட்டம், மண்டைக்காடு புதூர் பேருந்துநிலையத்தில் 10.3.2008 அன்று அரசுப் பேருந்து மோதியதில் உயிரிழந்த திருமதி.கொன்சிஸ் மேரி, க/பெ.திரு.சகாயராஜன் மற்றும் அவரது மகள் செல்வி சினேகா ஆகியோரின் குடும்பத்திற்கு தலா ரூ.50,000 வீதம் ரூ.1,00,000 முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க ஆணை வெளியிடப்பட்டது.

★ நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டம் மற்றும் கிராமம் மரியன்னை தொடக்கப்பள்ளியின் வளாகத்தில் செல்வன் நாகராஜ் என்பவரை வெறிநாய்

கடித்தது தொடர்பான மருத்துவச் செலவுக்கு ரூ.50,000 மற்றும் அவர் செலவிட்ட மொத்தத் தொகையில் மீதமுள்ள தொகையான ரூ.6,966ஐ முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க ஆணையிடப்பட்டது.

**விடுதலைப் போராட்ட வீரர்கள் ஓய்வூதியம் தொடர்பான சாதனைகள்**

★ சுதந்திரப் போராட்ட வீரர்களின் ஓய்வூதியத்தை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு ரூ.3,000ஆக இருந்த மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத்தை மாதம் ஒன்றுக்கு ரூ.4,000 ஆகவும், ரூ.1,500ஆக இருந்த குடும்ப ஓய்வூதியத்தை மாதம் ஒன்றுக்கு ரூ.2,000ஆகவும் உயர்த்தி 1.5.2007 முதல் முன்தேதியிட்டு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதனால் 1,024 விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் 2,251 தியாகிகளின் வாரிசுதாரர்கள் பயனடைந்துள்ளார்கள்.

**தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டம், 1951–இல் கீழ்க்கண்ட திருத்தங்கள் செய்து பல்வேறு சலுகைகளை இந்த அரசு அறிவித்துள்ளது**

★ பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்பாக இறந்து போய்விடுகின்ற சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் குடும்பத்திற்கான குடும்ப ஓய்வூதியத்தை ரூ.2,500 லிருந்து ரூ.3,000 ஆக 01.04.2005 முதல் முன்தேதியிட்டு உயர்த்தப் பட்டது.

★ முன்னாள் சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்களுக்கு மாதம் ஒன்றுக்கான ஓய்வூதியம் ரூ.6,000லிருந்து ரூ.7,000 ஆக 01.04.2007 முதல் உயர்த்தப்பட்டது.

★ ஓராண்டுக்குக் குறைவாகப் பணியாற்றிய சட்டமன்றப் பேரவையின் மற்றும் மேலவையின் உறுப்பினர்களுக்கு மாதம் ஒன்றுக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியம் 1.4.2007 முதல் ரூ.3,000லிருந்து ரூ.4,000ஆக உயர்த்தப்பட்டது.

**முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணம்**

★ மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.ஆர்.நல்லசிவன் அவர்களின் குடும்ப வறுமையைப் போக்க அவரின் துணைவியார் திருமதி.ந.சரஸ்வதி அவர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.2 இலட்சம் நிவாரணம் வழங்கப்பட்டது.

**புதிய அஞ்சல் தலைகள்**

★ "குறிஞ்சி மலர்" சிறப்பு அஞ்சல் தலை, "வேலூர் ஊரீஸ் கல்லூரி நூற்றாண்டு விழா" நினைவு அஞ்சல் தலை, "வேலூர் கலகம் – 1806" 200ஆம் ஆண்டு நினைவு அஞ்சல் தலை, "ம.பொ.சி. நூற்றாண்டு விழா" நினைவு அஞ்சல் தலை, "சென்னைப் பல்கலைக் கழகம்–150ஆவது ஆண்டு விழா" நினைவு அஞ்சல் தலை, கோவை தொழில் அதிபர் "ஜி. வரதராஜ்அவர்கள் நூற்றாண்டு விழா" நினைவு அஞ்சல் தலை, தமிழ் மொழியின் புகழை முதன்முதலில் அச்சுமூலம் பரப்பிய

"பார்த்தலோமினோ சீகன் பால்க்" அவர்கள் நினைவு அஞ்சல் தலை, "தமிழ்நாடு கிரிக்கெட் வாரியத்தின் 75ஆம் ஆண்டு விழா" நினைவு அஞ்சல் தலை, "டாக்டர் அழகப்ப செட்டியார் நூற்றாண்டு விழா" நினைவு அஞ்சல் தலை, "பரிதிமாற் கலைஞர்" நினைவு அஞ்சல் தலை, "இராமலிங்க அடிகளார்" நினைவு அஞ்சல் தலை, "மறைமலை அடிகளார்" நினைவு அஞ்சல் தலை, ஆகிய அஞ்சல் தலைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**அகதிகள் நலன்**

★ 31.3.08 தேதிய நிலவரப்படி சுமார் 2,99,569 நபர்கள் அகதிகளாக இந்தியாவிற்கு வந்துள்ளனர். அரசு நிதி உதவியுடன் சுமார் ஒரு இலட்சம் பேரும் மேலும் சுமார் ஒரு இலட்சம் பேர் தங்கள் சொந்த செலவிலும் இலங்கைக்குத் திரும்பிச் சென்றுள்ளனர். மீதமுள்ள நபர்களில் 19,360 குடும்பங்களைச் சார்ந்த சுமார் 73,087 நபர்கள் தமிழ்நாடு முழுவதும் 25 மாவட்டங்களில் இரண்டு சிறப்பு முகாம்கள் உட்பட 117 அரசு முகாம்களிலும், சுமார் 24,288 நபர்கள் அகதிகள் முகாம்களுக்கு வெளியிலும் தங்கியுள்ளனர்.

★ இவ்வரசு பதவி ஏற்றவுடன் இலங்கைத் தமிழர்களின் நலனில் மிகவும் பெருந்தன்மையுடனும் சகோதர உணர்வுடனும் அவர்களின் பிரச்சினைகளை அணுகியது.

★ இவ்வரசு இரண்டு அமைச்சர்களைக் கொண்ட குழுவினை அமைத்து, அவர்களை மண்டபம் முகாமிற்குச் சென்று அகதிகளின் பிரச்சினைகளைக் கேட்டறிய அனுப்பி வைத்தது.

★ அக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் தமிழக மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் அனைத்து நலத்திட்ட உதவிகளும் இலங்கைத் தமிழர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

★ இதுவரை இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கி வந்த மாதாந்திர பணக்கொடையை 1.8.2006 முதல் இரட்டிப்பாக்கி வழங்க ஆணையிடப்பட்டது. இரண்டாண்டுகளில் 31.3.2008 வரை ரூ.42.84 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. நடுவண் அரசின் ஒப்புதல் வரப்பெறாத நிலையிலும் உயர்த்தப்பட்ட பணக்கொடையினை மாநில அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது.

★ மண்டபம் இடைத்தங்கல் முகாமில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூ.38 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

★ இலங்கைத் தமிழர்களின் நலனைக் கருத்தில் கொண்டு இதுநாள்வரை இரவில் மட்டுமே வழங்கப்பட்டு வந்த இலவச மின்சாரம் பகல் நேரத்திலும் தொடர்ந்து வழங்க ஆணையிடப்பட்டது.

★ கடந்த 1990க்கு பின்னர் கட்டப்பட்ட 9,562 குடில்களின் மேற்கூரை பழுதுபட்டு மழைக்காலங்களில் அகதிகள் சிரமப்படுவதால் மேற்கூரை பழுதுபார்க்க குடிலுக்கு

ரூ.3,000 வீதம் ரூ.2.87 கோடி நிதி வழங்கி ஆணையிட்டு, 50 சதவீத பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

★ முகாமில் மின் இணைப்பு, குடிநீர், சுகாதாரம், கழிவு நீர் கால்வாய் போன்றவற்றை மேம்படுத்த ரூ.2.36 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ தமிழகத்தில் கருவுற்ற பெண்களுக்கு வழங்கப்பட்டு வரும் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தினை இலங்கைத் தமிழ்ப் பெண்களுக்கும் விரிவு படுத்தி மாதம் ரூ.1,000 வீதம் 6 மாதங்களுக்கு வழங்க மனித நேய அடிப்படையில் ஆணையிடப்பட்டு, இத்திட்டத்தின் கீழ் 905 பயனாளிகள் 2007–08ஆம் ஆண்டில் பயன் பெற்று உள்ளனர்.

★ மகளிர் சுய உதவிக் குழுக்கள் 2006–07ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டு 566 மகளிர் சுய உதவிக் குழுக்களும், 40 ஆண்களுக்கான சுயஉதவிக் குழுக்களும் செயல்பட்டு வருகின்றன.

★ இலங்கை அரசால் நடத்தப்பெறும் (General Certificate of Education Ordinary Level Examination) GCEOL என்ற 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வு இலங்கைத் துணைத் தூதரகத்தின் உதவியுடன் தமிழக அரசுத் தேர்வுத்துறையும் இணைந்து 2006–07ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது. இதில் 10ஆம் வகுப்பில் இடையில் படிப்பைத் தொடர முடியாமல் இந்தியாவிற்கு அகதியாக வந்து சேர்ந்த இலங்கைத் தமிழ் மாணவ, மாணவிகள் 148 பேருக்கு இலங்கையிலிருந்து ஆசிரியர்களை வரவழைத்து தேவையான பயிற்சி வகுப்புகள் மண்டபம் முகாமில் நடத்தப்பட்டன. சென்னையில் தேர்வுகள் நடத்தப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இது இந்திய வரலாற்றிலேயே முதன்முதலாக அயல் நாட்டு அகதி மாணவ, மாணவியருக்கு செய்த ஒரு மாபெரும் உதவியாகும்.

★ இவ்வரசு பதவியேற்ற பின்னர் இலங்கைத் தமிழ் அகதிகளின் மறுவாழ்வுத் திட்டத்திற்காக ரூ.93.06 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ தமிழகத்தில் உள்ள 115 அகதிகள் முகாம்கள் (இரு சிறப்பு முகாம் தவிர்த்து) பெரும்பாலும் கிராமங்களில் இயங்கி வருவதாலும், அங்கு குடியமர்த்தப்பட்டுள்ள பெண் மற்றும் குழந்தைகளில் பெரும்பாலோருக்கு ஒருங்கிணைந்த குழந்தைகள் உதவித் திட்டம் சேவை தேவைப்படுவதாலும், அவர்கள் தாயகம் திரும்பும் வரை உடல் நலத்தோடு இருக்க வேண்டுமென்ற மனித நேய அடிப்படையில் இத்திட்டம் 1.4.07 முதல் இலங்கை அகதிகளுக்கும் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது.

★ அகதிகள் தமிழகம் வந்தவுடன் உள்ளூர்வாசிகளுடன் உடனடியாக ஒன்றுபட்டு வாழ்ந்திட இயலாத நிலை உள்ளதால் முகாமை விட்டு தன்னிச்சையாக தகவலின்றி வெளியே சென்றுவிடுவதும் பின்னர் முகாம்களில் திரும்பவந்து விடுவதுமாக உள்ளனர். பணக்கொடை வழங்கும் சமயத்தில் அவர்தம் போக்கிடம் தெரியாத காரணத்தால் அவர்களின் பெயரை முகாம் அனுமதிப் பதிவேட்டில்




முன்னாள் படை வீரர்கள் கழக தினவிழாவில், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி,இ.ஆ.ப., அவர்கள், முன்னாள் இராணுவ வீரர்களின் குழந்தைகளில், 10ஆம் வகுப்பு 12ஆம் வகுப்பில் சிறந்த மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்கினார். (01.02.2008)

இருந்து நீக்கும் முறை தற்போது இருந்து வருகிறது. இது போன்று தத்தம் குடும்பத்தினருடன் நெடுநாட்கள் பதிவின்றி வாழ்ந்து வரும் அகதிகளிடமிருந்து மறுபதிவு செய்து அரசு வழங்கும் சலுகைகளை வழங்க கோரிக்கை பெறப்பட்டது. இதன் மூலம் 31.3.2008 வரை சுமார் 5,449 அகதிகளுக்கு மறுபதிவு வழங்கப்பட்டு அனைத்து மறுவாழ்வு உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

**அன்றாட வாழ்வில் இலங்கை அகதிகளுக்கு வழங்கப்பட்டு வரும் வசதிகள்**

★ 12 வயதிற்கு மேற்பட்டு முகாமில் வாழும் ஒவ்வொருவருக்கும், பல வண்ண அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.

★ முகாமில் வாழும் இலங்கைத் தமிழர்களின் பிறப்பு மற்றும் இறப்பு விவரங்கள் அவ்வப்போது பதிவு செய்யப்பட்டு உரிய சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது.

★ இலங்கைத் தமிழர்களுக்குள் நிகழும் திருமணங்கள் பதிவு செய்யப்பட்டு உடனே பதிவுச் சான்று வழங்கப்பட்டு வருகிறது.

★ முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர் குழந்தைகளுக்கு மேல் நிலை வகுப்பு (+2) வரையில் இலவசக் கல்வி வழங்கப்பட்டு வருகிறது. தற்போது 20,849 குழந்தைகள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுகின்றனர். அவரவருக்குரிய பணக்கொடை மற்றும் இதர சலுகைகளைப் பெற்றுக் கொண்டு தமிழ் நாட்டில் எங்கு

வேண்டுமானாலும் படிப்பைத் தொடரவும் அகதிகளின் குழந்தைகள் அனுமதிக்கப்படுகின்றனர்.

**முன்னாள் படைவீரர்களுக்கான புனரமைப்பு மற்றும் மறுவாழ்வு நலத்திட்டங்கள்**

★ தமிழ்நாடு அரசு முன்னாள் படைவீரர் மற்றும் அவர் தம் குடும்பத்தாரின் நலனைப் பேணி வருகிறது. போரில் வீரமரணமடைந்த படைவீரரின் குடும்பத்தார் மற்றும் போரில் ஊனமுற்ற படைவீரர்களின் நலன் காத்தல், முன்னாள் படைவீரர் நலத் துறையின் தலையாயப் பணியாக அமைகிறது.

**கடந்த இரண்டாண்டுகளில் இத்துறையின் முக்கிய சாதனைகள்**

★ துறையின் சீரிய முயற்சியினால், கொடி நாள் 2006ஆம் ஆண்டின் (07.12.2006 முதல் 06.12.2007) இலக்கு ரூ.6.93 கோடியினையும் விஞ்சி ரூ.10.22 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

★ 20 படைவீரர்களின் குடும்பத்தினருக்கு ரூ.18.25 இலட்சம் கருணைத் தொகையாக அரசு நிதியிலிருந்து வழங்கியுள்ளது. தற்போது அரசு கருணைத் தொகையை போரில் மரணமுற்றோருக்கு ரூ.5 இலட்சமும், ஊனமுற்றோருக்கு ரூ.50,000 முதல் ரூ.2 இலட்சம் வரை ஊனத்திற்கு தக்கவாறும் உயர்த்தி வழங்கப்படவுள்ளது.

★ தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 128 முன்னாள் படைவீரர்கள் கிராம நிருவாக அலுவலர் பணிக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

★ மாநிலக் காவல் துறையில், வெடிகுண்டு கண்டுபிடித்தல் மற்றும் செயலழிக்கும் பணி, நாய்ப் படை பணிகளில் 42 முன்னாள் படைவீரர்களுக்கு நிரந்தரமாக வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

★ படைவீரர்களின் பிள்ளைகள் தொழிற்கல்வி / தொழிற்நுட்பக் கல்வி / தொழிற்சார்ந்த கல்வி ஆகியவற்றில் சேரும் பொருட்டு குடியுரிமைச் சான்று பெற, மாநிலத்தில் குறைந்தபட்சம் வசிக்க வேண்டிய காலம் நீக்கப்பட்டுள்ளது.

★ சொந்த விருப்பத்தின்பேரில் ஓய்வூதியத்துடன் படைப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட முன்னாள் படைவீரர்களுக்கு அரசுப் பணிகளில் இட ஒதுக்கீடு பெறும் வகையில் "முன்னாள் படைவீரர்" என்பதற்கான சொற்பொருள் விளக்கம் திருத்தப்பட்டது.

★ பி.பார்ம்., பி.எஸ்சி.(நர்சிங்), மற்றும் பி.ப்பி.ட்டி. ஆகிய பட்டப்படிப்புகளுக்கு ஒவ்வொன்றிற்கும் ஓர் இடம் வீதம் முன்னாள் படைவீரர்களின் குழந்தைகளுக்கு இட ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

★ 8 மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகங்களின் பயன்பாட்டிற்கு மஹிந்திரா வாகனங்கள் வழங்கிட, அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

★ தொகுப்பு நிதியிலிருந்து போரில் ஊனமுற்ற படைவீரர்களுக்கு கருணைத் தொகையாக ரூ.30,000 அனுமதிக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

★ முன்னாள் படைவீரர் மற்றும் சார்ந்தோர் 3,424 பேருக்கு ரூ.14,17,000 வரை மானியமாக வழங்கப்பட்டது.

★ வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நியமனம் செய்யப்படும் பதவிகளுக்கு முன்னுரிமை அளிக்கும் பொருட்டு, முன்னுரிமைச் சான்று முன்னாள் படைவீரர் சார்ந்த 1,415 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

★ 20 மாவட்டங்களில் முன்னாள் படைவீரர் மற்றும் அவரது குடும்பத்தார்கள் அடங்கிய 96 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

★ சுய தொழில் துவங்கிட / மறு வேலைவாய்ப்புப் பெறுவதற்கு ஏதுவாக, ரூ.3.85 இலட்சம் செலவில், 77 முன்னாள் படைவீரர்களுக்கு பல்வேறு தொழிற்பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து வழங்கப்படும் சலுகைகள்**

★ முன்னாள் படைவீரர் / விதவையர்களுக்கு ரூ.250 வீதம் வழங்கப்படும் மாதாந்திர நிதியுதவி ஆயுட்கால மாதாந்திர நிதியுதவியாக மாற்றப்பட்டுள்ளது.

★ இயற்கைச் சீற்றங்களின் போது செலவிடப்படும் உள்ளபடியான செலவினத் தொகை முன்னாள் படைவீரர் / விதவையர்களுக்கு வழங்கப்படும் நிதியுதவி ரூ.5,000 லிருந்து ரூ.10,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ இவ்வறிக்கை காலத்தில் 13,676 முன்னாள் படைவீரர் மற்றும் சார்ந்தோர்களுக்கு இந்நிதியிலிருந்து ரூ.7.58 கோடி நிதியுதவி பல்வேறு திட்டங்கள் வாயிலாக வழங்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகம் மூலம் 9,371 முன்னாள் படைவீரர்களுக்கு வேலைவாய்ப்புக்காகப் பரிந்துரை செய்யப்பட்டது.

★ ★ ★



# சென்னையில் போக்குவரத்து நெரிசலைப் போக்க ரூ.9,757 கோடி மதிப்பீட்டில் "சென்னை மெட்ரோ இரயில் திட்டம்"

கலைஞர். **மு.கருணாநிதி** அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**சென்னை மெட்ரோ இரயில்**

★ வளர்ச்சிப் பாதையில் வேகமாக முன்னேறி வரும் சென்னை மாநகரின் சாலைகளில் போக்குவரத்து நெரிசலைப் போக்கும் வகையில், சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தினைச் செயல்படுத்திட தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. விரைவான, வசதியான, நம்பிக்கைக்குகந்த, திறன்மிக்க மற்றும் சிக்கனத்தின் அடிப்படையிலான போக்குவரத்துத் திட்டமொன்றினை, மாநகரப் போக்குவரத்துக் கழகம், புறநகர் இரயில் சேவை மற்றும் மாநகர துரித போக்குவரத்துத் திட்டம் இவைகளுடன் இணைந்து செயல்படும் வகையில் வழங்கிடுவதே இந்த சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் நோக்கமாகும்.

★ இந்தத் திட்டம் தொடர்பாக ஒரு விரிவான திட்ட அறிக்கையினை, மெட்ரோ இரயில் திட்டத்தை டெல்லியில் சிறப்பாக அமைத்துச் செம்மையாகச் செயல்படுத்தி வரும், டெல்லி மெட்ரோ இரயில் கழகம் தயாரித்துள்ளது. அதில் முதற்கட்டமாக இரண்டு மெட்ரோ இரயில் பாதைகளை அமைத்திடலாமென கருத்து தெரிவிக்கப் பட்டுள்ளது.



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து ஜப்பானிலுள்ள டோக்கியோ மெட்ரோ நிறுவனத்தின் அலுவலர்களுடன் ஆலோசனை நடத்தி, பணிமனையைப் பார்வையிட்டார். (7.2.2008)

| வழித்தடம் | நீளம் (கி.மீ.) | வழித்தடங்களில் நிறுத்த நிலையங்கள் |
|---|---|---|
| 1. வண்ணாரப்பேட்டை முதல் சென்னை விமான நிலையம் வரை | 23.1 | வண்ணாரப்பேட்டை – மண்ணடி – சென்னை கோட்டை – சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் – எழும்பூர் – எல்.ஐ.சி. – ஆயிரம் விளக்கு – ஜெமினி – தேனாம்பேட்டை – சேமியர்ஸ் சாலை – சைதாப்பேட்டை – வேளச்சேரி சாலை – கிண்டி – ஆலந்தூர் – அலுவலர் பயிற்சி நிலையம் – இந்தியன் ஏர்லைன்ஸ் காலனி – மீனம்பாக்கம் – சென்னை விமானநிலையம் |
| 2. சென்னை கோட்டையிலிருந்து புனித தோமையார்மலை வரை | 23.4 | சென்னை கோட்டை – சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் – வேப்பேரி – சாஸ்திரி நகர் – கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி – அமைந்தகரை – ஷெனாய் நகர் – அண்ணாநகர் கிழக்கு – அண்ணாநகர் டவர் – திருமங்கலம் – கோயம்பேடு – சென்னை புறநகர் பேருந்து நிலையம் – அரும்பாக்கம் – வடபழனி – அசோக் நகர் – கே.கே.நகர் – சிட்கோ – ஆலந்தூர் – புனித தோமையார்மலை |

★ திட்டத்தின் ஒரு பகுதி சுரங்கப்பாதையாகவும், மீதமுள்ள பகுதி உயர்வான நிலையிலும் அமைக்கப்படவுள்ளன.

★ இந்தத் திட்டத்திற்கான மொத்தச் செலவுத் தொகை ரூ.9,757 கோடி என்று தோராயமாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான நிதியை மத்திய, மாநில அரசுகள் பகிர்ந்து கொள்கின்றன. ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி இந்தத் திட்டத்திற்கான நீண்ட காலக் கடனுதவியை அளித்திடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

★ மாநில அரசினைப் போலவே மத்திய அரசும் இந்தத் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்துவதில் ஆர்வம் கொண்டுள்ளது. இத்திட்டம் மத்திய திட்டக் குழுவின் கொள்கை அளவிலான ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

★ விரிவான திட்ட அறிக்கையின்படி இந்தத் திட்டப் பணிகள் 2013–14ஆம் ஆண்டு வாக்கில் முடிவுறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

★ இந்தத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வழித்தடங்கள் மற்றும் நிறுத்த நிலையங்கள் ஆகியவை உத்தேசமானவை. அவை விரிவான வடிவமைப்பினை முடிவு செய்து பணிகள் மேற்கொள்ளப்படும்போது மாற்றங்களுக்குட்பட்டதாகும்.

★ ★ ★



# சமூகப்பாதுகாப்புறுதித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு அதிகரிப்பு

பேராசிரியர் **க. அன்பழகன்** அவர்கள்
மாண்புமிகு நிதித்துறை அமைச்சர்

**நிதித்துறை**

★ 2005–06ஆம் ஆண்டில் ரூ.7,528 கோடியாக இருந்த சமூகப் பாதுகாப்புறுதித் திட்டங்களுக்கான ஒதுக்கீடு 2008–09 வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 13,444 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

★ 2005–06ஆம் ஆண்டில் ரூ.567 கோடியாக இருந்த ஆதிதிராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் மற்றும் பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு 2008–09 வரவு செலவுத் திட்டத்தில் ரூ.2,313 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

★ 2005–06ஆம் ஆண்டில் ரூ.4,055 கோடியாக இருந்த மூலதனச் செலவோடு ஒப்பிடுகையில், 2008–09ஆம் ஆண்டில் மாநிலத்தின் அடிப்படைக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக மூலதனச் செலவுகளுக்கு ரூ.9,373 கோடி என்ற உயரளவில் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

★ பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ.85,344 கோடி அளவில் திட்டப் பணிகளை மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 2008–09 நிதியாண்டில், ரூ.16,000 கோடி ஒதுக்கீட்டில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

★ நிதிநிலை பொறுப்புடைமைச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறே, 2008–09ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரூ.84.05 கோடி வருவாய் உபரி இருக்கும் எனவும் நிதிப்பற்றாக்குறை மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 3 சதவீதத்திற்கும் குறைவாகவே இருக்கும் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

★ அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படாமல் நிறுத்தப்பட்டிருந்த மிகை ஊதியம் மற்றும் சிறப்பு மிகை ஊதியம் மீண்டும் வழங்கப்பட்டு வருகிறது.

★ மத்திய அரசு தனது ஊழியர்களுக்கு அகவிலைப்படிகளை உயர்த்தும் வேளைகளில் உடனடியாக அதே தேதியில் மாநில அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கும் உயர்த்தப்பட்டு வருகிறது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்,
மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள்
நிதிநிலை அறிக்கையினைத் தாக்கல் செய்யச் சென்றபோது வாழ்த்தினார். (20.03.2008)

இதுவரை 29 சதவீதத்திலிருந்து 47 சதவீதமாக அகவிலைப்படி உயர்த்தி வழங்கப் பட்டுள்ளது.

★ அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் பண்டிகை முன் பணம் ரூ.1,000லிருந்து ரூ.2,000ஆகவும், ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.500லிருந்து ரூ. 1,000ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

★ ஐந்தாவது மைய ஊதியக்குழு பரிந்துரையை நடைமுறைப்படுத்தியதால் வழங்கப்படவேண்டிய ஊதிய நிலுவைத் தொகையினை வழங்க இவ்வரசு அனுமதியளித்து ரூ. 872 கோடி வழங்கப்பட்டுள்ளது.

★ மேற்படி ஊதிய நிலுவைத் தொகைக்கு 31.3.2003க்குப் பின்னர் வட்டித் தொகையாக வழங்க ரூ. 358 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

★ 30 ஆண்டுகள் பணிபுரிந்தால் முழு ஓய்வூதியம், ஓய்வு பெறும் போது கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 50 சதவீதம் அல்லது கடைசி 10 மாதங்களின் சராசரி ஊதியத்தில் 50 சதவீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஓய்வூதியம் கணக்கிடும் முறை மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

★ ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்குப் பொங்கல் பண்டிகை 2008க்கான பொங்கல் பரிசு ரூ.150லிருந்து ரூ.300ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

★ ஓய்வூதியதாரர்களின் மருத்துவ சிகிச்சை உதவித் திட்டத்தின் கீழ், மருத்துவ சிகிச்சைகளுக்கு உரிய தொகையைத் திரும்பப் பெற ரூ.50,000 என்ற உச்சவரம்பு, ரூ.1 இலட்சம் என உயர்த்தப்பட்டுள்ளது.

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அரசு ஊழியர்களுக்கு புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை அறிவித்து அதன்படி ஒருவரது பணிக்காலம் முழுமையிலும் ரூபாய் ஒரு இலட்சம் வரை மட்டுமே உதவித்தொகை வழங்கப்படுவதற்கு பதிலாக நான்காண்டு காலகட்டத்தில் ரூ.2 இலட்சம் வரை நிதியுதவி கிடைக்க வகை செய்யும் புதிய திட்டம் நடப்பாண்டு முதல் செயல்படுத்தப்படும்.

★ கருவூல இணையதளம் மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் அவர்களால் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. நடுவண் அரசின் பணியாளர் அமைச்சகம், பொது குறைதீர்ப்பு மற்றும் ஓய்வூதியத் துறை, இந்த இணைய தளத்தை 2007–08ஆம் ஆண்டிற்கான தலைசிறந்த அரசு இணையதளமாக அங்கீகரித்து தங்கப்பதக்கத்தைப் பரிசாக அளித்துள்ளது.

★ சென்னையில் உள்ள அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியப் பட்டியல்கள் மின் தீர்வை திட்டம் (ECS) மூலம் அவரவர்களின் வங்கிக் கணக்கில் சேர்க்கப்பட்ட விவரத்தை இணையதளத்தின் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

★ சிறுசேமிப்பு வசூல் அடிப்படையில், வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள, உள்ளாட்சி மன்றங்களுக்கு 2007–08 நிதியாண்டில் ரூ.5.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் மருத்துவ நல நிதித் திட்டத்தின் கீழ், மருத்துவ நல நிதியின் நிபந்தனைகள் தளர்வு செய்யப்பட்டு ஒவ்வொரு மாதமும் ரூ.90 இலட்சங்கள் வரை ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதனால் கடந்த 2 ஆண்டுகளில் 19,033 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். இத்திட்டம் ஓய்வு பெற்ற மாநகராட்சி ஆசிரியர்களுக்கும், போக்குவரத்துத்துறை ஓய்வூதியதாரர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

★ ஓய்வூதியத்தின் மருத்துவ நிதியிலிருந்து உதவி வழங்கப்படாமலிருந்த மருத்துவ நலநிதி விண்ணப்பங்களுக்கு நிதியுதவி வழங்கும் பொருட்டு தற்போதைய அரசு ரூ.15 கோடி மானியமாக வழங்கியுள்ளது.

★ ஓய்வூதியர்களின் முறையீட்டின் மீதும், நீதிமன்றத்தின் தீர்ப்பின் பேரிலும் 199 விண்ணப்பப் படிவங்கள் ஆய்வு செய்யப்பட்டு, அதற்கான பணப் பயன்கள் ரூ. 69,65,000 வரையில் வழங்கப்பட்டுள்ளன.

★ தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தின் கீழ், கடந்த 2 ஆண்டுகளில் ரூ.46 கோடி ஓய்வூதியர் இறந்த பின்பு அவர்களது குடும்பத்தாருக்கு வழங்கப்பட்டுள்ளது. 18,271 பயனாளிகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

★ ★ ★



# இரண்டாண்டுகளுக்கு 26,500 கோடி ரூபாய் வளர்ச்சித் திட்ட ஒதுக்கீடு

பேராசிரியர் **க. அன்பழகன்** அவர்கள்
மாண்புமிகு நிதித்துறை அமைச்சர்

**திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை**

**பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டம்**

★ 06.06.2006 அன்று புதுடில்லியில் மத்திய திட்டக்குழு துணைத் தலைவர் மற்றும் மாண்புமிகு முதலமைச்சருக்கு இடையே நடந்த கூட்டத்தில் 2006–07ஆம் ஆண்டுத் திட்டத்திற்கு ரூ.12,500 கோடி என்ற வளர்ச்சித் திட்ட ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இது 2005–06ஆம் ஆண்டு வளர்ச்சித் திட்ட ஒதுக்கீட்டைக் காட்டிலும் 37சதவீதம் அதிகமாகும்.

★ 2007–08ஆம் ஆண்டு பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டாகும். 05.02.2007 அன்று புதுடில்லியில் மத்திய திட்டக்குழு துணைத் தலைவர் மற்றும் மாண்புமிகு முதலமைச்சருக்கு இடையே நடந்த கூட்டத்தில் 2007–08ஆம் ஆண்டுத் திட்டத்திற்கு ரூ.14,000 கோடி என்ற வளர்ச்சித் திட்ட ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது. இது 2006–07ஆம் ஆண்டு வளர்ச்சித் திட்ட ஒதுக்கீட்டைக் காட்டிலும் 12 சதவீதம் அதிகமாகும்.

★ 11.02.2008 அன்று மாண்புமிகு நிதி அமைச்சர் மற்றும் மத்திய திட்டக்குழுத் துணைத் தலைவர் ஆகியோரிடையே நடந்த கூட்டத்தில், 2008–09ஆம் ஆண்டில் ரூ. 16,000 கோடி என்ற உயரளவிலான ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இது 2007–08ஆம் ஆண்டு வளர்ச்சித் திட்ட ஒதுக்கீட்டைக் காட்டிலும் 14 சதவீதம் அதிகமாகும்.

★ தமிழ்நாட்டிற்கான பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ரூபாய் 85,344 கோடி அளவில் மத்திய திட்டக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த திட்டக் காலத்தில், மாநிலப் பொருளாதாரத்தை ஆண்டொன்றிற்கு சராசரியாக 9 சதவிகித அளவிற்கு வளர்ச்சி அடையச் செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டு, இந்த அரசு திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தும்.

**மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

★ இத்திட்டம் கடந்த இரண்டாண்டுகளில் ஆண்டொன்றிற்கு ரூ.35.50 கோடி சிறப்பு மத்திய நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டது.

★ 575 எக்டேர் பரப்பளவில் மண்வளப்பாதுகாப்புப் பணிகளும் 679 தடுப்பணைகளும் 117 நீர் சேகரிப்புப் கிணறுகளும் அமைக்கப்பட்டன.

★ 695 எக்டேர் பரப்பளவுக்கு, சோலைக் காடுவளர்ப்புப் பணிகளும் 490 கி.மீ. நீளத்திற் குத் தீத்தடுப்புப் பணிகளும் செய்யப்பட்டன.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் 11ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வரைவு அறிக்கையை மாநிலத் திட்டக்குழுத்துணைத் தலைவர் பேராசிரியர் மு.நாகநாதன் அவர்கள் அளித்தார். (8.12.2007)

★ 6,734 எக்டேர் பரப்பளவில் பயிரிட உயர்ரக/இறக்குமதி செய்யப்பட்ட காய்கறி விதைகள் உழவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

★ 23 எண்ணிக்கையிலான சாலைகள் மற்றும் பாலங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ ஆதி திராவிடர்/பழங்குடியினருக்காக 860 குறைந்த செலவிலான தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன.

**மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம்**

★ கடந்த இரண்டாண்டுகளில் ஆண்டொன்றிற்கு ரூ.17.04 கோடி சிறப்பு மத்திய நிதி உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

★ 3,003 எக்டேர் பரப்பளவில் மண்வள பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

★ 365 எக்டேர் பரப்பளவில் பல்வேறு தோட்டக்கலைப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

★ 713 எக்டேர் பரப்பளவில் இயற்கைச் சூழல் சீரமைப்பு, பாதுகாப்பு, மேம்பாடு, மற்றும் நிலைப்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ 29.56 கி.மீ. தூரத்திற்கு சாலைத் தடுப்புச்சுவர், சிறுபாலங்களுடன் கூடிய சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**சென்னை மெட்ரோ இரயில் திட்டம்**

★ சென்னை மெட்ரோ இரயில் திட்டம் சென்னையில் முதல் இரண்டு வழித்தடங்களில் ஒன்று 23.1 கி.மீ. அளவில் வண்ணாராப்பேட்டை முதல் சென்னை விமான நிலையம் வரை அடுத்ததாக 23.4 கி.மீ. அளவில் சென்னை கோட்டை முதல் புனித தோமையார் மலை வரை நிறைவேற்றத் திட்டமிடப் பட்டுள்ளது.

★ இந்த இரண்டு வழித்தடங்களுக்கும் தமிழ்நாடு அரசு தனது கொள்கை அளவிலான ஒப்புதலை வழங்கியுள்ளது. இதற்கான அடிப்படைச் செலவு ரூ.9,757 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

★ ★ ★



# தை முதல் நாள் - தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம்

பேராசிரியர் **க. அன்பழகன்** அவர்கள்
மாண்புமிகு நிதித்துறை அமைச்சர்

**தமிழ் வளர்ச்சித் துறை**

**தை முதல்நாள் – தமிழ்ப்புத்தாண்டு தொடக்கம்**

★ தை முதல் நாளைத் தமிழ்ப்புத்தாண்டுத் தொடக்கம் என அறிவித்துத் தமிழ்நாடு சட்டமன்றத்தில் **31.1.2008** அன்று சட்டம் இயற்றப்பட்டு, **11.2.2008** அன்று அறிவிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது.

**37 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை**

★ இவ்வரசு பொறுப்பேற்ற பின்னர் 37 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, சான்றாவணம் அளித்த தமிழ் அறிஞர்களின் மரபுரிமையர்களுக்குப் பரிவுத் தொகையாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ரூ.3.09 கோடி வழங்கப்பட்டது.

**செம்மொழித் தமிழ் ஆய்வு நிறுவனம்**

★ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொடர் நடவடிக்கைகளாலும் வலியுறுத்தலாலும் மத்திய அரசு தமிழ் மொழியைச் செம்மொழி என அறிவித்தது. செம்மொழி தொடர்பில் எண்பேராயம், ஐம்பெருங்குழு அமைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மாண்புமிகு மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.அர்சுன்சிங் அவர்களால் சென்னையில் மத்திய செம்மொழித் தமிழ் ஆய்வு நிறுவனம் **18.8.2007** அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்திற்குக் காஞ்சிபுரம் மாவட்டம், பெரும்பாக்கம் கிராமத்தில் **16.59** ஏக்கர் நிலம் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையில் சென்னையில் மத்திய செம்மொழித் தமிழ் ஆய்வு நிறுவனம் செயல்பட மத்திய அரசு ரூ.76.32 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

**விருதுகள்**

★ **2007**ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருது பேராசிரியர் முனைவர் க.ப.அறவாணன் அவர்களுக்கும், **2006**ஆம் ஆண்டுக்கான திரு.வி.க. விருது திரு.க.திருநாவுக்கரசு அவர்களுக்கும், பாரதியார் விருது திரு.மு.தமிழருவிமணியன் அவர்களுக்கும், பாரதிதாசன் விருது



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சான்றோர்கள் பெயரில் அமைந்த தமிழக அரசின் விருதுகளை வழங்கினார். (16.1.2008)

முனைவர் கா.செல்லப்பன் அவர்களுக்கும் 8.1.07 அன்றும், 2007ஆம் ஆண்டிற்கான "திரு.வி.க. விருது" முனைவர் த.பெரியாண்டவன் அவர்களுக்கும், "பாரதியார் விருது" கவிஞர் திருமதி.சௌந்தரா கைலாசம் அவர்களுக்கும், "பாரதிதாசன் விருது" திரு.எம்.எஸ்.வெங்கடாசலம் அவர்களுக்கும் "கி.ஆ.பெ.விருது" கவிஞர் கா.வேழவேந்தன் அவர்களுக்கும், 2008ஆம் ஆண்டிற்கான "திருவள்ளுவர் விருது" தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்களுக்கும் 16.1.2008 அன்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

**அறிவியல் தமிழ் வளர்ச்சி**

★ அறிவியல் தமிழ் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு அறிவியல் தமிழ் மன்றம் அமைக்கப்பட்டுச் செயற்பட்டு வருகிறது.

**எல்லைக் காவலர்களுக்குச் சிறப்பு**

★ தமிழ் மாநிலம் அமைந்த பொன்விழா 1.11.06 அன்று சென்னையில் கொண்டாடப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எல்லைக் காவலர்களுக்குச் சிறப்பு செய்தார்கள்.

**மறைமலை அடிகளாரின் பெயர்த்திக்கு நிதியுதவி – அரசுப்பணி**

★ தமிழறிஞர் மறைமலையடிகளார் அவர்களின் பெயர்த்தி திருமதி. சுந்தரத்தம்மை வயதான நிலையில் இன்னலுற்று வந்த நிலையைப் போக்கும்வகையில் அவர் பாதுகாத்து வைத்திருந்த நூல்களைப் பெற்றுக்கொண்டு, ரூ.1 இலட்ச ரூபாயும், அவருக்கு மருத்துவ உதவி நிதியாக ரூ.50 ஆயிரம் ரூபாயுமாக ரூ.1.50 இலட்சம்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தலைமைச் செயலகத்தில், தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி அவர்தம் மரபுரிமையினருக்கு பரிவுத் தொகைக்கான காசோலைகளை வழங்கினார்கள். கவிஞர் கருணானந்தம் அவர்களின் மரபுரிமையினர் ரூ.5 இலட்சத்திற்கான காசோலையினைப் பெறுகின்றனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 2.12.06 அன்று வழங்கப்பட்டது. திருமதி. சுந்தரத்தம்மை அவர்களின் மகள் செல்வி சொ.கலைச்செல்வி அவர்களுக்கு தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் முதுநிலை ஒப்பச்சராகப் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

**திருக்குறள் ஆங்கிலப்பதிப்பு**

★ ஆங்கில மொழியாக்கத்துடன் கூடிய திருக்குறள் நூல் ரூ.1 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு நட்சத்திரத் தகுதி பெற்றுள்ள தனியார் உணவக அறைகளில் வைக்கப்பட்டுள்ளது.

★ கன்னியாகுமரியில், திருவள்ளுவர் சிலை பார்வையாளர்களுக்குத் திருவள்ளுவர் பற்றிய குறிப்புக் கையேடு, திருக்குறள் மொழிபெயர்ப்பு நூல் அளித்திட ரூ.20 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்ப் பேரகராதிப் பணிக்கு ரூ.10 இலட்சம்**

★ ஆய்வறிஞர்களுக்கும் மாணவர்களுக்கும் பெரிதும் பயன்படும் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதியைக் கூர்ந்தாய்வு செய்து புதுக்கியும், பெருக்கியும் வெளியிடும் பணிக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தரிடம் ரூ.10 இலட்சத்திற்கான காசோலையை 7.12.07 அன்று வழங்கினார்கள்.

**திராவிடப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பணிக்கு ரூ.10 இலட்சம்**

★ திராவிடப் பல்கலைக் கழகத்தில் பிற திராவிட மொழிகளுடனான ஒப்பாய்வுத் திட்டப் பணிகளுக்கும், தமிழ் மொழி இலக்கியங்களைப் பிற திராவிட

மொழிகளிலும், பிற திராவிட மொழி இலக்கியங்களைத் தமிழ் மொழியிலும் மொழிபெயர்த்திடும் திட்டப்பணிகளுக்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆந்திர மாநிலத்திலுள்ள குப்பம் திராவிடப் பல்கலைக் கழகத் துணைவேந்தரிடம் ரூ.10 இலட்சத்திற்கான காசோலையை 7.12.07 அன்று வழங்கினார்கள்.

★ திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியற் பள்ளி 2000 முதல் 2004ஆம் ஆண்டு வரையிலான செலவினங்களுக்காகப் பெற்ற கடன் தொகையைத் திரும்பச் செலுத்துவதற்கு ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**குறள் முற்றோதல்**

★ திருக்குறளின் 1,330 குறட்பாக்களை முற்றோதல் செய்த 24 மாணவ, மாணவியரின் திறமையைப் பாராட்டி அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.5,000 வீதம் மொத்தம் ரூ.1.20 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

★ திருக்குறளைத் தேசிய நூலாக அறிவித்திடவும் , திருவள்ளுவர், தொல்காப்பியர் பெயரில் விருதுகள் வழங்கிடவும் மைய அரசிடம் வலியுறுத்தி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**சிறந்த நூல்கள் நூலாசிரியர்களுக்குப் பரிசுத் தொகை**

★ சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்குந் திட்டத்தின் கீழ், நூலாசிரியர்களுக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை ரூ.10,000 என்பது ரூ.20,000ஆகவும், பதிப்பகத்தாருக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை ரூ.2,000 என்பது ரூ.5,000ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

★ அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கம் நல்கும் வகையில் ஆண்டுதோறும் வெளிவரும் தமிழ் மென்பொருள்களுள் சிறந்த மென்பொருள் ஒன்றைத் தெரிவு செய்து அதனை உருவாக்கியவருக்குக் 'கணியன் பூங்குன்றனார்' பெயரில் பரிசுத் தொகை ரூ.1,00,000 வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது.

**ஆட்சிமொழித் திட்டம்**

★ ஆட்சிமொழித் திட்டத்தினை முனைப்புடன் செயற்படுத்தும் நோக்கில் சிறப்பாய்வுத் திட்டத்தின் கீழ் தலைமைச் செயலகத் துறைகளில் 26 துறைகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

★ 15 மாவட்டங்களில் ஆட்சிமொழிக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன.

★ உயர்நீதி மன்றத்தில் தமிழ் வழக்குமொழியாகப் பயன்படுத்தப்படக் குறிப்பிடத்தக்க வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ ★ ★



# இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு 1,20,256 இலவச மின் இணைப்புகள்

திரு. ஆற்காடு **நா.வீராசாமி** அவர்கள்
மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர்

## மின்சாரம்

**மின் உற்பத்தி – மின் வசதி – புதிய முயற்சிகள்**

★ நீர் மின் உற்பத்தி நிலையங்கள் 12,747 மில்லியன் யூனிட்டுகள் உற்பத்தி செய்துள்ளன.

★ மேட்டூர் அனல் மின் நிலையம் பாதுகாப்பு விருதுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

**தாவரத்திலிருந்து மின்சாரம்**

★ காற்றாலை மின் உற்பத்தித் திறன் 813 மெகாவாட் அளவிற்கும், இணைமின் உற்பத்தி 137 மெகாவாட் அளவிற்கும், தாவர சக்தி மின் உற்பத்தி மூலம் 64 மெகாவாட் அளவிற்கும் மின்உற்பத்தித் திறன் உருவாக்கப்பட்டுள்ளது.

★ கடலூர் மின் உற்பத்தி நிறுவனத்திடமிருந்து 1,320 மெகாவாட் மின்சாரத்தை கொள்முதல் செய்வதற்கான மின் கொள்முதல் ஒப்பந்தம் கையெழுத்தானது.

★ சிம்மாத்திரி மிகுதிறன் அனல்மின் திட்டம் மின் கொள்முதல் ஒப்பந்தம் தேசிய அனல்மின் கழகத்துடன் கையெழுத்தானது.

★ கூடுதல் மின் உற்பத்திப் பிரிவுகளை அமைப்பதற்காகவும் மின் தொடர் பணிகளுக்காகவும் ஐந்து வருட நீண்ட காலக் கடனாக ரூ.16,000 கோடி பெற ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

**எரிவாயு ஒப்பந்தம்**

★ பிள்ளைப்பெருமாள்நல்லூர் மின் உற்பத்தி கம்பெனிக்கும் இந்துஸ்தான் ஆயில் மற்றும் எக்ஸ்ப்லோரேஷன் கம்பெனி லிமிடெட் என்ற கம்பெனிக்கும் இடையே எரிவாயு விநியோக ஒப்பந்தம் கையெழுத்தானது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பொன்விழா ஆண்டுவிழாவில், மின்சார வாரியத்தில் பணிபுரியும் 6,000 ஒப்பந்தத் தொழிலாளர்களை மஸ்தூர் பணியில் நியமனம் செய்திடும் பணி ஆணையினை வழங்கினார். (11.9.2007)

★ தேசிய அனல் மின் கழகம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் இணைந்து 1,500 மெகாவாட் திறன் விரிவாக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

**புதிய அனல் மின் திட்டம்**

★ உடன்குடியில் 1,600 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் திட்டத்தை நிறுவுவதற்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

★ வடசென்னையில் 600 மெகாவாட் திறன் கொண்ட கூடுதல் மின் திட்டத்திற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

★ இராமநாதபுரம் மாவட்டத்தில் 92 மெகாவாட் திறன் கொண்ட கூடுதல் எரிவாயு மின் திட்டம் இயக்கி வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

★ ரூ.1,200 கோடி செலவில் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் 250 மெகாவாட் மின் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ கடற்கரையோர அனல் மின் திட்டங்களை வணிக மின் திட்டங்கள் என்ற பெயரில் நிறுவப்படுவதை தமிழ்நாடு அரசு ஊக்குவித்து வருகிறது.

**மின் தொடர் மற்றும் மின் பகிர்மானம்**

★ கடந்த இரண்டு ஆண்டுகளில் 132 துணை மின்நிலையங்கள் அமைக்கப் பட்டுள்ளன. 16,06,826 புதிய மின்இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**24 மணி நேரத்தில் புதிய மின் இணைப்பு**

★ குடியிருப்புகளுக்கும், 5 குதிரைத் திறனுக்குள் இருக்கும் தாழ்வு அழுத்த தொழிற்சாலைகள் மற்றும் வணிக மின் இணைப்புகளுக்கும் 24 மணி நேரத்திற்குள் மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது.

★ 6,63,086 வீட்டு மின் இணைப்புகளும், 2,01,378 தாழ்வழுத்த வணிக மின் இணைப்புகளும் 7,373 தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கான மின் இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.

★ ரூ.1,176 கோடி செலவில் நிலத்தடி மின்பாதை அமைக்கும் திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**400 கிலோ வோல்ட் மின் தொடர்ச் செயலாக்கம்**

★ தமிழ்நாடு மின்சார வாரியம் அலமாதி மற்றும் சுங்குவார் சத்திரம் துணை மின் நிலையங்களுக்கு இடையே சுமார் 50 கிலோ மீட்டர் தூரத்திற்கான 400 கி.வோ. மின் தொடரை அமைக்க ரூ.56.55 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

★ புகளூரிலும், சுங்குவார்சத்திரத்திலும் 400 கி.வோ. துணை மின் நிலையங்களை அமைப்பதற்காக இரட்டைச் சுற்று மின் தொடர் ரூ.878.41 கோடி மதிப்பீட்டில் செயல் படுத்தப்பட உள்ளது.

**பணியாளர் நலன்**

★ மின்சார வாரியப் பணியாளர்கள் மற்றும் ஒய்வூதியம் பெறும் ஏறத்தாழ 1,44,238 ஊழியர்கள் பயன்பெறும் வகையில் ரூ.125 கோடி செலவில் 50 சதவிகித அகவிலைப்படி அடிப்படை ஊதியத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு மின்வாரியப் பொன்விழாவை முன்னிட்டு வாரியத்தின் தொழிலாளர் களுக்கும், ஒய்வூதியதாரர்களுக்கும், குடும்ப ஒய்வூதியதாரர்களுக்கும் மொத்தம் 1,45,813 தொழிலாளர்களுக்கு தலா ரூ.1,000 வீதம் மொத்தம் ரூ.14,58,13,000 ரொக்கப் பரிசு அளிக்கப்பட்டது; மேலும் இவ்வாரியத்தில் தற்போது பணியாற்றும் 27,047 தொழிலாளர்களுக்கு தலா ரூ.500 வீதம் ரூ.1,35,23,500 ரொக்கப் பரிசாக அளிக்கப்பட்டது.

★ தமிழ்நாடு மின்வாரியப் பொன்விழாவை முன்னிட்டு இவ்வாரியத்தில் பணியாற்றும் 72,723 தொழிலாளர்களுக்கும் ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ ரூ.29.87 கோடி கூடுதல் செலவில் 1.7.2007 முதல் சிறப்புப் பரிசாக ஒரு ஊக்க ஊதிய உயர்வு (Incentive Increment) அளிக்கப்பட்டது.

★ 2006–07ஆம் ஆண்டிற்கு 66,066 மின் வாரிய ஊழியர்களுக்கு 20% போனஸ் மற்றும் கருணைத்தொகை வழங்கப்பட்டது. ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கும் பகுதி நேர ஊழியர்களுக்கும் தலா ரூ.1,000 கருணைத் தொகை ரூ.57.95 கோடி கூடுதல் செலவில் வழங்கப்பட்டது.

★ மேலும் அலுவலர்களுக்கு ரூ.1,000 வீதம் கருணைத் தொகையாக வழங்கியதால், மின்வாரியத்திற்கு ரூ.91.90 இலட்சமும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ரூ.300 வீதம் கருணைத் தொகை வழங்கியதால் ரூ.2.29 கோடியும் செலவானது.

**புதிய நியமனங்கள்**

**ஒப்பந்தத் தொழிலாளர் பணி நிரந்தரம்**

★ 1972இல் 40,000 தினக்கூலி தொழிலாளர்கள் பணி நிரந்தரம்; 1999இல் அனல்மின் நிலையங்களில் பணியாற்றிய 11,029 ஒப்பந்தத் தொழிலாளர்கள், 2007இல் 2,500 மஸ்தூர்களின் தொகுப்பூதியம் ரத்து செய்யப்பட்டு காலமுறை ஊதியமும் நிர்ணயம் செய்யப்பட்டது.

★ 2006க்குப்பின் 21,600 ஒப்பந்தத் தொழிலாளர்களை வாரியத்தில் படிப்படியாக பணி நிரந்தரம் செய்வதற்கான தீர்வு கையெழுத்தாகி, 19,890 ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டனர்.

**உதவிப்பொறியாளர்கள் நேரடி நியமனம்**

★ 2007–08இல் நேரடித் தேர்வின் மூலம் 300 உதவிப்பொறியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

**ஹைடல் சுவிங் மானியம்**

★ ஹைடல் சுவிங் மானியமாக ரூ.250 கோடியும்,

★ பங்கு மூலதன முதலீடாக ரூ.665 கோடியும் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**உள்ளாட்சி அமைப்புகள் செலுத்த வேண்டிய நிலுவைக் கட்டணத்தின் மீதான அபராத வரிக் குறைப்பு**

★ உள்ளாட்சி அமைப்புகள் மின்வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய நிலுவைக் கட்டணத்தின் மீது விதிக்கப்படும் அபராத வரி 12 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாகக் குறைப்பு அதற்கு முன்புள்ள நிலுவை அபராத வரித் தொகையும் தள்ளுபடி.

**இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிக்கு இலவச மின்சாரம்**

★ வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள 1,20,256 குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**இலவச நிலம் வழங்கும் திட்டத்தில் வழங்கப்பட்ட நிலத்திற்கு இலவச மின்சாரம்**

★ இரண்டு ஏக்கர் இலவச நிலம் வழங்கும் திட்டத்தின் கீழ் 17 மாவட்டங்களில் மொத்தம் 54 மின் இணைப்புகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

**மின் கட்டணத்தில் பல்வேறு வகை மின் பயனீட்டாளர்களுக்குச் சலுகைகளும் அதற்குண்டான தமிழக அரசின் மானியங்களும்**

★ வீட்டு உபயோகத்திற்குக் குறைந்த மின் கட்டணத்திற்காக ரூ.2,083.27 கோடியும், விவசாயிகளுக்கு ரூ.412.20 கோடியும், சுயநிதி மூலம் இணைப்பு பெற்ற விவசாயிகளுக்கு, இலவச மின்சாரத்திற்கு ரூ.79.72 கோடியும், குடிசைவாழ் மக்களுக்கு இலவச மின்சாரம் வழங்க ரூ.28.25 கோடியும், கைத்தறி விசைத்தறி நெசவாளர்களுக்கு மின்கட்டணம் குறைக்க ரூ.68.56 கோடியும், விசைத்தறி நெசவாளர்களுக்கு ரூ.63.28 கோடியும், பொது வழிபாட்டு இடங்களில் பயன்படுத்தும் மின்சாரத்திற்குக் கட்டணம் குறைக்க ரூ.7.46 கோடியும் உள்ளாட்சி அமைப்புகள் / தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் / சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் மின் கட்டணம் குறைக்க ரூ.44.44 கோடியும் ஆக ரூ.2787.18 கோடி மானியத்தொகையாக வழங்கப் பட்டுள்ளது.

**தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்**

★ தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிதி நிறுவனத்திற்கு ரூ.22 கோடியை மூலதனமாக தமிழ்நாடு அரசு அளித்துள்ளது.

★ தமிழ்நாடு மின்விசை நிதி நிறுவனம் ரூ.2,657.96 கோடி நிகர வைப்பீடு பெற்றுள்ளது. இந்த ஆண்டில் வைப்பீட்டாளர்களின் எண்ணிக்கை 2,74,365ஐ கடந்துள்ளது. இந்நிறுவனம் இந்த ஓராண்டில் மட்டும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மொத்தக் கடன் தொகையாக வழங்கப்பட்ட ரூ.1,415.88 கோடியையும் சேர்த்து மொத்தக் கடனுதவி ரூ.3,049.48 கோடியாகும். மேலும் இந்நிறுவனம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC), பூம்புகார் கப்பல் கழகம் மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) ஆகியவற்றிற்கு ரூ.49.70 கோடியை மொத்தக் கடனுதவியாக வழங்கியுள்ளது. ரூ.557 கோடியை ஓராண்டில் வைப்பீடாகப் பெற்றுள்ளது.

★ இந்நிறுவனம் வரிக்குப்பின் இலாபத்தில் ஒரு புதிய சாதனையாக 2006–07ஆம் நிதியாண்டில் ரூ. 43.67 கோடி ஈட்டியதுடன், ரூ.4.40 கோடியை ஈவுத்தொகையாக தமிழக அரசுக்கு வழங்கியுள்ளது. இந்நிறுவனம் இதுவரை தமிழக அரசுக்கு ஈவுத்தொகையாக ரூ.47.62 கோடி வழங்கியுள்ளது. இந்நிறுவனம் தொடக்கத்திலிருந்து இலாபம் ஈட்டி வருவதுடன் இதுவரை வரிக்குப்பின் இலாபமாக ரூ.240.01கோடியை 31.03.2007 வரை ஈட்டியுள்ளது.

**தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை**
**புதுப்பிக்கத்தக்க எரிசக்தியிலிருந்து மின் உற்பத்தி**

★ புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்கள் மூலம் தமிழ்நாட்டில் 31.03.2008 வரை மொத்தம் 4,260 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் உருவாக்கப்பட்டுள்ளது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம்,
புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் வெள்ளிவிழா ஆண்டை முன்னிட்டு,
புதுதில்லியில் நடைபெற்ற விழாவில் இந்திய குடியரசுத் தலைவர்
திருமதி.பிரதீபா பாட்டீல் அவர்களால், இந்தியாவிலேயே காற்றாலை சக்தி மூலம்
மின்சாரம் தயாரிப்பதில் முதல் மாநிலமாகத் திகழும் தமிழகத்திற்கு வழங்கப்பட்டக் கேடயத்தை
மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு.ஆற்காடு நா.வீராசாமி அவர்கள்
காண்பித்து வாழ்த்துப் பெற்றார். (1.12.2007)

**தொலைதூரக் கிராமங்களில் மின் வசதி**

★ 168 குக்கிராமங்களில் ரூ.9.28 கோடி செலவில் 5,190 சூரியஒளி வீட்டு விளக்குகளும், 283 சூரிய ஒளி தெரு விளக்குகளும் நிறுவப்பட்டுள்ளன.

**கிராம எரிசக்திக் காப்பீட்டுத் திட்டம்**

★ இத்திட்டம் தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களிலுள்ள 4 குக்கிராமங்களில் ரூ.56 இலட்சம் செலவில், மாவட்ட வன அலுவலர்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**சிறப்புப் பொருளாதார மண்டலம்**

★ உலகிலேயே முதலாவது எனக் கருதப்படும் வகையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சாதனங்கள் உற்பத்தி செய்வதற்கான ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் செங்கல்பட்டில் ஏற்படுத்தப்பட உள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், தனியார் முதலீட்டாளர்களுடன் கையொப்பமானது. இதில், ரூ.2,300 கோடி முதலீட்டுடன், 5,000 நபர்களுக்கு நேரடியாகவும், 10,000 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

**பகுதி II மற்றும் பிற திட்டங்கள்**

★ அரசு நிறுவனங்களில் ரூ.405.40 இலட்சம் செலவில் சூரியச் சுடுநீர் அமைப்புகள், தொலைதூரக் குக்கிராமங்களில் மின்வசதித் திட்டங்கள் செயல்படுத்தப் பட்டுள்ளன. முக்கியப் பிரமுகர்களுக்கான வசிப்பிடங்கள் மற்றும் அரசுக் கட்டடங்களில் சூரியசக்தி சுடுநீர்க் கலன்கள் ரூ.214.875 இலட்சம் செலவில் அமைக்கப்படுகின்றன.

**ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டம்**

★ ரூ.40 இலட்சம் செலவில் முதல்முறையாக தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**சாண எரிவாயுக்கலன் மூலம் மின் உற்பத்தி**

★ கோயம்புத்தூர் மாவட்டத்தில் மின்உற்பத்தி செய்யும் 10 கிலோவாட் திறன்கொண்ட கரிம எரிவாயுக்கலன், சேலம் மாவட்டத்தில் 5 கிலோ வாட் திறன் கொண்ட கரிம எரிவாயுக்கலன் ஆகியன மத்திய அரசின் நிதியுதவியுடன் சுய உதவிக் குழுக்களால் அமைக்கப்பட உள்ளன. இதற்காகும் மொத்தச் செலவான ரூ.24 இலட்சத்தில் ரூ.2.8 இலட்சத்தை மத்திய அரசு மானியமாக வழங்குகிறது. மலைவாழ் மக்களுக்கு மின்வசதி செய்து கொடுக்க இந்த மின்உற்பத்தி பயன்படுத்தப்படும். இதுபோன்ற மிகச் சிறிய அளவுகொண்ட கரிம எரிவாயுக் கலன் மூலமாக மின் உற்பத்தி செய்வது இதுவே முதன் முறையாகும்.

**தூய்மை மேம்பாட்டு இயக்கம்**

★ தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் புதியதொரு முயற்சியாக தாவர மின் உற்பத்தித் திட்டம், தாவர டீசல் மற்றும் குக்கிராமங்களில் கிராமக் காப்பீட்டுத் திட்டம் ஆகிய இம்மூன்றுத் திட்டங்களுக்குமான வரைவுக் கருத்துருவை ஐக்கிய நாட்டு மேம்பாட்டுத் திட்டத்தின் (UNDP) ரூ.9.06 இலட்சம் உதவியுடன், தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை தயாரித்துள்ளது.

★ ★ ★



# 2,81,502 காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன

திரு. ஆற்காடு **நா.வீராசாமி** அவர்கள்
மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர்

**பணியாளர் மற்றும் நிருவாகசீர்திருத்தத் துறை**

★ அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களுடன் நல்லுறவை ஏற்படுத்தும் வகையில் முந்தைய அரசால் பறிக்கப்பட்ட சலுகைகள் மற்றும் ஓய்வூதியப்பயன்களை மீண்டும் வழங்கியதுடன் கூடுதலாக பல சலுகைகளும் வழங்கப்பட்டன.

★ டெஸ்மா சட்டம் நீக்கப்பட்டது.

★ புதிய நியமனங்கள் செய்வதற்கான தடை நீக்கப்பட்டது மற்றும் அரசுப்பணிகளில் சேர்வதற்கான உச்ச வயது வரம்பு 5 ஆண்டுகள் உயர்த்தப்பட்டது.

★ அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் போராட்டக் காலம் பணிக்காலமாக முறைப்படுத்தப்பட்டது.

★ தலைமைச் செயலக ஊழியர்கள் மாலை நேரத்தில் வருகைப் பதிவேட்டில் கையொப்பமிடும் முறை ஒழிக்கப்பட்டது.

★ அரசு ஊழியர்கள் முழுமையான ஓய்வூதியம் பெறத் தகுதியுள்ள பணிக்காலம் 33ஆண்டுகளிலிருந்து 30 ஆண்டுகளாக மீண்டும் குறைக்கப்பட்டது.

★ ஓய்வூதியம் கணக்கிடப்படும் முறையை மாற்றி, கடைசியாக பெற்ற ஊதியத்தில் 50 சதவிகிதம் அல்லது கடைசி 10 மாத பணிக்கால அளவில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50 சதவிகிதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஓய்வூதியக் கணக்கீடு செய்யப்படும்.

★ இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு பொங்கல் போனஸ் / கருணைத் தொகை மீண்டும் வழங்கப்பட்டு வருகிறது.

★ ஈட்டிய விடுப்பு சரண் செய்து பணம் பெறும் முறை மீண்டும் நடைமுறைப் படுத்தப்பட்டது.

★ கருணை அடிப்படையில் தொகுதி ‘சி’ மற்றும் ‘டி’ பணியிடங்களில் அரசுப் பணி நியமனங்கள் வழங்க ஆணையிடப்பட்டது.

★ வேலை நிறுத்தக் காலத்தில் இறந்த அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள், இறந்த சாலைப்பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம்.

★ அரசுப் பணியாளர்கள் ஒரு பணியிலிருந்து வேறு பணிக்கு மாறுதல் செய்வதற்கான விதி நீக்கப்பட்டது.

★ ஐந்தாவது ஊதியக் குழுவின் நிலுவைத் தொகை மூன்று தவணைகளில் வட்டியுடன் வழங்க அரசாணை வெளியிடப்பட்டது.

★ பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலுள்ள இஸ்லாமியர்கள் மற்றும் கிறித்தவர்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் தலா 3.5 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

★ வேலை வாய்ப்புச் சலுகை வழங்க மற்றும் ஆதரவற்ற விதவைகள் உதவி பெற மாதாந்திர வருமான வரம்பு ரூ.1,000லிருந்து ரூ.4,000ஆக உயர்த்தப்பட்டது.

★ அரசுத்துறைகளில் காலியாக உள்ள எல்லாப் பணியிடங்களையும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் / ஆசிரியர் தேர்வு வாரியம் / சீருடைப்பணியாளர் தேர்வு வாரியம் / வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் விரைந்து நிரப்பிடத் தேவையான ஆணைகளை வெளியிட்டுள்ளது. இதுவரை மொத்தம் 2,81,502 காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

★ வெளிப்படையான, ஊழலற்ற நிருவாகத்தினை அளிப்பதற்கு ஓய்வு பெற்ற நீதியரசர் திரு.ஏ.கே.ராஜன் அவர்கள் தலைமையில் நிருவாகச் சீர்திருத்தக் குழுவினை இவ்வரசு அமைத்து, அறிக்கை பெறப்பட்டு அரசின் ஆய்வில் உள்ளது.

★ சிவகங்கை மாவட்டத்தில், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களை பயோமெட்ரிக் (Bio-metric) முறையில் கண்டறிந்து, வறுமையினை முழுமையாக மட்டுப்படுத்தும் திட்டங்கள் ரூ.20.19 இலட்சம் செலவில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

★ விழுப்புரம் மாவட்டத்தில், வருவாய்த் துறையில் இலவசமாகத் தொலைபேசி மூலம் பொதுமக்கள் குறை தீர்க்கும் திட்டம் (ரூ.6 இலட்சம்), தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் பணிபுரிவோரின் வருகையினை பயோமெட்ரிக் (Bio-metric) அடிப்படையில் அளவீடு செய்யும் முறை (ரூ.108 இலட்சம்) ஆகிய திட்டங்களை மைய அரசு ஏற்றுக்கொண்டு நிதி அளித்துள்ளது.

★ துறையின் சட்டங்களும் விதிகளும் மின்னணு முறைக்கு மாற்றப்பட்டு அரசு வலைதளம் "www.tn.gov.in." இல் வெளியிடப்பட்டுள்ளன.

★ 1,050 அரசு அலுவலர்களுக்குப் பேரிடர் மேலாண்மை குறித்த 50 பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

★ தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 குறித்து, 1,716 அரசு அலுவலர்களுக்குப் பல பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

★ கொள்முதல் விதிகள் மற்றும் வெளிப்படையான ஒப்பந்தப் புள்ளிகள் சட்டம் சம்மந்தமான 86 பயிற்சிகள் நடத்தப்பட்டன.

★ சுற்றுலா வழிகாட்டிகள் தங்கள் திறமைகளை சீரிய முறையில் வளர்த்துக் கொண்டு சுற்றுலாப் பயணிகளை நல்லமுறையில் நடத்தும் வண்ணம் பயிற்சிகள் தொடங்கப்பட்டுள்ளன.

★ 10,308 அரசு அலுவலர்களுக்கு நிருவாகம் மற்றும் மேலாண்மை தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

★ தமிழ்நாடு அரசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மற்றும் இதர வகுப்பினைச் சார்ந்த மாணவர்களுக்குச் சென்னை அண்ணா நகரில் இயங்கி வரும் அகில இந்திய குடிமைப்பணிகள் பயிற்சி நிலையத்தின் மூலமாக, அகில இந்திய குடிமைப்பணிகளுக்கான தேர்வுகளை எதிர்நோக்கும் பயிற்சிகளை அளித்து வருகிறது. இப்பயிற்சி நிலையத்தில் பயின்ற 13 மாணவர்கள் அகில இந்தியப் பணிகளுக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 54 பேர் இறுதி நேர்காணலுக்காகக் காத்திருக்கின்றனர்.

★ அண்ணா மேலாண்மை நிலையத்தில் பயிற்சிகளை மேலும் விரிவுபடுத்தும் வகையில், இவ்வாண்டில் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் நவீன ஸ்டுடியோவுடன் கூடிய தொலைதூர ஒலி–ஒளி கலந்துரையாடல் வசதி உருவாக்கப்பட்டு, அண்ணா மேலாண்மை நிலையத்தையும், அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தையும் இணைக்க தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

★ இந்திய அரசின், நிருவாகச் சீர்திருத்தம் மற்றும் ஓய்வூதியம் பெறுவோர் குறைதீர்ப்புத்துறை தகவல் தொழில் நுட்பவியல் துறைகளால் தோற்றுவிக்கப்பட்ட சிறந்த அரசு வலைதளத்திற்கான 2007–08 ஆம் ஆண்டிற்குரிய தேசிய மின்னணு ஆளுகை (துங்கம்) விருதை தமிழ்நாடு அரசின் வலைதளமான "www.tn.gov.in." பெற்றுள்ளது.

★ பவானிசாகர் பயிற்சி நிலையத்தின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக ரூ.42.50 இலட்சம் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது.

★ அரசுத் துறை மற்றும் அரசு சார் நிறுவனங்களின் அலுவலர்கள் பயன்பெறும் வகையில் அண்ணா மேலாண்மை நிலையம் 2008–09ஆம் ஆண்டு முதல் மேலாண்மையியலில் செயல்திறன் முதுகலை பட்டயப்படிப்பினைப் பகுதி நேரக் கல்வியாக (Part time) வழங்கவிருக்கிறது. நிருவாகத் திறன் மூலம் தாங்கள் சார்ந்துள்ள நிறுவனத்தின் செயல் மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்துவதுடன், பணி ஓய்விற்குப் பிறகும் பல்வேறு நிறுவனங்களில் சிறப்பாகப் பணிபுரியும் வாய்ப்புகளை அதிகரித்துக்கொள்ளவும் இயலும்.

★ ★ ★



# ஊரக வளர்ச்சியின் ஒப்புயர்வற்ற சாதனைகள்

திரு.**மு.க. ஸ்டாலின்** அவர்கள்
மாண்புமிகு ஊரக வளர்ச்சி (ம) உள்ளாட்சித் துறை அமைச்சர்

**ஊரக வளர்ச்சி (ம) உள்ளாட்சித்துறை**

**ஊராட்சித்தேர்தல் – 33 சதவீதத்திற்கு மேல் பெண்கள்**

- ★ தமிழ்நாட்டில் உள்ள 12,618 கிராம ஊராட்சிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 29 மாவட்ட ஊராட்சிகளுக்கான தேர்தல்கள் அக்டோபர் 2006இல் நடத்தப்பட்டன. 76 சதவீத மக்கள் வாக்களித்தனர். உள்ளாட்சி அமைப்புகளில் 33 சதவீதத்தினருக்கு அதிகமாகப் பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- ★ பல ஆண்டுகளாக தேர்தல் நடத்தப்படாமல் இருந்த பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டகச்சியேந்தல் ஊராட்சிகளுக்கு வெற்றிகரமாகத் தேர்தல்கள் நடத்தப்பட்டன.

**உயர்நிலைக் குழு**

- ★ உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கூடுதல் பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்கிட மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட ஓர் உயர்நிலைக் குழுவின் அறிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அளிக்கப்பட்டது. இக்குழு 39 பொருள்களில் அளித்துள்ள 99 பரிந்துரைகளில், 35 பரிந்துரைகளின் மீது அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

**உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப்பங்கீடு உயர்வு**

- ★ மாநில அரசின் சொந்த வரி வருவாயிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் நிதி 8 சதவீதத்திலிருந்து 9 சதவீதமாக உயர்த்தப்பட்டு,



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை தொடர்பான சட்டத் திருத்தங்கள், விதிமுறைகள் மற்றும் அரசாணைகள் அடங்கிய 7 நூல்களை வெளியிட்டார். (29.2.2008)

2006–07ஆம் ஆண்டில் ரூ.4,278 கோடியும், 2007–08ஆம் ஆண்டில் ரூ.4,945 கோடியும் வழங்கப்பட்டுள்ளன.

✶ ஒப்படைக்கப்பட்ட வருவாய் - உள்ளாட்சி அமைப்புகளில் நிதி மேம்பாடு செய்யும் பொருட்டு தலவரி, தலமேல்வரி, முத்திரைத்தாள் கட்டணம் மற்றும் கேளிக்கை வரி ஆகியவை உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பிரித்து வழங்கப்படுகிறது. 2007–08ஆம் ஆண்டுக்கு ரூ.270 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் மூன்றில் இரண்டு பங்கு நிதி (ரூ.180 கோடி) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது.

✶ இவ்வாண்டிலிருந்து மாநில நிதி ஆணைய நிதிப் பகிர்வில், கிராம ஊராட்சிகளின் பங்கு 47 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

✶ மக்கள் தொகை அடிப்படையில் மட்டுமே நிதிப் பங்கீடு செய்யப்படும்போது, பல சிறிய ஊராட்சிகளுக்குப் போதுமான நிதி கிடைப்பதில்லை. இந்நிலையினை மாற்ற மாநில நிதிக் குழு மானியத்திலிருந்து அனைத்து ஊராட்சிகளுக்கும் ரூ.3 இலட்சம் சமமாக வழங்க ஆணையிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

* மத்திய அரசிடமிருந்து பெறப்படும் பன்னிரெண்டாவது நிதிக் குழு மானியம் முழுமையும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

* உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு, உள்ளாட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் திட்டங்கள் பற்றி பயிற்சியளித்திட, அரசு ரூ.3 கோடி நிதி ஒதுக்கீடு செய்து 'பயிற்சித் தொகுப்பு நிதி' ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி 450 உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கு, கோயம்புத்தூர் மாவட்டம் ஒடந்துறை ஊராட்சியில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளைக் கண்டறியவும், நவீன வேளாண்மை மற்றும் தோட்டக்கலை குறித்த விவரங்கள் அறியவும் பட்டறிவுப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது.

  600 மூன்றடுக்கு ஊராட்சிப் பிரதிநிதிகளுக்கு ஊராட்சி நிருவாகம் மற்றும் சமுதாய வளர்ச்சி குறித்த இரண்டு நாள் பயிற்சி நடத்தப்பட்டது.

**மின் கட்டணம் குறைப்பு**

* ஊரகப் பகுதிகளுக்கு மின் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு ரூ.3.40 லிருந்து ரூ.3 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

**அபராத வரி தள்ளுபடி**

* மின்கட்டணம் செலுத்துவதற்கான கால அளவு 20 நாட்களிலிருந்து 60 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

* மின் இணைப்புகளுக்கு மீட்டர் பொருத்தி, ஆரம்ப / இறுதி மீட்டர் அளவுகள் அடிப்படையில் பட்டியல் வழங்குவது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

* ஊராட்சிகள் மின்வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய நிலுவைக் கட்டணத்தின் மீதான அபராத வரி 12 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

* 13.03.2007க்கு முந்தைய அபராத வரி ரூ.18.46 கோடி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**உத்தமர் காந்தி ஊராட்சி விருது**

* ஆண்டுதோறும் சிறப்பான மற்றும் புதுமையான முயற்சிகளைச் செயல்படுத்தும் 15 கிராம ஊராட்சிகளைச் சிறப்பிக்கும் வகையில், அரசால் 'உத்தமர் காந்தி ஊராட்சி விருது' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2006–07ஆம் ஆண்டுக்கான 'உத்தமர் காந்தி ஊராட்சி விருது' 15 கிராம ஊராட்சிகளுக்குக் கேடயமும்,

ரூ.5 இலட்சம் ரொக்கப் பரிசும், கிராம ஊராட்சித் தலைவர்களுக்குப் பதக்கமும் நற்சான்றிதழும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 10.10.2007 அன்று வழங்கப்பட்டது.

**நல்லுறவிற்கு "உள்ளாட்சிகள் தினவிழா"**

✶ ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும், மக்களுக்கும் இடையேயானத் தொடர்புகள் மற்றும் நல்லுறவினை மேம்படுத்துகின்ற வகையிலும் ஆண்டுதோறும் நவம்பர் முதல் நாளன்று "உள்ளாட்சிகள் தினவிழா" கொண்டாடப்பட்டு வருகிறது.

**உள்ளாட்சிகளுக்கு கூடுதல் நிருவாக அனுமதி அதிகாரம்**

✶ கிராம ஊராட்சிகள் பொது நிதியிலிருந்து அனுமதி வழங்குவதில் ஒரு பணிக்கு ரூ.1 இலட்சம் என்றிருந்ததை ரூ.2 இலட்சம் வரை நிருவாக அனுமதி வழங்கலாம் எனவும், ஊராட்சி ஒன்றியக் குழு சார்பில் நடைபெறும் ஒரு பணிக்கு ரூ.5 இலட்சம் என்றிருந்ததை ரூ.10 இலட்சம் அளவுக்கு நிருவாக அனுமதி வழங்கலாம் எனவும், மாவட்ட ஊராட்சிக்குழு சார்பில் நடைபெறும் ஒரு பணிக்கு ரூ.10 இலட்சத்திற்கும் மிகாமல் என்றிருந்ததை ரூ.20 இலட்சம் வரை நிருவாக அனுமதி வழங்கலாம் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது.

✶ அரசியல் மற்றும் தனிப்பட்ட காரணங்களுக்காக கிராம ஊராட்சிகளில் துணைத் தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியக் குழு மற்றும் மாவட்ட ஊராட்சித் தலைவர் மற்றும் துணைத்தலைவர் ஆகியோர் மீது அடிக்கடி கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள், வளர்ச்சிப்பணிகள், செயல்பாடுகள் பாதிக்கப்படும் என்பதாலும் மக்களாட்சியைப் பாதிக்கும் என்பதாலும், 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் திருத்தம் செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

**தொலைபேசி**

✶ அனைத்து கிராம ஊராட்சி அலுவலகங்களுக்கும் தொலைபேசி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**பரிசுத்தொகை**

✶ சமூக, பொருளாதார மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடும் வர்த்தகம் மற்றும் தொழில் நிறுவனங்களின் நடவடிக்கைகளை ஊக்குவித்துச் சிறப்பிக்க, 2007–08ஆம் ஆண்டு முதல் தகுதிவாய்ந்த 5 நிறுவனங்களுக்கு தலா ரூ.5 இலட்சம் பரிசுத்தொகை மற்றும் நற்சான்றிதழ் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

* 13.05.2006 அன்றைய தேதியில் நிலுவையிலிருந்த 1.540 இலட்சம் பணிகளில் 1.536 இலட்சம் பணிகள் இதுவரை முடிக்கப்பட்டுள்ளன.

## அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

**5 ஆண்டுகளில் அனைத்து 12,618 கிராம ஊராட்சிகளிலும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித்திட்டம்**

**இரண்டு ஆண்டுகளில் ரூ.1,025 கோடி ஒதுக்கீட்டில் 5,074 கிராம ஊராட்சிகள் பயன்**

* அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஊராட்சியிலும் குளம், நூலகம், விளையாட்டு மையம், சுடுகாடு/இடுகாடு, குடிநீர்த் திட்டப் பணிகள் கட்டாயமாகவும், தெரு விளக்குகள், மீன்வளர்ப்புக் குளங்கள், கிராமச் சந்தைகள் போன்றவை விருப்பத்தின் பேரிலும் எடுக்கப்படுகின்றன. கடந்த இரண்டாண்டுகளில் 5,074 கிராம ஊராட்சிகளில் ரூ.1,025 கோடி நிதி ஒதுக்கீட்டில் 79,253 பணிகள் எடுக்கப்பட்டு 73,359 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், அரசின் பிற திட்டங்களின் மூலம் ரூ.4,378 கோடி மதிப்பீட்டில் 15,23,895 பணிகள் ஒருமுகப்படுத்தப்பட்டுள்ளன.

### ஊரக வேலை உறுதித் திட்டம்

* தமிழ்நாடு ஊரக வேலை உறுதித் திட்டம் 2006–07 முதல் கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, நாகப்பட்டினம், திண்டுக்கல், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு, தற்போது தஞ்சாவூர், திருவாரூர், கரூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 13.05.2006 வரையில் வெறும் 3 கோடி ரூபாயாக இருந்த செலவு, ஜனவரி 2007இல் ரூ.111 கோடியாகவும், தற்போது ரூ.619 கோடிக்கு மேலாகவும் உயர்ந்துள்ளது. 8 கோடி மனித நாட்கள் உருவாக்கப்பட்டு 8,338 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பயன்பெறுவோரில் 82 சதவீதம் பெண்கள், 56 சதவீதத்தினர் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர்; முன்பு சராசரியாக 40 ரூபாயிலிருந்து 50 ரூபாய் வரையே ஊதியம் பெற்ற பெண்கள் தற்போது 80 ரூபாய் ஊதியம் பெறுகின்றனர். இத்திட்ட செயல்பாட்டிற்கென புதிய பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### பெரியார் நினைவு சமத்துவபுரம்

* 1997–98ஆம் ஆண்டு முதல் 145 பெரியார் நினைவு சமத்துவபுரங்களை இந்த அரசு அமைத்துள்ளது. மேலும் 95 புதிய சமத்துவபுரங்களை அமைத்து அவற்றில்



தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ்,
திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஒன்றியம், விளாங்காடு ஊராட்சியில்
புதிய குளம் வெட்டும் பணி நடைபெற்று வருகிறது.

தந்தை பெரியார் சிலையை நிறுவி அனைத்து சமூகத்தினரும் சகோதரத்துவத்துடன் ஒருமித்து வாழ்கின்ற நிலை ஏற்படுத்த மொத்தச் செலவையும் தமிழ்நாடு அரசே ஏற்றுக்கொள்ளும்.

**இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம்**

★ இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் புதிய வீடுகளுக்கான மாநில அரசு மானியத்தை ரூ.12,000 லிருந்து ரூ.20,000ஆக 2008–09ஆம் ஆண்டிலிருந்து இந்த அரசு உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளது.

**பள்ளிகள்**

★ ஊராட்சி ஒன்றியப் பள்ளிச் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் 22,000 ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிகள் மற்றும் 4,500 நடுநிலைப் பள்ளிகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது. 2007–08ஆம் ஆண்டில், ரூ.135 கோடி மதிப்பீட்டில் சுமார் 10,248 பள்ளிகள் பராமரிப்பிற்காக எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளது. 5,500 பள்ளிகளில் 2008-09ஆம் ஆண்டில் ரூ.60 கோடி மதிப்பீட்டில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**நமக்கு நாமே திட்டம்**

- ✶ நமக்கு நாமே திட்டத்தினை 2007–08ஆம் முதல் மீண்டும் செயல்படுத்த அரசு முடிவு செய்து ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதுவரை ரூ.20.89 கோடி, பொது மக்கள் பங்குத் தொகையாகப் பெறப்பட்டு, 1,528 பணிகள் எடுக்கப்பட்டு 325 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2008–09ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தின்கீழ் ரூ.50 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**சாலைப்பணிகள்**

- ✶ பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம் நபார்டு ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதிக்குழு மானியத்தின் கீழ், ரூ.924 கோடி மதிப்பீட்டில் 10,059 கி.மீ. நீளமுள்ள சாலைப்பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. 2006–07ஆம் ஆண்டுகளில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டக் கிராமங்களில் 9.10.2007இல் 3,946.80 கி.மீ நீளத்திற்கான சாலைகளுக்காக நபார்டு ஒப்பளிப்பு செய்த ரூ.410 கோடியும் உள்ளடங்கும்.

**சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் பணிகள்**

- ✶ சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்ட நிதி ரூ.1 கோடியிலிருந்து ரூ.1 கோடியே 20 இலட்சமாக உயர்த்தப்பட்டது. 2007–08ஆம் ஆண்டில், 26,095 பணிகள் எடுக்கப்பட்டு 21,401 பணிகள் இதுவரை முடிக்கப்பட்டுள்ளன.

## மகளிர் திட்டம்

- ✶ 2002ஆம் ஆண்டு முதல் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பயிற்சித் தொகை நாளொன்றுக்கு ஒரு நபருக்கு ரூ.45 லிருந்து, 7 ரூபாய் 50 பைசாவாகக் குறைக்கப்பட்டதை, மீண்டும் ரூ.45 என உயர்த்தப்பட்டுள்ளது.

**சுழல் நிதி**

- ✶ முதன்முறையாக 2006–07லிருந்து மாநில அரசு நிதியில் நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல் நிதி வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு இதுவரை 30 ஆயிரம் நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.10,000 வீதம் ரூ.30 கோடி ஒதுக்கீட்டில் சுழல் நிதி மானியம் வழங்கப்பட்டுள்ளது.
- ✶ 2008ஆம் ஆண்டில், சுழல்நிதி பெறத் தகுதி வாய்ந்த அனைத்து மகளிர் திட்ட குழுக்களுக்கும் சுழல்நிதி மானியம் வழங்க அரசு முடிவு செய்து, இதன் மூலம் 1 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் திட்ட சுய உதவிக் குழுக்கள் பயன்பெறும்.



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், சேலத்தில் நடைபெற்ற நகர் பகுதி மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு
சுழல்நிதி வழங்கும் விழாவில், சுயஉதவிக் குழுவினருக்கான காசோலையை வழங்கினார்.
உடன் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் உள்ளனர்.

**புதிய மகளிர் சுயஉதவிக் குழுக்கள்**

- 13.05.2006 முதல் 15.3.2008 வரை 50,083 புதிய மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 8,01,328 பெண்கள் உறுப்பினர்களாக சேர்ந்துள்ளனர். இக்காலவரைக்குள் 95,302 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.908.15 கோடி வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

**இளைஞர் சுயஉதவிக் குழுக்கள்**

- வேலை வாய்ப்புடன் கூடிய தொழிற் பயிற்சித் திட்டத்தின் கீழ், 11,485 இளைஞர்களுக்கு தொழிற் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. 19,698 இளைஞர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு 2,640 குழுக்களுக்கு தலா ரூ.10,000 வீதம் சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.

- ஊராட்சி அளவிலான 6,367 கூட்டமைப்புகளுக்கு ஆதார நிதியாக தலா ரூ.10,000 வீதம் வழங்கப்பட்டுள்ளது.

**மணிமேகலை விருது**

- சிறப்பாகச் செயலாற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களையும், கூட்டமைப்புகளையும் ஊக்குவிக்கும் வகையில் 'மணிமேகலை விருதுகள்'

அறிமுகப்படுத்தப்பட்டன. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் மணிமேகலை விருதுகள் 5 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும், 10 சுய உதவிக் குழுக்களுக்கும் வழங்கப்பட்டன. இதே போன்று மாவட்ட அளவில் ஒரு சிறந்த கூட்டமைப்பிற்கும் 3 சுயஉதவிக் குழுக்களுக்கும், மணிமேகலை விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

**வாழ்ந்து காட்டுவோம்**

- ✶ வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் விடுபட்ட ஏழை மக்களைக்கொண்டு 2,629 புதிய சுயஉதவிக் குழுக்களும், ஊனமுற்றோரைக் கொண்டு 1,619 புதிய சுய உதவிக்குழுக்களும் உருவாக்கப்பட்டுள்ளன. 14,294 ஊனமுற்றோருக்கு தேசிய அடையாள அட்டைகள் பெற்றுத் தரப்பட்டுள்ளன. 3,189 ஊனமுற்றோருக்கும், 2,147 நலிவுற்றோருக்கும் தனிநபர் நிதி அளிக்கப்பட்டுள்ளது. மார்ச் 2008 வரை ரூ.51.13 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**சுனாமி அவசரகால உதவித் திட்டம் (TEAP)**

- ✶ 33,547 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.88.82 கோடி சுழல் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

- ✶ 34,632 உடல் ஊனமுற்றோருக்கு ரூ.10,000 வீதம் ரூ.34.63 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

**பொருளாதார மேம்பாட்டு உதவி**

- ✶ பொருளாதார மேம்பாட்டு உதவியாக ரூ.31.55 கோடி வழங்கியதன் மூலம் 2,472 மகளிர் சுய உதவிக் குழுக்கள் பயனடைந்துள்ளன.

- ✶ புதிய மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, அதற்கு அமைப்புச் செலவினமாக ரூ.88 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்குப் பயிற்சி**

- ✶ மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அடிப்படைப் பயிற்சி உள்ளிட்ட பல்வேறு திறன் வளர் பயிற்சிகள் அளிப்பதற்கு ரூ. 4.39 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**சாலை வசதி**

- ✶ சாலை மேம்பாட்டிற்காக ரூ.93.63 கோடி ஒதுக்கப்பட்டு 612 (699.26 கி.மீ) சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 500 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 31.3.2008 வரை ரூ.71.22 கோடி செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பொதுக் கட்டடங்கள்**

- ✶ 134 ஊராட்சி அலுவலகக் கட்டடங்களைப் புனரமைத்தல் மற்றும் விரிவாக்கம் செய்யும் பணிகளும், 50 கட்டடங்களில் புனரமைப்புப் பணிகளும் மற்றும் 24 பழுதடைந்த ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் இடிக்கப்பட்டு மீளக் கட்டும்

பணி, ஆக மொத்தம் 208 பணிகள் ரூ.642.97 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு 15 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

* சென்னை வள்ளுவர் கோட்டத்தின் அருகில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான வளாகம் ரூ.10.72 கோடி மதிப்பீட்டில் சுமார் 6,530 சதுர மீட்டர் பரப்பளவில் கட்ட வழங்கப்பட்டுள்ளது.

**கைவினைஞர் கிராமம்**

* விழுப்புரம் மாவட்டத்தில் ரூ.51 இலட்சம் மதிப்பில் கைவினைஞர் கிராமம் அமைத்தல் திட்டத்தில் கிராமங்களில் இருந்து 32 சுய உதவிக்குழுக்களில் இடம் பெறும் 500 கைவினைஞர்கள் பயன்பெறுவர்.

**மாமல்லபுரம் சிற்பப் பூங்கா**

* மாமல்லபுரத்தில் ரூ.10.58 கோடி மதிப்பீட்டில் சிற்பப்பூங்கா அமைத்தலும் 14 ஏக்கர் பரப்பளவில் 400 சதுர அடி பரப்பளவுள்ள 125 சிற்பக் காட்சிக் கூடங்களும், 1,400 சதுர அடி பரப்புள்ள சிற்பப் பட்டறைகளும் கட்டப்படவுள்ளன. சிற்பப்பூங்கா அமைப்பதன் மூலம் சுமார் 1,200 சிற்பக்கலைஞர்கள் பயனடைவார்கள்.

* விவசாயிகளின் வேளாண் விளைபொருட்களுக்கு வருமானம் ஈட்டக்கூடிய 15 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் ரூ.1.62 கோடி செலவில் கட்டப்பட்டு வருகின்றன.

* ஆறு கைத்தறி நெசவாளர் சங்கங்களைச் சேர்ந்த 250 நெசவாளர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் ரூ.61.09 இலட்சம் செலவில் கைத்தறி நெசவாளர்களின் தொகுப்பை மேம்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

* பால் சேகரிக்கும் திறனை மேம்படுத்த ரூ.406.39 இலட்சம் செலவில் பால் உற்பத்திச் சங்கங்களின் மற்றும் பால் பொருட்களை விற்பனை செய்திட 37 பாலகங்கள் அமைத்தல், 9 பால் குளிரூட்டும் பெரிய கலன்கள் அமைத்தல், 160 பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல், மற்றும் 6,023 சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

**மீனவப் பெண்களுக்கு கடல் பாதுகாப்புப் பயிற்சி**

* 591 மீனவக் கிராமங்களில் வசிக்கும் மீனவர்கள் மீன் பிடிக்கும் போது ஏற்படும் இடர்பாடுகளை எதிர்கொண்டு உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, தென்னிந்திய மீனவ சம்மேளனம் மூலம் ரூ.112.87 இலட்சம் செலவில் 25,000 மீனவர்களுக்கும் மற்றும் 60,000 மீனவப் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்குக் கடல் பாதுகாப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

* திருவனந்தபுரத்தில் உள்ள தென்னிந்திய மீனவச் சங்கங்களின் சம்மேளனத்தில் 93 மீனவச் சங்கங்களின் உறுப்பினர்களாக உள்ள மொத்தம் 5,077 தமிழக மீனவர்கள் மீன்பிடிப் படகுகளை இயக்குவதற்கு வசதியாக ரூ.295.82 இலட்சம்

நடைமுதல் (Working capital) மானியம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 25,000 மீனவர்கள் பயனடைந்துள்ளனர்.

**ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம் (RGRP)**

* தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கட்டாமல் விலகியதால் தமிழக அரசால் ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தில் காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் 2,630 வீடுகள் சுமார் ரூ.63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.
* இப்பகுதிகளில் அடிப்படை வசதிகளான சிமெண்ட் சாலைகள், சுமார் ரூ.10.52 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
* தொண்டு நிறுவனங்கள் வீடுகள் கட்டிய பகுதிகளில் அடிப்படை வசதிகள் ரூ.53.14 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. ரூ.41 கோடி மதிப்பீட்டில் 133 உட்புற சிமெண்ட் கான்கிரீட் சாலைகள், ரூ.4.54 கோடி மதிப்பீட்டில் 4,757 சுகாதார வசதிகளும், ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் தாழ்வான நிலப்பகுதிகளில் மண் நிரப்பும் பணிகளும், ரூ.3.90 கோடி மதிப்பீட்டில் தெருவிளக்குகள் அமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**ராஜீவ்காந்தி புனரமைப்புத் திட்டம்**

* 11 கடலோர மாவட்டங்களில் கடல் அலை ஏற்றத்திலிருந்து 1,000 மீட்டருக்குள் உள்ள இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம் மற்றும் மீனவர் குடியிருப்புத் திட்டங்களின் கீழ், அரசால் கட்டப்பட்ட 10 ஆண்டுகள் பழமையான வீடுகளை ராஜீவ் காந்தி புனரமைப்புத் திட்டத்தின் கீழ் சுமார் 20,000 வீடுகள் ரூ.512 கோடி செலவில் மீளக் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

✶ ✶ ✶



# சீரிய பணிகளால் சிறந்தோங்கி நிற்கும் நகராட்சி நிருவாகம்

திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள்
மாண்புமிகு ஊரக வளர்ச்சி (ம) உள்ளாட்சித் துறை அமைச்சர்

நகராட்சி நிருவாகம்

**புதிய மாநகராட்சிகள்**

★ தந்தை பெரியார் அவர்கள் 1917ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 17ஆம் நாள் தீர்மானம் நிறைவேற்றி, 91 ஆண்டுகளாக செயல்பாட்டிற்கு வராமல் இருந்ததை நிறைவேற்றி ஈரோடு நகராட்சி 1.1.2008இல் மாநகராட்சியாக உயர்வு.

★ தொழில் நகரம் திருப்பூர் மாநகராட்சியாக உயர்வு; நடப்பு ஆண்டில் தூத்துக்குடி, வேலூர் நகராட்சிகள் மாநகராட்சிகளாக உயர்த்தப்படும் என அறிவிப்பு.

**நகரங்களில் கட்டமைப்புகளையும் அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்துதல்**

★ ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் கீழ் மொத்தம் 4,593.16 கோடி செலவில் 175 இடங்களில் இத்திட்டங்களுடன் நகர மேம்பாட்டுப் பணிகளை 7 ஆண்டுகளில் மேற்கொள்ளும் வகையில் "நகர வளர்ச்சித் திட்டம்" கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகராட்சிகளில் தயாரிக்கப் பட்டுள்ளது.

**தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் – III**

★ 2006–07 மற்றும் 2007–08 ஆண்டிற்கு மாநில அளவிலான திட்ட ஒப்புதல் வழங்கும் குழு.

★ வெள்ளத் தடுப்புத் திட்டத்திற்கு சேலம் மாநகராட்சியில் திருமணி முத்தாறு நதியினை மேம்படுத்த ரூ.31.50 கோடியும், பேருந்து நிலையத் திட்டங்களுக்கு ரூ.20.74 கோடியும், குடிநீர் விநியோகத் திட்டங்களுக்கு ரூ.275.84 கோடியும், பாதாளச் சாக்கடைத் திட்டங்களுக்கு ரூ.1053.85 கோடியும், வழங்க ஒப்புதல் வழங்கப் பட்டுள்ளது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்,
ஈரோடு மாநகராட்சியினைத் தொடங்கிவைத்தார். (29.12.2007)

**நகர்ப்புரங்களில் உள்ள அனைத்து மண் மற்றும் கற்சாலைகளை நான்கு ஆண்டுகளில் தார் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாக மேம்படுத்துதல்**

★ 2006–07ஆம் ஆண்டில் ரூ.14.35 கோடி செலவில் 87.52 கி.மீ. மண்சாலைகள் தார், சிமெண்ட் சாலைகளாக மாற்றப்பட்டுள்ளன.

★ 2007–08ஆம் ஆண்டில் 467.97 கி.மீ. சாலைகள் ரூ.65.67 கோடி மதிப்பீட்டில் தார்ச்சாலையாக மாற்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ அரசு உள்ளாட்சி நிறுவனங்களுக்கு ரூ.35.85 கோடியினை விடுவித்துள்ளது.

★ ரூ.19.14 கோடியில் 68 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் 23.49 கி.மீ. சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. 523 பணிகளில் 115 பணிகள் முடிவடைந்து உள்ளன.

★ 2007–08ஆம் ஆண்டில் 60 உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.10 கோடி செலவில் 75.063 கி.மீ. சாலைப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

★ 2007–08ஆம் ஆண்டில் ரூ.6.71 கோடி செலவில் 46.310 கி.மீ. மண் சாலைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

★ ரூ.13.31 கோடியில் 236 சாலைப்பணிகள் முடிவடைந்துள்ளன.

★ சாலைகள் புதுப்பிக்க எடுத்துக்கொள்ளப்பட்ட 301 பணிகளில் ரூ.11.22 கோடி செலவில் 227 சாலை புதுப்பிக்கும் பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன.

**பகுதி–II திட்டம்**

★ மொத்தம் ரூ.3,217.76 இலட்சம் செலவில் துப்புரவுப் பணியாளர்களுக்குப் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்குதல், இறைச்சிக்கூடம் கட்டுதல், பாலாற்றில் புதிய பாலம் கட்டுதல், திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கு நிலம் வாங்குதல், நவீன தகனமேடை அமைத்தல், தார்ச்சாலை மற்றும் மழைநீர் வடிகால்கள் அபிவிருத்தி பணிகள் செய்தல், நிதிநிலை நலிவடைந்த 38 நகராட்சிகளில் குடிநீர் மோட்டார் / பம்ப் மாற்றியமைத்தல் போன்ற பணிகள் மாநகராட்சி, நகராட்சிகளில் செய்யப்பட்டுள்ளன.

★ 4 மாநகராட்சிகள், 56 நகராட்சிகளில் மண் சாலைகளைத் தார்ச் சாலைகளாக மாற்றுதல், 65 நகராட்சிகளில் நவீன இறைச்சிக் கூடம் கட்டுதல், 14 நகராட்சிகளில் நவீன தகனமேடை அமைத்தல், 42 நகராட்சிகளில் 45 தாய்சேய் நல விடுதிகள் அபிவிருத்தி செய்தல், 69 நகராட்சிகளில் மயானம் மேம்பாடு செய்தல், 9 நகராட்சிகளில் அலுவலகக் கட்டடம் கட்டுதல், 2007–08 ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொண்டு ரூ.2,772 இலட்சம் நிதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

★ 2006–07ஆம் ஆண்டு குடிநீர்த் திட்டம் மேம்படுத்துதல் தொடர்பான பணிகள் ரூ.2.906 கோடியில் முடிந்துள்ளது.

★ 17 உள்ளாட்சி அமைப்புகளுக்கு பழுதுநீக்கம் செய்யும் நடமாடும் வாகனம் வழங்க தலா ரூ.10 இலட்சம் வீதம் மொத்தம் ரூ1.70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அனைத்து நகரங்களிலும் நவீன இறைச்சிக் கூடங்கள் ஏற்படுத்துதல்**

★ 2006–07இல் 5 மாநகராட்சிகள் மற்றும் 32 நகராட்சிகளில் நவீன இறைச்சிக் கூடங்களைக் கட்டுவதற்கு ரூ.3.70 கோடியினை மானியமாக அரசு வழங்கி உள்ளது.

★ 2007–08ஆம் ஆண்டில் 65 நகராட்சிகளுக்கு தலா ஒரு இறைச்சிக் கூடம் கட்டப்படுவதற்காக 50% மானியத் தொகையாக ரூ.6.50 கோடி வழங்கியுள்ளது.

**மயானங்கள் மேம்பாடு**

★ 60,000க்கும் மேற்பட்ட மக்கள் தொகை உள்ள அனைத்து நகரங்களிலும் நவீன எரிவாயு தகன மேடைகளை உருவாக்குதல்.

★ 2006–07இல் இத்திட்டத்தில் 5 மாநகராட்சிகள் மற்றும் 33 நகராட்சிகளில் ரூ.15.20 கோடி மதிப்பீட்டில் எரிவாயு தகன மேடைகள் அமைக்க 50% அரசு மானியமாக ரூ.7.60 கோடி வழங்கப்பட்டது.

★ சாலைகள் இல்லாத **835** மயானங்களுக்கு **143.247** கி.மீ நீளமுள்ள சாலை அமைக்க பொது நிதி மூலம் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ **69** நகராட்சிகளில் உள்ள இடுகாடுகளில் பல்வேறு பணிகள் செய்ய, இடுகாடுகள் மேம்படுத்தப்பட அரசு ரூ.**3.14** கோடி மானியமாக வழங்கியுள்ளது.

**பேருந்து நிலையங்கள் மேம்பாடு**

★ நாகர்கோயில் நகராட்சியில் ரூ.**156** இலட்சம் செலவில் நவீன வசதிகளுடன் பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நகராட்சிக்கு ஆண்டு வருமானம் ரூ.**2.79** இலட்சத்திலிருந்து ரூ.**26** இலட்சமாக உயர்ந்துள்ளது.

★ கோவில்பட்டி நகராட்சி பேருந்து நிலையம் ரூ.**180** இலட்சத்தில் நவீன வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இது ஆண்டிற்கு ரூ.**75** இலட்சம் வருவாய் ஈட்டித்தரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

★ இராஜபாளையம் நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு ஆண்டொன்றிற்கு ரூ.**92.95** இலட்சம் வருவாய் ஈட்டித்தரும் என எதிர்பார்க்கப் படுகிறது.

★ திருவண்ணாமலை பேருந்து நிலையம் ரூ.**38** இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

★ கிருஷ்ணகிரி நகராட்சியில் ரூ.**678** இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நவீன வசதிகளுடன் புதிய பேருந்து நிலையம் மூலம் ஆண்டுக்கு ரூ.**57.50** இலட்சம் வருவாய் நகராட்சிக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**அரசுக்கடன் தள்ளுபடி**

★ **9.11.2007**ல், **31.3.2007** தேதி வரை நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளால் திரும்ப செலுத்த வேண்டிய அசல் மற்றும் வட்டித் தொகையான ரூ.**787.42** கோடியை தள்ளுபடி செய்து அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

**அனுமதியற்ற மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்துதல்**

★ **31.12.2006** வரை மாநகராட்சிப் பகுதிகளில் (சென்னை நீங்கலாக) மொத்தம் **38,284** மனைகளும் நகராட்சிப் பகுதிகளில் மொத்தம் **67,969** மனைகளும் வரன்முறை செய்யப்பட்டு அதன் மூலம் முறையே ரூ.**36.42** கோடியும், ரூ.**25.12** கோடியும் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

★ கால அவகாசம் நீட்டிப்புக்குப்பின் இத்திட்டத்தின்கீழ் மாநகராட்சிகளில் **61,812** வீட்டுமனைகளும், நகராட்சிப் பகுதிகளில் **50,283** வீட்டுமனைகளும் முறைப்படுத்தப்பட்டு, ரூ.**87.97** கோடி வருவாய் வரப்பெற்றுள்ளது.

### திடக்கழிவு மேலாண்மை

★ 150 நகராட்சிகள் மற்றும் 7 மாநகராட்சிகளில் 2025ஆம் ஆண்டுக்குள் உரக்கிடங்கு அமைப்பதற்கு செயல்பாடுகள் துவங்கியுள்ளன.

★ 2006–07ஆம் ஆண்டில் 12 மூன்றாம் நிலை நகராட்சிகளுக்கு உரக்கிடங்கு அமைக்க ரூ.1.73 கோடியும் சென்னையைச் சுற்றியுள்ள 16 நகராட்சிகளுக்கு உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.8 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ நாமக்கல் நகராட்சி ஐ.எஸ்.ஓ.14,000 என்ற தரச்சான்று பெற்று குப்பையில்லா நகரமாக இடம் பெற்றுள்ளது.

### திருமணிமுத்தாறு நதி மேம்பாட்டுத் திட்டம்

★ திருமணிமுத்தாறு முன்னேற்றத்திற்கு ரூ.31.50 கோடிக்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 12ஆவது மத்திய நிதிக்குழு மானியத்தில் மேம்பாட்டுப் பணிகள்

★ தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2005–06 முதல் 2009–10 வரை ரூ.572 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இதில்,

★ 50% திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் பொதுமக்கள் தனியார் பங்கீட்டுடன் செயல்படுத்துதல்.

★ 25% சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால்கள் பராமரித்தல்.

★ 25% அடிப்படை விவரக் குறிப்பு உருவாக்குதல், மின் கட்டணம் செலுத்துதல் போன்ற சில்லரைப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

★ சென்னை மாநகராட்சி உள்ளிட்ட 158 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு நடப்பாண்டிற்கும் ரூ.82.30 கோடித் தொகை விடுவிக்கப்பட்டுள்ளது.

★ பணியிலிருக்கும்போது மரணமடைந்த 488 உள்ளாட்சித் துறை பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குப் பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

★ நகர்ப்புர உள்ளாட்சிகளில் மயானப் பணிபுரியும் வெட்டியான் என்று அழைக்கப்பட்ட பணியாளர்களை மயான உதவியாளர்கள் என்று மாற்றி அமைத்து காலமுறை ஊதியத்திற்குக் கொண்டு வருதற்கான ஆணை மற்றும் 7 துப்புரவுப் பணியாளர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

★ ரூ.1,362 கோடி செலவில் 28 மாவட்டத் தலைநகரங்களுக்கு பாதாள சாக்கடைத் திட்டம்; திருச்சி, மதுரை, நெல்லை, தஞ்சை, கரூர் பணிகள் நிறைவேற்றம்.

## ஊரகக் குடிநீர் திட்டம்

### மாபெரும் திட்டங்கள்

### இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களிலுள்ள 5 நகராட்சிகள், 11 பேரூராட்சிகள் மற்றும் 3163 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் ரூ.616 கோடி திட்ட மதிப்பீட்டில் மாபெரும் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் துவங்கப்பட்டு பணிகள் துரித வேகத்தில் நடைபெற்று வருகிறது.

### ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதும் பயன் பெறும் வகையில் மாபெரும் ஒகேனக்கல் குடிநீர் மற்றும் புளோரைசிஸ் நீக்கும் திட்டம் ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு வங்கியின் நிதியுதவியுடன் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. ரூ.1,334 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தருமபுரியில் 26.02.2008இல் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் இத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்,
தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கான ரூ.1,330 கோடி மதிப்பீட்டிலான
மாபெரும் ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார் (1.1.2008)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களிலுள்ள 5 நகராட்சிகள், 11 பேரூராட்சிகள் மற்றும் 18 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 3,163 குடியிருப்புகளுக்கு பயனளிக்கும் வகையில் ரூ.616 கோடி மதிப்பீட்டில் இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார். (30.1.2007)

**ரூபாய் 1,301.53 கோடி செலவில் :–**

★ 20,057 குடியிருப்புகளுக்கு தனி மின்விசைத் திட்டம் மற்றும் கூட்டுக் குடிநீர் திட்டம் மூலம் ஊரகக் குடியிருப்புகளுக்கான குடிநீர் திட்டம்,

★ 216 ஆதிதிராவிடர் விடுதிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்,

★ 351 கால்நடை மருத்துவமனைகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்,

★ 3,476 தனி மின்விசைத் திட்டங்களை புனரமைக்கும் திட்டம்,

★ 4,693 அரசுப் பள்ளிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்,

★ 200 பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்,

★ 2,070 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கும் திட்டம்,

★ 53 கால்நடைச் சந்தைகளுக்கான குடிநீர்த் திட்டம்,

★ 385 வாராந்திர சந்தைகளுக்கான குடிநீர் வழங்கும் திட்டம்,

★ **821 நீடித்த நிலைத் தன்மையை மேம்படுத்த நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள் அமைக்கும் திட்டம், ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.**

★ ரூ.656.23 கோடி மதிப்பீட்டில் 113 கூட்டுக் குடிநீர் திட்டங்கள்,

★ ரூ. 236.58 கோடி மதிப்பீட்டில் 110 நகரக் குடிநீர் திட்டங்கள்,

★ ரூ. 330 கோடி மதிப்பீட்டில் 6 நகரங்களில் பாதாள சாக்கடைத் திட்டங்கள்

★ ரூ.52.18 கோடி மதிப்பீட்டில் 114 கூட்டுக் குடிநீர் திட்டங்களுக்கான தனி மின் பாதை அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன

**பணி அமர்வு மற்றும் பணி உயர்வு**

★ தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணியமர்வு மற்றும் பணியாளர்களுக்கு பணி உயர்வு வழங்கப்பட்ட எண்ணிக்கை 1,773.

## சென்னை மாநகராட்சி

**தார்ச்சாலைகள் – கான்கிரீட் சாலைகள்**

✶ 1,459 தார்ச்சாலைகள் 396 கி.மீ நீளத்திற்கு ரூ.62 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

✶ 548 சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் 117 கி.மீ நீளத்திற்கு ரூ.34 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

✶ 155 நடைபாதைகள் 75 கி.மீ நீளத்திற்கு ரூ.7 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

**பேருந்து சாலைகள்**

✶ ரூ.19.40 கோடி செலவில் 30 கி.மீ நீளமுள்ள பேருந்து சாலைகள் புதுப்பிக்கப்பட்டு 5 கி.மீ நீளத்திற்கு முக்கிய பேருந்து சாலைகளில் மையத் தடுப்புச்சுவர் அமைத்து கிராதி அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**மெரினா கடற்கரை எழிலூட்டும் திட்டம்**

✶ மெரினா கடற்கரையை அழகுபடுத்தும் திட்டத்திற்காக ரு.1,692 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒப்பங்கள் கோரி முடிவுற்று பணிகள் நடைபெறுகின்றன.

**பூங்காக்கள்**

✶ சென்னை நகரிலுள்ள பூங்காக்களில் மேம்பாட்டுப் பணிகள் ரூ.10 கோடி செலவில் 100 பூங்காக்களில் செய்யத்திட்டமிடப்பட்டு ஏறத்தாழ 80 பூங்காக்களில் ரூ.8 கோடி செலவில் பணிகள் நடந்தேறி வருகிறது.

**மின் பணிகள்**

✶ 916 எண்ணிக்கையிலான மின் விளக்குக் கம்பங்கள் மற்றும் பழுதடைந்த புதை மின் கம்பிகள் மாற்றியமைக்கும் பணிகள் ரூ.315 இலட்சத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்,
சென்னை, வடக்கு உஸ்மான் சாலை – மகாலிங்கபுரம் சாலையில் புதிதாக
கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தைத் திறந்துவைத்தார். (30.3.2008)

- ✶ பழைய துருப்பிடித்த 1,565 எண்ணிக்கையிலான மின் விளக்குக் கம்பங்களை அகற்றி புதிய தெரு மின் விளக்குக் கம்பங்கள் ரூ.188 இலட்சத்திலும் கூடுதலாக 4,046 தெரு மின் விளக்குகள் ரூ.566 இலட்சத்திலும் நிறுவப்பட்டுள்ளது.
- ✶ தெரு மின் விளக்குகளுக்கு தேவையான மின் வடம் மற்றும் மின் உதிரி பாகங்கள் ரூ.388 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு போதுமான அளவு வழங்கப்பட்டுள்ளது.
- ✶ 600 தானியங்கி விசைப்பான்கள் ரூ.84 இலட்சம் செலவிலும் 3 உயர் கோபுர மின் விளக்குகள் ரூ.16 இலட்சம் செலவிலும் நிறுவப்பட்டுள்ளது.

**தூய்மைப் பணிகள்**

- ✶ சென்னை மாநகராட்சிப் பள்ளிகளுக்காக ஒரு சுற்றுலாப் பேருந்து ரூ.17.50 இலட்சம் செலவில் கல்வித் துறைக்காக வாங்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.
- ✶ துப்புரவுப் பணிக்காக 2 ரோல் ஆன் ரோல் ஆப் டிப்பர் வாகனங்கள், 11 குப்பை நெருக்கும் உபகரணங்கள் பொருந்திய வாகனங்கள், கட்டட இடிபாடுகள் அகற்றும் பணிக்காக ரூ.359.50 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.
- ✶ 258 பணிகள் ரூ.3,807.75 இலட்சத்தில் 88.70 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால்வாய் கட்டப்பட்டது.
- ✶ 29 பணிகள் 9.035 கி.மீ. நீளத்திற்கு சுமார் ரூ.6 கோடியில் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

**மாணவ – மாணவியர் நலன்**

- ✶ மாணவ / மாணவியர் விளையாட்டுத் திறனை மேம்படுத்த ரூ.16 இலட்சம் செலவில் சாதனங்கள் வாங்கி வழங்கப்பட்டது.

* ரூ.35 இலட்சம் செலவில் அறிவியல் ஆய்வுக்கூட சாதனங்கள் வாங்கி வழங்க மாநகராட்சி உயர் / மேல்நிலைப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.
* பொதுத்தேர்வு சிறப்பு வகுப்புகளுக்கு பழரொட்டி ரூ.15 இலட்சம் செலவில் வழங்கப்பட்டது.
* ரூ.30 இலட்சம் செலவில் மழலையர் பள்ளிகளில் மாண்டிசோரி கல்வி முறை செயல்படுத்தப்பட்டது.
* மாநகராட்சி பள்ளிகளுக்கு ரூ.20.46 இலட்சம் செலவில் விளையாட்டு சாதனங்கள் ரூ.81.17 இலட்சம் செலவில் ஒலிபெருக்கி கருவிகள், மின்சார மணிகள், தீயணைப்பு கருவிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.
* மாநகராட்சி தொழிற்பயிற்சி நிலையத்திற்கு ரூ.95 இலட்சம் செலவில் இயந்திரங்கள் மற்றும் தளவாடப் பொருட்கள் வாங்கி வழங்கப்பட்டுள்ளது.

**பாலங்கள்**

* மொத்தம் ரூ.175 கோடி செலவில் 12 புதிய பாலங்கள் கட்டுமானப் பணி தொடக்கம்.
* மொத்தம் ரூ.110 கோடி செலவில் 3 புதிய பாலங்கள்.

**பள்ளி கட்டடப்பணிகள்**

* கட்டடத்துறையில் 288 வகுப்பறைகளும் 12 ஆய்வுக்கூடங்களும் கொண்ட 67 பள்ளிக்கட்டடப்பணிகள் ரூ.2,108 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. 104 வகுப்பறைகளும் 2 ஆய்வுக்கூடங்களும் கொண்ட 26 பள்ளிக் கட்டடப்பணிகள் ரூ.861 இலட்சம் மதிப்பீட்டிலும் நடைபெற்று வருகின்றன. மேலும் 26 வகுப்பறைகளும் 3 ஆய்வுக்கூடங்களும் கொண்ட 9 பள்ளிக்கட்டடப்பணிகள் ரூ.222 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.

**இதர கட்டடப்பணிகள்**

* கட்டடத்துறையில், 16 பணிகள் ரூ.4.37 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.
* தொற்றுநோய் மருத்துவமனைக்கான ஒரு பணி ரூ.34 இலட்சம் மதிப்பீட்டிலும், ஒரு குடும்பநல மையக் கட்டடப்பணி ரூ.35 இலட்சம் மதிப்பீட்டிலும், 14 மயானங்களில் எரிவாயு எரியூட்டகம் கட்டும் பணிகள் ரூ.389 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திடக்கழிவு மேலாண்மை**

* திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்காக ரூ.255.32 கோடிக்கு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மானியம் பெற்று ஒப்புதல் பெறப்பட்டது.

* நான்கு குப்பை மாற்று நிலையங்கள் நவீன முறையில் கட்டுவதற்கு ரூ. 8 கோடி செலவில் பணி நடைபெற்று வருகிறது.

**மருத்துவப் பணிகள்**

* ரூ.17,93,447 செலவில் மகப்பேறு மருத்துவமனைகள் மற்றும் குழந்தைகள் மருத்துவப் பிரிவு சேவைகளை விரிவுபடுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டன.

* மாவட்ட குடும்ப நலத்துறையின்கீழ் இயங்கும் மகப்பேறு மருத்துவமனைகள் மற்றும் குழந்தைகள் மருத்துவப் பிரிவு சேவைகளை விரிவுபடுத்தும் ரூ.1½ கோடி செலவில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

**வருமுன் காப்போம் திட்டம்**

* மாண்புமிகு தமிழக முதல்வரின் வருமுன் காப்போம் திட்டத்தின் மூலம் இதுவரை 44 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன. இருதய நோய், சர்க்கரை நோய், இரத்த அழுத்தம், உள்ளிட்ட நோயுற்ற 21,054 நபர்கள் கண்டுபிடிக்கப்பட்டு தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

**பள்ளி மாணவ சுகாதாரத் திட்டம்**

* 1,20,000 மாணவ, மாணவிகள் பரிசோதிக்கப்பட்டு 50க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு இருதயம் நோய் கண்டறியப்பட்டு, ஒரு குழந்தைக்கு தலா ரூ.50,000 வீதம் இரண்டு குழந்தைகளுக்கு ஒரு இலட்சம் ரூபாய் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

**தொற்றுநோய் மருத்துவமனை மேம்பாடு**

* 20 குடியிருப்பு வசதிகள் சுமார் ரூ.1.25 கோடி செலவில் செய்யப்பட்டுள்ளது.

* தொற்று நோய்களுக்கான பரிசோதனை வசதிகளை மேம்படுத்தி ரூ.15 இலட்சம் செலவில் பரிசோதனை கருவிகளும் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டது. பரிசோதனைக்காக ரூ.20 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

**சுகாதாரத்துறை (மலேரியா) பிரிவில் கொசுத்தடுப்பு**

* கொசுப் பெருக்கத்தை கட்டுப்படுத்த 115 சிறிய கையினால் இயக்கும் புகைபரப்பும் கருவிகள் ரூ.26.6 இலட்சம் செலவிலும், 200 கைத்தெளிப்பான்கள் ரூ.6.8 இலட்சம் செலவிலும் வழங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**மயானங்கள் மேம்படுத்துதல்**

* சென்னையில் உள்ள 38 மயானங்களில் 27 மயானங்கள் நவீன எரியூட்டும் வசதிகள் ரூ.15 கோடி செலவில் செய்யப்பட்டது.

* * *



# 58 பேரூராட்சிகளில் ரூ. 159.18 கோடியில் சாலைகள் மேம்பாடு மற்றும் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள்

திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்



★ அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 2007–08ஆம் ஆண்டில் 140 பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு ரூ.74.02 கோடி மதிப்பில் 1,491 பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

★ இதர திட்டங்களை ஒருங்கிணைத்து ரூ.266.25 கோடி மதிப்பீட்டில் 4,584 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம்** (UIDSSMT)

★ இத்திட்டத்தின் கீழ் 58 பேரூராட்சிகளில் ரூ.159.18 கோடி மதிப்பீட்டில் சாலைகள் மேம்பாடு மற்றும் குடிநீர் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 28 பேரூராட்சிகளில் ரூ.31.48 கோடி மதிப்பீட்டில் சாலைகள் மற்றும் வடிகால் மேம்பாடு போன்ற 479 திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு இதில் 447 பணிகள் முடிவடைந்துள்ளன. 16 பேரூராட்சிகளில் ரூ.25.31 கோடி மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற மறு சீரமைப்புத் திட்டம்** (JNNURM)

★ இத்திட்டத்தின் கீழ் ரூ.13.17 கோடி மதிப்பீட்டில் ஹார்விப்பட்டி (மதுரை மாவட்டம்), போரூர் பேரூராட்சியில் (திருவள்ளூர் மாவட்டம்) குடிநீர் வழங்கல் அபிவிருத்தித் திட்டத்தினை நிறைவேற்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

**நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டம்** (BSUP)

★ இத்திட்டத்தின் கீழ் 6 பேரூராட்சிகளில் ரூ.24.37 கோடி மதிப்பீட்டில் 2,297 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் வீடுகள் கட்டும் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**ஒருங்கிணைந்த வீடுகள் மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்**(IHSDP)

★ இத்திட்டத்தின் கீழ் 8 பேரூராட்சிகளில் ரூ.26.29 கோடி மதிப்பீட்டில் 2,465 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் வீடுகள் கட்டும் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது.



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், திருநெல்வேலியில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை சார்பில் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

**தனிநபர் கழிப்பிடம்**

★ கழிப்பிட வசதியில்லாத ஏழை எளிய குடும்பங்களின் வீடுகளுக்கு ரூ.1,000 மானியம் வழங்கி, ரூ.4 கோடி மதிப்பீட்டில் 40,000 எண்ணிக்கையிலான கழிப்பிடங்கள் புதியதாகக் கட்டுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இது வரை 37,410 தனிநபர் கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

**திரவக்கழிவு மேலாண்மை**

★ ரூ.168.75 இலட்சம் மதிப்பீட்டில் சிட்லபாக்கம், ஊத்துக்கோட்டை, நாரவாரிக்குப்பம், சோளிங்கர், துடியலூர், ஆனைமலை, ஒரத்தநாடு, சுரண்டை ஆகிய பேரூராட்சிகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு மையம் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**அலுவலகக் கட்டடங்கள்**

★ 2006–07இல் 29 பேரூராட்சிகளுக்கு ரூ.3.75 கோடி செலவில் புதிய அலுவலகக் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 2007–08இல் 8 பேரூராட்சிகளில் புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டவும் 12 பேரூராட்சிகளில் பழுதடைந்துள்ள அலுவலகக் கட்டடங்களை சீரமைக்கவும் ரூ.140 இலட்சம் நிதி செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**பாதாளச் சாக்கடைத் திட்டம்**

★ மாமல்லபுரம் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினை ரூ.608 இலட்சத்தில் நிறைவேற்ற நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

★ திருச்செந்தூர் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு மாநில அளவிலான அங்கீகாரக் குழுவில் ரூ.11.22 கோடி மதிப்பீட்டில் டுபிட்கோ மூலம் நிதி ஒதுக்கீடு ஆணை பெறப்பட்டுள்ளது.

★ போரூர் பாதாள சாக்கடைத் திட்ட அறிக்கை ரூ.33.48 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு மத்திய அங்கீகாரக் குழுவின் ஒப்புதல் பெற நடவடிக்கையில் உள்ளது.

★ லெப்பைகுடிகாட்டில் ரூ.99.70 இலட்சம் மதிப்பீட்டிற்கு தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

★ திருப்பத்தூரில் ரூ.1,320 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு அங்கீகாரக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

**பகுதி–II திட்டம் – 2006–07**

★ ரூ.10 கோடி மதிப்பீட்டில் 100 பேரூராட்சிகளில் 444 உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டன.

★ ரூ.6 கோடி மதிப்பீட்டில் திட்டத்தில் கோயில் நகரம்/சுற்றுலாத் தலம் அமைந்துள்ள 40 பேரூராட்சிகளில் 231 அடிப்படை வசதி பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டன.

★ பகுதி–II திட்டத்தின்கீழ், ரூ.1 கோடி மதிப்பீட்டில் பேரூராட்சிகளில் நடைபாலங்கள் / சிறு பாலங்கள் அமைக்க 48 பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டன.

★ 52 பேரூராட்சிகளில் ரூ.4.09 கோடி மதிப்பீட்டில் 98 பணிகள் மேற்கொள்ளப்பட்டு பேருந்து நிலையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

★ 51 பேரூராட்சிகளில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் 105 சந்தைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளன.

**பகுதி–II திட்டத்தின் கீழ் 2007–08 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட பணிகள்**

★ முதற்கட்டமாக 375 பேரூராட்சிகளுக்கு கணினி மற்றும் மென்பொருள் வழங்கப்பட்டுள்ளது.

★ சிட்லபாக்கம், ஒட்டன்சத்திரம் பேரூராட்சிகளில் நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணி ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

★ 10 பேரூராட்சிகளில் ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் இறைச்சிக் கூடங்கள் நவீனமயமாக்கும் பணிகள் நடைமுறையில் உள்ளன.

★ 50 பேரூராட்சிகளில் 1,000 ஒளிரும் அடர் மின் விளக்குகள் அமைக்கும் பணி ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது.

★ நிதி நிலையில் நலிவடைந்த 75 பேரூராட்சிகளில் குடிநீர் விநியோக விரிவாக்கம், பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்புப் பணிகள் ரூ.200 இலட்சம் மதிப்பீட்டிற்கு 151 பணிகள் முடிக்கப்பட்டன.

**சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும நிதி உதவியுடன் இணைந்த உள்ளூர் அபிவிருத்தித் திட்டம் (LAP)**

★ காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் 20 பேரூராட்சிகளில் ஆண்டு ஒன்றுக்கு பேரூராட்சி ஒன்றுக்கு குறைந்தபட்சம் ரூ.15 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

**சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும நிதி உதவியுடன் இணைந்த சமுதாய அடிப்படையிலான சுற்று சூழல் மேம்பாட்டுத் திட்டம் (CBED)**

★ பேரூராட்சிகளில் உள்ள சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்தி ஒவ்வொரு பேரூராட்சிக்கும் ஒவ்வொரு ஆண்டுக்கும் குறைந்தபட்சம் ரூ.15 இலட்சம் மானியமாக வழங்கப்படும்.

**ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி திட்டம் (NABARD)**

★ 2007–08ஆம் ஆண்டில் 360 பேரூராட்சிகளில் 593 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூ.46.17 கோடி செலவில் 461 சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

★ 2008–09ஆம் நிதியாண்டில் 406 பேரூராட்சிகளில் 906 கிலோ மீட்டர் நீளத்திற்கு தார்ச் சாலை பணிகள் ரூ.104 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட உள்ளன.

**பேரூராட்சிகளில் பேருந்து நிலையம் அமைத்தல்**

★ 2007–08ஆம் ஆண்டுகளில் 17 பேரூராட்சிகளில் நவீன வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையங்கள் ரூ.19.92 கோடி மதிப்பீட்டில் அமைக்க எடுத்துக் கொள்ளப்பட்டன.

★ 2007–08ஆம் நிதி ஆண்டில் 9 மாவட்டங்களில் 17 பேரூராட்சிகளில் ரூ.800.65 இலட்சம் மதிப்பீட்டில் பேருந்து நிலையங்கள் அமைத்திட கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

★ சமன்பாடு நிதி மானிய உதவி மூலம் 19 மாவட்டங்களில் 75 பேரூராட்சிகளில் ரூ.73.03 கோடி மதிப்பீட்டில் பேருந்து நிலைய மேம்பாட்டுப் பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

**பேரூராட்சிகளில் பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள் அமைத்தல்**

★ 2007–08 ஆம் ஆண்டில் 100 பேரூராட்சிகளில் 102 பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பெற்றுள்ளன.

**பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் வாழ்வாதாரங்கள் (SJSRY-Livelihood)**

★ 2007–08ஆம் ஆண்டிற்கு, ரூ.880.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு திறன் மேம்பாட்டுப் பயிற்சி, பொருளாதார நிதியுதவி, பொருளாதார கடன், சுழல் நிதி

மானியம் மற்றும் கூலி வேலைவாய்ப்புத் திட்டம் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**12ஆவது நிதிக்குழு மானியம்**

★ 2007–08ஆம் ஆண்டில் ரூ.32.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 561 பேரூராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை, திரவக்கழிவு, சாலைப்பணிகள், மழைநீர் வடிகால் மற்றும் மின் கட்டணம் செலுத்துதல் ஆகிய 2,056 பணிகள் எடுக்கப்பட்டு 850 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் 30.05.2008க்குள் முடிக்கப்படும்.

**சுனாமி பணிகள்**

★ 19 சுனாமி பாதிக்கப்பட்ட பேரூராட்சிகளில் புதிதாகக் கட்டப்பட்ட சுனாமி குடியிருப்புப் பகுதிகளில் அடிப்படை வசதி அளிக்கும் பொருட்டு ரூ.15.17 கோடி ஒதுக்கீட்டில் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

★ ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட 19 பேரூராட்சிப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு வாழ்வாதாரம் அளிக்கும் பொருட்டும் ரூ.12.15 கோடியில் பல்வேறு துணைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட 215.78 கி.மீ சாலைப்பகுதிகள் ரூ.30.68 கோடியில் சீரமைக்கத் திட்டமிடப்பட்டு 147.14 கி.மீ சாலைப்பணிகள் ரூ.26.34 கோடியில் சீரமைக்கப்பட்டன.

★ பழுதடைந்த கட்டடங்கள் மேம்பாடு செய்ய ரூ.1.48 கோடியில் பணிகள் எடுக்கப்பட்டு ரூ.0.23 கோடிக்கான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**குடிநீர் விநியோகம் மற்றும் சுகாதாரப் பணிகள்**

★ குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளை மேம்படுத்தவும் பொதுக் கழிப்பிடங்கள் கட்டவும் ரூ.2.55 கோடி அனுமதிக்கப்பட்டு ரூ.1.55 கோடிக்கான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

★ பேரூராட்சிப் பகுதிகளை தூய்மையாக்கும் பொருட்டு திடக்கழிவு மேலாண்மை திட்டம் ரூ.6.75 கோடி மதிப்பீட்டில் 19 பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**அவசரகால சுனாமி புனரமைக்கும் திட்டம்** (ETRP)

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட இருப்பிடங்களில் அடிப்படை வசதிகள் அளிக்கும் பொருட்டு ரூ.15.17 கோடியில் 18 பேரூராட்சிகளில் பணிகள் செயல்படுத்தப் படுகின்றன.

★ ★ ★



# 12,79,680 விவசாயிகளுக்குப் புதிய பயிர்க்கடன் ரூ.2,644 கோடி. பயிர்க்கடனுக்கான வட்டியும் குறைப்பு

திரு. **கோ.சி.மணி** அவர்கள்
மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்

**கூட்டுறவுத்துறை**

**கடன் தள்ளுபடி**

★ விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த இயலாமல் 31.3.2006 வரை கூட்டுறவு வங்கிகளில் நிலுவையில் இருந்த விவசாயக் கடன் மற்றும் வட்டி ஏறத்தாழ 7,000 கோடி ரூபாய் முழுவதையும் தள்ளுபடி செய்து 13.5.2006 அன்று பதவியேற்ற விழா மேடையிலேயே அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு, 22,40,739 விவசாயிகள் பயன்பெற்றனர். கூட்டுறவு வங்கிகள் தொடர்ந்து சேவை செய்வதற்காகத் தள்ளுபடி செய்யப்பட்ட தொகையை 5 ஆண்டு தவணைகளில் 8 சதவீத வட்டியுடன் கூட்டுறவு நிறுவனங்களுக்குத் திருப்பி அளிக்க அரசு முடிவு செய்து, தள்ளுபடி செய்யப்பட்ட தொகைக்காக இரண்டு ஆண்டுகளில் ரூ.3,304 கோடியை இவ்வரசு வழங்கியுள்ளது.

**புதிய பயிர்க்கடன்**

★ கடந்த இரண்டாண்டுகளில் புதிய பயிர்க்கடனாக 12,79,680 விவசாயிகளுக்கு ரூ.2,644.59 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**வட்டி விகிதம் குறைப்பு**

★ பயிர்க்கடனுக்கான வட்டி 9 விழுக்காட்டிலிருந்து 2006–07இல், 7 விழுக்காடாகவும் பயிர்க்கடனை உரிய நேரத்தில் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் பயிர்க்கடனுக்கான வட்டி 2007–08இல் 5 விழுக்காடாகவும் குறைப்பு. நடப்பாண்டில் அது 4 விழுக்காடாக மேலும் குறைக்கப்படும்.

★ நிலுவையிலுள்ள பண்ணை சாராக் கடன்களுக்கான வட்டி விகிதம் 18 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது. தவணை தவறிய தொகையைத் திருப்பிச் செலுத்தும் பட்சத்தில் அபராத வட்டி 3 விழுக்காடு தள்ளுபடி.

★ தவணை தவறிய பண்ணை சாராக் கடன் தொகையினைச் செலுத்தும் கால அளவை 30.6.2008 வரை நீட்டிப்பு.




மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னையில் மத்திய கூட்டுறவு வங்கியின் தொடுதிரை தகவல் மேடை சேவையினைத் தொடங்கிவைத்தார்.

**புத்துயிர்**

★ கலைத்தல் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ள 199 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 197 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் புத்துயிரூட்டப்பட்டுள்ளன.

**சிறு வணிகக் கடன்**

★ சிறு வணிகக் கடன் திட்டம் தற்போது சிறு வணிகம் செய்யும் ஆடவர்களுக்கும் விரிவாக்கப்பட்டு ரூ.5,000 வரை கடன் வழங்கப்படுகிறது.

★ பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பிணைக்கடன் ரூ.3 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

**தனிநபர்க் கடன்**

★ தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இவ்வரசால், இரண்டாண்டு காலத்தில் விவசாயிகளுக்குக் காப்பீட்டுத் தொகை மானியமாக ரூ.22,87,24,234 நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.



விவசாயக் கூட்டுறவுக் கடன் தள்ளுபடி திட்டத்தால் பயன்பெற்ற
திண்டுக்கல் மாவட்டம், சாமியார்பட்டியைச் சேர்ந்த மிளகாய் சாகுபடி செய்யும் விவசாயி.

★ கூட்டுறவு வங்கிகளில் பணியாளர்களுக்கு வழங்கப்படும் தனி நபர் கடன் ரூ.1,50,000 லிருந்து ரூ.2,00,000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

★ கூட்டுறவு வங்கிகள் மூலம் குறுகிய காலப்பயிர்க் கடன், மத்திய காலக் கடன், நகைக் கடன், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, நகரக் கூட்டுறவு வங்கி, பண்ணை சாராக் கடன் ஆகிய கடன் தொகையாக ரூ.18,213 கோடி வழங்கப்பட்டுள்ளது.

★ ஏழை எளிய நடுத்தரக் குடும்பங்கள் பயனடையும் வகையில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் கிலோ அரிசி 2 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

**759 புதிய பகுதி நேர அங்காடிகள்**

★ அத்தியாவசியப் பொருட்களைப் பொது மக்கள் பெறுவதில் ஏற்படும் சிரமத்தை உணர்ந்து பகுதி நேர நியாய விலைக்கடைகள் அமைப்பதற்கான விதிகளைத் தளர்த்தி 759 புதிய பகுதி நேர நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

**மானியம்**

★ கூட்டுறவுத் துறையின் கட்டுப்பாட்டில் 50 மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் நிறுவப்பட்டதற்காக ரூ.108 இலட்சம் மானியமாக வழங்கப் பட்டுள்ளது.

★ கூட்டுறவுத் துறையால் நடத்தப்பட்டு வரும் நியாய விலைக் கடைகளின் நட்டத்தை ஈடு செய்ய ரூ.97.05 கோடி மற்றும் ரூ.108.90 கோடி பொது விநியோகத் திட்ட மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

★ அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் நவீன எடைபோடும் இயந்திரங்கள் வாங்க ரூ.12.50 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

★ நியாய விலைக் கடைகள் மூலம் மண்ணெண்ணெய் இருப்பு வைத்து வழங்க ரூ.35 இலட்சம் மானியமாக அனுமதிக்கப்பட்டு, 7,777 மண்ணெண்ணெய் பேரல்கள் வாங்கி நியாய விலைக்கடைகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

**குறைந்த விலையில் பொருட்கள்**

★ வெளிச் சந்தையில் நிலவும் உணவுப் பொருட்களின் விலைவாசியைக் கட்டுப்படுத்தும் பொருட்டு துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், ரவை மற்றும் மைதா போன்ற பொருட்களைக் குறைவான விலையில் நிர்ணயம் செய்து சிறப்புப் பொது விநியோகத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**பணியாளர் நலன்**

★ கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றி, பணியாற்றும் காலத்தில் மரணமடைந்த 502 பணியாளர்களின் தகுதியுடைய வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

★ மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் பண்டிகை முன்பணம் ரூ.5,000லிருந்து ரூ.7,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள் மூலம் 3,077 பேருக்கு நகை மதிப்பீடு தொழில்நுட்பம் குறித்த பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

★ கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 2007–08ஆம் ஆண்டு முதல் ஆண்டுக்கு ஒருமுறை மருத்துவப் பரிசோதனை முகாம்கள் மாவட்டங்கள் தோறும் நடத்த ஆணையிடப்பட்டுள்ளது.

★ தமிழக அரசு பதவியேற்ற இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு கூட்டுறவுப் பணிகளில் அடங்கிய 161 பணியிடங்களும், அமைச்சுப் பணியில் அடங்கிய 338 பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன.

**மேம்பாட்டு நிதியுதவி**

★ இரண்டு வேளாண்மை உற்பத்தியாளர்கள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு விற்பனை நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக ரூ.4.30 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

★ ரூ.10.80 இலட்சம் சூளூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கும், ரூ.4.25 இலட்சம் அரியூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்திற்கும் வியாபார அபிவிருத்திக்காக நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**கணினி**

★ கூட்டுறவுத்துறையைக் கணினி மயமாக்க ரூ.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

★ ★ ★



# உணவு தானிய உற்பத்தியில் ஒப்பற்ற சாதனை 100.38 இலட்சம் டன் உற்பத்தி அடைய இலக்கு

திரு. **வீரபாண்டி எஸ்.ஆறுமுகம்** அவர்கள்
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்

**வேளாண்மைத் துறை**

**உணவு தானிய உற்பத்தியில் சாதனை**

★ 2006–07இல் 82.63 இலட்சம் டன்னாக இருந்த உணவு தானிய உற்பத்தி, 2007–08இல் 100.38 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.

**கூட்டுறவுக் கடன் தள்ளுபடி**

★ ரூ.7,000 கோடி அளவில் விவசாயிகளின் கூட்டுறவுப் பயிர்க் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டது. மேலும் கூட்டுறவுச் சங்கங்களில் வாங்கிய பயிர்க் கடன்களுக்கான வட்டி விகிதம் 9% இருந்து 7% ஆக குறைக்கப்பட்டது. மேலும் முறையாக கடனைத் திருப்பிச் செலுத்துவோருக்கு வட்டிவிகிதம் 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளது. மேலும் தற்போது 4 சதவிகித வட்டியில் கடன் வழங்கப் படுகிறது.

★ மேட்டூர் அணையிலிருந்து உரிய நேரத்தில் தண்ணீர் பாசனத்திற்காகத் திறக்கப்பட்டது.

★ இலவசமாக நிலம் வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை 1,78,711 ஏக்கர் நிலம் 1,51,265 பயனாளிகளுக்கு வழங்கியதன்மூலம் பயன்படாமல் பலகாலம் இருந்துவந்த நிலங்கள் சாகுபடி பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

**மறுசீரமைப்பு**

★ விவசாயிகளுக்குத் தொழில்நுட்பமும், திட்ட மானியங்களும் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில் வேளாண்துறையில், ஈரடுக்கு நிருவாக முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்**

★ ரூ.691.42 கோடி ஒதுக்கீட்டில், 63 துணை ஆற்றுப்படுகைகளில் 6 ஆண்டுகளில் (2007 முதல் 2013 வரை) 6.17 எக்டர் பரப்பில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், விவசாயப் பெருமக்களின் வேளாண் பணிகளுக்காக புதிதாக வாங்கப்பட்ட 50 உழுவை இயந்திரங்கள், 25 அறுவடை இயந்திரங்களை கொடியசைத்துத் தொடங்கிவைத்தார். (31.1.2008)

**தேசிய வேளாண்மைக் காப்பீடுத் திட்டம்** (NAIS)

★ இயற்கைச் சீற்றத்தாலும், பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல், வெள்ளம், வறட்சி மற்றும் சாதகமில்லாத சூழ்நிலைகளாலும் ஏற்படும் நட்டத்தை ஈடுகட்டும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடன்பெற்ற மற்றும் கடன் பெறாத விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரிமிய தொகையில் 50 சதத்தை தமிழக அரசு மானியமாக வழங்கி வருகிறது. 2006–07ஆம் ஆண்டு சுமார் ரூ.8 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், 2007–08ஆம் ஆண்டிற்கு சுமார் ரூ.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.11.14 கோடி செலவிடப்பட்டு 5,34,439 விவசாயிகள் இத்திட்டத்தில் சேர்ந்துள்ளனர். இவ்வாண்டு (2008 -09) அரசு 25 இலட்சம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**மண் வள அட்டை**

★ 2006 முதல் 2008 வரை ஏறத்தாழ ரூ. 9.74 இலட்சம் மண்வள அட்டைகள் வழங்கப் பட்டுள்ளன.

**விதை மற்றும் உர விநியோகம் விதை கிராமத் திட்டம்**

★ இத்திட்டத்தில் நெல் 3,600 மெ.டன், எண்ணெய் வித்துக்கள் 617 மெ.டன், பயறுவகைப் பயிர்கள் 87 மெ.டன் வழங்கல் மற்றும் 30,000 விவசாயிகளுக்குப் பயிற்சி வகுப்புகள் ஆகியவை ஏறத்தாழ ரூ.447 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**ஐசோபார்ம் எண்ணெய்வித்துப் பயிர்கள்**

★ இத்திட்டத்தில் எண்ணெய் வித்துப் பயிர்களுக்கு ரூ.96,968 இலட்சம் செலவில் 16,213 குவிண்டால் ஆதார விதை உற்பத்தியும் ரூ.331.906 இலட்சம் செலவில் 448

49,448 குவிண்டால் சான்று விதை உற்பத்தியும், ரூ.449.368 இலட்சம் செலவில் 54,736 குவிண்டால் சான்று விதை உற்பத்தியும், விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

**பயறுவகைப் பயிர்கள்**

★ பயறுவகைப் பயிர்களுக்கு 3,938 குவிண்டால் ஆதார விதையும், 19,578.86 குவிண்டால் சான்று விதையும் சுமார் ரூ.171.93 இலட்சம் செலவில் உற்பத்தி செய்யப்பட்டு 18,470.7 குவிண்டால் ரூ.183.98 இலட்சம் செலவில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

**ஐசோபாரம்– மக்காச்சோளம்**

★ 801.87 குவிண்டால் சான்று விதைகள் ரூ.5.313 இலட்சம் செலவில் உற்பத்தி செய்யப்பட்டு, மொத்தம் ரூ.935.052 குவிண்டால் ரூ.5.385 இலட்சம் செலவில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த பருத்தி மேம்பாட்டுத் திட்டம்** – (ICDP Cotton)

★ விவசாயிகளுக்கு 829.9 குவிண்டால் ஆதார விதை ரூ.26.534 இலட்சம் செலவிலும், 4763 குவிண்டால் சான்று விதை ரூ.59.685 இலட்சம் செலவிலும் உற்பத்தி செய்யப்பட்டு 3,258 குவிண்டால் ரூ.52.546 இலட்சம் செலவிலும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

**நெல் விதை விநியோகம்**

★ 33,023 மெ. டன் நெல் விதையும் 836.463 மெ. டன் சிறுதானிய விதையும் உற்பத்தி செய்யப்பட்டு 35,303 மெ.டன் நெல் விதையும் 880.661 மெ.டன் சிறு தானிய விதையும் ஏறத்தாழ ரூ.4,265.14 இலட்சம் செலவில் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

**கைத்தெளிப்பான் மற்றும் விசைத்தெளிப்பான் விநியோகம்**

★ பருத்தியில் பூச்சி நோயைக் கட்டுப்படுத்த 12,725 கைத்தெளிப்பான்கள் ரூ.90.454 இலட்சத்தில் மற்றும் 5,523 விசைத்தெளிப்பான்கள் ரூ.119.437 இலட்சத்தில் பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

★ எண்ணெய் வித்து, பயறு மற்றும் பருத்தி பயிர்களின் பூச்சி நோயைக் கட்டுப்படுத்த இரண்டு ஆண்டுகளில் 40,329 கைத்தெளிப்பான்களும், 9,113 கைத்தெளிப்பான்களும் 50 சதவீத மானியத்தில் ரூ.497.51 இலட்சம் செலவில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**உர விநியோகம்**

★ 2006–07ஆம் ஆண்டில் 22,91,934 மெ.டன்னும், 2007–08ஆம் ஆண்டில் 21,32,783 மெ.டன்னும் பல்வேறு வகையான இரசாயன உரங்கள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

★ டி.ஏ.பி. உரத் தட்டுப்பாடு 2007–08ஆம் ஆண்டில் 8 மாநிலங்களில் நிலவியபோது, இறக்குமதியாளர்களிடம் கொள்முதல் செய்ய டான்பெட் நிறுவனத்தினை முகமையாக நியமித்து, ரூ.30 கோடி வழங்கியதன் மூலம், அந்நிறுவனம் ரூ.98.53 கோடி மதிப்புள்ள 1,04,400 மெ.டன் உரத்தினை விவசாயிகளுக்கு வழங்கியது.

**விவசாய மேம்பாட்டுக் குழு**

★ விவசாயக் கடன் உட்பட வேளாண்மையில் எதிர்கொள்ளப்படும் அனைத்துப் பிரச்சினைகள், விவசாயிகளின் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் ஆகியவை குறித்து ஆய்வு செய்ய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் தமிழ்நாடு விவசாய மேம்பாட்டுக் குழுவும் இக்குழுவுக்கு உதவும் பொருட்டு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் துணைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

**செம்மை நெல் சாகுபடி**

★ 2007–08ஆம் ஆண்டில் செம்மை நெல் சாகுபடி (SRI) தொழில்நுட்பத்தைப் பிரபலப்படுத்த தானிய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 11,320 எக்டர் பரப்பில் செயல் விளக்கம் அமைக்கப்பட்டு, எக்டர் ஒன்றுக்கு ரூ.2,000 மானியமாக வழங்கப்பட்டதுடன் 56,600 விவசாயிகளுக்குச் செம்மை நெல் சாகுபடி பற்றி பயிற்சியும் அளிக்கப்பட்டது. 2007–08 ஆம் ஆண்டில் செம்மை நெல் சாகுபடி பரப்பு 4.20 இலட்சம் எக்டராக உயர்ந்தது.

**எண்ணெய்ப் பனை உற்பத்தி**

★ 3,475 எக்டர் பரப்பில் எண்ணெய்ப் பனை சாகுபடி ரூ. 243.415 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**நுண்ணூட்டச் சத்துக் கலவை விநியோகம்**

★ 2,888 மெ.டன் நுண்ணூட்டக்கலவை ரூ.664.54 இலட்சம் செலவில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

**பசுந்தாள் உரம் மற்றும் உயரின உர விநியோகம்**

★ 3,261 மெ. டன் உயிர் உரங்கள் முறையே அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா மற்றும் ரைசோபியம் ஆகியவை சுமார் ரூ.633.69 இலட்சம் செலவில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

★ 354 மெ. டன் பசுந்தாள் உரம் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு 25% மானியத்தில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

**தென்னை அபிவிருத்தித் திட்டம்**

★ தென்னை அபிவிருத்தித் திட்டத்தில் ரூ.22.496 இலட்சம் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

★ ஒருங்கிணைந்த தென்னை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 1,36,855 நோயுற்ற தென்னை மரங்களை வெட்டி அகற்ற ரூ.342.212 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

**தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம் (NFSM)**

★ நெல் மற்றும் பயறு வகைப் பயிர்களின் உற்பத்தியை உயர்த்துவதன் மூலம் மாநிலத்தின் உணவு உற்பத்தியை உயர்த்த தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம் ரூ.8.75 கோடி ஒதுக்கீட்டில் 2007–08 முதல் செயல்படுத்தப்படுகிறது. நெற்பயிருக்கான தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம் 5 மாவட்டங்களிலும் பயறு வகைகளுக்கான திட்டம் 12 மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் தரமான விதைகள், நுண்ணூட்ட உரங்கள், வேளாண் கருவிகள்

ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புச் செயல் விளக்கப் பயிற்சிகள் ஆகியவை மானியத்தில் வழங்கப்படுகின்றன.

**ஆத்மா**

★ கிராம மற்றும் மாவட்ட அளவில் 1,868 பயிற்சிகளும், 6,922 செயல் விளக்கங்களும், 45 வெளி மாநில சுற்றுலாவும், 77 வெளி மாவட்ட சுற்றுலாவும் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விவசாயிகள், வேளாண் விஞ்ஞானிகளுக்கிடையில் கருத்துப் பரிமாற்றம் 50 தடவை நடைபெற்றுள்ளது. இத்திட்டம் ரூ.322.419 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

★ தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் ரூ.185.31 கோடி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படுகிறது.

## தோட்டக்கலைத்துறை

**தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டங்கள்**

★ இத்திட்டத்தின் கீழ் பழச்செடிகள், மலர்கள் மற்றும் மருத்துவப் பயிர்கள் போன்றவற்றில் 46,750 எக்டர் பரப்பளவில் தோட்டக்கலைப் பயிர்கள் பரப்பு விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

**நுண்ணீர்ப் பாசனம்**

★ கடந்த இரண்டாண்டுகளில் 16,000 எக்டர் பரப்பில் ரூ.1,828 இலட்சம் செலவில் சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனம் அமைக்கப்பட்டுள்ளது.

**மூங்கில் இயக்கத் திட்டம்**

★ மூங்கில் இயக்கத் திட்டம் 35 எக்டர் பரப்பில் விரிவாக்கம் செய்யப்பட்டு, 2007–08ஆம் ஆண்டில் ரூ.13 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**கொய்மலர் சாகுபடி (ரோஜா)**

★ 2007–08ஆம் ஆண்டில் கோவையில் 87,000 சதுர அடி பரப்பிலும் சேலத்தில் 5,000 சதுர அடிப் பரப்பிலும் பசுமைக் குடில்கள் அமைத்து ரோஜாப்பூ சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

**உழவர் சந்தைகள்**

★ ரூ.42 இலட்சம் செலவில் 103 உழவர் சந்தைகள் புதுப்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

★ 2007–08ஆம் ஆண்டு மேலும் புதியதாக 50 உழவர் சந்தைகள் ரூ.11.25 கோடி செலவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

★ தற்போது, சராசரியாக நாளொன்றிற்கு 1,053 மெட்ரிக் டன் காய்கறி மற்றும் பழங்கள் ரூபாய் 108 இலட்சம் மதிப்பில், 7,800 விவசாயிகளால் விற்பனை செய்யப்படுவதன் மூலம் தினந்தோறும் சுமார் 1,97,000 நுகர்வோர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

**விவசாயிகளுக்குப் பொருளீட்டுக் கடன்**

★ அதிகபட்சமாக ரூ.1,00,000 வரை பொருளீட்டுக் கடனாக ஒவ்வொரு விவசாயியும் பெறலாம். அதேபோன்று வேளாண்மை வியாபாரிகளுக்கும் பொருளீட்டுக் கடன் வசதி செய்து தரப்பட்டுள்ளது. வட்டித்தொகை 8% லிருந்து 5% ஆகக் குறைக்கப் பட்டுள்ளது.

**வணிக வளாகம் அமைத்தல்**

சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில்,

★ கிருஷ்ணகிரியில் மாங்கனிக்கு ரூ. 2 கோடி செலவிலும்,

★ கோயம்புத்தூர் மாவட்டம் பொங்கலூரில் வெங்காயத்திற்கு ரூ.2 கோடி செலவிலும்,

★ தேனி மாவட்டம் ஓடைப்பட்டியில் திராட்சைக்கென ரூ. 3.75 கோடி செலவிலும்,

★ கிருஷ்ணகிரியில் தக்காளிக்கென ரூ. 2 கோடி செலவிலும்,

★ தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டையில் தேங்காய்க்கென ரூ.4 கோடி செலவிலும் வணிக வளாகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

**கிராமங்களில் உலர் களங்கள் அமைத்தல்**

★ அறுவடைக்குப்பின் தானிய இழப்பினைக் குறைக்கும் வகையில் கிராமங்களில் ரூ.4.75 கோடி செலவில் 200 உலர்களங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள்**

★ கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களை உள்ளடக்கி ஓசூரில் ரூ.24.85 கோடியில் கொய் மலர்களுக்கும்,

★ நீலகிரி மாவட்டத்தில் மலர்களுக்கென ரூ. 15.89 கோடி செலவிலும்,

★ தேனி மாவட்டத்தில் மாம்பழத்திற்கென ரூ. 24.60 கோடி செலவிலும்,

★ கடலூர் மாவட்டத்தில் முந்திரிக்கென ரூ.17 கோடி செலவிலும் வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

★ தமிழ்நாடு உழவர் நல நிதித் திட்டத்தில் கடந்த இரு ஆண்டுகளில் 3,524 விவசாயிகள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனைத் தகவல் மையம்**

★ விவசாயிகள் பல்வேறு சந்தைகளில் வேளாண் விளைபொருட்களுக்கு நிலவும் விலை விவரத்தினை அறியவும், அவர்களின் விளைபொருட்களுக்குக் கூடுதல் விலை பெறவும் இணையதளம், கணினி மற்றும் மின்னணு தகவல் பலகை போன்ற அனைத்து வசதிகளுடன் கூடிய வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனைத் தகவல் மையங்கள் ரூ.32 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

## வேளாண்மைப் பொறியியல்

**மண்வளப் பாதுகாப்புப் பணிகள்**

★ 2006–07 மற்றும் 2007–08ஆம் ஆண்டுகளில் வேலூர், திருவண்ணாமலை, தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் சேலம் மாவட்டங்களில், தென்பெண்ணையார்

மற்றும் மேட்டூர் நதிப் பள்ளத்தாக்கு நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் ரூ.2,199.54 இலட்சம் செலவில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் 17,023 எக்டர் பரப்பில் மேற்கொள்ளப்பட்டு 2,710 கட்டுமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**களர் நிலச் சீர்திருத்தத் திட்டம்**

★ 2006–07 மற்றும் 2007–08ஆம் ஆண்டுகளில் விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம், புதுக்கோட்டை, சேலம், வேலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் இத்திட்டத்தின் கீழ் ரூ.19.74 இலட்சம் செலவில் 1,039 எக்டர் பரப்பில் களர் நிலங்களில் சீர்திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**வேளாண்மை இயந்திரமயமாக்கல் திட்டம்**

★ 2006–07 மற்றும் 2007–08ஆம் ஆண்டுகளில், இத்திட்டத்தின் கீழ் 528 டிராக்டர்கள் 3,405 பவர் டில்லர்கள் 1,281 வேளாண் கருவிகள் வாங்கிட விவசாயிகளுக்கு ரூ.1,348.27 இலட்சம் மானியம் வழங்கப்பட்டது.

★ மேலும் அரசு நிர்ணயித்த குறைந்த வாடகையில் இயந்திரங்களை விவசாயிகளுக்கு வழங்கி நிலமேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் 2007–08ஆம் ஆண்டு 50 டிராக்டர்கள் மற்றும் டிராக்டருடன் பொருத்தப்படும் இழுவை, கொக்கிக் கலப்பை, சட்டிக் கலப்பை, உருளைக் கலப்பை, சுழற் கலப்பை போன்ற கருவிகள், 25 அறுவடை இயந்திரங்கள் ரூ. 590.75 இலட்சம் செலவில் வழங்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 31.1.2008 அன்று வேளாண் பணிகளுக்காக வழங்கப்பட்டது.

★ பாசனப் பகுதி மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் 53,301 எக்டர் பரப்பில் ரூ.9,729.42 இலட்சம் மொத்த செலவில் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

★ உவர் நில சீரமைப்புக்கான முன்னோடித் திட்டத்தின் கீழ், 2006–07ஆம் ஆண்டில், நாகப்பட்டினம் மாவட்டத்தில் 78 எக்டேர் பரப்பில் ரூ.8.17 இலட்சம் செலவில் பணிகள் செயல்படுத்தப்பட்டது.

★ மழைநீர் சேகரிப்பு மற்றும் மழைநீர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் ரூ.3,277.92 இலட்சம் மொத்த செலவில், 6,682 மழை நீர் சேகரிப்புக் கட்டுமானங்கள் கட்டப்பட்டுள்ளன.

★ ஏழு மாவட்டங்களில் உள்ள பழங்குடியினர் நிலங்களில் 1,811 எக்டர் பரப்பில் ரூ.275.96 இலட்சம் செலவில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

★ மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் எட்டு மாவட்டங்களில் ரூ.1,229.31 இலட்சம் செலவில் 3,044 எக்டர் பரப்பில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 3,653 கட்டுமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

★ மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் ரூ.781.61 இலட்சம் மொத்த செலவில் 582 எக்டர் பரப்பில் மண்வளப் பாதுகாப்பு மற்றும்



விவசாயிகளுக்கும்,
நுகர்வோருக்கும்
பயன்தரும்
**உழவர் சந்தை**

நிலச்சரிவு தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 1,386 கட்டுமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

★ புதிய பம்பு செட்டுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 35,086 பழைய பம்பு செட்டுகளுக்கு பதில் புதிய பம்பு செட்டுகள் வாங்க ரூ.1,960.32 இலட்சம் மானியம் விவசாயிகளுக்கு வழங்கப் பட்டுள்ளன.

★ சிறுபாசனத்திட்டத்தின் கீழ் 5,677 குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

★ நிலமேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் துறையில் உள்ள புல்டோசர்கள், டிராக்டர்கள் மற்றும் அறுவடை இயந்திரங்கள் முறையே 1,90,099 மணி நேரம், 2,17,973 மணி நேரம் மற்றும் 2,508 மணி நேரம் பணிபுரிந்து சாதனை அடைந்துள்ளன.

★ நவீன வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் செயல்விளக்கத் திட்டத்தின் கீழ் ரூ.73.14 இலட்சம் செலவில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்கப்பட்டு 1,804 செயல் விளக்கங்கள் ரூ.43.30 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன.

★ வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகளைக் கையாள்வதில் விவசாயிகள் மற்றும் கிராமப்புற இளைஞர்களுக்கு 270 பயிற்சிகள் ரூ.66.71 இலட்சம் செலவில் அளிக்கப்பட்டது.

**தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை**

★ நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இதுவரை ஏழு கட்டங்களில் 1,78,711.62 ஏக்கர் தரிசு நிலங்கள் 1,51,265 பயனாளிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. 43,096 ஏக்கர் தரிசு நிலங்களில் 40,180 ஏக்கர் தரிசு நிலங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

★ இத்திட்டத்தில் இதுவரை 165 தொகுப்பு நிலங்களில் உள்ள 2,945.72 ஏக்கர் நிலம், 54 தொகுப்பு நிலங்களில் 1,212.40 ஏக்கர் நிலம் மேம்படுத்தப்பட்டு பழ மரக்கன்றுகள் நடப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

★ இத்திட்டத்தின் கீழ் 50 ஏக்கர் மற்றும் அதற்கு மேலாக தொகுப்பாக உள்ள 1,589.96 ஏக்கர் பரப்பு ரூ.370 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படவுள்ளது. மேற்கண்டதிட்டத்தில் ரூ.1,306.52 இலட்சம் செலவில் இதுவரை 40,180 ஏக்கர் தரிசு நிலங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

**சர்க்கரை உற்பத்தி**

★ தமிழகம் கரும்பு உற்பத்தித் திறனில் தொடர்ந்து முதலிடம் வகிக்கிறது.

★ 2006–07 ஆம் ஆண்டில் அரவைப் பருவத்திற்கு தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு, பொது மற்றும் தனியார்துறை சர்க்கரை ஆலைகளால் 3.03 இலட்சம் எக்டேர் பரப்பளவில் கரும்பு பயிரிடப்பட்டு 274.49 இலட்சம் மெட்ரிக் டன்கள் கரும்பு அரவை செய்யப்பட்டு 25.39 இலட்சம் மெ.டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது.

★ 2007–08ஆம் அரவைப் பருவத்திற்கு 9 சதவிகித சர்க்கரை கட்டுமானம் உள்ள கரும்பிற்கு மத்திய அரசு நிர்ணயித்த விலையை விட மாநில அரசு பரிந்துரை விலையாக கூடுதலாக ரூ.222.20 கூட்டி டன் ஒன்றுக்கு விலை ரூ.1,034 எனவும், ஒவ்வொரு 0.1 சதவிகித கூடுதல் சர்க்கரை கட்டுமானத்திற்கும் டன் ஒன்றிற்கு ரூ.9 ஊக்கத் தொகை எனவும் அரசு அறிவித்துள்ளது.

★ 2006–07ஆம் ஆண்டில் அரவைப் பருவம் முதல் கரும்பு வாகன வாடகை முழுவதையும் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளே ஏற்றுக் கொண்டுள்ளன.

★ தனியார் துறையில் நான்கு புதிய சர்க்கரை ஆலைகளைத் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டு இரண்டு சர்க்கரை ஆலைகள் அரவையைத் தொடங்கியுள்ளன.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

★ தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பம்விவசாயிகளுக்குச் சென்று அடையும் பொருட்டு தமிழ்நாடு துல்லிய பண்ணைத் திட்டம் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் 400 எக்டர் நிலப்பரப்பில், ரூ.720 இலட்சம் செலவில் செயல்படுத்தியது. சாகுபடி செய்யப்படும் பயிர்களுக்கேற்ப குறைந்தபட்சம் ரூ.1.50 இலட்சத்திலிருந்து அதிகபட்சமாக ரூ.6 இலட்சம் வரை நிகர வருவாய் கிடைக்கிறது.

★ 2007–08ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.308 இலட்சம் செலவில் 26 மாவட்டங்களில், மாவட்டத்திற்கு 20 எக்டர் வீதம் செயல் விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்டுள்ளன.

★ ரூ.45.30 இலட்சம் செலவில் 2007–08ஆம் ஆண்டில் 41.64 இலட்சம் காட்டாமணக்கு நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

**கல்வி**

★ தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தொலைதூரக் கல்வி வழியாக உயிர் தகவலியல் முதுநிலைப் பட்டயப் படிப்பை 2006–07லும் கரும்பு உற்பத்தி மற்றும் தொழில்நுட்பங்கள் என்ற முதுநிலைப் பட்டப்படிப்பு 2007ஆம் ஆண்டுத் தொடங்கப்பட்டுள்ளது.

★ மென் கல்வி பயிலும் முறையை புகுத்தத் தனது இணையதளத்தில் பாடங்களை நிறுவி, இப்பல்கலைக்கழகம் அனைத்து மாநில வேளாண்மைப் பல்கலைக்கழகங்களுக்கும் முன்னோடியாகத் திகழ்கிறது. மென் ஆளுமை முறையைச் செயல்படுத்த தேசிய வேளாண்மைப் புதுமைத் திட்டத்தின் கீழ் இப்பல்கலைக்கழகம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கல்வி மற்றும் ஆராய்ச்சியை மேம்படுத்தும் பொருட்டு, ஏழு புகழ்பெற்ற வெளிநாட்டு வேளாண்மை நிறுவனங்களுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், இளம் தொழில்நுட்பம் (வேளாண்மை தகவல் தொழில்நுட்பம்) மற்றும் இளமறிவியல் (வேளாண் தொழில் மேலாண்மை) என்ற இரண்டு புதிய இளநிலை பட்டப்படிப்புகளை 2007–08ஆம் கல்வி ஆண்டில் தொடங்கியுள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும் பத்து கல்லூரிகளும் Wifi இணைய வலைதளம் மூலம் இணைக்கப்பட்டு, மாணவர்களுக்கு இலவச இணையதள வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டு வேளாண் பட்டயப்படிப்பு நிறுவனங்கள் அம்பாசமுத்திரம் மற்றும் அருப்புக்கோட்டை ஆகிய இடங்களில் 2007–08ஆம் கல்வியாண்டில் துவங்கியுள்ளது.

★ நமது மாணவர்கள் பல்வேறு வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் பயில்வதற்கு ஏதுவாக இளம் தொழில்நுட்பவியல் (தோட்டக்கலை) தேர்வுகள் அனைத்தையும் இணைய வழி (online examination) நடத்தும் புதுமைத்திட்டம் 2007–08இல் இந்தியாவிலேயே முதன் முதலாகப் புகுத்தப்பட்டுள்ளது.

**ஆராய்ச்சி**

★ தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்தினரால் 2006–07ஆம் ஆண்டில் 14 புதிய பயிர் இரகங்கள், 7 பண்ணைக்கருவிகள் மற்றும் 7 மேலாண்மைத் தொழில்நுட்பங்கள் மற்றும் 2007–08ஆம் ஆண்டில் 10 புதிய பயிர் இரகங்கள், 3 பண்ணைக்கருவிகள் மற்றும் 7 மேலாண்மைத் தொழில்நுட்பங்கள் விவசாயிகள் பயனடையும் பொருட்டு வெளியிடப்பட்டன.

## விதைச்சான்றளிப்புத் துறை

**விதை உற்பத்தியில் சாதனை**

★ 1,21,230 மெட்ரிக்டன் சான்று விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு இதுவரை அடைந்திடாத உயர் சாதனை அடையப்பட்டுள்ளது.

**விதைத்தரக் கட்டுப்பாடு**

★ 71,406 விதை விற்பனை நிலைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 53,128 விதை மாதிரிகள் தரப்பரிசோதனைக்காக எடுக்கப்பட்டுள்ளது. ரூ.628.70 இலட்சம் மதிப்புள்ள 2,549 மெட்ரிக் டன் தரக்குறைவான விதைகள் விற்பனை தடை செய்யப்பட்டு சட்ட மீறல்களுக்காக 797 வழக்குகள் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டது.

★ தீவிர தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் காரணமாக தரக்குறைவான விதைகளின் 4.88 சதவிகிதமாக குறைந்துள்ளது.

**விதைப்பரிசோதனை**

★ 1,22,803 விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

★ ★ ★



## ரூ.668 கோடி மதிப்பீட்டில் 18 அத்தியாவசியத் திட்டங்கள் - ரூ.249 கோடி மதிப்பீட்டில் 1,644 ஏரிகளில் மராமத்துப் பணிகள்

திரு. **துரைமுருகன்** அவர்கள்
மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர்

**பொதுப்பணித் துறை**

**நீர் ஆதாரம்**

★ மேட்டூர் அணை 2007ஆம் ஆண்டில் 52 நாட்கள் அதன் முழு கொள்ளளவாகிய 120 அடியை அடைந்து நிரம்பியது.

★ ரூ.249 கோடி செலவில் 1,644 ஏரிகளில் மராமத்துப் பணிகள் செய்யப்பட்டுள்ளன.

★ ரூ.191 கோடி செலவில் 505 கி.மீ. நீளத்திற்கு கால்வாய்களுக்குக் கற்காரை (கான்கிரீட்) மற்றும் உறை (லைனிங்) அமைக்கப்பட்டுள்ளது.

★ ரூ.46 கோடி செலவில் 3,366 கி.மீ. தூரம் வாய்க்கால்களில் தூர்வாரப் பட்டுள்ளன.

**நீர்த்தேக்கத் திட்டங்கள்**

★ கடந்த ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்படாமல் தொய்வில் இருந்த திட்டம் உள்ளிட்ட 18 அத்தியாவசியத் திட்டங்கள் ரூ.668 கோடி மதிப்பீட்டில் இந்த அரசினால் எடுத்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

★ உலக வங்கி நிதியுதவியுடன், நீர்வள, நிலவளத் திட்டமாக ரூ.2,547 கோடி மதிப்பீட்டிலான திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

★ ரூ.224.19 கோடி 25 நிரந்தர வெள்ளப் பாதுகாப்புப் பணிகளுக்கும், ரூ.37.68 கோடி இரண்டு நீர்ப்பாசனத் திட்டப் பணிகளுக்கும், ரூ.119.67 கோடி கல்லணைக் கால்வாயினைப் புதுப்பிப்பதற்கும் மற்றும் ரூ.5.63 கோடி கண்மாய்களைப் புதுப்பிப்பதற்கும் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளன.

★ நபார்டு வங்கியின் பரிசீலனையில் ரூ.43.29 கோடி மதிப்பில் 7 பணிகள் உள்ளன. மேலும், 20 பாசனத் திட்டங்கள் ரூ.53.96 கோடிக்கு அரசின் பரிசீலனையில் உள்ளன. இது தவிர சில திட்டங்கள் ரூ.367.19 கோடி மதிப்பில் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

★ வெள்ள அபாயத்தைத் தடுப்பதற்கும், மழைநீர் வீணாகக் கடலில் கலப்பதைத் தடுப்பதற்கும், வறட்சிப் பகுதிகளுக்கு வெள்ள நீரினைத் திருப்பி எடுத்துச் செல்லும் வகையிலும் செயல்படுத்த மாநிலத்திற்குள் பாயும் நதிகளை இணைக்கும் திட்டத்தினை அரசு முடிவு செய்துள்ளது.

★ இதன் முதல் கட்டமாக, தாமிரபரணி, கருமேனியாறு, நம்பியாறு ஆகியவற்றை இணைக்கும் திட்டத்தினை ரூ.369 கோடி மதிப்பிலும், காவிரியின் குறுக்கே கட்டளை கதவணைக் கட்டுதல் பணியினை ரூ.165 கோடி மதிப்பிலும் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், புதிதாகக் கட்டப்படவுள்ள சட்டமன்ற பேரவைக்கான மாதிரி கட்டட வடிவமைப்புகளைப் பார்வையிட்டார் (29.10.2007)

★ ரூ.50 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்ட 33 கடலரிப்புத் தடுப்புப் பணிகளில், 25 பணிகள் முடிக்கப்பட்டு, 8 பணிகள் செயலாக்கத்தில் உள்ளன.

★ ரூ.21.37 கோடி மதிப்பீட்டில் வேலூர் மாவட்டம் கானாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல், கம்பம் பள்ளத்தாக்கில் உள்ள பாளையம் பரவு கால்வாய் மற்றும் பி.டி.ராஜன் கால்வாயின் கொள்கடத்தும் திறனை அதிகப்படுத்துதல் உள்ளிட்ட 6 பணிகள் நபார்டு நிதி உதவியுடன் இந்த ஆண்டு தொடங்கப்பட உள்ளது.

★ நிலத்தடி நீரின் நிரந்தர மேம்பாட்டிற்கு, அறிவியல் ஆய்வு அடிப்படையில் துல்லியமாகக் கணக்கீடு செய்ய 1,774 தெரிவு செய்யப்பட்ட கிணறுகளிலும், 1,165 ஆழ் துளைக் கிணறுகளிலும் நிலத்தடி நீர் மட்டம் கண்காணிக்கப்பட்டது. 4,148 மேல் நீர் மாதிரிகளை ஆய்ந்து நிலத்தடி நீர் மாதிரிகளைச் சேகரித்து, குடிநீர், தொழில் துறை மற்றும் பாசனங்களுக்கு உகந்தவையா என அறியப்பட்டது. 2,800 கிராமங்களில் நில நீரியல், புவி பௌதீகவியல் விவரங்களைத் தெரிந்து கொள்ள சிறிய நீர்ப் பிரிவு முகடுகள் அமைக்கப்பட்டது. கடலோரப் பகுதிகளில் உள்ள 188 திறந்த வெளிக் கிணறுகளிலும், 180 ஆழ் துளைக் கிணறுகளிலும் உப்பு நீர் ஊடுருவல் தொடர்பான கண்காணிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டது.

★ வேலூர், விழுப்புரம், திண்டுக்கல், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி மற்றும் நாமக்கல் மாவட்டங்களில், 134 புதிய ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட்டு நீர்த்தாங்கிகளின் தன்மை மற்றும் நிலத்தடி நீர்வளம் மதிப்பீடு செய்யப்பட்டது.

திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் சேலம் மாவட்டங்களில் ரூ.24.45 இலட்சம் மதிப்பில் மூன்று தடுப்பணைகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது.

★ பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையத்தின் மூலம் 176 பயிற்சிகள் நடத்தப்பட்டன.

**கட்டடப் பணிகள்**

★ கண்ணகி சிலை பழுது பார்க்கப்பட்டு மீண்டும் சென்னை மெரினாவில் அதே இடத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 03.06.2006 அன்று திறந்து வைக்கப்பட்டது.

★ அமரர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் முழு உருவ வெண்கலச் சிலை சென்னையில் காமராஜர் சாலை – டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை சந்திப்பில் புதிய பீடம் கட்டப்பட்டு 21.7.2006 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

★ சென்னை, மெரினா கடற்கரையில் உள்ள எம்.ஜி.ஆர் நினைவிட வளாகத்தில் ரூ.38.05 இலட்சம் செலவில் கட்டப்பட்ட எம்.ஜி.ஆர் அருங்காட்சியம் 30.03.2007 அன்று திறக்கப்பட்டது.

★ பொதுப்பணித்துறை 3,573 கட்டடப் பணிகளை மேற்கொண்டு, அவற்றில் 2,384 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 716 பணிகள் முன்னேற்றத்திலுள்ளன, 473 பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. ரூ.1,407.64 கோடி கட்டடப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டு அதில் ரூ.1,340.23 கோடி செலவிடப்பட்டுள்ளது.

★ தேனி, வேலூர், ஆசாரிப்பள்ளம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மருத்துவமனைகளில் ரூ.200 கோடி செலவில் பல்வேறு பணிகள் முடிக்கப்பட்டன.

★ ரூ.61.01 கோடியில் விழுப்புரம், திருவாரூர் மற்றும் தருமபுரியில் புதிய மருத்துவக் கல்லூரிகள் அமைக்க ஆரம்பக் கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ ரூ.15.11 கோடி செலவில், சென்னை அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரிகளில் பல்வேறு கட்டடங்கள் கட்டவும், கன்னியாகுமரியில் பணியாளர்கள் குடியிருப்புகள், கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, திருச்சி கி.ஆ.பெ. விசுவநாதம் மருத்துவக் கல்லூரி மற்றும் சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கான தங்கும் விடுதிகள், சென்னை அறிஞர் அண்ணா அரசினர் மருத்துவமனை வளாகத்தில் மருத்துவக் குடியிருப்புகள் கட்டுவதற்காகவும் ரூ.23.11 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ சென்னை, குழந்தைகள் நல மையம் மற்றும் மருத்துவமனைக்குப் புதிய மின் தூக்கி அமைக்க ரூ.1.04 கோடி, மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையை விரிவுபடுத்த ரூ.22.06 கோடி, சென்னையில் குழந்தைகள் நல மையம், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம் கட்ட ரூ.13.83 கோடி, இராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம் கட்ட ரூ.9.87 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆரம்பக் கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ 5 மாவட்டங்களில், 35 அரசு மருத்துவமனைகளுக்குக் கட்டடம் கட்ட ரூ.45.62 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

★ 25 மாவட்டங்களில், 228 அரசு மருத்துவமனைகளுக்குக் கூடுதல் கட்டடம், விரிவாக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கு ரூ.207.14 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**நீதிமன்றக் கட்டடப் பணிகள்**

★ ரூ.4.97 கோடி மதிப்பில் வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் ஒருங்கிணைந்த நீதி மன்றக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

★ ரூ.3.57 கோடியில் தேனியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்களுக்கான துணைக்கட்டடங்கள், நீதித்துறை அலுவலர்கள் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டப்பட்டு, கழிப்பறை, மிதிவண்டி மற்றும் இருசக்கர மோட்டார் வாகனம் போன்ற வண்டிகள் நிறுத்துமிடம், புல்வெளித் தோட்டம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

★ தாம்பரம் மற்றும் பெரம்பலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் கட்ட ரூ.11.57 கோடியும், பாளையங்கோட்டையில் வழக்கறிஞர்கள் சங்கம் மற்றும் வழக்கறிஞர்கள் – எழுத்தர்கள் சங்கக் கட்டடங்கள் கட்ட ரூ.58 இலட்சமும், கொடைக்கானலில் நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகள் குடியிருப்புகள் கட்ட ரூ.2.5 கோடியும், வேடசந்தூரில் மாவட்ட நீதிமன்றக் கட்டடங்கள், முக்கிய விருந்தினர் தங்கும் விடுதி மற்றும் குடியிருப்புகள் கட்ட ரூ.2.25 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பணிகள் செயலாக்கத்தில் உள்ளன.

★ ரூ.80 இலட்சத்தில் காங்கேயம், பழனி, ஆற்காடு, இராமநாதபுரம் ஆகிய இடங்களில் நீதிமன்ற அலுவலருக்கான குடியிருப்புகள் கட்டவும், ரூ.75.01 கோடியில் நாமக்கல், கரூர், அருப்புக்கோட்டை, சிவகங்கை, ஈரோடு, குடியாத்தம், ஆரணி, அறந்தாங்கி, பூந்தமல்லி, பரமக்குடி, தூத்துக்குடி, கடலூர் ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடங்கள் மற்றும் நீதிபதி குடியிருப்புகள் கட்டும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

★ ரூ.11.23 கோடியில் சார்நிலைச் சிறையை மாவட்டச் சிறையாக மேம்படுத்தும் பணி, பெண்களுக்கான புதிய சிறைச் சாலை கட்டடங்கள், 7 மைய சிறைகளில் பராமரிப்பு மற்றும் சீரமைப்புப் பணிகள், துப்புரவு மற்றும் குடிநீர் வழங்கல் பணிகள் மேற்கொள்ள ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ ரூ.3.55 கோடியில் சிறைக் கட்டடங்களுக்குப் பராமரிப்பு, மேம்படுத்துதல், துப்புரவு மற்றும் குடிநீர் வழங்கும் பணிகள், ரூ.5.52 கோடியில் ஆத்தூர், கோபிச்செட்டிப் பாளையம் மற்றும் நாகப்பட்டினம் சார்நிலைச் சிறைகளை மாவட்டச் சிறைகளாக உயர்த்தும் பணிகள், பாளையங்கோட்டை மற்றும் திருச்சி சிறைகளில் பழுதுபார்ப்பு மற்றும் புதுப்பிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் சோதனை ஓட்டச் சாலை அமைக்கும் பணிகள் ரூ.1.08 கோடியில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ திருவண்ணாமலை, புதுக்கோட்டை, திருச்செங்கோடு, பெரியகுளம், ஈரோடு, மதுரை வடக்கு, சேலம் மற்றும் திருவாரூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் ரூ.10 கோடியில் கட்டும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.



புதிதாகக் கட்டப்பட்டுள்ள திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகம்

★ கிருஷ்ணகிரி மற்றும் திருநெல்வேலியில் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் ரூ.16.60 கோடியில் கட்டப்பட்டுள்ளன.

★ ரூ.25 கோடியில் சேலத்தில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டும் பணி எடுக்கப்பட்டுள்ளது.

★ ரூ.25.56 கோடியில் 20 வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

★ ரூ.2.24 கோடியில் மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு குடியிருப்புகள் மற்றும் வருவாய் கோட்ட அலுவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டும் பணி எடுக்கப் பட்டுள்ளது.

★ நபார்டுத் திட்டத்தின் கீழ் பள்ளிக்கல்வித்துறையில், ரூ.608.99 கோடியில் 1,237 பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 1,198 பணிகள் முடிவுற்றுள்ளன.

★ ரூ.2.34 கோடியில் கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி அரசுச் சட்டக் கல்லூரிகளில் பெண்கள் தங்கும் விடுதி,

★ ரூ.1.05 கோடியில் திருச்சி அரசு சட்டக் கல்லூரியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணிகள் முடியும் நிலையில் உள்ளன.

★ ரூ.7.91 கோடி செலவில், மதுரை, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களிலுள்ள 260 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு 345 அடிப்படை வசதிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ ரூ.131.04 கோடி மதிப்பீட்டில் 416 பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன.

★ ரூ. 31.05 கோடி மதிப்பீட்டில் பிற்படுத்தப்பட்டோர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 100 விடுதிக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

★ ரூ.40.17 கோடி மதிப்பீட்டில் 377 கால்நடை பராமரிப்பு மையங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ ரூ.36.62 கோடி மதிப்பீட்டில், சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட அரசு கட்டடங்களைப் பராமரித்தல், புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

★ சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் ரூ.200 கோடி மதிப்பில் புதிய சட்டமன்ற வளாகம் கட்டும் பணிக்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு உலகளாவிய தேர்வு முறையில் பங்கு பெற்ற 7 நிறுவனங்களில், ஜி.எம்.பி. இண்டர்நேஷனல் நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

★ திருவாரூரில் கோட்ட அலுவலகம் மற்றும் துணைக்கோட்ட அலுவலகம் ரூ.39 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன.

★ ஒரு துணைக்கோட்டம் மற்றும் ஒரு பிரிவு அலுவலகம் கட்டுதல் மதிப்பீடு தலா ரூ.8.70 இலட்சம் வீதம் கும்பகோணம், விருத்தாசலம், சத்தியமங்கலம், மணப்பாறை மற்றும் குழித்துறை ஆகிய 5 இடங்களில் கட்டப்பட்டுள்ளன.

★ தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசத்தில் ஒரு பிரிவு அலுவலகம் ரூ.4.20 இலட்சத்தில் கட்டப்பட்டுள்ளது.

★ சேலத்தில் கூடுதல் சுற்றுலா மாளிகை ரூ.116 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன.

★ கோவை சுற்றுலா மாளிகை வளாகத்தில் மிகமிக முக்கியப் பிரமுகர்களுக்குக் கூடுதலாக இரண்டு அறைகள் ரூ.44 இலட்சத்தில் கட்டப்பட்டுள்ளன.

★ சென்னை, சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் 'சி' பிரிவு அரசு ஊழியர் குடியிருப்பு 4 பிளாக்கும், 24 மூன்று தளக்கட்டடமும் ரூ.118.30 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ளன.

★ சென்னை, திருச்சி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் கண்காணிப்புப் பொறியாளர்களுக்கு அரசுக் குடியிருப்புகள் தலா ரூ.20 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன.

★ ரூ.15 இலட்சத்தில் திருவாரூர் சுற்றுலா மாளிகையில் கூடுதல் வசதிகள் ஆகிய அணுகு சாலை, சுற்றுச்சுவர், பள்ளங்களை நிரப்பும் பணி மற்றும் பிற வசதிகளை செய்யும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

★ ரூ.1 கோடியில் தஞ்சாவூரில், கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டும் பணியும், ரூ.65 இலட்சத்தில் சென்னை, சைதாப்பேட்டை தாடண்டர் நகரில், அரசு ஊழியர்களுக்கு 2 தொகுதிகளாக 12 "சி" பிரிவு குடியிருப்புகள் கட்டும் பணியும் நடைபெற்று வருகிறது.

★ இந்திய அரசு நிதி உதவியுடன் மாமல்லபுரத்தில் உள்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சிப் பணிகள் ரூ.4.32 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

★ ரூ.2 கோடியில், தண்டாரம்பட்டு, ஓமலூர், ஆரணி, குத்தாலம், கம்பம், திருத்துறைப்பூண்டி, தக்கலை, மற்றும் ஒட்டன்சத்திரம் ஆகிய 8 இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ ★ ★



# சட்டக்கல்விக்கு நுழைவுத்தேர்வு இல்லை

திரு. **துரைமுருகன்** அவர்கள்
மாண்புமிகு பொதுப்பணி (ம) சட்டத்துறை அமைச்சர்

**சட்டத்துறை**

★ சட்டப்பட்டப்படிப்பு மாணவர் சேர்க்கையில் கிராமப்புற மாணவர்கள் பயன் பெறும் வகையில் நுழைவுத் தேர்வு முறை நீக்கப்பட்டது.

★ தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தில் பணியமர்த்து மையம் தொடக்கி வைக்கப்பட்டு சீர்மிகு சிறப்பு சட்டப் பள்ளியில் பயின்ற மாணவர்கள் தேசிய மற்றும் பன்னாட்டு நிறுவனங்களில் பணிகள் பெறும் வாய்ப்பினைப் பெற்றார்கள்.

★ பல்கலைக்கழகத்தினுடைய செயல்பாட்டை பன்னாட்டு அளவில் விரிவாக்கம் செய்திட சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகம், அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சார்ந்த ஒக்லஹாமா பல்கலைக்கழகம், லண்டன் மெட்ரோபாலிடன் பல்கலைக்கழகம் மற்றும் கொரியாவைச் சார்ந்த யங்சான் பல்கலைக் கழகங்களோடு புரிந்துணர்வு உடன்பாடு செய்து கொண்டுள்ளது.

★ பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் சீர்மிகு சிறப்பு சட்டப் பள்ளி மற்றும் செங்கல்பட்டு சட்டக் கல்லூரிக்கு அறைகலன்கள், உதிரிபாகங்கள், கணினிகள், நூலகத்திற்குப் புத்தகங்கள் மற்றும் பல்கலைக்கழகத்திற்கு உயர் சக்தி நகல் எடுக்கும் கருவி வாங்க ரூ.34 இலட்சம் ஒதுக்கீடு.

★ சீர்மிகு சிறப்பு சட்டப் பள்ளியின் துணைக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.54 இலட்சம் ஒப்பளிப்பு.

★ பல்கலைக்கழகத்திற்கு அறைகலன்கள் மற்றும் நூலகத்திற்கு புத்தகங்கள் வாங்குவதற்கு ரூ.24 இலட்சம் ஒப்பளிப்பு.

★ பல்கலைக்கழக வளாகத்தில் பெண்கள் தங்கும் விடுதி கட்டுவதற்கு ரூ.76 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

★ சட்டக் கல்வி இயக்ககத்திற்கு சொந்தக் கட்டடம் மற்றும் அதன் முதல் தளம் கட்டுதல் ரூ.55.83 இலட்சம்.

★ கோயம்புத்தூர் அரசு சட்டக் கல்லூரி மாணவியர்களுக்கு விடுதிக் கட்டடம் கட்டுதல் ரூ.124.37 இலட்சம்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகத்தின் மூன்றாவது பட்டமளிப்பு விழாவில் பட்டமளித்து விழா உரையாற்றினார். (24.12.2007)

★ கோயம்புத்தூர் அரசு சட்டக் கல்லூரி மாணவர் விடுதியில் கூடுதலாக அறைகள் கட்டுதல் ரூ.22.37 இலட்சம்.

★ சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் மூன்றாண்டு சட்டப் படிப்புக்கான இடங்களை 80லிருந்து 321 ஆகவும், ஐந்தாண்டு சட்டப் படிப்புக்கான இடங்களை 80 லிருந்து 241 ஆகவும் அதிகரிப்பு.

★ சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு சட்டப் படிப்புகளின் முதலாண்டில் தமிழ் வழியில் தனியாக ஒரு பிரிவு தொடங்கிடவும், தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு ஊக்கத் தொகையாக ஒரு ஆண்டுக்கு ரூ.400 வழங்கிடவும் ஆணை.

★ 2006-07ஆம் கல்வியாண்டு முதல் திருநெல்வேலியிலுள்ள அரசு சட்டக் கல்லூரியில் எம்.எல். படிப்பு தொடக்கம்.

★ சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி மாணவர்கள், மெல்போர்ன், வியன்னா மற்றும் ஹாங்காங்கில் நடைபெற்ற சர்வதேச மூட்கோர்ட் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக ரூ.13.5 இலட்சம் நிதியுதவி.

★ அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளுக்கும் நூலகப் புத்தகங்கள் வாங்குதல் ரூ.12 இலட்சம்.

★ திருச்சிராப்பள்ளி அரசு சட்டக் கல்லூரி மாணவர்களுக்கான விடுதிக் கட்டடம் கட்டுதல் ரூ.84 இலட்சம்.

★ திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிக்கு அறைகலன்கள் வாங்குதல் ரூ.2 இலட்சம்.

★ ★ ★



# புதிய தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள் தொடக்கம்

முனைவர் **க. பொன்முடி** அவர்கள்
மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர்

உயர்கல்வித் துறை

**பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை**

★ சுயநிதிப் பொறியியற் கல்லூரிகளின் அரசு ஒதுக்கீட்டின் கீழ் சிறுபான்மையல்லாத சுயநிதிப் பொறியியற் கல்லூரிகளில் 65 விழுக்காடு இடங்களும், சிறுபான்மை சுயநிதிப் பொறியியற் கல்லூரிகளில் 50 விழுக்காடு இடங்களும் கிடைத்தன. இதன்மூலம் 2007–08ஆம் கல்வியாண்டில் 56,041 மாணவர்களுக்கு மேல் பயன்பெற்றனர்.

**தொழிற்படிப்பிற்கான நுழைவுத் தேர்வு நீக்கம்**

★ தொழிற்படிப்புகளில் சேர்வதற்காக பொது நுழைவுத் தேர்வு எழுதுவதன் மூலம் மாணவர்கள் குறிப்பாக கிராமப்புற மாணவர்கள் அதிக அளவு சுமைகளையும், துன்பத்தையும் சந்திக்க நேர்ந்ததால், இதனை தவிர்ப்பதற்கு "தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை சட்டம் 2006 (தமிழ்நாடு சட்டம் 3/2007)" வாயிலாக பொது நுழைவுத் தேர்வு 2007–08 முதல் நீக்கம் செய்யப்பட்டது. இது, கிராமப்புற மற்றும் ஏழை எளிய குடும்பங்களைச் சார்ந்த மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் தொழிற்கல்வி பயில வழி வகுத்துள்ளது. இது 2006–07ஆம் ஆண்டில் பொறியியற் பட்டப்படிப்பில் ஒற்றைச் சாளர முறை மூலம் சேர்ந்த 23,667 மாணவர்களை விட 43.9% அதிகம் ஆகும்.

**அரசுக் கல்லூரிகளில் மாற்று முறை அறிமுகம்**

★ 2006–07ஆம் ஆண்டு முதல் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சுழற்சி (Shift) முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் அரசுக் கல்லூரிகளில் முதலாமாண்டு மாணவர் சேர்க்கை உயர்ந்துள்ளது.

**மென்பொருள் திறன் மேம்பாடு**

★ அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு நவீன கணினிகள் அகல் கற்றையுடன் கூடிய இணையதள வசதிகளுடன் விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை அரசுக் கல்லூரிகளில் துவக்கப்பட்டுள்ளது.




**ஆராய்ச்சி மையங்கள் மற்றும் உயிரி தொழில்நுட்பவியல் மையம் அமைக்க நிதிஒதுக்கீடு**

1. சென்னைப் பல்கலைக்கழகத்தில் "திராவிட இயக்க ஆய்வு மையம்" நிறுவிட – ரூபாய் ஒரு கோடி.

2. மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் கல்வித்துறையில் ஆராய்ச்சி மேற்கொள்ள கல்வியியல் ஆய்வு மையம் அமைப்பதற்கு – ரூபாய் ஒரு கோடி.

3. கோயம்புத்தூர், பாரதியார் பல்கலைக்கழகத்தின் நானோ தொழில் நுட்ப மையத்தினைச் சிறப்புத் தகுதி மையமாக மேம்படுத்துவதற்கு – ரூபாய் ஒரு கோடி.

4. வேளாண்மைத்துறையில் உற்பத்தித் திறனை மேம்படுத்தவும், பல்வேறு நோய்களுக்குப் புதிய மருந்துகளைக் கண்டறிய உயிரி தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி மற்றும் உயர்கல்வி மையம் அமைத்திட – ரூபாய் ஒரு கோடி.

**முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி**

★ கடந்த 2 ஆண்டுகளில் பொறியியற் கல்லூரிகளில் பயிலும் 168 ஏழை மாணவர்களுக்கு ரூ.42 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**இலவசப் பயண பேருந்து அட்டை**

★ 2007–08ஆம் ஆண்டு முதல் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் 87,995 மாணவர்களுக்கு இலவசப் பயண பேருந்து அட்டை வழங்கப்படுகிறது.

**இலவச பாடப்புத்தகம்**

★ 2007–08ஆம் கல்வியாண்டு முதல் அரசு பல்தொழில் நுட்பக் கல்லூரிகளில் முதலாமாண்டு பயிலும் மாணவர்களுக்கு கணிதம், வேதியியல் மற்றும் இயற்பியல் பாடங்களுக்கான பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது.

**பணியமர்த்தும் மையம்**

★ அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு வேலை வாய்ப்பினைப் பெற்றுத்தரும் பொருட்டு, கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் மாணவர் பணியமர்த்தல் மையம் ஒன்று தொடங்க ஆணையிடப்பட்டுள்ளது.

**ஆசிரியர்கள் நியமனம்**

1. அரசுப் பொறியியற் கல்லூரி மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் 237 விரிவுரையாளர்கள் பணியமர்த்தப்பட்டனர்.
2. 2007–08 இல் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 914 விரிவுரையாளர்கள் ஆசிரியத் தேர்வு வாரியம் மூலம் பணியமர்த்தப்பட்டனர்.
3. அரசு உதவி பெறும் கல்லூரிகளில் 2,600 கூடுதல் பணியிடங்கள் பணியமர்த்த அனுமதி.
4. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான 522 பின்னடைவுப் பணியிடங்கள் சிறப்பு நியமனம் மூலம் நிரப்ப நடவடிக்கை.

**தமிழ்நாடு மாநில உருது மன்றம்**

★ தமிழகத்தில் உருதுமொழியின் வளர்ச்சிக்காகவும், மேம்பாட்டிற்காகவும் தமிழ்நாடு மாநில உருது மன்றத்திற்கு கடந்த 2 ஆண்டுகளில் ரூ.16.17 இலட்சம் மானியம் வழங்கப்பட்டது.

**கிராமப்புறப் பகுதிகளில் புதிய கல்லூரிகள் துவக்குதல்**

★ கடந்த 2 ஆண்டுகளில் மேட்டூர், வால்பாறை, பெரம்பலூர், ஒரத்தநாடு ஆகிய 4 இடங்களில் அரசு நிதி உதவியுடன் பல்கலைக்கழக கல்லூரிகளாகவும் சுரண்டை மற்றும் குளித்தலை ஆகிய இரண்டு இடங்களில் தலா ஒரு அரசு கல்லூரி வீதம் மொத்தம் 6 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளன.

**அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் வகுப்பறைகள் / கட்டடங்கள் கட்டுதல்**

★ அரசுக் கல்லூரிகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை நிறைவு செய்யும் வகையில் கடந்த 2 ஆண்டுகளில் 622 கூடுதல் வகுப்பறைகள் கட்ட ரூ.30.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

★ தென்னிந்தியாவிலேயே பழமையான, மாநிலக் கல்லூரி ரூ.3.23 கோடி செலவிலும், சென்னை மாநகரில் உள்ள பழமைவாய்ந்த கல்லூரிகளான பாரதி மகளிர் கலைக் கல்லூரி, இராணிமேரி கலைக் கல்லூரி மற்றும் காயிதே மில்லத் கலைக் கல்லூரி ஆகியவற்றில் ஒவ்வொரு கல்லூரிகளுக்கும் ரூ.50 இலட்சம் வீதம், ரூ.1.5 கோடியில் புனரமைப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

★ சென்னையிலுள்ள இராணி மேரி கல்லூரி ரூ.2.5 கோடி செலவில் 'கலைஞர் வளாகம்' என்ற புதிய கட்டடம் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

★ அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ரூ.6.6 கோடி செலவில் 42 புதிய ஆய்வகங்கள் கட்ட ஒப்புதல் அளித்துள்ளது.

**பொறியியல் மற்றும் பல்தொழில்நுட்ப கல்லூரிகளில் மாணவர்களுக்கு கூடுதல் வசதிகள் ஏற்படுத்துதல்**

★ காரைக்குடி அழகப்பச் செட்டியார் பொறியியற் கல்லூரியில் மாணவிகளுக்கான கல்லூரி விடுதிக் கட்டடம், பர்கூர் அரசினர் பொறியியற் கல்லூரியில் புதிய நூலகக் கட்டடம், திருநெல்வேலி மற்றும் சேலம் அரசினர் பொறியியற் கல்லூரிகளில் புதிய ஆய்வுக்கூடக் கட்டடம் கட்டிட ரூ.1.64 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ மதுரை தமிழ்நாடு பாலிடெக்னிக் மற்றும் எட்டயபுரம் பாரதியார் நூற்றாண்டு நினைவு அரசினர் மகளிர் பாலிடெக்னிக் ஆகிய இடங்களில் கூடுதல் வகுப்பறைகள் கட்ட ரூ.32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ சென்னை டாக்டர் தருமாம்பாள் அரசு மகளிர் பல்தொழில்நுட்பக் கல்லூரியில் மாணவியர் விடுதி ரூ.1.5 கோடி செலவில் கட்டவும், நாகர்கோவில் அரசு மகளிர் பல்தொழில்நுட்பக் கல்லூரி, மாணவியர் விடுதிகள் ரூ. ஒரு கோடி செலவில் கட்டவும், மதுரை அரசு மகளிர் பல்தொழில்நுட்பக் கல்லூரியில் ரூ.40 இலட்சம் செலவில் மாணவியர் இல்லம் அமைக்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**அன்னை தெரசா பல்கலைக் கழகத்திற்குக் கருத்தரங்கக் கூடம்**

★ கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தில் ரூ.45 இலட்சம் செலவில் ஒரு கருத்தரங்கக் கூடம் கட்ட அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

**புதிய தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள்**

★ பொறியியற் கல்லூரிகளை, மேம்பட்ட வகையிலும், திறனுள்ள வகையிலும் மேற்பார்வை செய்வதை உறுதிசெய்யும் கருத்துடன், திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் அண்ணா பல்கலைக்கழகம் என்ற பெயரில் மூன்று புதிய தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள் துவக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன.

**புதிய அரசுப் பொறியியற் கல்லூரிகள்**

★ அரசுப் பொறியியற் கல்லூரிகள் இல்லாத விழுப்புரம், பண்ருட்டி, திண்டிவனம், நாகப்பட்டினம் மற்றும் இராமநாதபுரத்தில் அரசுப் பொறியியற் கல்லூரிகள்.

★ ★ ★



# 1,124 புதிய வழித்தடங்கள் - 6,425 பேருந்துகள் அறிமுகம்

திரு.கே.என்.நேரு அவர்கள்
மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்

**போக்குவரத்துத் துறை**

**புதிய பேருந்துகள்**

★ அதிநவீன சொகுசுப் பேருந்துகள், குளிர்சாதனப் பேருந்துகள், தொடர் பேருந்துகள், தாழ்தளப் பேருந்துகள், குளிர்சாதன வால்வோ பேருந்துகள் மற்றும் சாதாரணப் பேருந்துகள் என 6,425 பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**சிறப்புப் பேருந்துகள்**

★ மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில் எல்லோ லைன் மற்றும் புளு லைன் சிறப்புப் பேருந்துகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

**இணைய தளம் வழியாக பயணச் சீட்டு முன் பதிவு**

★ அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் இணைய தளம் வழியாகப் பயணச்சீட்டு முன் பதிவு முறை அறிமுகப்படுத்தப்பட்டு வெற்றிகரமாக இயங்கி வருகிறது.

**புதிய வழித்தடங்கள்**

★ 1,124 புதிய வழித்தடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**இயக்க தூரம் நீட்டித்தல்**

★ சென்னை மாநகரில் மாநகரப் பேருந்துகள் 50 கி.மீ தூரம் வரையிலும், நகர பிற நகரங்களில் பேருந்துகள் 40 கி.மீ. வரையிலும் நீட்டிக்கப்பட்டுள்ளன.

**புதிய பணி நியமனங்கள்**

★ 18,138 ஒட்டுநர்களும் 16,077 நடத்துனர்களும் புதியதாக பணியமர்த்தப்பட்டனர்.

**பதவி உயர்வு**

★ 2,839 பேருக்கு பல்வேறு நிலைகளில் பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

**தொழிலாளர் ஊதிய ஒப்பந்தம்**

★ 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை என மாற்றியமைக்கப்பட்ட ஊதிய ஒப்பந்தத்தை மீண்டும் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை என முறைப்படுத்தப்பட்டது. ரூ.195 கோடி செலவினத்தில் 1,14,532 பணியாளர்கள் பயனடையும் வகையில் புதிய ஊதிய ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டது.







மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் 1,000 புதிய பேருந்துகளின் இயக்கத்தினை கொடியசைத்துத் தொடங்கிவைத்தார். (3.1.2008)

**மின்னணு பயணச்சீட்டு வழங்கும் கருவி**

★ மின்னணுக் கருவிகள் மூலம் பயணச்சீட்டு வழங்கும் முறை அறிமுகப்படுத்தப் பட்டது.

**போக்குவரத்துப் பயிற்சி அகாடமி**

★ சென்னையில் ஒரு போக்குவரத்துப் பயிற்சி அகாடமியை நிறுவ துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**போனஸ் மற்றும் கருணைத்தொகை**

★ போக்குவரத்துப் பணியாளர்களுக்கு அதிகபட்சத் தொகை ரூ.3,500 ஆக உயர்த்தி 20 சதவீதம் போனஸ் வழங்கப்பட்டது.

**சாதனை ஊக்கத் தொகை**

★ போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்குச் சாதனை ஊக்கத்தொகை ரூ.625 வழங்கப்பட்டு வருகிறது.

**புதிய அலுவலகங்கள் மற்றும் ஓட்டுநர் சோதனைத் தளங்கள்**

★ இரண்டாண்டுகளில் போக்குவரத்துத்துறை அலுவலகங்களை மேம்படுத்தவும், புதிய கட்டடங்களைக் கட்டுவதற்காகவும் ரூ.18.63 கோடி கீழ்க்கண்டவாறு செலவிடப்பட்டுள்ளது.

- தண்டையார்பேட்டை பகுதி அலுவலகம் ரூ.24.32 இலட்சம் செலவில் வட்டாரப்போக்குவரத்து அலுவலகமாக மாற்றப்பட்டது.

- தாம்பரம், பூந்தமல்லி, பட்டுக்கோட்டை, பரமக்குடி மற்றும் மணப்பாறையில் ரூ.47.40 இலட்சம் செலவில் புதிய பகுதி அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளன.
- திருச்சி, ஈரோடு, திருவாரூர், மதுரை (வடக்கு) மற்றும் சேலத்தில் ரூ.6.45 கோடி செலவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.
- கடலூர் மற்றும் புதுக்கோட்டையில் ரூ.54 இலட்சம் செலவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்காக புதிய ஓட்டுநர் தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

★ சேலம் (கிழக்கு), திருப்பூர் (தெற்கு) வட்டாரப் போக்குவரத்து கழகங்கள் ரூ.62 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டன.

★ சங்ககிரி, பெருந்துறை, மார்த்தாண்டம், திருவல்லிக்கேணி ஆகிய போக்குவரத்து அலுவலகங்கள் ஒரு கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்பட்டன.

★ பவானி, ஓமலூர், திருவெறும்பூர், குளித்தலை, அரக்கோணம் ஆகிய புதிய அலுவலகங்கள் ரூ.47.50 இலட்சம் செலவில் திறக்கப்பட்டன.

★ திருச்செங்கோடு, திருவண்ணாமலை, பெரியகுளம், புதுக்கோட்டை ஆகிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள் ரூ.5 கோடி செலவில் கட்டப்பட்டன.

★ கடலூர், திருச்செந்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், ஆரணி, வள்ளியூர் ஆகிய பகுதி அலுவலகங்களுக்கு ரூ.2.75 கோடி செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

★ திருவாரூர், நாகப்பட்டினம், ஈரோடு ஆகிய வட்டாரப் போக்குவரத்து அலுவலங்களுக்கு ஓட்டுநர் சோதனைத் தளங்கள் ரூ.81 இலட்சம் செலவில் கட்டப்பட்டன.

★ கோயில்பட்டிப் பகுதி அலுவலகத்திற்கு ஓட்டுநர் தேர்வு தளம் ரூ.27 இலட்சம் செலவில் கட்டப்பட்டது.

★ 53 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், 45 பகுதி அலுவலகங்கள், 20 சோதனைச் சாவடிகள், 7 மண்டல அலுவலகங்கள் என அலுவலகங்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டுள்ளது.

**அண்டை மாநிலங்களுடன் புதிய வழித்தடங்கள் மற்றும் சரக்கு வாகன அனுமதி**

★ போக்குவரத்து வசதிக்காக அண்டை மாநிலங்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு கர்நாடகா, ஆந்திரா, கேரளா மாநிலங்களுக்கிடையே தமிழ்நாட்டிலிருந்து 477, அண்டை மாநிலங்களிலிருந்து 485 பேருந்துகளும் இயக்கப்படுகின்றன. அண்டை மாநிலங்களுக்கிடையே சரக்கு வாகனங்களுக்கு இடைமாநில அனுமதி 43,800 எண்ணிக்கையாகவும் வாடகை மற்றும் சுற்றுலா சீருந்துகளின் எண்ணிக்கை 6,950 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

**மினி பேருந்து திட்டம்**

★ பேருந்து வசதியற்ற கிராமங்களுக்கு பேருந்து வசதியளிக்கும் பொருட்டு அரசு மினிபேருந்து திட்டத்தை ஏற்படுத்தி தமிழ்நாடு முழுவதும் 3,965 மினி பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

**கணினிமயமாக்கல் மூலம் மக்களுக்கு துரிதசேவை அளித்தல்**

★ இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அனைத்து போக்குவரத்துத்துறை அலுவலகங்களிலும் ரூ.17 கோடி செலவில் கணினிமயமாக்கல் மூலம் மக்களுக்கு துரிதசேவை அளித்தல், வாகன மற்றும் சாரதி மென்பொருளைப் பயன்படுத்தி சான்றுகள், உரிமங்கள், வாகன அலுவலர்கள் வரி வசூல் ஆகிய பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**சாலைப் பாதுகாப்பு**

★ கடந்த 2 ஆண்டுகளில் சாலைப் பாதுகாப்பிற்கு ரூ.16 கோடி ஒதுக்கீடு.

**சாலைப் பாதுகாப்பு – விழிப்புணர்வுப் பிரச்சாரம்**

★ ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி முதல் வாரத்தில் கொண்டாடப்படும் சாலைப் பாதுகாப்பு வாரத்திற்காக ரூ.65 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

★ விதிகளை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து 25,408 ஓட்டுநர்களின் உரிமங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

**சாலை விபத்துகளில் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்குதல்**

★ அரசுப் பேருந்துகளில் பயணித்து உயிரிழந்த 5,502 பேரின் குடும்பங்களுக்கு முதல்வர் நிவாரண நிதியிலிருந்து ரூ.6.45 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் சாலைப் பாதுகாப்பை உறுதி செய்தல்**

★ அரசுப் பள்ளி கல்லூரிப் பேருந்துகளை மற்ற வாகனங்களிலிருந்து வித்தியாசப்படுத்தும் வகையில் இவ்வாகனங்களுக்கு "நீல வர்ணம்" பூச ஆணையிடப்பட்டுள்ளது.

★ பள்ளிகளுக்கு வருடாந்திர விடுமுறை விடும்போது பள்ளி வாகனங்களின் தகுதிச்சான்றினைப் புதுப்பிக்க ஆணையிடப்பட்டுள்ளது.

**காற்று மாசுபடுவதைத் தடுத்தல் மற்றும் சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்துதல்**

★ சென்னையில் உள்ள 33,731 பெட்ரோல் மற்றும் டீசல் ஆட்டோரிக்ஷாக்களினால் காற்று மாசுபடுவதைத் தடுக்க எரிவாயு மூலம் இயங்கும் வண்ணம் மாற்றியமைக்க ஒவ்வொரு ஆட்டோவிற்கும் ரூ.3,000 மானியம் வழங்க அரசு அனுமதித்து உள்ளது.

★ சென்னையில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களில் தகுதி வாய்ந்த நபர்களுக்கு மானியத்துடன் கூடிய 5,000 ஆட்டோரிக்ஷா மற்றும் மானியமின்றி 5,000 ஆட்டோ ரிக்ஷாவும் வழங்க ரூ.1.25 கோடி மானியத்தொகை அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

★ வாகனப்புகை காரணமாக காற்று மாசுபடுவதைத் தடுக்கும் பொருட்டு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு எந்தப் பணிக்காக வாகனங்கள் வந்தாலும் புகைச்சான்று கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**அவசர கால விபத்து நிவாரண மையங்கள்**

★ அதிகரித்து வரும் வாகன விபத்துக்களைக் கருத்தில் கொண்டு, விபத்தில் தமிழகம் முழுவதும் 100 அவசரகால விபத்து நிவாரண மையங்கள் அமைக்கப்பட்டு அதில் 36 மையங்களுக்கு அரசு நிதியுதவி அதிகபட்சமாக மாதத்திற்கு ரூ.40,000 வழங்கப்படுகிறது.

★ ★ ★



## விழுப்புரம், தருமபுரி, திருவாரூரில் புதிய மருத்துவக் கல்லூரிகள் - 4,635 மருத்துவர்கள், 13,247 மருத்துவப் பணியாளர்கள் நியமனம்

திரு. **எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்** அவர்கள்
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

**மக்கள் நல்வாழ்வுத் துறை**

**புதிய மருத்துவக் கல்லூரிகள்**

★ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு விழுப்புரம், தருமபுரி, திருவாரூர், சிவங்கை, பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்கிட தமிழக அரசு அனுமதி.

**புதிய மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் நியமனம்**

★ கடந்த 2 ஆண்டுகளில் 3,967 மருத்துவர்கள் மற்றும் 12,087 மருத்துவம் சார்ந்த காலிப்பணியிடங்கள் அனைத்தும் காலமுறை ஊதியத்தில் நிரப்பப்பட்டுள்ளன. மேலும் கூடுதலாக 668 மருத்துவர்கள் மற்றும் 1,160 செவிலியர்களுக்கான பணியிடங்களும் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டு நிரப்பப்பட்டுள்ளன.

**மருத்துவமனைகளுக்கு அதிநவீன உபகரணங்கள் மற்றும் கருவிகள்**

★ தமிழ்நாடு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளுக்குத் தேவையான அதிநவீன மருத்துவ உபகரணங்கள் ரூ.62 கோடியே 35 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

★ தமிழகத்தில் உள்ள 270 அரசு மருத்துவமனைகளுக்கு மருத்துவம் சார்ந்த கருவிகள் ரூ.84.42 கோடி செலவில் வாங்கி வழங்கப்பட்டுள்ளன. 2008–09 ஆம் ஆண்டில் இரண்டாம் கட்டமாக ரூ.54.52 கோடி மதிப்பில் மருத்துவக் கருவிகள் வழங்கப்பட உள்ளது. சுகாதாரத் திட்டத்தில் ரூ.138 கோடியே 94 இலட்சம் செலவில் மருத்துவக்கருவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

★ 385 செமி ஆட்டோ அனலைசர் என்ற நவீன ஆய்வகக்கருவிகள், 289 அல்ட்ரா சோனாகிராம் கருவிகள் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

★ தேசிய ஊரக நல்வாழ்வுத் திட்டம் மற்றும் பேறுசார் குழந்தை நலத்திட்டங்களின் கீழ் ரூ 13 கோடியே 60 இலட்சம் மதிப்பிலான நவீன மருத்துவக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இதய நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் 12 வயதுக்குட்பட்ட 18 இளம்சிறார்களை தனியார் மருத்துவமனைகளில் உடனடியாக அறுவை சிகிச்சை மேற்கொள்ள 17 தனியார் மருத்துவமனைகளுக்கு நிதியுதவி வழங்கி, திட்டத்தைத் தொடங்கிவைத்தார் (21.11.2007)

★ மருத்துவக்கல்வித்துறை, மருத்துவத்துறை, பொது சுகாதாரத் துறைகளுக்கு ரூ.214.89 கோடி மதிப்பிலான நவீன மருத்துவக்கருவிகள் வழங்கப் பட்டுள்ளன.

★ அதிநவீன 64 சூறுகள் சி.டி.ஸ்கேன், சென்னை அரசுப் பொது மருத்துவமனையில் ரூ.5.5 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

★ சிறுநீரகத்தில் ஏற்படும் கற்களை நீக்கும் லித்தோடிரிப்சி என்ற நவீன கருவி ரூ.3 கோடி செலவில் சென்னை மற்றும் மதுரையில் நிறுவ அரசாணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

★ துல்லியமாக நோய்களைக் கண்டறியும் நவீன எம்.ஆர்.ஐ ஸ்கேன் வசதி திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், வேலூர் மற்றும் சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ரூ.27.95 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

★ சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை ஆகியவற்றில் தலா ரூ.2 கோடி செலவில் புற்று நோய் மருத்துவத்திற்காக கோபால்ட் சிகிச்சைக் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன.

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள 161 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அதி நவீன பச்சிளங் குழந்தை பராமரிப்பு கருவிகள் ரூ.1.15 கோடி செலவில் யூனிசெப் நிறுவன உதவியுடன் வழங்கப்பட்டுள்ளது. நாகை, கடலூர், மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களுக்கு ரூ.90 இலட்சம் செலவில் ஆம்புலன்ஸ் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ நாமக்கல், தென்காசி, பத்மநாபபுரம், கடலூர், தாம்பரம், வாலாஜாபேட்டை, மேலூர் ஆகிய 7 மருத்துவமனைகளில் ரூ.10.50 கோடி செலவில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவுகளுக்கான கட்டடங்கள் கட்டப்பட்டு கருவிகள் மற்றும் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ அரசு மருத்துவமனைகளுக்கு 153 நவீன லேப்ராஸ்கோப் கருவிகள் ரூ.5.98 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.

★ 98 அரசு மருத்துவமனைகள் 24 மணிநேர மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்பட்டு மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் நியமனம் செய்யப்பட்டு, நவீன கருவிகள் மற்றும் தளவாடங்கள் ரூ.17.5 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.

★ 1,036 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.4.19 கோடி செலவில் கணிப்பொறிகள் வழங்கப்பட்டுள்ளன.

**ஆரம்ப சுகாதார நிலையங்களில் தரமான வசதிகள் மற்றும் சிகிச்சை**

★ ஆரம்ப சுகாதார நிலையங்களில் 24 மணி நேர பிரசவ சேவைகள் தொடங்கப்பட்டு தற்போது 1,000 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 3,000 செவிலியர்கள் நியமனம் செய்யப்பட்டு செயல்படுகின்றன.

★ இந்தியாவிலேயே முதன்முறையாக ஆரம்ப சுகாதார நிலையங்களிலேயே சிசேரியன் அறுவை சிகிச்சை தொடங்கப்பட்டுள்ளது.

★ இந்தியாவிலேயே முதன் முறையாக வேலூர் மாவட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இரத்த சேமிப்பு நிலையங்கள் தொடங்கப்பட்டு, இதுவரை 124 கர்ப்பிணிப் பெண்களுக்கு இரத்தம் செலுத்தப்பட்டுள்ளது.

★ 75 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கை வசதியுடன் ரூ.43.49 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டு, 106 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

**நோயாளிகளுக்கு தரமான மருந்துகள் மற்றும் வசதிகள்**

★ 2007–08 ஆம் மற்றும் 2008–09 ஆம் ஆண்டில் மருந்துகள் வாங்க நிதி ஒதுக்கீடாக ரூ.414 கோடி வழங்கப்பட்டுள்ளது.

★ கடந்த நிதியாண்டில் அறிவிக்கப்பட்டவாறு அனைத்து அரசு மருத்துவ மனைகளிலும் நோயாளிகளுக்கு தரமான வசதிகள் அளிக்கும் பொருட்டு

ரூ.7.76 கோடி செலவில் 10,597 படுக்கைகள், 11,378 மெத்தைகள், 76,683 படுக்கை விரிப்புகள், 14,853 தலையணைகள் 73,797 தலையணை உறைகள் வாங்கி வழங்கப்பட்டு வருகின்றன.

★ ரூ.8 கோடி செலவில் காஞ்சிபுரம் அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய் மருத்துவமனை, மண்டல புற்று நோய் மையமாகத் தரம் உயர்த்தப்பட்டு வருகிறது.

★ வேலூரில் பென்ட்லாண்ட் அரசு மருத்துவமனை 100 படுக்கைகள் வசதி கொண்ட மருத்துவமனையாக இயக்க ரூ.2.36 கோடி.

★ சென்னை சேத்துப்பட்டு மார்புநோய் மருத்துவ நிலையத்தில் உள்ள ஆய்வகக் கூடம் மற்றும் பயிற்சி நிலையத்தை தரம் உயர்த்த ரூ.50 இலட்சம்.

★ சென்னை எழும்பூர் அரசு மகப்பேறு மருத்துவமனையில் பச்சிளங்குழந்தை சிகிச்சைப்பிரிவு தரம் உயர்த்த ரூ.2.4 கோடி செலவிடப்பட்டுள்ளது.

★ எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் 300 படுக்கைகள் கொண்ட தனிப்பிரிவு கட்டுவதற்கு ரூ.13.83 கோடி நிதி ஒதுக்கீடு.

★ சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் தரத்தை ரூ.120 கோடி செலவில் அகில இந்திய விஞ்ஞான மருத்துவக் கழகத்தின் தரத்திற்கு இணையாக உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

★ மஞ்சள் காமாலை நோயைத் தடுக்கும் பொருட்டு அனைத்துக் குழந்தைகளுக்கும் ரூ.7.2 கோடி செலவில் ஹெப்படைட்டிஸ்–பி தடுப்பூசி மருந்து வழங்கும் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்படுகிறது.

★ 146 வட்டாரங்களில் நடமாடும் மருத்துவக் குழுக்கள் ரூ.12.20 கோடி செலவில் அமைக்கப்பட்டு சீரிய முறையில் தாய்சேய் நலப்பணிகளை செவ்வனே செய்து வருகின்றனர்.

★ எச்.ஐ.வி / எய்ட்ஸால் பாதிப்புக்குள்ளான குழந்தைகளுக்காக சென்னை எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் ரூ.32 இலட்சம் செலவில் ஒரு பெரும் மையம் தொடங்கப்பட்டுள்ளது.

**வருமுன் காப்போம் திட்டம்**

★ வருமுன் காப்போம் திட்டத்தில் 6,082 முகாம்கள் நடத்தப்பட்டு 63 இலட்சம் பேர்கள் பலனடைந்திருக்கிறார்கள். இந்த முகாம்களில் 83,785 பேர்களுக்கு கண்புரை நோய் உள்ளது கண்டறியப்பட்டு அறுவை சிகிச்சை அளிக்கப்பட்டது. 1.96 இலட்சம் நபர்களுக்கு சர்க்கரை நோயும், 1.91 இலட்சம் நபர்களுக்கு உயர் இரத்த அழுத்த நோயும் கண்டறியப்பட்டு சிறப்பு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அறுவை சிகிச்சை தேவைப்படும் நபர்களுக்கு அரசு மருத்துவ மனைகளில் அறுவை சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகிறது.

**டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம்**

★ இத்திட்டத்திற்கென ரூ.400 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 8,03,515 கர்ப்பிணித் தாய்மார்கள் பயனடைந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு முதலமைச்சர் ஆணையின்படி தனியார் மருத்துவமனைகளில் இளம் சிறார்களுக்கு இருதய அறுவை சிகிச்சை**

★ அரசு மருத்துவமனைகள் மட்டுமல்லாது 17 தனியார் மருத்துவமனைகளில் இதுவரை 200 இளம் சிறார்களுக்கு இருதய அறுவை சிகிச்சை வெற்றிகரமாக செய்து முடிக்கப்பட்டு இதற்காக ரூ 1.05 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு**

★ 35 அரசு மருத்துவமனைகள் ரூ.45.818 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளன. 24 மாவட்டங்களில் உள்ள 232 அரசு மருத்துவமனைகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.221 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனை அறுவை சிகிச்சைப் பிரிவிற்காக ரூ.9.87 கோடி செலவில் கட்டடப்பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

★ மதுரை அரசு இராசாசி மருத்துவமனையின் விரிவாக்கக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.22.06 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு 10 ஏக்கர் நிலம் கையகப்படுத்தி ரூ.19.7 கோடி நிதி ஒதுக்கீட்டில் கட்டடப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

★ செங்கல்பட்டு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இரண்டாம் தளம் கட்டுவதற்காக ரூ.16.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மாணவ, மாணவியருக்கு தங்கும் விடுதிகள்**

★ செங்கல்பட்டு, கீழ்ப்பாக்கம், திருச்சிராப்பள்ளி, மருத்துவக் கல்லூரிகளில் தங்கும் விடுதிகள் கட்ட ரூ.8.27 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டுமானப் பணிகள் தொடங்க உள்ளன.

★ செங்கல்பட்டு, கீழ்ப்பாக்கம், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரிகளுக்கு தலா ரூ.25 கோடி வீதம் மொத்தம் ரூ.75 கோடி செலவில் கூடுதல் கட்டட வசதிகள் மற்றும் கருவிகள் வழங்கப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

★ கோயம்புத்தூர் மற்றும் உதகமண்டலம் அரசு மருத்துவமனையில் செவிலியர் பயிற்சிப்பள்ளிகளில் பயிற்சி பெறும் செவிலிய மாணவ, மாணவியர் தங்கும் விடுதிகள் கட்ட ரூ.1.97 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ ★ ★



# இந்தியாவிலேயே முதன்முறையாக சிறுதொழில்கள் வளர்ச்சிக்கு தனிக்கொள்கை கண்ட தமிழகம்

திரு. **பொங்கலூர் நா.பழனிசாமி** அவர்கள்
மாண்புமிகு ஊரகத்தொழில் (ம) கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்

**குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை**

★ **இந்தியாவிலேயே முதன்முறையாக 'குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் கொள்கை 2008' மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.**

★ இக்கொள்கையின்படி தமிழ்நாட்டில் எப்பகுதியிலும் ஆரம்பிக்கப்படும் குறு உற்பத்தி நிறுவனங்கள், தொழிலில் பின்தங்கியுள்ள 251 வட்டாரங்களில் ஆரம்பிக்கப்படும் சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள் மாநிலத்தில் 385 வட்டாரங்களில் அமைக்கப்படும் வேளாண்சார் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் மாநிலத்தில் எப்பகுதியிலும் ஆரம்பிக்கப்படும் 10 சிறப்புவகைத் தொழில் நிறுவனங்களுக்கு மானியங்கள் வழங்கப்படுகின்றன.

**தொழில் நுட்ப மேம்பாடு தொடர்பான உதவித்திட்டங்கள்**

★ குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு 3 விழுக்காடு, ஒவ்வொரு நிறுவனத்திற்கும் 5 ஆண்டுகளில் அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் பின்முனை வட்டி மானியம் வழங்கப்படும்.

★ உரிமைக்காப்பு (கண்டறிதல் உரிமை) பதிவு விண்ணப்பத்திற்கான தொகையில் ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் 50 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.2 இலட்சம் வர்த்தகக் குறியீடு பதிவுத் தொகையில் ஒவ்வொரு வர்த்தகக் குறியீடு தொகைக்கும் ரூ.25,000 உதவி அளிக்கப்படும்.

★ கூட்டாண்மை முயற்சியில் நிறுவப்படும் நிறுவனங்களுக்கு அவற்றின் திட்டமதிப்பீட்டில் 25 விழுக்காடு, அதிகபட்சம் ரூ.1 கோடி சலுகை வழங்கப்படும்.

★ ஒவ்வொரு தொழில் நுட்ப வணிக சேவை வசதி வளர்ப்பகம் / திறன்மிகு மையத்திற்கும் ரூ.50 இலட்சம் உதவுதல்.

**திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டங்கள்**

★ தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் திறன்மேம்பாடு திட்டங்களாகிய குறுகியகால பயிற்சி வகுப்புகள் நடத்த 50 விழுக்காடு பயிற்சிக் கட்டணம் திரும்ப வழங்கப்படும்.



இந்தியாவிலேயே முதன்முறையாக ‘குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் கொள்கை 2008’ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

**சந்தை வாய்ப்பு உதவி**

★ தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998இல் குறிப்பிடப்பட்டுள்ள உள்நாட்டு குறு மற்றும் சிறுதொழில்களுக்கான 15 விழுக்காடு விலை முன்னுரிமை அளித்தல்.

★ மாநில அரசால் அவ்வப்பொழுது வெளியிடப்படும் அறிவிக்கைகளின்படி அறிவிக்கப்படும் இனங்களுக்குக் கொள்முதல் முன்னுரிமை அளித்தல்.

★ ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொள்வதற்கு அளிக்கும் முன்வைப்புத் தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்தல்.

★ குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் சார்புடைய சங்கங்கள் நடத்தும் பொருட்காட்சிகளில் கலந்து கொள்ளும் நேர்வுகளில் அரங்க வாடகையில் 50 விழுக்காடு, அதிகபட்சமாக சென்னையில் கலந்து கொள்ளும் ஒவ்வொரு நேர்வுக்கும் ரூ.5 இலட்சம் மாவட்டங்களில் நேர்வுக்கு ரூ.1 இலட்சம் மற்றும் பிற மாநில நேர்வுக்கு ரூ.5 இலட்சம் மானியம் அளிக்கப்படும்.

★ பொதுவான பெயர் அல்லது பொது வணிகச் சின்னத்தில் விற்பனை செய்ய ஆதரவளித்தல்.

**வழங்கப்பட்ட மானியங்கள்**

★ 10 நிறுவனங்களுக்கு முதலீட்டு மானியம் ரூ.51.71 இலட்சம், 626 நிறுவனங்களுக்கு குறைந்தழுத்த மின்மானியம் ரூ.1,144.58 இலட்சம், 3 நிறுவனங்களுக்கு மின்னாக்கி மானியம் ரூ.1.26 இலட்சம், 1,921 நிறுவனங்களுக்கு பின்முனை வட்டி மானியம் ரூ.186.50 இலட்சம்.

**தொழில் முனைவோர் முறையேடு ஒப்புகை**

★ தொழில் முனைவோர் முறையேடு ஒப்புகை எண்கள் 39,662 பேருக்கு வழங்கப்பட்டுள்ளன.

**பாரதப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டம்**

★ பாரதப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 49,037 பயனாளிகளுக்கு வங்கிகளிடமிருந்து ரூ.221.48 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்**

★ புதிதாக 73 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

★ தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ரூ. 432.87 கோடிக்கு உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்துள்ளன.

**சேகோசர்வ்**

★ இந்நிறுவனம் ரூ.23,622.35 இலட்சம் விற்பனை செய்து ரூ.195.15 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

**தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலைகள்**

★ நீலகிரி மாவட்டத்தில் 20,000 சிறு தேயிலை விவசாயிகளை உறுப்பினர்களாக கொண்டு 15 தேயிலை தொழிற் கூட்டுறவுத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டது. 2007-08ஆம் ஆண்டில், இத்தொழிற்சாலைகள் 537.34 இலட்சம் கிலோ பசுந்தேயிலையை சிறுதேயிலை விவசாயிகள் உறுப்பினர்களிடமிருந்து கொள்முதல் செய்து ரூ.6,744.25 இலட்சம் மதிப்புடைய 141.04 இலட்சம் கிலோ தேயிலைத் தூள் உற்பத்தி செய்துள்ளன.

**இண்ட்கோசர்வ்**

★ இண்ட்கோசர்வ் "ஊட்டி டீ" என்னும் பெயரில் தேயிலைத் தூளை நியாயவிலை அங்காடிகள் மற்றும் கூட்டுறவு மொத்தப் பண்டக சாலைகள் மூலம் விற்பனை செய்து வருகிறது.

**தேயிலை உற்பத்தியாளர்கள் சேவை தொழிற்கூட்டுறவுச் சங்கம் (டீசெர்வ்)**

★ நீலகிரி மாவட்டம் குன்னூரில் அமைக்கப்பட்ட (டீசெர்வ்) தேயிலை மின்னணு ஏல விற்பனை மையம் ஒளிவுமறைவற்ற தேயிலை ஏலம் நடைபெறுவதையும், தேயிலைத் தொழிற்சாலைகளின் தேயிலைத் தூளுக்கு நியாய விலை கிடைப்பதையும் உறுதி செய்கிறது. 2007–08ஆம் ஆண்டில் இச்சங்கம் தேயிலை ஏலத்தின் மூலம் ரூ.5,727.86 இலட்சம் மதிப்புடைய 13,343 மெட்ரிக் டன் தேயிலைத்தூளை விற்பனை செய்து ரூ.0.52 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

**கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்**

★ 77 கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், 10,737 உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகின்றன. இச்சங்கங்களின் மொத்த பங்கு மூலதனம் ரூ.273.33 இலட்சம் ஆகும். இதில் அரசின் பங்கு மூலதனம் ரூ.217.73 இலட்சமும் அடங்கும். 2008இல் ரூ.9.96 கோடி மதிப்புள்ள கயிறுப் பொருட்களை கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை செய்துள்ளன.

★ 2007–08ஆம் ஆண்டில் சந்தை வளர்ச்சி உதவித் திட்டத்தின் கீழ் மாநில அரசு தனது 50 சதவீத பங்காக ரூ.39.53 இலட்சம் கயிறு கூட்டுறவுச் சங்கங்களுக்கு மானியமாக வழங்கியுள்ளது.

**தொழிலாளர் ஒப்பந்த சேவை தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்**

★ 20 தொழிலாளர் ஒப்பந்த சேவை தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தலா ஒரு இலட்சம் வீதம் வழங்கப்பட்டு, இதில் ரூ.60,000 பங்கு மூலதனமாகவும் ரூ.40,000 மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ)**

★ தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் 262 மனைகள் மற்றும் 15 தொழிற் கூடங்களை விற்பனை செய்துள்ளது. இந்நிறுவனம் ரூ. 575.14 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

**தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி)**

★ தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் ரூ.114.23 கோடி விற்பனை செய்து ரூ. 6.96 கோடி இலாபம் ஈட்டியுள்ளது.

★ ★ ★



# சிறுபிராணிகளுக்கான நுழைவு மற்றும் சிகிச்சைக் கட்டணங்கள் நீக்கம்

திரு. **பொங்கலூர் நா.பழனிசாமி** அவர்கள்

மாண்புமிகு ஊரகத் தொழில் (ம) கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்

**கால்நடை பராமரிப்புத்துறை**

### கால்நடை பாதுகாப்புத் திட்டம்

★ இதுவரை 8,195 கால்நடை மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. கால்நடைகளுக்கு இலவசமாக ரூ.24.585 இலட்சம் மதிப்பில் செயற்கைமுறைக் கருவூட்டலுக்கு உறைவிந்து குச்சிகள் மற்றும் ரூ.245.85 இலட்சம் மதிப்பில் சிகிச்சைக்கு மருந்துகள் வழங்கப்பட்டன. மொத்தம் 104.44 இலட்சம் கால்நடைகள் மற்றும் 28.75 இலட்சம் விவசாயிகள் கால்நடை மருத்துவ முகாம்களினால் பயனடைந்தனர்.

★ கால்நடைநோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக மாநிலங்களுக்கு உதவித்திட்டத்தின் கீழ், கால்நடைகளைத் தாக்கும் பல்வேறு நோய்களிலிருந்து அவற்றைக் காக்க 435.37 இலட்சம் கால்நடைகளுக்குத் தடுப்பூசி போடும் பணி மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

### மேற்குத் தொடர்ச்சி மலை மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள்

★ மேற்குத் தொடர்ச்சிமலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.95.50 இலட்சத்தில் 50% மானிய விலையில் 744 பயனாளிகளுக்குத் தலா ஒரு அலகு (10 பெட்டைக்கோழிகள் 1 சேவல்) வீதம் வழங்கப்பட்டது. 248 பயனாளிகளுக்கு 50% மானிய விலையில் தலா 1 கலப்பின கிடேரி கன்று வீதம் வழங்கப்பட்டது. 1,224 ஏக்கரில் தீவனப்பயிர் உற்பத்தி செய்யும் பணிகள் இதுவரை மேற்கொள்ளப்பட்டன.

### மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

★ இத்திட்டத்தின் கீழ், ரூ.10 இலட்சம் செலவில் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒப்பளிக்கப்பட்ட தொகையாகிய ரூ.16.91 இலட்சத்தில் கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்திட தொழில் நுட்ப அனுமதி அளிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 260 விவசாயிகளுக்கு மானிய விலையில் கிரிராஜா கோழிகள், கலப்பின காளைக் கன்றுகள் மற்றும் கலப்பின கிடேரி கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. சோலூர்மட்டத்தில் (நீலகிரி மாவட்டம்) புதிய கால்நடை மருந்தகம் கட்டப்படவுள்ளது.

எருமாடு கால்நடை கிளை நிலையக் கட்டடம் (நீலகிரி மாவட்டம்) பழுது பார்க்கப்படவுள்ளது. உதகை மாவட்டக் கால்நடைப் பண்ணையில் உள்ள நிலம் பண்படுத்தப்படவுள்ளது.

★ 55 நடமாடும் கால்நடை மருந்தகப் பிரிவுகளுக்கு புதிய உபகரணங்கள் வாங்கி வழங்க ரூ.216.91 இலட்சம் செலவிடப்பட்டது.

★ ரூ.88.76 இலட்சம் செலவில் கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், கரூர், விருதுநகர் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் புதிய கால்நடைநோய்த் தடுப்புப் புலனாய்வுப் பிரிவுகள் தொடங்கப்பட்டன.

★ தொலைத் தொடர்பு வசதிகள் இல்லாத கால்நடை நிலையங்களுக்கு ரூ. 28.55 இலட்சம் செலவில் 515 கைப்பேசிகள் வழங்கப்பட்டுள்ளன.

★ ரூ.20 இலட்சம் செலவில் 200 கால்நடை கிளை நிலையங்களுக்குப் பழைய உபகரணங்களை மாற்றி புதிய உபகரணங்கள் வழங்கப்பட்டன.

★ ரூ.38 இலட்சம் செலவில் இராணிப்பேட்டை, கோழி நோய் ஆய்வுக் கூடப் பிரிவு இயந்திரங்களும் மற்றும் உபகரணங்களும் வழங்கப்பட்டது.

★ 51 புதிய கால்நடை மருந்தகங்கள், 30 கிளை நிலையங்கள் மற்றும் 55 பார்வை கிளை நிலையங்கள் ரூ.15.56 இலட்சம் செலவில் தொடங்கப்பட்டது.

★ அடையாறில், செல்லப் பிராணிகளுக்கு மருத்துவப் பிரிவு தொடங்கப்பட்டு, ரூ.20 இலட்சம் செலவில் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

★ நாமக்கல் மாவட்டத்தில் மண்டல இணை இயக்குநர் அலுவலகம் மீண்டும் இயங்கச் செய்யப்பட்டது.

★ சிறு பிராணிகளுக்கான நுழைவுக்கட்டணம் மற்றும் சிகிச்சைக் கட்டணம், 9.1.2007 முதல் நீக்கம் செய்யப்பட்டது.

★ ரூ.39.38 இலட்சம் செலவில் தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டத்தில் முதல் கட்டமாக 9 உபவடிநிலங்களில் கால்நடைப் பராமரிப்புப் பணிகள் செயல் படுத்தப்பட்டுள்ளது.

★ விவசாயிகள் பயிற்சியின் கீழ், 3,600 விவசாயிகளுக்குக் கால்நடை வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது.

★ தேசிய வேளாண் ஊரக வளர்ச்சி வங்கியின் (நபார்டு) 10ஆவது ஊரக உள்ளிருப்பு வசதி நிதி மற்றும் உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய அவசர சுனாமி மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் கட்டடப்பணிகள் ரூ.304.47 இலட்சம் செலவில் நடைபெற்று வருகிறது.

★ உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய அவசர சுனாமி மறு சீரமைப்புத் திட்டத்தின் கீழ், ரூ.866.702 இலட்சம் செலவில் 113 கால்நடை நிலையங்கள் மற்றும் விரிவாக்க நிலையங்கள் கட்டப்படுகின்றன.

**பறவைக் காய்ச்சல்**

★ பறவைகளை அழிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், விவசாயிகளுக்கு நட்ட ஈடு வழங்குவதற்காக அரசு ரூ.50 இலட்சம் ஒதுக்கியுள்ளது. பறவைக்காய்ச்சல் நோய்க்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள ரூ.36 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உபகரணங்கள் மற்றும் கிருமிநாசினிகள் வழங்கப்பட்டன.

**வெள்ள நிவாரணம்**

★ 2007–08இல் இறந்த மொத்த கால்நடைகள் 1,651. அதில் பசு மற்றும் எருமையினங்களுக்கு தலா ரூ.10,000, கன்றுகளுக்கு தலா ரூ.5,000 ஆட்டினங்களுக்கு தலா ரூ.1,000 வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

**கால்நடை மருத்துவப் பணிகள்**

★ 386.01 இலட்சம் கால்நடைகளுக்குச் சிகிச்சை, 423.42 இலட்சம் கால்நடைகளுக்குக் குடற்புழு நீக்கம், 1,009.24 இலட்சம் கால்நடைகள் மற்றும் கோழிகளுக்குத் தடுப்பூசி மற்றும் ரூ.68.38 இலட்சம் செலவில் செயற்கைமுறைக் கருவூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டன.

★ துறையின் நிருவாகத்தை மேம்படுத்திட 245 கால்நடை உதவி மருத்துவர்கள், பணி அமர்த்தப்பட்டுள்ளனர். மேலும் 103 கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் உட்பட 206 பேர் புதியதாகப் பணியமர்த்தப்பட்டனர். இதில் 103 நபர்கள் கருணை அடிப்படையில் நியமிக்கப்பட்டனர்.

★ ★ ★



# 3 இலட்சம் இலக்கை விஞ்சி 4,93,045 வீட்டுமனைப் பட்டாக்கள்

திரு இ பெரியசாமி அவர்கள்
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்

வருவாய்த்துறை

**அரசுப் புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டி குடியிருப்போருக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கும் திட்டம்**

★ 2006–07இல் 76,622 இலவச வீட்டுமனைப்பட்டாக்களும், 2007–08இல் 3 இலட்சம் வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்ட இலக்கைவிஞ்சி 4,16,423 இலவச வீட்டுமனைப்பட்டாக்களும் ஆக இரண்டு ஆண்டுகளில் மொத்தம் 4,93,045 இலவச வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டன.

**நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு அரசு தரிசு நிலம் வழங்கும் திட்டம்**

★ இத்திட்டம் 17.9.2006 அன்று திருவள்ளூர் மாவட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடக்கிவைக்கப்பட்டது. முதற் கட்டத்தில் 25,282.11 ஏக்கர் நிலங்கள் 24,358 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டமாக 26,749 நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு 25,805.53 ஏக்கர் நிலங்கள், மூன்றாம் கட்டமாக 20,648 நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு 26,029.61 ஏக்கர் நிலங்கள், நான்காம் கட்டமாக 19,821 நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு 24,505.86 ஏக்கர் நிலங்கள், ஐந்தாம் கட்டமாக 24,932 நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு 32,065.61 ஏக்கர் நிலங்கள், ஆறாம் கட்டமாக 21,487 நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு 26,982.62 ஏக்கர் நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. ஏழாம் கட்டத்தில் 13,270 நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு 18,040.14 ஏக்கர் நிலங்கள் பகிர்ந்தளிக்கப் படுகிறது. இத்திட்டத்தினால் இதுவரை 1,78,711.48 ஏக்கர் நிலங்கள் 1,51,265 பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

**நிலச்சீர்திருத்தம்**

★ தமிழ்நாடு நிலச்சீர்திருத்த (மிகை நில விநியோகம்) விதிகளின் கீழ் முன்னுரிமை அடிப்படையில் தகுதியுள்ள நபர்களுக்கு மிகை நிலங்கள் ஒப்படை செய்யப்படுகிறது. இச்சட்டத்தின் கீழ் கடந்த



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தலைமைச் செயலகத்தில், 2007–08ஆம் ஆண்டிற்கு 3 இலட்சம் ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்படும் என்று அறிவித்து, அந்த இலக்கை விஞ்சி 3 இலட்சத்து ஒன்றாவது இலவச வீட்டுமனைப்பட்டாவை வழங்கினார். (21.1.2008)

இரண்டாண்டுகளில் 1,361 ஏக்கர் உபரியாக அறிவிக்கப்பட்டது. 1,682 ஏக்கர் நிலம் 1,386 தகுதியுள்ள நபர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டது.

**தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம், 2006**

★ தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டம், 2006 (தமிழ்நாடு சட்டம் 29/2006) என்ற தனிச்சட்டம் இயற்றப்பட்டது.

★ இத்திட்டத்தின் அடிப்படையில், அதன் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு திருமணம், மகப்பேறு, கல்வி, இயற்கை மரணம், விபத்து மரணம் / காயம், ஈமச்சடங்கு மற்றும் முதியோர் உதவித்தொகை ஆகியவற்றை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

★ இத்திட்டத்தின் கீழ் 22.12.2006 முதல் 2.5.2008 வரை 73,38,332 குடும்பங்களுக்கு குடும்ப அடையாள அட்டை விநியோகிக்கப்பட்டு அதன் மூலம் மொத்தம் 1,67,15,105 உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

★ இத்திட்டத்தின் செயல்பாட்டிற்கான நிதியை அரசு தனது ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டின் மூலம் அளிக்கிறது.

★ இத்திட்டத் தொடக்கம் முதல் 2.5.2008 வரை 2,64,177 நபர்களுக்கு ரூ.142,86,82,569 உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம்**

★ முதல் கட்டமாக 30,000 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் 15.9.2006, அன்று தொடங்கப்பட்டு 16.9.2006 அன்று வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.



- ★ இரண்டாம் கட்டமாக 25 இலட்சம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.
- ★ மூன்றாம் கட்டமாக, 34.25 இலட்சம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் பணி 16.2.2008 அன்று தொடங்கப்பட்டு 27.4.2008 வரை 7,94,515 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**ஆட்சி எல்லைகளை சீரமைத்தல்**

- ★ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் 25.7.06இல் அறிவித்தபடி அரியலூர் மாவட்டம் பிரிக்கப்பட்டு 23.11.07 முதல் செயல்பட்டு வருகிறது.
- ★ 31.10.07இல் செங்கம் வட்டம் பிரிக்கப்பட்டு தண்டராம்பட்டு வட்டம் ஏற்படுத்தப்பட்டு 1.11.07 முதல் செயல்பட்டு வருகிறது.
- ★ 31.10.2007இல் திண்டுக்கல் வட்டம் பிரிக்கப்பட்டு, ஆத்தூர் வட்டம் ஏற்படுத்தப்பட்டு, 1.11.07 முதல் செயல்பட்டு வருகிறது.
- ★ 29.01.08இல் தருமபுரி கோட்டம் பிரிக்கப்பட்டு புதிய அரூர் கோட்டம் 13.02.08 முதல் செயல்பட்டு வருகிறது. ஆட்சி எல்லைகள் சீரமைத்தபின் வருவாய் மாவட்டங்களின் எண்ணிக்கை 31 ஆகும். வருவாய் கோட்டங்களின் மொத்த எண்ணிக்கை 74 ஆகும். வட்டங்களின் எண்ணிக்கை 208 ஆகும்.

**கட்டடங்கள்**

- ★ மிகவும் பழமையான மற்றும் பழுதடைந்த கட்டடங்களில் இயங்கி வந்த நாகப்பட்டினம், வேலூர், திருநெல்வேலி, காஞ்சிபுரம், திருச்சி, கடலூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள 8 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு புதிய அலுவலகக் கட்டடங்கள் ரூ. 1,016.40 இலட்சம் செலவில் கட்டப்பட்டன. 2007–08ஆம் ஆண்டில் ரூ. 1,175 இலட்சம் செலவில் நீலகிரி, விருதுநகர், புதுக்கோட்டை, சேலம், திருச்சி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்களும் திருவண்ணாமலை மாவட்ட வருவாய் அலுவலருக்கு முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புக் கட்டடமும் கட்டுவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டன.




மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், புதிய அரியலூர் மாவட்டத்தைத் தொடங்கிவைத்தார். (23.11.2007)

**சிம்கார்டு வழங்குதல்**

★ 73 வருவாய் கோட்டாட்சியர்கள் மற்றும் 206 வட்டாட்சியர்கள் ஆகியோர்களுக்கு ரூ.19.53 இலட்சம் செலவில் செல்லிடத் தொலைபேசிக்கான சிம்கார்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

★ மண்டல துணை வட்டாட்சியர்கள் மற்றும் 1,120 வருவாய் ஆய்வாளர்கள் ஆகியோருக்கு ரூ.40.23 இலட்சம் செலவில் செல்லிடத் தொலைபேசிக்கான சிம்கார்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

**பள்ளிகள் மூலம் மாணவர்களுக்கு வகுப்புச்சான்றிதழ்கள், இருப்பிடச் சான்றிதழ்கள் மற்றும் வருமானச் சான்றிதழ்கள் வழங்குதல்**

★ இத்திட்டத்தின் படி 10 அல்லது 12ஆம் வகுப்பில் படிக்கும் சாதிச்சான்றுகள் பெறாத மாணவ/மாணவிகளிடமிருந்து சாதிச்சான்று கோரி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், தலைமை ஆசிரியர்களால் பெறப்பட்டு தலைமை ஆசிரியரின் சான்றொப்பத்துடன் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்களுக்கு அனுப்பப்படும். வருவாய்த்துறை அலுவலர்களின் உரிய விசாரணைக்குப் பின் சான்றுகள் நிரந்தர அட்டைகளில் தயாரிக்கப்பட்டு, சம்மந்தப்பட்ட பள்ளிகளுக்கு மொத்தமாக அனுப்பப்படுகின்றன. பள்ளிப்படிப்பு முடிந்தவுடன், அந்தச் சான்றுகளைப் பள்ளி மாறுதல் சான்றிதழ் (Transfer Certificate) வழங்கும் போது சேர்த்து மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

**நிலவரி தள்ளுபடி**

★ 2005ஆம் ஆண்டில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் 22 மாவட்டங்களில் 4,92,722 எக்டேர் பரப்பளவில் பயிர்கள் பெரும் சேதமடைந்தன. இதனால் விவசாயிகள் அடைந்த இழப்புகளைக் கருத்தில் கொண்டு அவர்களது துயர் துடைக்கும் முகமாக இவ்வரசு பொறுப்பேற்றதுடன் நிலவரித் தொகையான ரூ.11,52,40,077 தள்ளுபடி செய்யப்பட்டது.

**வருவாய்த்துறையில் காலிப்பணியிடங்களை நிரப்புதல்**

★ வருவாய்த்துறையில் அமைச்சுப்பணியில் உதவியாளர் முதல் இரவுக் காவலர் வரையிலான 3,173 பல்வேறு பணியிடங்களை நிரப்பிட ஒப்புதல் வழங்கப்பட்டது. 2007–2008ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் வருவாய்த்துறையில் உதவியாளர் முதல் இரவுக்காவலர் வரையிலான பதவிகளில் 1,881 காலிப்பணியிடங்களை நிரப்பிட 3.3.2008ல் ஒப்புதல் வழங்கப்பட்டது.

**கிராம உதவியாளர்கள் நியமனம்**

★ கடந்த 10 ஆண்டுகளாகக் கிராம உதவியாளர் பணிக்கான பணி நியமனம் செய்யப்படவில்லை. தற்போது ஒவ்வொரு வருவாய் கிராமத்திற்கும் ஒரு கிராம உதவியாளர் பணியிடம் என்ற அடிப்படையில் 3,674 கிராம உதவியாளர் காலியிடங்களை நிரப்ப 6.12.06இல் அரசு ஆணையிட்டுள்ளது. இதுவரை (31.3.08 வரை) 2,125 கிராம உதவியாளர்கள் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

**கிராம உதவியாளர்களுக்கு ஓய்வூதியம்**

★ கிராம உதவியாளர்களின் குடும்பத்திற்கு சிறப்பு குடும்ப ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ.150லிருந்து 400ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் 1,503 கிராம உதவியாளர்களின் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுகின்றனர்.

**முன்னாள் கிராம நிருவாக அலுவலர்களின் ஓய்வூதியம்**

★ முன்னாள் கிராம அலுவலர்களுக்கு சிறப்பு ஓய்வூதியம் நிர்ணயித்து ஆணையிடப்பட்டுள்ளது. சிறப்பு ஓய்வூதியம் ரூ.350, நிரந்தர அகவிலைப்படி ரூ.455, அகவிலை ஓய்வூதியம் ரூ.175, கூடுதல் அகவிலைப்படி ரூ.100, மருத்துவப்படி ரூ.50, மொத்தம் ரூ.1,130.

**கிராம நிருவாக அலுவலர்கள் அலுவலகத்திற்கு தளவாடங்கள்**

★ மாநிலத்தில் மொத்தம் உள்ள 12,506 கிராம நிருவாக அலுவலகங்களில் 2007–08ஆம் ஆண்டில் முதல் கட்டமாக ஒவ்வொரு கிராம நிருவாக அலுவலகத்திற்கு ரூ.10,000 வீதம் 3,000 கிராம நிருவாக அலுவலகங்களுக்கு இரும்பு தளவாடங்கள் (மேஜை, நாற்காலி) வாங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

**இலவச வேட்டி, சேலைகள்**

★ 2007ஆம் ஆண்டின் பொங்கல் திருநாளின் போது 155.41 இலட்சம் சேலைகளும் 155.27 இலட்சம் வேட்டிகளும் வழங்கப்பட்டன. 2008ஆம் ஆண்டு பொங்கல் திருநாளின்போது 159.64 இலட்சம் சேலைகளும் 158.98 இலட்சம் வேட்டிகளும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**இயற்கை இடர்ப்பாடுகள் நிவாரணம்**

★ 2007ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழையினால் பாதிக்கப்பட்ட மக்கள் உடனடி நிவாரணம் பெறும் பொருட்டும், ஏனைய புனரமைப்புப் பணிகளுக்காகவும் உடனடி நிவாரணமாக மாநில அரசு ரூ.200 கோடியை 24.12.07 அன்று வழங்கியுள்ளது. 2007ஆம் ஆண்டில் வடகிழக்குப் பருவமழையினால் உயிரிழந்த 150 நபர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.1 இலட்சம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 859 கால்நடைகள் இழப்புகள் மற்றும் முழுவதுமாக அல்லது பகுதியளவில் சேதமடைந்த 31,887 குடிசைகளுக்காகவும், 1,60,139.49 எக்டேர் பயிர் சேதத்திற்காகவும் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

★ ★ ★

★ 2008ஆம் ஆண்டு மார்ச் மாதம் பருவம் கடந்து பெய்த எதிர்பாரா பெருமழை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கவும், புனரமைப்புப் பணிகளுக்கெனவும் ரூ.202.30 கோடி இவ்வரசால் வழங்கப் பட்டுள்ளது. இந்த கனமழையின் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவிடும் பொருட்டு, சேதமடைந்த நெற்பயிருக்கு ஒரு எக்டேருக்கு ரூ.4,000 என்று தற்பொழுது வழங்கப்படும் நிவாரணத் தொகையினை ரூ.7,500 என உயர்த்தி வழங்குவதுடன், 2 எக்டேர் அளவிற்கு மட்டுமே நிவாரணம் வழங்க வேண்டும் என்று தற்பொழுதுள்ள வரம்புகளை தளர்த்தி பாதிக்கப்பட்ட அத்தனை நிலத்திற்கும் அனைத்து பயிர்களுக்கும் நிவாரண உதவி அளித்திட அரசு ஆணையிட்டுள்ளது. இயற்கை இடர்ப்பாடுகளினால் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு உடனடி நிவாரணமாக வழங்கப்பட்டு வந்த நிவாரணத் தொகை ரூ.50,000ஐ உயர்த்தி ரூ.1 இலட்சமாக வழங்க பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் ஆட்சியர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

**நில அளவைப் பதிவேடுகள் துறை**

★ காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டங்களில் நத்தம் நிலஅளவைப் பணி டிசம்பர் 2007இல் தொடங்கி 7 கிராமங்களில் புலப் பணி முடிக்கப்பட்டுள்ளது.

★ அனைத்து கிராமங்களின் 'அ' பதிவேடுகள் மற்றும் சிட்டாக்கள் கணினி மயமாக்கப்பட்டு பொதுமக்கள் வசதிக்காக தொடுதிரை கணினிகள் நிறுவப்பட்டுள்ளன. ரூ.20.90 கோடி வசூலாகியுள்ளது.

★ அடங்கலில் உள்ள புள்ளி விவரங்கள் அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை மாவட்டம் தவிர) கணினிமயமாக்கப்பட்டுள்ளது.

★ சென்னை மாவட்டத்திலுள்ள நகர்ப்புற நிலப் பதிவேடுகள் கணினி மயமாக்கப்பட்டுள்ளது.

★ பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை வட்டங்களில் உள்ள நிலஅளவைப் புலப்படங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

★ சென்னை மத்திய நிலஅளவை அலுவலகத்திலுள்ள கணினி வரைபட மையத்தில் பலவகைப்பட்ட வரைபடங்கள் கணினி மூலம் தயாரிக்கப்பட்டு ரூ. 29.40 இலட்சத்துக்கு பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

★ அனைத்து கிராம வரைபடங்களும் கணினி மயமாக்கப்பட்டுள்ளது.

★ நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையரகம் கணினி மயமாக்கப்பட்டுள்ளது.

★ அடிப்படை கணினிப் பயிற்சி 8,521 நிலஅளவை மற்றும் வருவாய்த் துறை பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

★ 171 துணை வட்டாட்சியர்கள் / வட்டாட்சியர்களுக்கு மென்பொருள் கையாள்வது குறித்து பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

★ 1,035 பணியாளர்களுக்கு நவீன நிலஅளவை உபகரணங்களைக் கொண்டு நிலஅளவை மேற்கொள்வதற்கான பயிற்சி சி–ஸ்டார் மையத்தில் வழங்கப்பட்டுள்ளது.

★ கருணை நியமன அடிப்படையில் தகுதிவாய்ந்த 108 இறந்த அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு பணி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ தகுதி வாய்ந்த 59 புல உதவியாளர்களுக்கு பணி மாறுதல் மற்றும் பதவி உயர்வு அடிப்படையில் நில அளவர்களாக நியமனம் வழங்கப்பட்டுள்ளன.

★ ★ ★



# ரூ.137.86 கோடி செலவில் வீட்டு மனைகள், அடுக்குமாடிக் குடியிருப்புகள், தனி வீடுகள்

திரு. **இ.பெரியசாமி** அவர்கள்
மாண்புமிகு வருவாய் மற்றும்
வீட்டுவசதித்துறை அமைச்சர்

**வீட்டுவசதித்துறை**

**தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் – புதிய திட்டங்கள்**

★ ரூ.137.86 கோடி மதிப்பீட்டில் 1,112 வீட்டுமனைகள், 655 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் 295 தனி வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

★ தெற்காசிய கூட்டமைப்பு விளையாட்டுக் கிராமத்தில் அகில இந்திய அமைச்சுப் பணியாளர்களுக்கென (AIS) 32 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.9.74 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது.

**பதவி உயர்வு**

★ தகுதிவாய்ந்த 387 பணியாளர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டது.

**வருவாய் வசூல்**

★ ரூ. 777.68 கோடி வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

**விற்பனை செய்யப்பட்ட அலகுகளின் விவரங்கள்**

★ 1,981 வீடுகள் , 174 அடுக்கு மாடிக் குடியிருப்புகள், 11,851 மனைகள், 337 வணிக மனைகள் ஆகமொத்தம் 14,343 அலகுகள் விற்பனை செய்யப்பட்டன.

**விற்பனைப் பத்திரம் வழங்கப்பட்ட அலகுகளின் விவரங்கள்**

★ 43,559 விற்பனைப் பத்திரங்களும், 53,172 வரைவு விற்பனைப் பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

★ அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகளின் பராமரிப்பு மற்றும் பழுது பார்ப்புப் பணிகளுக்காக ரூ.4,105.28 இலட்சம் செலவிடப்பட்டன.

★ அலுவலக உபயோகத்திற்காக 22 புதிய மகிழுந்துகள் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் வாங்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.



மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித்துறை அமைச்சர்
திரு.இ.பெரியசாமி அவர்கள், சென்னை–பட்டினப்பாக்கத்திலுள்ள
வீட்டுவசதி வாரிய அரசு அலுவலர் குடியிருப்பில் பழுதடைந்த நிலையில் உள்ள வீடுகளை
ஆய்வு செய்தார். (02.11.2007)

**கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம்**

★ 2005–06ஆம் ஆண்டு கடன் தள்ளுபடி சலுகைத் திட்டத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நிலுவையுள்ள தவணை தவறிய அனைத்து வகை கடன்தாரர்களும் அசல் தொகையை திருப்பிச் செலுத்தும் பட்சத்தில் வட்டி, அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணம் முழுவதும் தள்ளுபடி செய்யப்படுமென அறிவிக்கப்பட்டு, நலிவுற்ற 36,179 பயனாளிகள் ரூ.39.90 கோடி அளவிற்குச் சலுகையைப் பெற்றுப் பயனடைந்தனர்.

★ அசல் தொகை மற்றும் குறைக்கப்பட்ட வட்டியைத் திருப்பிச் செலுத்தினால் அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணம் தள்ளுபடி செய்யப்படும் என அறிவித்து உறுப்பினர்கள் பெயரில் 31.3.2005 அன்று நிலுவையாக உள்ள தவணை தவறிய அசலுக்கு 17%லிருந்து 11%ஆக வட்டி விகிதத்தை குறைத்து சலுகை வழங்கப்பட்டுள்ளது. இச்சலுகை மூலம் 30.9.2006 வரை 1,83,739 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். இப்பயனாளிகளிடமிருந்து வசூல் செய்யப்பட்ட தவணை தவறிய தொகை ரூ.185 கோடியாகும். பயனாளிகளுக்கு ரூ.147.80 கோடி தள்ளுபடி தொகை கிடைத்துள்ளது.

★ 10,507 பேருக்கு ரூ.188.47 கோடி பல்வேறு திட்டங்களின் கீழ் கடன் வழங்கப்பட்டுள்ளது.

★ ★ ★



# சுற்றுலாத் தலங்களில் மேம்பாடு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு

திரு. **என். சுரேஷ்ராஜன்** அவர்கள்
மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்

சுற்றுலாத்துறை

**பயணிகள் வருகை அதிகரிப்பு**

★ 2005ஆம் ஆண்டு 7.7 சதவீதமாகக் குறைந்த சுற்றுலாப் பயணிகளின் வருகை, 2006இல் 21 சதவீதமாக அதிகரித்து இது 2007ஆம் ஆண்டில் 29.2 சதவீதமாக உயர்ந்துள்ளது.

★ தமிழகத்தில் சுற்றுலா மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு ரூ.115.10 கோடி செலவிடப்பட்டுள்ளது. இதனால் தமிழகம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் 2ஆம் இடத்தையும், உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் 3ஆம் இடத்தையும் வகிக்கிறது.

**மைய அரசு நிதி ஒதுக்கீட்டில் மேம்பாடு**

★ மைய அரசு நிதியுதவித் திட்டத்தில் 2006–07ஆம் ஆண்டு ரூ.1,866.41 இலட்சமும், 2007–08ஆம் ஆண்டில் ரூ.2,748.91 இலட்சமும் நிதியுதவி பெற்று மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**மாநில அரசு நிதியில் சுற்றுலா மேம்பாடு**

★ 2006–07ஆம் ஆண்டில் ரூ.1,206.18 இலட்சம் திட்ட மதிப்பீட்டிலும், 2007–08ஆம் ஆண்டில் ரூ.1,212.14 இலட்சம் செலவிலும் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**மேற்குத் தொடர்ச்சி மலைத்திட்டத்தில் சுற்றுலா மேம்பாடு**

★ சுற்றுலாத் தலங்கள் மேம்பாட்டுக்கு 2006–07ஆம் ஆண்டில் ரூ.45 இலட்சம் 2007–08ஆம் ஆண்டில் ரூ.114.52 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**சுற்றுலாத் தலங்கள் மேம்பாடு**

★ பிரபலமாகாத சுற்றுலாத் தலங்களையும், மாவட்ட உலா மையங்களாக விளங்கும் சுற்றுலாத் தலங்களையும் மேம்பாடு செய்ய 2006–07இல் ரூ.192.95 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பணிகள் முடிக்கப்பெற்றுள்ளது. 2007–08ஆம் ஆண்டில் இந்த நிதி ஒதுக்கீடு



சுற்றுலா நட்பு ஆட்டோ தொடங்கிவைக்கப்பட்டது.

ரூ.233.65 இலட்சமாக உயர்ந்து சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகிறது.

**சிறந்த இடம் வகிக்கும் மலைகளின் ராணி உதக மண்டலம்**

★ 2006– 07ஆம் ஆண்டில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.205 இலட்சம் பெறப்பட்டு பணிகள் முடிவுற்றன. 2007–08ஆம் ஆண்டில் ரூ.306.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் பலனாக உதகமண்டலம் இந்தியாவில் இருக்கும் பிற மலை வாசஸ்தலங்களைவிட அதிக பயணிகளை கவரும் வகையில் வசதிகள் கொண்டதாக மாற்றப்பட்டுள்ளது.

**தமிழகத்திற்கு மூன்று தேசிய விருதுகள்**

★ செட்டிநாடு சுற்றுலாத்தலத்தை ஊரகச் சுற்றுலாத் தலமாகச் சிறப்பான முறையில் மேம்படுத்தியமைக்கு ஒரு விருது;

★ தமிழகச் சுற்றுலாச் செல்வங்களை நவீன முறையிலும், பயணிகள் பயன்பெறும் வகையிலும் வெளிப்படுத்தி வெளியிடப்பட்ட தகவல் கையேடுகள், வண்ணச் சுவரொட்டிகள், குறுந்தகடுகள் போன்ற வர்த்தக மேம்பாட்டுப் பணிகளுக்கென ஒரு விருது;

★ செங்கல்பட்டு மாவட்டம் தண்டரை கிராமத்தில் செயல்பட்டுவரும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான இருளர் பெண்கள் மேம்பாட்டு நலச்சங்கம், சுற்றுலா நோக்கில் சமூகப் பொருளாதார மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டமைக்காக ஒரு விருது, ஆக மூன்று விருதுகளை மைய அரசு தமிழகத்திற்கு வழங்கி கௌரவித்துள்ளது.

**சுற்றுலாத் திட்டப்பணிகள் செயலாக்கம்**

★ 2005ஆம் நிதியாண்டின் தொடக்கத்தில் இருந்து 2008ஆம் ஆண்டு வரை 77 திட்டங்கள் ரூ.2,130.335 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுலாத் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**வண்ணத்துப்பூச்சி பூங்கா**

★ வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் வண்ணத்துப்பூச்சி பூங்கா அமைக்க ரூ.150 இலட்சம் முதற்கட்டமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சி**

★ சென்னை அண்ணா மேலாண்மை நிறுவனத்தின் மூலம் 400 படித்த பட்டதாரி இளைஞர்களுக்குச் சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சி அளிக்க ஆணை வெளியிடப்பட்டு, முதற்கட்டமாக 184 படித்த பட்டதாரிகளுக்குச் சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**சுற்றுலாத்தலங்கள் மேம்பாடு**

★ சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி, மதுரை, தஞ்சாவூர், புளியஞ்சோலை, செட்டிநாடு, ஸ்ரீரங்கம், மெரினா, வேலூர் கோட்டை, ஏலகிரி மற்றும் கும்பகோணம் ஆகிய 10 இடங்களை மேம்படுத்த ரூ.4,589 இலட்சம் வழங்கப்பட்டுப் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

**கிராமியச் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்கள்**

★ கிராமியச் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கழுகுமலை, தீர்த்தமலை, தேவிப்பட்டினம், திருப்புடைமருதூர், திருக்குறுங்குடி, குரங்கணி மற்றும் தடியன் குடிசை மேம்பாட்டிற்காக இதுவரை ரூ.386.83 இலட்சம் மதிப்பீட்டில் திட்டங்கள் நடைபெற்று முடிவடைந்துள்ளன. செட்டிநாடு தலம், கிராமச் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.475.35 இலட்சம் திட்டமதிப்பீட்டில் 2007–08ஆம் ஆண்டில் நிதி ஒப்பளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**தஞ்சாவூர் பெரிய கோயில் வளாகத்தில் ஒலி–ஒளிக்காட்சி**

★ தஞ்சாவூர் பெரிய கோயில் வளாகத்தில் ஒலி–ஒளிக்காட்சி அமைக்க ரூ.150 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட உள்ளன.

**கழுகுமலை மேம்பாடு**

★ தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ.61.68 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**ஒலி–வழிகாட்டி வசதி** (Audio Guide Facility)

★ உலகப் புராதனச் சின்னங்களாக விளங்கும் தஞ்சாவூர், தாராசுரம் மற்றும் கங்கைகொண்டசோழபுரம் ஆகிய இடங்களில் ஒலி வழிகாட்டி வசதி அமைக்க ரூ.61.46 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**சுற்றுலா சுற்றுச்சூழல் மேம்பாடு**

★ சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் முதல் பகுதியாக உதகமண்டலம்–முதுமலை–ஆனைமலை பகுதி மேம்பாட்டிற்காக ரூ.439.50 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட உள்ளன.

**குறும்படம் தயாரித்தல்**

★ தமிழ்நாட்டில் உள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களைப் பற்றி உள்நாடு மற்றும் வெளிநாட்டில் நடைபெறும் விளம்பர முகாம்களில் விளம்பரப்படுத்த தமிழ்நாடு சுற்றுலா மற்றும் நவக்கிரக தலங்கள் குறும்படமும் மற்றும் அறுபடை வீடுகள் பற்றிய குறும்படமும் தயாரிக்கப்பட்டுள்ளது.

**ஜைன ஆலயங்கள் பற்றிய கையேடு**

★ தமிழ்நாட்டிலுள்ள ஜைன ஆலயங்களைப் பற்றிய கையேடு முதன் முறையாக வெளியிடப்பட்டது.

**சுவரொட்டிகள் வெளியிடுதல்**

★ சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க சுற்றுலாத் தகவல் வெளியீட்டுக் கையேடுகள் மற்றும் குறுந்தகடுகள், சுவரொட்டிகள் ரூ.25,14,542 செலவில் வெளியிடப்பட்டன. மேலும், நாளிதழ்கள் வார இதழ்கள், மாத இதழ்கள் ஆகியவற்றில் ரூ.17.99 கோடிக்கு விளம்பரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**தொடு உணர்வு திரை**

★ சுற்றுலாத் தகவல் பற்றிய விவரங்கள் சுற்றுலாப் பயணிகளுக்கு உடனடியாக கிடைக்க ஏதுவாக, தமிழ்நாட்டிலுள்ள முக்கியச் சுற்றுலா மையங்களில் ரூ.9,91,332 செலவில் தொடு உணர்வு திரை தமிழகச் சுற்றுலாத் துறையால் நிறுவப்பட்டுள்ளது.

**மாமல்லபுரம் நாட்டிய விழா**

★ 27.12.07 முதல் 27.1.08 வரை நடைபெற்ற மாமல்லபுரம் நாட்டிய விழாவில் கிராமியக் கலை நிகழ்ச்சிகளுக்குச் செவ்விய நடனங்களுக்கு இணையான

முக்கியத்துவம் முதன்முறையாக அளிக்கப்பட்டது. இந்த விழாவினை 2,200 வெளிநாட்டவர் கட்டணம் செலுத்திக் கண்டு களித்தனர்.

**பாரம்பரியமிக்க கட்டடங்களைத் தங்கும் விடுதிகளாக (Hotel) மாற்றச் சலுகைகள்**

★ தமிழ்நாட்டிலுள்ள பாரம்பரியமிக்க கட்டடங்களை ஓட்டல்களாக மாற்றும் திட்டத்திற்கு (100 இலட்சத்திற்கு மிகாமல்) மானியமாக வழங்க அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

**புதிய வோல்வோ பேருந்துகள்**

★ தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இரண்டு 'வோல்வோ' பேருந்துகளை ரூ.122.50 இலட்சத்திற்கு வாங்கி, அவை சென்னை – திருப்பதி சுற்றுலாவிற்குப் பயன்படுத்தப்படுகிறது.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்களை மேம்படுத்துதல்**

★ தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான ஓட்டல்கள் ரூ.3 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

**மாமல்லபுரம் கடற்கரை வளாகத்தில் ஜெனரேட்டர்**

★ மாமல்லபுரத்திலுள்ள கடற்கரை வளாகத்தில் தடையில்லா மின்வசதியை அளிப்பதற்காக 250KV ஜெனரேட்டர் ஒன்று ரூ.18 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளது.



★ ரூ.2 கோடி செலவில் 20 சிக்கன குடில்களும் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.

**முட்டுக்காடு படகுக் குழாமை மேம்படுத்துதல்**

★ முட்டுக்காட்டில் மேம்பாட்டுத் திட்டங்களுக்காக ரூ.45 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முக்கியமான ஒட்டல்களுக்குப் புதிதாக மெத்தைகள் வாங்குதல்**

★ தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முக்கியமான ஓட்டல்களுக்கு 1,066 லேடெக்ஸ், பின்கோர் வகை மெத்தைகள் ரூ.59 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளன.

**புதிதாகப் படகுகள் வாங்குதல்**

★ படகு இல்லங்களின் பயன்பாட்டிற்காக ரூ.30 இலட்சம் செலவில் 68 புதிய படகுகள் வாங்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிதி நிலவரம்**

★ 2007–08ஆம் ஆண்டு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மொத்த வருவாய் ரூ.5,530 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

## கலை பண்பாட்டுத்துறை

★ கலை பண்பாட்டு இயக்ககத்திற்கு சென்னை, எழும்பூரில் உள்ள தமிழ் வளர்ச்சி வளாகத்தில் இரண்டாவது தளம் கட்ட ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

★ நாட்டுப்புறக் கலைஞர்களின் நலன் காக்க நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம் அமைக்கப்பட்டு நலத்திட்டப் பணிகளுக்காக முதற்கண் ஒரு கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**அரசு இசைக்கல்லூரிகள் / மாவட்ட அரசு இசைப்பள்ளிகள்**

★ 17 மாவட்ட அரசு இசைப்பள்ளிகளில் தற்போது குரலிசை, பரதநாட்டியம், தேவாரம், நாதசுரம், தவில் ஆகியவற்றுடன் கூடுதலாக வயலின், மிருதங்கப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன.

★ மாணவ, மாணவிகளின் பயன்பாட்டிற்காகப் பரதநாட்டிய அணிகலன்கள் ரூ.8.10 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

★ இசைக்கல்லூரிகளில் பயிலும் அனைத்துப் பிரிவு மாணவ, மாணவியருக்கும் வேறுபாடு எதுவுமின்றி ரூ.250 வீதம் கல்வி உதவித் தொகை 2007–08ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்,
தமிழ் மையம் – தமிழக அரசின் சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை இணைந்து நடத்திய 'சென்னை சங்கமம்' நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டார். உடன் சென்னை சங்கமம் ஒருங்கிணைப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.கனிமொழி அவர்கள். (18.1.2008)

★ சென்னை, அரசு இசைக்கல்லூரி வளாகத்தில் உள்ள தாகூர் கலையரங்கத்தில் ரூ.6.50 இலட்சம் செலவில் மின்வசதி மற்றும் சீர்வளி (Air-conditioning) ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**அரசு கவின்கலைக் கல்லூரிகள்**

★ சென்னை அரசு கவின் கலைக்கல்லூரி 150 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. அதனைச் சீரமைக்க ரூ.1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

★ சென்னை, அரசு கவின்கலைக் கல்லூரியில் சுவர் ஓவியங்கள் வரைய ரூ.10 இலட்சம் செலவில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

★ கும்பகோணம் அரசு கவின்கலைக் கல்லூரிக்கு ரூ.2 இலட்சம் செலவில் ஒளிப்படக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**அரசு கட்டட மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி**

★ மாமல்லபுரம், அரசு கட்டட மற்றும் சிற்பக்கலைக் கல்லூரிக்கு ரூ.107 இலட்சம் செலவில் திறந்தவெளி அருங்காட்சியகம், நூலகம் மற்றும் கணினி மையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்**

★ இயல் இசை நாடக மன்றத்தின் பொன்விழா ரூ.5 இலட்சம் செலவில் கொண்டாட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

★ நலிந்த கலைஞர்களுக்கு திங்கள் தோறும் நிதி உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை, ரூ.500இல் இருந்து ரூ.1,000ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டது. தற்போது 6,391 நலிந்த கலைஞர்களுக்கு இந்நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

★ சென்னைக்கு வருகை தரும் அனைத்துத் தரப்புக் கலைஞர்களும் தங்குவதற்கு, ரூ.40.60 இலட்சம் செலவில் 363.90 சதுர மீட்டர் பரப்பில் ஒரு விருந்தினர் மாளிகை கட்டும் திட்டம் ஏற்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

★ தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் 68 கலைஞர்களுக்கு கலைமாமணி விருதும், நலிந்து வாழும் கலைமாமணி விருதாளர்கள் மூவருக்கு ரூ.15,000 தொகை வீதம் பொற்கிழியும் வழங்கப்பட்டன. மேலும், மறைந்தும் மறையாத புகழோடு திகழ்ந்து வரும் 18 கலைஞர்களின் திருவுருவப் படங்கள் திறந்து வைக்கப்பட்டன.

★ குடும்பப் பேணுகை நிதியுதவியாக ரூ.6,000 வீதம் 32 மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது.

★ புத்திளம் கலைஞர்கள் 68 பேருக்கு தன்னார்வக் கலை நிறுவனங்கள் மூலம் தலா நான்கு நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டன.

**தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம்**

★ தமிழ்நாட்டில் உள்ள 23 இடங்களில் மாவட்ட சிறுவர் மன்றங்கள், 10 இடங்களில் விரிவாக்கமையங்கள், 2 இடங்களில் ஊரக மையங்கள் ஏற்படுத்த ரூ.8.35 இலட்சம் நல்கையாக வழங்கப்படுகின்றது. இதில் சிறார்களுக்கு ஓவியம், கைவினை, குரலிசை, பரதநாட்டியம் போன்ற கலைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**மாநில கலைப்பயிற்சி முகாம்**

★ கொடைக்கானல், உதகை நகர்களில் நடத்தப்பட்ட கோடைக்கால மாநிலக் கலைப்பயிற்சி முகாம்கள், நாமக்கல் நகரில் நடைபெற்ற கைவினைப்பயிற்சி முகாம், விருதுநகரில் நடைபெற்ற மாரிக்கால முகாம் ஆகியவற்றின் மூலம் தமிழகத்தின் அனைத்து மாவட்ட சவகர் சிறுவர் மன்றங்களைச் சார்ந்த 400க்கும் மேற்பட்ட சிறார்கள் பயன் பெற்றனர்.

**மாநிலக் கலைப்போட்டி**

★ காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மாநிலக் கலைப் போட்டி விழாவில் 123 சிறார்கள் பங்கு கொண்டனர். அச்சிறார்களுக்குப் பரிசுகளும் சான்றுகளும் வழங்கப்பட்டன.



## இளந்திரு விருது

★ தென்மண்டல அளவில் நடைபெற்ற தேசிய இளந்திரு விருது தெரிவு முகாமில் கலந்து கொண்ட தமிழக சவகர் சிறுவர் மன்றத்தைச்சார்ந்த 139 சிறார்களில் வெற்றிபெற்ற 6 சிறார்களுக்கு, புதுதில்லி தேசிய சிறுவர் மன்றம், மேதகு குடியரசுத் தலைவரால் தேசிய இளந்திரு விருதினை வழங்கியதோடு, தமிழ்நாடு அரசும் ரூ.10,000 வீதம் வழங்கிச் சிறார்களைச் சிறப்பித்துள்ளது.

## கலைப் பரிமாற்றம்

★ தமிழக சவகர் சிறுவர் மன்றங்களைச் சார்ந்த 60 சிறார்கள் கலைப் பரிமாற்றத்தின் மூலம் தமிழக நாட்டுப்புற நடன நிகழ்ச்சிகளை பஞ்சாப், மணிப்பூர் ஆகிய மாநிலங்களில் வழங்கியுள்ளனர்.

## மண்டல முகாம்

★ ஒரு மாவட்டத்திற்கு 10 சிறார்கள் வீதம் ஆண்டொன்றுக்கு 300 சிறார்கள் எனக் கடந்த ஈராண்டுகளில் 600 சிறார்கள் சேர்ந்து கலைப் பயிற்சி பெற்றுள்ளனர்.

## தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு

★ 30 வயதுக்கு மேற்பட்ட மூத்த கலைஞர்கள் பிரிவில் 10 கலைஞர்களுக்கு ரூ.15,000 வீதமும், 30 வயதுக்கு உட்பட்ட இளங்கலைஞர்கள் பிரிவில் 20 கலைஞர்களுக்கு ரூ.5,000 வீதமும் விருதுகள் வழங்கப்பட்டன.

★ சென்னை, கும்பகோணம் அரசு கவின்கலைக் கல்லூரிகளிலும் முதுநிலை இறுதியாண்டு பயிலும் 12 மாணவர்களுக்கு ரூ.5,000 வீதமும், இளநிலை இறுதியாண்டு பயிலும் 40 மாணவர்களுக்கு ரூ.3,000 வீதமும் படிப்புதவித் தொகைகள் வழங்கப்பட்டன.

★ ★ ★



# ஆவணப் பதிவுகளில் ஆள்மாறாட்டத்தைத் தடுக்க புகைப்படங்கள்

திரு. **என். சுரேஷ்ராஜன்** அவர்கள்
மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்

**பதிவுத்துறை**

### அதிக ஆவணங்கள் பதிவு

★ பதிவுத்துறையில் 2007–08ஆம் ஆண்டு வருவாய் ரூ.4,232.36 கோடியாகும்.

★ பதிவுத்துறையில் 2007–08இல் 26,91,002 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### முத்திரைத் தீர்வை விலக்கு

★ விவசாயிகள் அல்லது குறுந்தொழில் முனைவோர் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு காப்பீடாக வங்கிகளுக்கு எழுதிக் கொடுக்கும் உரிமை, ஆவணங்கள் வைப்பு உடன்படிக்கை அல்லது நகைகள் தொடர்பான ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை ஆகியவற்றுக்கு முழுமையாக விலக்களித்து ஆணையிடப்பட்டது.

### ஆள்மாறாட்டத்தைத் தடுக்க நடவடிக்கை

★ ஆள்மாறாட்டம் செய்து போலி ஆவணப்பதிவுகள் பதிவு செய்வதை முழுமையாகத் தடுக்கவும், பினாமி நடவடிக்கைகளைத் தடுக்கவும் கிரய ஆவணங்களின் பதிவின் போது வாங்குபவர் மற்றும் விற்பவர் புகைப்படங்களை ஒட்டுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மற்ற ஆவணங்களைப் பொறுத்து பதிவின்போது ஆவணத்தைத் தாக்கல் செய்பவரின் புகைப்படத்தை ஒட்டுவதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. கிரயம் கொடுப்பவர், கிரயம் பெறுபவர் மற்றும் ஆவணத்தைத் தாக்கல் செய்பவரின் விரல் ரேகை பெறுவதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**அரசால் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் (2006–07 பகுதி II திட்டம்)**

- ★ 300 சார்பதிவாளர் அலுவலகங்களில் ரூ.60 இலட்சம் செலவில் பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.
- ★ ரூ.60 இலட்சம் செலவில் 60 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு நகல் எடுக்கும் இயந்திரங்கள் (ஜெராக்ஸ் இயந்திரம்) வழங்கப்பட்டுள்ளன.
- ★ அசல் ஆவணங்களில் உண்மைத் தன்மையை உறுதிசெய்ய 1.8.2007 முதல் ஒட்டு வில்லைகள் (Hologram) ஒட்டப்படுகின்றன.
- ★ மொத்தமுள்ள 558 சார்பதிவாளர் அலுவலகங்களில், 450 சார்பதிவகங்கள் இதுவரை கணினிமயமாக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 108 சார்பதிவகங்களுக்கு கணினி மற்றும் உபகரணங்கள் வழங்கிப் பராமரிக்க ரூ.10.51 கோடிக்கு வழங்கலாணை பிறப்பிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

**அரசால் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் (2007–08 பகுதி II திட்டம்)**

- ★ 2003இல் மூடப்பட்ட, 10 சார்பதிவாளர் அலுவலகங்கள் ரூ.2 கோடியே 5 இலட்சம் செலவில் மீளத் திறக்கப்பட்டு அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

**சமாதான் திட்டம்**

- ★ இத்திட்டத்தின் கீழ் 21,559 ஆவணங்களில் ரூ.82.45 கோடி வசூலிக்கப் பட்டுள்ளது.

**சார்பதிவாளர் அலுவலகங்கள் மீளத்திறப்பு**

- ★ 2003இல் மூடப்பட்ட 10 சார்பதிவாளர் அலுவலகங்கள் ரூ.2 கோடியே 5 இலட்சம் செலவில் மீளத் திறக்கப்பட்டு அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.
- ★ இந்துத் திருமணங்கள் கட்டாயப் பதிவுக்குட்படுத்தப்பட்டு 15.10.2007இல் அரசாணை பிறப்பிக்கப்பட்டு 22.10.07 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

★ ★ ★



# செய்தித் துறையின் சிறப்பான பணிகள்

திரு. **பரிதி இளம்வழுதி** அவர்கள்
மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்

செய்தித்துறை

**தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள்**

★ 2005 மற்றும் 2006ஆம் ஆண்டுகளுக்கான திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தேர்வுபெற்ற திரையுலகக் கலைஞர்களுக்கு, 5 பவுன் தங்கப்பதக்கம், ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்கிச் சிறப்பித்தார்கள்.

★ சிறந்த திரைப்படத்திற்கு முதல் பரிசு ரூ.2 இலட்சம், இரண்டாம்பரிசு ரூ.1 இலட்சம், மூன்றாம் பரிசு ரூ.75ஆயிரம், சிறப்புப்பரிசு ரூ.75ஆயிரம் மற்றும் பெண்களைப்பற்றி சிறந்தமுறையில் சித்தரிக்கும் திரைப்படத்திற்கு ரூ.1.25 இலட்சம் வழங்கப்பட்டது.

**சின்னத்திரை விருதுகள்**

★ சிறந்த சின்னத்திரை தமிழ்த்தொடர்களுக்கும், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக்கலைஞர்கள் ஆகியோருக்கும் அரசு விருதுகள் 2006ஆம் ஆண்டு முதல் முதன்முறையாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு, 14 சின்னத்திரைத்தொடர்கள் தேர்வுக்கு வரப்பெற்றுள்ளன.

**சண்டைக்காட்சியில் நடிக்கும்போது உயிரிழக்க நேரிட்டால் நிதியுதவி**

★ சண்டைக்காட்சியில் நடிக்கும்போது உயிரிழந்த திரு.லோகநாதன் என்பவரின் குடும்பத்திற்கு ரூ.1 இலட்சம் வழங்கப்பட்டது.

★ இராஜாஜி மண்டபத்தில் படப்பிடிப்பிற்கான கட்டணம் குறைவாக வசூலிக்க ஆணையிடப்பட்டதால் படப்பிடிப்புகள் அதிகரித்துள்ளன. அதனால் அரசுக்கு வருவாய் அதிகரித்துள்ளது.

★ சின்னத்திரை (தொலைக்காட்சித் தொடர்) படப்பிடிப்புக் கட்டணம் திரைப்படப் படப்பிடிப்புக் கட்டணத்தில் பாதியாகக் குறைக்கப்பட்டு வசூலிக்கப்படுவதால் தொலைக்காட்சித் தொடர்கள் அதிக அளவில் தயாரிக்கப்பட்டுச் சின்னத்திரையில் ஒளிபரப்பப்படுகின்றன.



தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் வழங்கும் விழா. (16.10.2007)

**எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்**

★ எம்.ஜி.ஆர். திரைப்பட நகரிலுள்ள குளிர்சாதன படப்பிடிப்புத் தளம் சீரமைப்புப் பணிகளுக்காக ரூ.1.43 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

★ 2007–08 ஆம் ஆண்டு பகுதி–II திட்டத்தின் கீழ் ரூ.70 இலட்சம் செலவில் ஒளிப்பதிவுப் பிரிவில் ஏரிஃப்ளக்ஸ் 35 மி.மீ. ஒளிப்பதிவுக்கருவி மேம்படுத்தப்பட்டுள்ளது. மேம்பட்ட டிஜிட்டல் ஒளிப்பதிவுக்கருவிகள் மற்றும் உதிரி பாகங்கள் கொள்முதல் செய்து நிறுவப்பட்டுள்ளது.

★ மாணவர்கள் படப்பிடிப்புத் தளம் ரூ.18 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டு கூடுதல் ஒளி வசதியுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது. தரமணியில் உள்ள எம்.ஜி,ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் 16.10.2007 முதல் எம்.ஜி,ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் எனப் பெயர் மாற்றம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

## நினைவகங்கள்

**மீண்டும் கண்ணகி சிலை திறப்பு**

★ ரூ.4.90 இலட்சம் செலவில் சென்னை காமராசர் சாலை, மெரினா கடற்கரையில் கண்ணகி சிலை அகற்றப்பட்ட அதே இடத்தில் மீண்டும் நிறுவப்பட்டது.

**நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு சிலை**

★ ரூ.8.95 இலட்சம் செலவில் சென்னையில் நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அவர்களுக்கு பீடத்துடன் கூடிய முழு உருவ வெண்கலச் சிலை நிறுவப்பட்டது.

**ம.பொ.சி. அவர்களுக்கு சிலை**

★ சென்னையில் "தலைநகர் காத்த தமிழ்ச் செல்வர்'' ம.பொ.சிவஞானம் அவர்களுக்கு, முழு உருவ வெண்கலச் சிலை நிறுவ ரூ.6,24,400 நிதி அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**திருவள்ளுவர் மையம்**

★ ரூ.4 இலட்சம் செலவில் கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலையின் அருகில் அமையவுள்ள திருவள்ளுவர் மையத்தில் திருக்குறள் ஆய்வு நூல்கள், மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறளின் படிகள், புத்தகங்கள் வாங்கி வைப்பதற்கும் அலமாரிகள் மற்றும் மேசை, நாற்காலிகள் வாங்கவும் நிதி அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**நினைவகங்கள் சீரமைப்பு**

★ 2006–07ஆம் நிதியாண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் அண்ணா நினைவு இல்லம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மூதறிஞர் இராஜாஜி நினைவு இல்லம், நாமக்கல் மாவட்டத்தில் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் நினைவு இல்லம், தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணி மண்டபம், திருநெல்வேலி மாவட்டத்தில் மாவீரன் பூலித் தேவன் சிலை, தூத்துக்குடி மாவட்டத்தில் வ.உ.சிதம்பரனார் இல்லம், பாரதியார் மணிமண்டபம், பாரதியார் இல்லம்,



தமிழக அரசின் சார்பில் மதுரையில் அமைக்கப்பட்டுள்ள
பாவாணர் மணிமண்டபத்தை
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திறந்துவைத்தார். (30.10.2007)

வீரன் அழகு முத்துக்கோன் மணி மண்டபம் மற்றும் வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவுப்பூங்கா, திருச்சி மாவட்டத்தில் வ.வே.சுப்பிரமணியம் நினைவு இல்லம், கன்னியாகுமரி மாவட்டத்தில் காந்தி நினைவு மண்டபம், பெருந்தலைவர் காமராஜர் மணி மண்டபம், பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம் மணி மண்டபம் மற்றும் சதாவதானி செய்குதம்பி பாவலர் நினைவு மண்டபம், ஈரோடு மாவட்டத்தில் தந்தை பெரியார்–அண்ணா நினைவகம், மதுரை மாவட்டத்தில் தியாக சீலர் கக்கன் மணி மண்டபம், சிவகங்கை மாவட்டத்தில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணி மண்டபம், மருதுபாண்டியர் நினைவு மண்டபம் மற்றும் கவியரசர் கண்ணதாசன் மணி மண்டபம் ஆகியன ரூ.26.23 இலட்சம் செலவில் சீரமைத்து மேம்படுத்தப்பட்டுள்ளன.

★ 2007–08ஆம் நிதியாண்டில் கேரள மாநிலம் வைக்கத்தில் தந்தை பெரியார் நினைவகம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம், நாகப்பட்டினம் மாவட்டத்தில் தில்லையாடி வள்ளியம்மை நினைவகம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் திருப்பூர் குமரன் நினைவகம் மற்றும் பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி மணிமண்டபம், சென்னையில் காந்தி அருங்காட்சியகம், தியாகிகள் மணிமண்டபம், மகாகவி பாரதியார் நினைவு இல்லம் மற்றும் மொழிப்போர்த் தியாகிகள் மணிமண்டபம் ஆகியன ரூ.43.45 இலட்சம் செலவில் சீரமைக்கப்பட்டுள்ளன.

**சென்னை கலைவாணர் அரங்கம் சீரமைப்பு**

★ சென்னை கலைவாணர் அரங்கத்தில் குளிர்பதனக் கருவியை (AC Plant) பழுதுபார்த்துச் சீரமைக்க ரூ.16.50 இலட்சம் செலவில் நிதி அனுமதிக்கப்பட்டு பணிகள் நிறைவேற்றப்பட்டன.

★ சென்னை கலைவாணர் அரங்கத்தில் சிறப்புத் திரைப்படக் காட்சி (Preview Show) நடத்த அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டது.

**இராஜாஜி மண்டபம் சீரமைப்பு**

★ "புராதனச் சின்னங்கள்'' பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் சென்னையிலுள்ள இராஜாஜி மண்டபத்தைப் புதுப்பிக்கும் பணிகளுக்காக ரூ.66 இலட்சம் நிதி அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டுப் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

**வள்ளுவர் கோட்டம் மற்றும் காமராசர் நினைவு இல்லம் சீரமைப்பு**

★ சென்னை வள்ளுவர் கோட்டம் மற்றும் காமராசர் நினைவு இல்லம் ஆகியவற்றிற்கான சீரமைப்புப் பணிகளுக்காக முறையே ரூ.60 இலட்சம் மற்றும் ரூ.2.50 இலட்சம் நிதி அனுமதிக்கப்பட்டுப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**எம்.ஜி.ஆர். அருங்காட்சியகம்**

★ சென்னையிலுள்ள டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவிடத்தில், கட்டி முடிக்கப்பட்டு சுமார் 3 ஆண்டுகாலமாகத் திறக்கப்படாமல் இருந்த "எம்.ஜி.ஆர். அருங்காட்சியகம்" 30.3.2007 அன்று திறந்து வைக்கப்பட்டது.

**பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் நூற்றாண்டு விழா**

★ மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 100ஆவது ஜெயந்தி விழாவிற்காக அரசின் சார்பில் ரூ.50 இலட்சம் செலவில், அன்னாரது நினைவு இல்லம் புதுப்பிக்கப்பட்டு, நூற்றாண்டு விழா தோரண வாயில் மற்றும் அணையா விளக்கு அமைக்கப்பட்டு, அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. பால்குடம் மற்றும் முளைப்பாரி எடுக்கும் இடத்தில் மிக அத்தியாவசமாகத் தேவைப்படும் புதிய கட்டடம் கட்ட ரூ.10 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து பணிகள் நிறைவேற்றப்பட்டன.

**நினைவு மண்டபங்கள் திறப்பு**

★ தூத்துக்குடி மாவட்டம் கவர்ணகிரியில் சுதந்திரப் போராட்ட வீரன் சுந்தரலிங்கம் நினைவகம், வல்லநாடு என்ற இடத்தில் சுதந்திரப் போராட்ட வீரன் வெள்ளையத் தேவன் நினைவகம், எட்டயபுரத்தில் அமுதகவி உமறுப்புலவர் நினைவகம் ஆகியன திறந்து வைக்கப்பட்டுள்ளன. மதுரை மாவட்டத்தில் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் மணிமண்டபம், பரிதிமாற் கலைஞர் நினைவு இல்லம் மற்றும் திருவாரூர் மாவட்டம் உத்தமதானபுரத்தில் தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. நினைவில்லம் ஆகையவை திறந்து வைக்கப்பட்டுள்ளன.

**செய்தி வெளியீடு**

★ 893 செய்தி வெளியீடுகளும், 133 செய்திக் குறிப்புகளும், 747 புகைப்படம் / ஒளிப்பதிவு / செய்தி சேகரிப்புக் கடிதங்களும் அனுப்பப்பட்டுள்ளன.

## பத்திரிகையாளர் நலன்

**பத்திரிகையாளர் ஓய்வூதியம்**

★ பத்திரிகைத்துறையில் 20 ஆண்டுகள் பணியாற்றி பணியிலிருந்து ஓய்வுபெற்று, நலிவுற்ற நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியம், இவ்வரசு பொறுப்பேற்றபிறகு ரூ.3,000லிருந்து ரூ.4,000ஆக உயர்த்தப்பட்டு 19 பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது இத்திட்டத்தின் கீழ் 62 நபர்கள் பயனடைந்து வருகின்றனர்.

**பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம்**

★ 1986ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெற்று இயற்கை எய்திய பத்திரிகையாளரின் துணைவியாருக்கு வழங்கப்பட்டு வந்த 'பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம்' ரூ.1,500லிருந்து ரூ.2,000ஆக உயர்த்தப்பட்டு, தற்போது 17 நபர்களுக்கு அளிக்கப்பட்டுவருகிறது.

**பத்திரிகையாளர் குடும்ப உதவிநிதி**

★ பத்திரிகைத் துறையில் ஆசிரியர், உதவி ஆசிரியர், நிருபர், புகைப்படக்காரர், மற்றும் பிழை திருத்துபவர் பணிகளில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து பணியில்



திருவாரூர் மாவட்டம், உத்தமதானபுரத்தில் தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சா. அவர்களின் திருவுருவச்சிலையை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கோ.சி. மணி அவர்கள் திறந்துவைத்தார். மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.உ.மதிவாணன் அவர்கள், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.கோ.சந்தானம், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.என்.சந்திரசேகரன்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர். (27.4.2008)

இருக்கும்போது இயற்கை எய்தினால் அவர்களுடைய குடும்பங்களுக்குப் பத்திரிகையாளர் குடும்ப உதவிநிதி மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

★ பத்திரிக்கையாளர் நலன் கருதி, 20 ஆண்டுகள் பணிபுரிந்தால்தான் குடும்ப உதவி நிதி வழங்கப்படும் என்பதை மாற்றி, 5 ஆண்டுகள் பணிபுரிந்தால் ரூ.50 ஆயிரம் எனவும், 10 ஆண்டுகள் பணிபுரிந்தால் ரூ.1 இலட்சம் எனவும், 15 ஆண்டுகள் பணிபுரிந்தால் ரூ.1.50 இலட்சம் எனவும், 20 ஆண்டுகள் பணிபுரிந்தால் ரூ.2 இலட்சம் எனவும் வழங்க இவ்வரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 43 பத்திரிகையாளர்களின் வாரிசுதாரர்களுக்கு பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு 14 நபர்களுக்குப் பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி வழங்கப்பட்டுள்ளது.

**பத்திரிகையாளர் மருத்துவ சிகிச்சைக்கு நிதியுதவி**

★ இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு நான்கு பத்திரிகையாளர்களின் மருத்துவச் சிகிச்சைக்கு நிதியுதவியும், ஒரு பத்திரிகையாளர் மகளின் அறுவை சிகிச்சைக்கு நிதியுதவியும் என மொத்தம் ரூபாய் நான்கு இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**பத்திரிகையாளர்களுக்கு அரசு வாடகைக் குடியிருப்பு வசதி**

★ பத்திரிகையாளர்களுக்குத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மூலம் சிறப்பு அடிப்படையில் அரசு வாடகைவீடு ஒதுக்கப்பட்டு வருகிறது. இதுவரை தமிழகம் முழுவதும் 166 பத்திரிகையாளர்களுக்கு வாடகைக் குடியிருப்புகள் ஒதுக்கப்பட்டுள்ளன. 2007–08ஆம் ஆண்டில் 25 பத்திரிகையாளர்களுக்கு வாடகை குடியிருப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

**பத்திரிகையாளர்களுக்கு வீட்டுமனை வசதி**

★ பத்திரிகையாளர்களுக்கு வீட்டுமனை வசதி வழங்கும் திட்டத்தின் கீழ் 11 மாவட்டங்களில் 428 பத்திரிகையாளர்களுக்கு வீட்டுமனை வழங்கப்பட்டுள்ளது.

**பத்திரிகையாளர் நல நிதியம்**

★ கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவச் சிகிச்சை மேற்கொள்ளும் பத்திரிகையாளர்களுக்கு மருத்துவ நிதி உதவியாக ஒருவருக்கு ரூ.50,000த்திற்கு மிகாமல் நிதி உதவி அளிக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்பட்டு வைப்பீடு செய்யப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து மேற்கண்ட தொகை வழங்கப்படுகிறது.

**பத்திரிகையாளர் அறைக்கு இணையதள வசதி**

★ ஒரே நேரத்தில் 20 பத்திரிகையாளர்கள் தங்கள் நிறுவனங்களுக்குச் செய்திகளை / புகைப்படங்களை மின் அஞ்சல் அனுப்புவதற்கு அகண்டகற்றை கம்பியில்லா வலைத்தள வசதி செய்து தரப்பட்டுள்ளது. 16.6.2007 அன்று மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்களால் இணையதள வசதி தொடங்கிவைக்கப்பட்டது.

**செய்தியாளர் அங்கீகார அடையாள அட்டை**

★ செய்தியாளர் அங்கீகார அட்டை சென்னையில் 396 செய்தியாளர்களுக்கும், மற்ற மாவட்டங்களில் 82 செய்தியாளர்களுக்கும் நடப்பாண்டில் வழங்கப்பட்டுள்ளது.

**பத்திரிகையாளர்களுக்கு இலவசப் பேருந்து பயண அட்டை**

★ சென்னையில் 300 பத்திரிகையாளர்களுக்கும், மாவட்டங்களில் 946 பத்திரிகையாளர்களுக்கும் இலவசப் பேருந்து பயண அட்டை நடப்பாண்டில் வழங்கப்பட்டுள்ளது.

**காலமுறை இதழ் செய்தியாளர்களுக்குச் செய்தியாளர் அட்டை**

★ 2008ஆம் ஆண்டிற்கு சென்னையில் 180 காலமுறை இதழ் செய்தியாளர்களுக்குச் செய்தியாளர் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

**புகைப்படப் பிரிவு**

★ மின் ஆளுமை அறிமுகத்திற்குப் பின்னர், தற்போது புதிய வகை ஒளிப்பதிவுக்கருவி மூலம் வண்ணப் புகைப்படங்கள் எடுக்கப்பட்டு, அவை மின்

அஞ்சல் மூலம் உடனுக்குடன் ஏறக்குறைய 200 ஊடகங்களுக்கு தலைமையிடத்திலிருந்து ஒரே நேரத்தில் அனுப்பி வைக்கப்படுகிறது. இணையதள வசதியுடன் கூடிய 3 புதிய மடிக்கணிணிகள் வாங்கப்பட்டு, நிகழ்ச்சிகள் நடைபெறும் இடத்திலிருந்தே புகைப்படங்கள் ஊடகங்களுக்கு உடனுக்குடன் அனுப்பப்பட்டு வருகிறது.

★ நிகழ்ச்சிகளில் எடுக்கப்படும் படங்கள் அனைத்தும் குறுந்தகட்டில் பதிவு செய்யப்பட்டு அவை எதிர்காலப் பயன்பாட்டிற்கு ஏதுவாகப் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

**சிறப்பு விழாக்கள்**

★ கௌதம புத்தர் அவர்களின் 2550ஆம் மகாபரிநிர்வாண நிறைவுஆண்டு விழாவினை நாடு முழுவதும் ஓராண்டு காலம் நடத்துவதற்காக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டு விழா கொண்டாடப்பட்டது.

★ கன்னியாகுமரி மாவட்டம் தாய்த் தமிழகத்தோடு இணைந்து 31.10.2006 அன்று 50 ஆண்டுகள் நிறைவு பெற்றதையொட்டி, கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு சார்பில் பொன்விழா கொண்டாடப்பட்டது.

★ சுதந்திரப்போராட்ட வீரர் திரு.பகத்சிங் அவர்களின் 100ஆவது பிறந்த நாள் விழா ஓராண்டிற்கு சென்னை மற்றும் பிற மாவட்டங்களின் தலைநகரங்களில் கொண்டாடப்பட்டது.

★ பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம் அவர்களின் 100ஆவது பிறந்த நாள் விழா 21.8.2007 அன்று சென்னை, கோவை மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் கொண்டாடப்பட்டது.

★ பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 100ஆவது பிறந்த நாள் விழா 30.10.2007 அன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் கொண்டாடப்பட்டது.

★ திருவள்ளுவர் திருநாள் 16.1.2008 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் கொண்டாடப்பட்டது.

## பொருட்காட்சி

★ அரசின் கொள்கைகள், சாதனைகள், திட்டங்கள் முதலியவற்றை மக்கள் எளிதாக அறிந்து கொள்ள பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய அரசுப் பொருட்காட்சி கோவை, மதுரை, சேலம், ஆகிய மாவட்டத் தலைநகரங்களில் ஆண்டுதோறும், திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையும் நடத்தப்பட்டு வருகிறது.

★ இந்த அரசு பொறுப்பேற்றபின் (2006ஆம் ஆண்டு தேர்தலை முன்னிட்டு அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படவில்லை) 2007ஆம் ஆண்டு நான்கு பொருட்காட்சிகள் கோவை, மதுரை, திருநெல்வேலி, வேலூர் மாவட்டங்களில் நடத்தப்பட்டதில் ரூ.1.84 கோடி அரசுக்கு வருவாய் கிடைத்துள்ளது.

★ புதுடெல்லியில் நடைபெறும் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் தமிழ்நாடு அரசின் சார்பில் பங்கேற்று அரசின் திட்டங்கள், சாதனைகள், தொழில் முதலீட்டாளர்களுக்கான அரசின் புதிய தொழிற்கொள்கைகள் மற்றும் தகவல்

தொழில்நுட்பத்துறை குறித்த விளக்கங்கள், தகவல்கையேடுகள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பயன்பெறும் வகையில் வழங்கப்பட்டது.

★ புதுடெல்லியில் நடைபெறும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் மதநல்லிணக்கத்தை வலியுறுத்தி ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் மலர்ப்பேரணி விழாவில் தமிழக அரசின் சார்பில் கலந்து கொண்டு கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.



★ சென்னை காமராசர் சாலையில் நடைபெற்ற குடியரசுநாள் விழாவில் 2007ஆம் ஆண்டு 19 ஊர்திகளும், 2008ஆம் ஆண்டு 20 அலங்கார ஊர்திகளும் பங்கேற்று நடத்தப்பட்டது. இந்த இரண்டு ஆண்டுகளும் செய்தி மக்கள் தொடர்புத்துறை சிறந்த அலங்கார ஊர்தி வடிவமைத்ததற்காக மேதகு தமிழக ஆளுநர் அவர்களிடம் பரிசினைப் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

★ சென்னை தீவுத் திடலில் ஜனவரி மாதம் முதல் மார்ச் இறுதி வரை மூன்று மாதங்கள் நடைபெற்ற சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறை பங்கேற்று, அரங்கத்தினை மிகச் சிறப்பாக அமைத்திருந்தது.

**பல்துறை பணிவிளக்க முகாம் மற்றும் கண்காட்சி**

★ இவ்வரசு பொறுப்பேற்ற பின் அரசின் திட்டங்கள் மற்றும் கொள்கைகள் குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்த, பல்துறை பணிவிளக்க முகாம் மற்றும் கண்காட்சிகள் ரூ.60 இலட்சம் செலவில் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்புற நடத்தப்பட்டன.

**தமிழரசு**

★ 24 சிறப்பு வெளியீடுகள் வெளியிடப்பட்டுள்ளன. 77,500 சந்தாதாரர்களுக்கு மாதந்தோறும் தமிழரசு இதழ்கள் அழகுற அச்சிட்டு அனுப்பப்பட்டு வருகிறது.

★ 2007 ஜூன் திங்கள் 3ஆம் நாள் முதல் "அரசுச்செய்தி" சுவரொட்டிகள் 15 நாட்களுக்கு ஒரு முறை 20,000 பிரதிகள் அச்சிட்டு தமிழகம் முழுவதும் அனுப்பப்பட்டு, ஒட்டி விளம்பரம் செய்யப்படுகிறது.

★ இரண்டாண்டுகளில் ரூ.114 இலட்சம் செலவில் நவீன இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன.

★ ★ ★



# தொன்மைச் சிறப்புமிகு நகரங்கள் மற்றும் பல்வேறு நகரங்களின் மேம்பாட்டிற்கு மானியம்

திரு. **பரிதி இளம்வழுதி** அவர்கள்
மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்

**நகர் ஊரமைப்புத் துறை**

**நகர் ஊரமைப்பு**

✶ டிசம்பர் 2004–இல் ஏற்பட்ட ஆழிப் பேரலையால் (சுனாமியால்) பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் குடியிருப்புக்கான மனைப்பிரிவுகளுக்கு ஒட்டுமொத்த விதிவிலக்கு அளித்து 24.6.2006 அன்று ஆணையிடப்பட்டுள்ளது.

✶ தொன்மைச் சிறப்புமிகு நகரங்களுக்கு மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் 2006–07 ஆம் ஆண்டில் நாகூர், கங்கைகொண்ட சோழபுரம் மற்றும் பிச்சாவரம் ஆகிய நகரங்களில் திட்டங்கள் செயல்படுத்த ஒவ்வொரு நகருக்கும் ரூ.50 இலட்சம் வீதம் மானியத் தொகை வழங்கப் பட்டுள்ளது. பவானி நகருக்கு ரூ.50 இலட்சமும், சித்தன்னவாசல் நகருக்கு ரூ.42.25 இலட்சமும் மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது. இடைக்காட்டூர் தொன்மைச் சிறப்புமிகு நகருக்கு இரண்டாவது தவணைத் தொகை ரூ.8 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. ஐந்து நவதிருப்பதி கோயில்களில் திட்டங்கள் செயல்படுத்த தூத்துக்குடி மாவட்ட ஆட்சியருக்கு ரூ.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 2007–08 ஆம்ஆண்டில் திருவள்ளூர் நகருக்கு ரூ.50 இலட்சமும் மற்றும் மருதூருக்கு ரூ.2,32,500 தொகை மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

✶ போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்த 75 சதவிகித மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் 2006–07 ஆம் ஆண்டில் விழுப்புரம் நகருக்கு ஒதுக்கப்பட்ட மொத்தம் ரூ.25 இலட்சம் மானியத் தொகை இரண்டு தவணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர், திருப்பூர், தருமபுரி, பெரம்பலூர், புதுக்கோட்டை, திருமங்கலம், கிருஷ்ணகிரி, தேனி அல்லி நகரம் மற்றும் மேலூர் ஆகியவற்றிற்கு முதல் தவணைத் தொகையாக ஒவ்வொரு நகருக்கும் ரூ.8 இலட்சம் மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது. 2007–08ஆம் ஆண்டில் கோவில்பட்டி நகராட்சிக்கு ரூ.25 இலட்சம் மானியமாக வழங்க நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.




மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள், சென்னையில் நகர் ஊரமைப்புத்துறை சார்பில், "நகர்ப்புற வளர்ச்சியைத் திட்டமிடுதலும், முறைப்படுத்துதலும்" என்ற கருத்தரங்கை துவக்கி வைத்தார். (4.12.2007)

★ உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டங்களைச் செயல்படுத்தத் தொடக்க முதலீடாகத் தூத்துக்குடி நகருக்கு ரூ.25 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. காரைக்குடி நகருக்கு 50 சதவிகித மானியத் தொகையில் ரூ.10.46 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மானியத் தொகையினை 50 சதவிகிதத்திலிருந்து 75 சதவிகிதமாவும் அதிகபட்ச மானியம் ரூ.20 இலட்சத்தினை ரூ.30 இலட்சமாகவும் உயர்த்தி 13.02.2007 அன்று ஆணையிடப்பட்டுள்ளது.

★ பெரம்பலூர் நகரில் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் ரூ.27.50 இலட்சம் செலவில் பூங்காவை மேம்படுத்த சிறப்பு இனமாக 100 சதவிகித மானியத் தொகை நகர் ஊரமைப்பு நிதியிலிருந்து விடுவிக்க அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு அதில் பகுதித் தொகையாக ரூ.15 இலட்சத்திற்கு நிருவாக ஒப்புதல் மற்றும் நிதி விடுப்பு ஆணை 24.3.08இல் வழங்கப்பட்டுள்ளது.

★ நகர் ஊரமைப்புத் துறைக்குப் புதியதாக மூன்று மண்டல அலுவலகங்களைத் தோற்றுவிக்க அரசு ஆணையிட்டுள்ளது. இதற்கென ரூ.5 இலட்சம் பகுதி–II திட்டம் (2007–08)ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்படி திருச்சி மண்டல அலுவலகம் மூன்றாகப் பிரிக்கப்பட்டு புதியதாக தஞ்சாவூர் மற்றும் பெரம்பலூர் மண்டலமும் வேலூர் மண்டலத்தை இரண்டாகப் பிரித்து புதியதாக தருமபுரி மண்டலமும் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

* பொதுமக்கள் தங்கள் வரைபட ஒப்புதலைக் குறுகிய காலத்தில் அதிக சிரமமின்றிப் பெற ஏதுவாக மின்னணு ஆளுகை முறையை துறையின் நடவடிக்கைககளில் எல்காட் நிறுவன உதவியுடன் செயல்படுத்த ஏற்கனவே அரசு ரூ.10 இலட்சம் வழங்கியுள்ளது. மேலும் கடந்த இரண்டாண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் பகுதி–II திட்டத்தின் கீழ் முறையே ரூ.10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ரூ.40 இலட்சம் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை எல்காட் நிறுவனத்திற்கு முன்பணமாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான அமைப்புத் தேவை அறிக்கை (System requirement study) தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான மென்பொருள் தயாரிக்கும் பணி எல்காட் நிறுவனத்தில் நடைபெற்று வருகிறது.

* புவியியல் தகவல் முறை (GIS), தொலையுணர்வு / வான்வழிப் புகைப்படங்கள் போன்ற நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பெரம்பலூர் கூட்டு உள்ளூர் திட்டப் பகுதிக்கு முழுமைத் திட்டம் தயாரிக்கும் திட்டத்திற்கு பகுதி–II திட்டம் (2007–08)ன் கீழ் ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தை ஒன்பது மாதங்களில் நிறைவேற்ற இத்துறை வான்வழி பயன்பாட்டு மையம் (Space Application Centre, ISRO) ஆமதாபாத்–உடன் 31.1.2008 அன்று ஒப்பந்தம் செய்து பணி நடைபெற்று வருகிறது.

* 2006–07 மற்றும் 2007–08ஆம் ஆண்டுகளில் முறையே ஒவ்வொரு ஆண்டும் ஆறு நகரங்களுக்கு முழுமைத் திட்டங்கள் தயாரிக்க / மறுஆய்வு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அதன்படி திட்டங்கள் தயாரிக்கப்பட்டு இலக்கு எட்டப்பட்டுள்ளது

* 2006–07 மற்றும் 2007–08ஆம் ஆண்டுகளில் முறையே ஒவ்வொரு ஆண்டும் 100 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்க/ மறுஆய்வு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அதன்படி திட்டங்கள் தயாரிக்கப்பட்டு இலக்கு எட்டப்பட்டுள்ளது.

* நேரடி நியமனம் மூலம் 8 களப்பணி உதவியாளர்கள், 2 வாகன ஓட்டுநர்கள், 14 அளவர்/உதவி வரைவாளர்கள், 2 சுருக்கெழுத்து தட்டச்சர்கள், 7 தட்டச்சர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 8 பேர்கள் கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்**
**தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் – III**

* சென்னைப் பெருநகர் பகுதிகளில் பெருகி வரும் போக்குவரத்துப் பிரச்சினைகளை குறைப்பதற்கு, உலக வங்கியின் உதவியுடன் சுமார்

ரூ.675 கோடி மதிப்பீட்டில் 2010ஆம் ஆண்டு வரையிலான ஓர் ஐந்தாண்டுத் திட்டத்தை தமிழ்நாடு அரசும் / சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமமும் மேற்கொண்டுள்ளது. இதில் நகர்ப்புறச் சாலைகள் மற்றும் இரயில் வழி தொகுப்புகளில் உள்ள பெரிய தடை முடுக்குகளை நீக்குவதற்கு மத்திய கால நடவடிக்கையின் நோக்கமாக சென்னைப் பெருநகர் பகுதியின் புறவெளியில் உள்ள 13 பெருநகர அதிவேக சாலைகளின் இணைப்புகளை பலப்படுத்துதல் மற்றும் அகலப்படுத்துதல், மேல்வழிப்பாதைகள் மற்றும் சுரங்க வழிப்பாதைகள் அமைப்பதன் மூலம் 6 இரயில் சந்திக்கடவுகளை நீக்குதல், அண்ணாசாலையில் 2 இடங்களிலும் பெரியார் ஈ.வெ.ரா. சாலையில் ஒரு இடத்திலும் பிரிவு பாலங்களை கட்டுதல், சாலைப் பாதுகாப்பு மற்றும் காற்றின் தரத்தை உயர்த்துவதுடன் பாத சாரிகளுக்கான சுரங்க வழிப்பாதைகள் 3 அமைப்பது, போக்குவரத்து கட்டுப்பாட்டு சாதனங்களை நிறுவுதல் மற்றும் செயலாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகும். பெரும்பாலான திட்டங்களுக்கு விரிவான தொழிற் நுட்பத் திறனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அவைகள் பல்வேறு முன்னேற்றக் கட்டங்களில் உள்ளன.

✶ அண்மையில் சென்னைக்கான 18 மாத கால ஒருங்கிணைந்த போக்குவரத்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வானது சென்னைப் பெருநகர் பகுதி முழுமைக்கும் இயக்குகின்ற திட்டத்தை வழங்குவதுடன், அடுத்த 20 ஆண்டிற்குண்டான சாலை மற்றும் போக்குவரத்து உள் கட்டமைப்பில் நீதிப்படியான முதலீட்டை செய்வது பற்றி தெளிவாக சுட்டிக்காட்டும்.

**சென்னைப் பெருநகர் பகுதியின் இரண்டாம் முழுமைத் திட்டம் வரைவு தயாரித்தல்**

✶ பொதுமக்களுக்கு வரைவு முழுமைத் திட்டம்–IIன் ஆங்கிலம் மற்றும் தமிழ் பிரதிகள் மற்றும் இவற்றின் சுருக்கப் பிரதிகளும் வெளியிடப்பட்டது. மேலும் இப்பதிப்புகளை இலவசமாக காணும் / உபயோகிக்கும் வகையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும இணைய தளத்திலும் வெளியிடப்பட்டது. சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், சென்னைப் பெருநகரப் பகுதிகளில் 14 இடங்களில் கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்தியது. கட்டடம் கட்டுபவர்கள் சங்கம் மற்றும் இத்துறையில் ஆர்வம் உள்ளவர்களுடன் கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. பொதுமக்களுடன் மேற்கொண்ட கலந்தாய்வுக் கூட்டத்தின் நடப்புகள் வளர்ச்சிக் குழுமத்தின் இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. பல்வேறு மறுப்புகள் மற்றும் ஆலோசனைகள் பெறப்பட்டு, அரசின் கருத்துப்படி, சில மாற்றங்கள் செய்யப்பட்டு, இரண்டாம் முழுமைத் திட்ட வரைவு அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம்**

✶ சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம், சென்னைப் பெருநகரில் உள்கட்டமைப்பு வசதிகளை வளர்ச்சி அடைய தயாரிக்கப்பட்ட ஒரு முதலீட்டுத் திட்டமாகும். இத்திட்டமானது, ஒவ்வொரு துறைக்கும் தேவையான உள்கட்டமைப்புகளைக்

கண்டறிவதும் மற்றும் இவற்றிற்கு முன்னுரிமை அளிப்பதும் சம்மந்தப்பட்ட துறைகள் / முகமைகள் / உள்ளாட்சி நிறுவனங்கள் ஆகியவற்றால் நடைமுறைப்படுத்தப்படுவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். 2007ஆம் ஆண்டு வரை ரூ.4,202 கோடி மதிப்பில் உள்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. 2007–08இல் இத்திட்டத்திற்கு ரூ.2,154.69 கோடி முதலீடு வகுக்கப்பட்டு இத்திட்டங்கள் உரிய முகமைகள் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

**பெருந்திரள் துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் நிலை–II விரிவாக்கம் வேளச்சேரியிலிருந்து புனித தோமையர் மலை வரை**

* திருமயிலையிலிருந்து வேளச்சேரி வரையிலான துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் நிலை–II ரூ.733.39 கோடி மதிப்பீட்டில் முழுமையாக முடிக்கப்பெற்று நவம்பர் 2007 முதல் செயல்படத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்திற்காக தமிழ்நாடு அரசு இதுவரை ரூ.481.38 கோடிகள் விடுவித்துள்ளது. மேலும் ரூ.496 கோடி செலவில் 5 கி.மீ. தூரத்திற்கு புனித தோமையர் மலை வரை நீட்டிப்பு செய்ய மைய அரசை அனுமதி கோரியது. தமிழக அரசும் மைய அரசும் சேர்ந்து இத்திட்டத்தைச் செயல்படுத்த தேவைப்படும் நிதியினை 2 : 1 என்ற விகிதாச்சாரத்தில் மூன்றாண்டு காலத்திற்குள் முடிக்க உத்தேசித்துள்ளது. இத்திட்டத்திற்கான மதிப்பிட்ட செலவினம் ரூ. 496 கோடிக்கு நிருவாக ஒப்புதலை அரசு அறித்துள்ளது. திட்ட செயல்பாடு காலம் 3 ஆண்டுகளாகும். திட்டப்பணிகள் 2008–09ஆம் ஆண்டில் துவங்கப்பட உள்ளது.

**வெளிவட்டச்சாலை**

* பெருநகரத்தில் உள்ள போக்குவரத்து நெரிசலை பெரிதும் குறைக்கும் நோக்குடன் வெளிவட்டச் சாலை அமைக்கும் திட்டம் ஒன்று வரையப்பட்டது. தென் சென்னையிலுள்ள வண்டலூரையும் வட சென்னையில் உள்ள மீஞ்சூரையும் இணைக்கும் வகையில் 62 கி. மீட்டர் தூரத்திற்கு வெளிவட்டச் சாலையை மேம்படுத்தும் திட்டம் 6 வழிச்சாலையும், இருபுறமும் பணி வழிகள் கொண்டதாக இருக்கும். விரிவான செய்யத்தக்கமைக்கான பரிந்துரையின்படி, நிலத்தின் கிரயத்தையும் சேர்த்துத் திட்ட மதிப்பீடு ரூ.900 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

★ ★ ★



# குடும்ப அட்டை பெற்றுள்ள அனைத்துக் குடும்பத்தினருக்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.2 என்ற விலையில் தரமான அரிசி

திரு. **எ.வ.வேலு** அவர்கள்
மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர்

**உணவுத்துறை**

### ஒரு கிலோ அரிசி ரூ.2க்கு வழங்கும் திட்டம்




- ✶ தமிழக மக்கள் அனைவருக்கும் குறைந்த விலையில் தரமான அரிசி வழங்கப்பட வேண்டும் என்ற நோக்குடன் குடும்ப அட்டை பெற்றுள்ள அனைத்துக் குடும்பத்தினருக்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.2 என்ற விலையில் தரமான அரிசி பொது விநியோகத் திட்டத்தின் கீழ் 3.6.2006 முதல் வழங்கப்படுகிறது. 1,85,72,834 குடும்பங்கள் பயன்.

### எரிவாயு இணைப்புடன் இலவச எரிவாயு அடுப்புகள்



- ✶ 11 இலட்சம் ஏழை நடுத்தரக் குடும்பங்களுக்கு 220 கோடி ரூபாய் செலவில் எரிவாயு இணைப்புடன் இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் மேலும் 8 இலட்சம் குடும்பங்களுக்கு 160 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

### சிறப்பு பொது விநியோகத் திட்டம்

- ✶ தமிழ்நாடு அரசின் பொது விநியோகத் திட்டத்தின்படி துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு, பாமாயில், ரவா மற்றும் மைதா ஆகிய பொருட்களை அரசே கொள்முதல் செய்து குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கி வருகிறது.

### சிறப்பு ரோந்துப் படை

- ✶ அண்டை மாநிலங்களுக்கு அரிசி கடத்தப்படுவதைத் தீவிரமாகக் கண்காணித்துத் தடுப்பதற்காக சிறப்பு ரோந்துப் படை அமைக்கப்பட்டு வட்ட வழங்கல் அலுவலர், உதவி ஆணையாளர்கள் ஆகியோருக்கு செல்லிடத் தொலைபேசிகள் வழங்கப்பட்டுள்ளன.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்,
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஊராட்சி ஒன்றியம், சென்னவாரத்தில்
இலவச எரிவாயு இணைப்பு – அடுப்புகளை வழங்கினார். (17.3.2007)

- ✶ 8,88,604 குடும்பங்களுக்குப் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன.
- ✶ 1,54,451 குடும்ப அட்டைகள் போலி குடும்ப அட்டைகள் என உறுதி செய்யப்பட்டு நீக்கம் செய்யப்பட்டன.
- ✶ 20 புதிய வாகனங்கள் மாவட்ட அலுவலர்களுக்கு வழங்கப்பட்டன.
- ✶ மாவட்ட பறக்கும் படைக்கு 16 புதிய வாகனங்கள் வழங்கப்பட்டன.

**அத்தியாவசியப் பொருட்கள் கைப்பற்றுகை**

- ✶ 3,31,287 குவிண்டால் அரிசி, 10,84,309 லிட்டர் மண்ணெண்ணெய், 48,845 லிட்டர் பெட்ரோல், 1,61,887 லிட்டர் டீசல் மற்றும் 34,166 எரிவாயு உருளைகள் ஆகியவை கைப்பற்றப்பட்டன.

**சன்மானம்**

- ✶ பொது விநியோகத் திட்ட அத்தியாவசியப் பொருட்கள் முறைகேடாக திருப்பிவிடப்பட்டு கடத்தப்படுவது பற்றி உரிய நேரத்தில் சரியான தகவல் அளிப்பவர்களுக்கு ரூ.500 சன்மானம் அளிக்கப்படுகிறது. இதுபோன்று போலி குடும்ப அட்டைகள் பற்றி தகவல் அளிப்பவருக்கு சன்மானமாக ரூ.200 அளிக்கப்படுகிறது.

**குடும்ப அட்டைகள் அச்சடித்தலை பரவலாக்குதல்**

* ✶ பிப்ரவரி 2008ஆம் ஆண்டு முதல் குடும்ப அட்டை அச்சிடும் பணி மாவட்ட அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**நியாயவிலைக் கடை திறத்தல்**

* ✶ 73 முழுநேர நியாய விலைக் கடைகளும் 856 பகுதிநேர நியாயவிலைக் கடைகளும் திறக்கப்பட்டுள்ளன.

**அரவாணிகளுக்குக் குடும்ப அட்டைகள் வழங்குதல்**

* ✶ அரவாணிகளிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது விசாரணை மேற்கொண்டு தகுதியின் அடிப்படையில் தற்போது 267 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

**மண்ணெண்ணெய்**

* ✶ மைய அரசு பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய் விலையை லிட்டர் ஒன்றுக்கு ரூ.8.40லிருந்து ரூ.9ஆக உயர்த்தியது. ஆனால் மாநில அரசு பொதுமக்கள் நலன் கருதி விலை உயர்வினை நடைமுறைப்படுத்தாமல் தொடர்ந்து பழைய ரூ.8.40 விலையிலேயே வழங்கி வருகிறது. விலை உயர்விற்குரிய தொகையினை அரசு ஏற்று ஆண்டுக்கு ரூ.43 கோடி மானியமாக வழங்குகிறது.
* ✶ மலைவாழ் பகுதியில் வசித்து வரும் குடும்பங்களின் நலன் கருதி நீலகிரி மாவட்ட மலைப்பகுதிகளுக்கு வழங்கப்படும் கூடுதல் அளவைப் போல் வால்பாறை மலைப்பகுதிக்கும் கூடுதல் மண்ணெண்ணெய் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.
* ✶ ஈரோடு மாவட்டம், தாளவாடி, குத்தியாலத்தூர் மற்றும் பர்கூர் மலைப் பகுதிகளிலுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு கூடுதல் அளவு மண்ணெண்ணெய் வழங்க ஆணையிட்டுள்ளது.
* ✶ புதிய குடும்ப அட்டைகளில் மண்ணெண்ணெய் பெறத் தகுதியுடைய எரிவாயு இணைப்பு இல்லாத மற்றும் ஒரு சிலிண்டர் எரிவாயு இணைப்பு பெற்ற 42.03 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ஒரு லிட்டர் வீதம் 2008ஆம் ஆண்டு பொங்கல் முதல் மாதந்தோறும் மண்ணெண்ணெய் வழங்கவும், மார்ச் 2008 முதல் மேற்படி குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா 2 லிட்டர் வீதம் வழங்க ஆணையிட்டுள்ளது.

**நெல் கொள்முதல்**

* ✶ தமிழக அரசு, விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் காரிஃப் பருவம் 2007–08க்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.50 ஊக்கத்தொகை வழங்கியுள்ளது. இதுவரை நடப்பு பருவம் 10,38,199 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

**நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கைகள்**

* ✶ நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.
* ✶ பல்வேறு நலத்திட்டங்களை முன்மொழிந்து அதன் செயலாக்கத்திற்காக இந்திய அரசின் மானியத்தொகை ரூ.2.67 கோடி மானியமாக பெறப்பட்டுள்ளது.

✶ ✶ ✶



# குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகள்

திரு. **சுப. தங்கவேலன்** அவர்கள்
மாண்புமிகு குடிசை மாற்று வாரியம் (ம)
இடவசதிக் கட்டுப்பாட்டுத்துறை அமைச்சர்

**குடிசை மாற்று வாரியம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத்துறை**

## சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்குக் குடியிருப்புகள்

★ ஆழிப்பேரலைகள் (சுனாமி) மற்றும் எண்ணூர் விரைவு சாலை விரிவாக்கப்பணிகளில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக 1,824 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.31.92 கோடி செலவில் திருவொற்றியூர் பகுதியில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

★ சென்னை நகரில் ஆழிப்பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, 13,000 அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்கும் பணிகள் ரூ.385.06 கோடி செலவில் தொடங்கப்படவுள்ளது.

★ ஆழிப்பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக சென்னையில் 6,218 குடியிருப்புகள் ரூ.82.28 கோடி செலவில் அமைக்கப்பட்டு, 3,718 குடியிருப்புகள் ரூ.49.78 கோடி செலவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

★ தமிழகத்தின் 8 கடலோர மாவட்டங்களில் ஆழிப்பேரலைகளால் பாதிக்கப்படக் கூடிய இடங்களில் வாழும் குடும்பங்களுக்கு 6,391 வீடுகள் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டு 2,107 வீடுகளுக்கான பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

★ ஆழிப்பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்வியல் ஆதாரங்களை மேம்படுத்தும் பொருட்டு ஆசிய வங்கி உதவியுடன், 400 சுயஉதவிக் குழுக்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சிகள் மற்றும் சுய தொழில்கள் தொடங்குதல் போன்ற பணிகளுக்காக ரூ.2.67 கோடி செலவிடப்பட்டுள்ளது.

## பழுதான குடியிருப்புகளுக்குப் பதிலாக புதிய குடியிருப்புகள்

★ தமிழகத்தின் நகரப் பகுதிகளில் உள்ள குடிசைப்பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுப் பணிகள் ரூ.250 கோடி செலவில் அமைக்கத்திட்டமிடப்பட்டுள்ளது. சென்னையில் 2,355 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.34.23 கோடி செலவில் அமைத்து முடிக்கப்பட்டுள்ளது.




மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை, இராயபுரத்தில்
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்டுள்ள 552 அடுக்குமாடிக் குடியிருப்புகளைத்
திறந்துவைத்தார். (15.6.2007)

★ சென்னை, மதுரை, சேலம், திருநெல்வேலி, திருச்சி, தஞ்சாவூர் மற்றும் இதர சிறு நகரங்களில் உள்ள குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு 2,242 வீடுகள் ரூ.42.08 கோடி செலவில் அமைக்கும் திட்டப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 504 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.12.30 கோடி செலவில் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

★ சென்னை, மதுரை மற்றும் கோவை மாநகரங்களில் 9,692 பழுதடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளை இடித்து மீண்டும் அப்பகுதியில் அதே எண்ணிக்கையில் குடியிருப்புகள் ரூ.263.77 கோடி செலவில் அமைக்கும் திட்டப்பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

**ஜவஹர்லால் நேரு நகர சீரமைப்புத் திட்டம்**

★ 35,270 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.1,208.55 கோடி செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டு, முதற்கட்டமாக கோவை உக்கடம் பகுதியில் 672 குடியிருப்புகளுக்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. 1,392 குடியிருப்புகளுக்கு ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது.

**அடிப்படை வசதிகள் அமைப்பு**

★ நகரப்பகுதிகளில் உள்ள குடிசைப்பகுதிகளுக்கு சாலைகள், கான்கிரீட் நடைபாதைகள், தெருமின் விளக்கு, குடிநீர் வசதி, கழிப்பறை வசதிகள் போன்ற மேம்பாட்டுப் பணிகள் 48,000 குடும்பங்கள் பயனடையும் வகையில் ரூ.23.52 கோடி செலவில் அமைக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன.

★ 6,753 குடும்பங்களுக்கு குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டப்பகுதிகளில் விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ ★ ★



# சிறுபான்மையோருக்கு தனி இடஒதுக்கீடு வழங்கிட அவசரச் சட்டம்

திரு. **கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்** அவர்கள்
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்

**பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை**

**தனி இட ஒதுக்கீடு**

★ பிற்படுத்தப்பட்டோருக்கான 30 சதவிகித ஒதுக்கீட்டிலிருந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பு இஸ்லாமியர்களுக்கு 3.5 சதவிகிதமும், பிற்படுத்தப்பட்ட வகுப்பு கிறித்தவர்களுக்கு 3.5 சதவிகிதமும் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் இட ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**புதிய விடுதிகள்**

★ 100 புதிய விடுதிகள் 5,000 மாணவ, மாணவியர் தங்கிப் பயிலும் வகையில் திறக்கப்பட்டன.

★ மாதாந்திர உணவுக் கட்டணம் பள்ளி விடுதிகளுக்கு ரூ.300இலிருந்து ரூ.450ஆகவும், கல்லூரி விடுதிகளுக்கு ரூ.400 இருந்து ரூ.550ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

**சீருடைகள்**

★ 2007–08ஆம் ஆண்டில் 50 விடுதிகள் கட்ட ரூ.32.15 கோடி நிதி ஒதுக்கீடும் 2008–09ஆம் ஆண்டில் 25 விடுதிகள் கட்ட ரூ.12.5 கோடி செலவில் ஒதுக்கீடு அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது.

★ விடுதிகளின் பராமரிப்பு மற்றும் பழுது பார்ப்புப் பணிகள் ரூ. 1.60 கோடி நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

★ 2007–08ஆம் ஆண்டில், விடுதிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மேற்கொள்வதற்காக ரூ.2.86 கோடி செலவிடப்பட்டுள்ளது.

★ 2007–08ஆம் ஆண்டில், இலவச சீருடைகள் வழங்கும் திட்டத்தின் கீழ், ரூபாய் 2.83 கோடி செலவில், சீருடைகள் வழங்கப்பட்டன. மேலும், 9 மற்றும் 10 ஆம் வகுப்புப் பயிலும் விடுதி மாணவிகளுக்கு சீருடையாக பாவாடை தாவணிக்கு பதிலாக இரண்டு சுடிதார் செட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், அரசுப் பள்ளிகளில் 10ஆம் வகுப்புப் பயின்று பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று பின்னர் தனியார் பள்ளிகளில் மேல்நிலைக் கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த 20 மாணவ–மாணவியர்க்கு ஆண்டிற்கு ரூ.28 ஆயிரம் வீதம் இரண்டாண்டுகளுக்கு ரூ.56 ஆயிரம் பரிசுத் தொகையை வழங்கினார். (7.12.2007)

**கல்வி உதவித்தொகை**

★ கல்வி உதவித் தொகை பெறுவதற்கான பெற்றோர்களின் ஆண்டு வருமான வரம்பு ரூ.50,000லிருந்து ரூ.1,00,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டங்கள்**

★ 2007–08ஆம் ஆண்டில் 200 மாணவியருக்கு விமான பணிப்பெண் பயிற்சி இலவசமாக அளிக்கப்படுகிறது.

**இலவச மிதி வண்டிகள் வழங்கும் திட்டம்**

★ ரூ.155.59 கோடி செலவில் 7,21,758 மிதி வண்டிகள் மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்டன.

★ 2007–08ஆம் ஆண்டில் படிப்பில் சிறந்த மாணவர்கள் தனியார் பள்ளிகளில் சேர்ந்து 11 மற்றும் 12 வகுப்புப் பயில ஏதுவாக ஒருவருடத்திற்கு ஒரு மாணவருக்கு ரூ.28,000க்கு மிகாமலும் இரண்டு ஆண்டுகளுக்கு ரூ.56,000 வரையிலும் செலவினங்கள் மேற்கொள்ள ரூ.84 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

★ ரூ.4,867 தையல் இயந்திரங்களும், 7,907 சலவைப் பெட்டிகளும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

★ உருது மொழியைப் பாடமாகப் பயின்று, 10 மற்றும் 12ஆம் வகுப்புப் பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற 3 மாணவ, மாணவியருக்குப் பரிசுகள் வழங்கும் திட்டம் 2007–08ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் வகுப்பு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி அளித்தல்**

★ 2007–08ஆம் ஆண்டில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதிகளை அமைக்க ரூ.1 இலட்சம் வரை மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டத்தினைத் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் செயல்படுத்த ரூ. 25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**சிறுபான்மை இனத்தவருக்கு வேலைவாய்ப்புத் திறன் பயிற்சி அளித்தல்**

★ சிறுபான்மையினர் நலனுக்கென தனி இயக்ககம். சிறுபான்மையினர் ஆணையத்திற்கு சட்ட அங்கீகாரம்.

★ 5,000 சிறுபான்மையின இளைஞர்கள், மகளிர்க்கான வேலைவாய்ப்புத் திறன் பயிற்சித் திட்டம், ரூ.2.50 கோடி செலவில் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

**பாடக்குறிப்புப் புத்தகங்கள் வழங்குதல்**

★ இவ்வரசு 118 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளுக்கு ஒரு விடுதிக்கு தலா ரூ.10,000 வீதம் மொத்தம் ரூ.11.80 இலட்சம் செலவில், மாணவ / மாணவிகளின் பொது அறிவினை வளர்ப்பதற்காகவும், பாடங்களில் ஏற்படும் சந்தேகங்களைத் தீர்ப்பதற்காகவும், பார்வைக்குறிப்புப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**முதலுதவிப் பெட்டி வழங்குதல்**

★ 1,181 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளுக்கு, ஒருவிடுதிக்கு தலா ரூ. 650 மதிப்பில், மொத்தம் ரூ.7.29 இலட்சம் செலவில், முதலுதவிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

**இன்வர்ட்டர் கருவி வழங்குதல்**

★ 118 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் கல்லூரி விடுதிகளில் ஒரு விடுதிக்கு தலா ரூ.15,000 வீதம், மொத்தம் ரூ.17.70 இலட்சம் செலவில், இன்வர்ட்டர் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**சூரிய ஒளி மூலம் நீரை சூடுபடுத்தும் கருவி வழங்குதல்**

★ 126 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளுக்கு மொத்தம் ரூ.150 இலட்சம் செலவில், சூரிய ஒளி மூலம் நீரை சூடுபடுத்தும் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

**குடிநீர் சுத்திகரிப்புக் கருவி வழங்குதல்**

★ 400 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளுக்கு ஒரு விடுதிக்கு தலா ரூ.11,000 வீதம் மொத்தம் ரூ.44 இலட்சம் செலவில், குடிநீர் சுத்திகரிக்கும் கருவிகள் வழங்கப்பட்டன.

**மாவரைக்கும் இயந்திரம் வழங்குதல்**

★ 392 பிற்படுத்தப்பட்டோர், 205 மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் 93 சீர்மரபினர் நல மாணவ / மாணவியர் விடுதிகளுக்கு ரூ.55.20 இலட்சம் செலவில் மாவரைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ ★ ★



# 3.40 இலட்சம் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு ரூ.116.53 கோடி உதவித்தொகை

திரு. **தா.மோ.அன்பரசன்** அவர்கள்
மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

**தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்பு**

**வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டம்**

✶ கடந்த இரண்டு ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் **3,39,966** படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் பயன்பெற்றுள்ளனர். ரூ.**116.53** கோடி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

✶ வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்க ரூ.**8** கோடி.

**வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பணி நியமனம்**

✶ கடந்த இரண்டு ஆண்டுகளில் **43,918** பேர் வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்தவர்கள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். தனியார் துறையில் **4,360** நபர்கள் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்.

**வேலைவாய்ப்புப் பதிவு – சலுகை**

✶ வேலைவாய்ப்பகங்களில் பதிவைப் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு கால அவகாசம் அளித்து சிறப்புச் சலுகை அளித்ததின் பேரில் **3,80,138** பேர் பயன்பெற்றனர்.

**கணினி**

✶ வேலை வாய்ப்பு அலுவலகங்களைக் கணினி மயமாக்க ரூ.**2.90** கோடி.

**தொழிற் பயிற்சி நிலையங்கள்**

✶ உள்ளூர் இளைஞர்கள் பயன்பெறும் வகையில் பெரம்பலூர் மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் **3** புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள்.

✶ திருக்குவளை தொழிற்பயிற்சி நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட ரூ.**20** இலட்சம்.

✶ திருச்சிராப்பள்ளி, தருமபுரி, சென்னை (வடக்கு) அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் தொழிற் பயிற்சி அளிக்க ரூ.**36.68** இலட்சம்.

✶ ஐந்து தொழிற் பயிற்சி நிலையங்களில் புதிய தொழிற் பிரிவுகள் தொடங்க ரூ.**111.28** இலட்சம்.




மாண்புமிகு தொழிலாளர் நலன், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் தொழிற்பள்ளிகளுக்கான பாடநூல் வெளியிட்டு, சிறந்த மாணவர்களுக்கு சான்றிதழும் வழங்கினார். (12.4.2008)

- ✶ செங்கல்பட்டு அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் 3 தொழிற் பிரிவு தொடங்க ரூ.50.78 இலட்சம்.
- ✶ ஓசூர், மதுரை, திருவண்ணாமலை, திருநெல்வேலி மற்றும் தருமபுரி ஆகிய 5 மையங்களில் தொழிற்பயிற்சி வகுப்புகள் தொடங்கவும் தளவாடச் சாமான்கள் வாங்கவும் ரூ.2 கோடி.
- ✶ அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் கணினிகள் கொள்முதல் செய்ய ரூ.13.60 இலட்சம்.
- ✶ அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு தொழிற்பயிற்சிக் கருவிகள் மற்றும் சாதனங்கள் வாங்க ரூ.305 இலட்சம்.
- ✶ அரசினர் தொழிற் பயிற்சி நிலையக் கட்டடங்கள் சீர் செய்ய ரூ.25 இலட்சம்.
- ✶ அரசினர் மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் பணியாற்றும் இளநிலை பயிற்சி அலுவலர்களுக்கு போதனா பயிற்சி அளிக்க ரூ.10 இலட்சம்.
- ✶ அம்பத்தூர், ஓசூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய தொழிற் பயிற்சி நிலையங்களில் பாடப்பிரிவுகள் தொடங்க ரூ.571.42 இலட்சம்.
- ✶ சென்னை கிண்டி (மகளிர்), வேலூர், மதுரை, பேட்டை ஆகிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்களைத் தரம் உயர்த்தி உலகத் தரத்திற்கு இணையான தொழிற் பயிற்சிகளை அளிக்க ரூ.201.49 இலட்சம்.

* செங்கல்பட்டு, சென்னை (வடக்கு), தஞ்சாவூர், கடலூர் (மகளிர்) மற்றும் தூத்துக்குடி தொழிற் பயிற்சி நிலையங்களை திறன்மிகு தொழிற்பயிற்சி நிலையங்களாக தரம் உயர்த்த ரூ.3.5 கோடி.

**தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் நல வாரியம் மற்றும் 12 பிற நல வாரியங்கள்**

* புதிதாகப் பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை 10,17,029.
* கடந்த 2 ஆண்டுகளில் 1,68,699 தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை ரூ.38,03,91,151.
* தகுதியான உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூ.400.
* பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மகப்பேறு உதவித் தொகை ரூ.4,000த்திலிருந்து ரூ.6,000 ஆக உயர்வு.
* 1,200 தொழிலாளர்களுக்கு தொழில் புரிய உபகரணங்கள் கருவிகள் மற்றும் திறனை மேம்படுத்த பயிற்சி அளிக்கப்படுகிறது.

**தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்**

* புதிதாகப் பதிவு செய்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 6,79,830.
* 92,222 தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை ரூ.28,62,46,958.
* கட்டுமானத் தொழிலாளர்களின் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.200லிருந்து ரூ.400 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
* கட்டுமான பெண் தொழிலாளர்களின் மகப்பேறு கால உதவியை ரூ.4,000த்திலிருந்து ரூ.6,000 ஆக உயர்வு.
* கட்டுமானத் தொழிலாளர் வாரியம் முழுவதும் கணினி மயமாக்க ரூ.5,01,44,222.
* முன்னோடித் திட்டமாக காஞ்சிபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் குடும்ப நல ஈட்டுறுதித் திட்டம் செயல்படுத்த ரூ.5.4 கோடி.
* தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகள் பெற தொழிலாளர் ஊதிய உச்ச வரம்பு ரூ.7,500 லிருந்து ரூ.10,000 ஆக உயர்வு.
* குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கு பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த ரூ.50 இலட்சம்.
* திருச்சியில் தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகம் நிறுவ ரூ.20 இலட்சம்.
* திருப்பூர், கோபிசெட்டிபாளையம் மற்றும் திருநெல்வேலியில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள்.

**அரவாணிகள் நல வாரியம்**

* அரவாணிகள் நலனுக்கு தனி நல வாரியம் அமைப்பு.

* * *



# 2,239 திருக்கோயில்களில் ரூ.37 கோடி செலவில் திருப்பணி

திரு. **கேஆர்.பெரியகருப்பன்** அவர்கள்
மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர்

**இந்துசமய அறநிலையத்துறை**

**திருக்கோயில்களில் திருப்பணி**

★ தமிழகம் முழுவதும் ரூ.37 கோடி செலவில் 2,239 திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்யப்பட்டு குடமுழுக்கு விழாக்கள் நடத்தப்பட்டுள்ளன.

★ திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்வதற்காக ஆண்டுதோறும் அரசு வழங்கும் மானியத் தொகை ரூ.75 இலட்சத்திலிருந்து, ரூ. 3 கோடியாக 25.1.2008 அன்று உயர்த்தப்பட்டது.

★ ரூ.157 கோடி மதிப்பீட்டில் திருக்கோயில்களில் திருப்பணி உள்பட பல்வேறு கட்டுமானப் பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**திருக்கோயில்கள் சீரமைப்பு**

★ மிகவும் சிதிலமடைந்து, கவனிப்பாரின்றி உள்ள பழமை வாய்ந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க 48 திருக்கோயில்களில் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்துவதற்காக, வரலாற்றுப் பெருமை மிக்க, பழமை வாய்ந்த திருக்கோயில்களை சீரமைக்கும் திட்டத்தின்கீழ், 12ஆவது நிதிஆணைய நல்கையிலிருந்து ரூ.9.87 கோடி அனுமதிக்கப் பட்டுள்ளது. முதற்கட்டமாக ரூ.5 கோடி விடுவிக்கப்பட்டு சீரமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

★ ஆதிதிராவிடர்கள் வாழும் 2,000 குடியிருப்புப் பகுதிகளில் உள்ள திருக்கோயில்கள் புதுப்பிக்கப்படுவதற்கு ரூ. 5 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

**திருக்கோயில்களில் புதிதாக தங்க ரதம்**

★ சென்னை மயிலாப்பூர் அருள்மிகு முண்டகக் கன்னியம்மன் திருக்கோயில், திருச்சி திருவானைக்காவல் அருள்மிகு ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், ஒசூர் அருள்மிகு சந்திர சூடேஸ்வரர் திருக்கோயில், திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில், நாமக்கல் அருள்மிகு ஆஞ்சநேயசுவாமி திருக்கோயில், கரூர் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், கோவை அருள்மிகு தண்டு மாரியம்மன் திருக்கோயில், விருதுநகர் மாவட்டம் திருத்தங்கல்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம், அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக நியமனம் செய்ய அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற நீதிபதி திரு.ஏ.கே.ராஜன் அறிக்கையினை அளித்தார். (23.11.2006)

அருள்மிகு கருநெல்லிநாத சுவாமி திருக்கோயில் ஆகிய 8 திருக்கோயில்களில் புதியதாக தங்கரதம் செய்யப்பட்டு, தங்கரத உலா நடத்தப்பட்டுள்ளது.

**தேர்த்திருவிழா**

★ தேர்த்திருவிழா நடைபெறாமல் இருந்த திருக்கோயில்களில் தேரோட்டம் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, ரூ.118.90 மதிப்பீட்டில் எட்டு திருக்கோயில்களில் புதிய தேர் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

★ திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலில், 100 ஆண்டுகளுக்கு முன்பாக செய்யப்பட்டு பழுதடைந்திருந்திருந்த அம்பாள் தேருக்குப் பதிலாக, ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் புதிய திருத்தேர் செய்யப்பட்டு 4.5.2008 அன்று தேரோட்டம் நடத்தப்பட்டது.

★ ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் திருவேற்காடு, அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் சார்பில் புதிய நவீன திருமண மண்டபம் கட்டி முடிக்கப்பட்டு 13.4.2007 அன்று திறக்கப்பட்டது.

★ சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் கோவிலில் ரூ.7.6 கோடி செலவில் அருள்மிகு மாரியம்மன் மூலவர் விமானம் தங்க விமானமாக அமைக்கப்பட்டது.

★ தேவார திருமுறைகளிலும் திவ்விய பிரபந்தங்களிலும் பாடிப்பரவப்பட்ட, ஆனால் நீண்டகாலமாக குடமுழுக்கே கண்டிராத 30 புராதன திருக்கோயில்களை ரூ.3.29 கோடி மதிப்பீட்டில் புனரமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**சாதி வேறுபாடின்றி அர்ச்சகர் பயிற்சி**

★ தகுதியும் திறமையும் பெற்ற அனைத்து இந்துக்களும் சாதிவேறுபாடின்றி திருக்கோயில்களில் அர்ச்சகராக நியமிக்கப்படலாம் என்று 2.1.2007 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

★ பழனி, திருச்செந்தூர், மதுரை, திருவண்ணாமலை ஆகிய நான்கு இடங்களில் சைவ அர்ச்சகர் பயிற்சி நிலையங்களும், சென்னை, திருவரங்கம் ஆகிய இரண்டு இடங்களில் வைணவ அர்ச்சகர் பயிற்சி நிலையங்களும் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இவற்றில் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த 34 பேர், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்த 76 பேர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 55 பேர் உட்பட மொத்தம் 207 பேர் இலவசமாக பயிற்சி பெற்று வருகின்றனர். இவர்களுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, உறைவிடம் ஆகியன இலவசமாக அளிக்கப்படுவதோடு மாணவர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 500 ஊக்கத் தொகையாகவும் வழங்கப்படுகிறது.

**கிராமக் கோயில் பூசாரிகள் நல வாரியம்**

★ கிராமக் கோயில் பூசாரிகள் நலனுக்கென ஒரு நலவாரியம் 23.1.2007 அன்று அமைக்கப்பட்டது. இதுவரை 15,377 பூசாரிகள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு இவ்வாரியத்தின் மூலம் நலத்திட்டங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

★ தமிழ் தேவார திருமுறைகளையும், பிரபந்தங்களையும் பண்ணோடு ஓதுவதற்கு, முறையாகப் பயின்ற ஓதுவார்களை உருவாக்குவதற்காக ஓதுவார் பயிற்சி



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆணைப்படி
சாதி வேறுபாடின்றி அனைத்துச் சாதியினருக்கும் அர்ச்சகர் பயிற்சி அளிக்கப்படுகிறது.

நிலையம் ஒன்று பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சார்பில் தொடங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

**தமிழில் அர்ச்சனை**

★ "தமிழிலும்" அர்ச்சனை செய்யப்படும் என்பதை மாற்றி தமிழில் அர்ச்சனை செய்யப்படும் என்று அறிவித்து தமிழ் அர்ச்சனை ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. தமிழில் அர்ச்சனை நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

★ நீண்டகாலத்திற்குப் பின்பு, சிதம்பரம், தில்லை நடராஜர் கோயிலில் திருச்சிற்றம்பல மேடையில் தமிழ் தேவார திருமுறைகள் ஓதுவதற்காக அரசாணை பிறப்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

★ "ஆண்டவன் முன் அனைவரும் சமம்" என்ற கோட்பாட்டினை உறுதி செய்யும் வகையில், திருக்கோயில்களில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த, முக்கிய பிரமுகர்களுக்கு பரிவட்ட மரியாதை செய்யும் வழக்கம் நிறுத்தப்பட்டது.

★ திருக்கோயில்களை நிருவகிக்க ஏற்படுத்தப்படும் அறங்காவலர் குழுவில் மகளிர் ஒருவரை அறங்காவலராக நியமிப்பது சட்டமாக்கப்பட்டுள்ளது.

**புதிய கோசாலைகள்**

★ திருக்கோயில்களுக்கு, காணிக்கையாக வழங்கப்படும் பசுக்கள் மற்றும் இதர கால்நடைகள் ஏலம் விடப்படுவது நிறுத்தப்பட்டு, அவற்றைப் பாதுகாக்கும் பொருட்டு, ஒருங்கிணைந்த கோசாலைகள் அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது. இதன் பயனாக, முதல்கட்டமாக, திருச்சி, கம்பரசம்பேட்டை மற்றும் திருச்செந்தூர் ஆகிய இடங்களில் கோசாலைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ இந்து சமய அறநிலையத் துறையின் நிருவாகத்தை செம்மைப்படுத்தவும், மாவட்டந்தோறும் மக்கட்பணி செய்ய ஓர் அலுவலகம் என்ற நிலையை உருவாக்கிடவும், கரூர், திண்டுக்கல், திருவாரூர், நாமக்கல் மற்றும் திருவள்ளூர் ஆகிய ஐந்து வருவாய் மாவட்டங்களில் இந்து சமய அறநிலையத் துறை உதவி ஆணையர் அலுவலகம் புதிதாக ஏற்படுத்தப்பட ஆணையிடப்பட்டு, அவை 15.4.2008 முதல் செயல்படத் தொடங்கியுள்ளன.

★ தஞ்சாவூரில் இந்துசமய அறநிலையத்துறை இணை ஆணையர் அலுவலகம், உதவி ஆணையர் அலுவலகம், பொறியியல் பிரிவு மற்றும் தணிக்கை அலுவலகம் ஆகியவை ஒரே இடத்தில் இயங்கும் வகையில், ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம் ரூ.70.83 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டு, 27.9.2007 அன்று திறக்கப்பட்டது.

**திருக்கோயில் இடங்களில் குடியிருப்போருக்கு,**
**வணிகம் செய்வோருக்கு வாடகை நிர்ணயம்**

★ திருக்கோயிலுக்குச் சொந்தமான கட்டடம் மற்றும் மனைகளில் குடியிருப்பவர் களுக்கான வாடகை விகிதம் பாதியாகக் குறைத்து வாடகை நிர்ணயம் சீரமைக்கப்பட்டது.

★ திருக்கோயிலுக்குச் சொந்தமான கட்டடம், மனை ஆகியவற்றில் குடியிருப்போர், வணிகம் செய்வோர் ஆகிய அனைத்துத் தரப்பினரும் செலுத்த வேண்டிய 3 ஆண்டுகளுக்கு ஒருமுறையான வாடகை உயர்வை 33.3 விழுக்காட்டிலிருந்து 15 விழுக்காடாகக் குறைத்து ஆணையிடப்பட்டுள்ளது.

★ திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களில் நீண்டகாலமாக கூட்டாக ஆக்கிரமித்து குடியிருப்போர்களை, திருக்கோயிலுக்கு நன்மை பயக்கும் வகையில் வாடகைதாரர்களாக அங்கீகரிக்க முடிவு செய்யப்பட்டது. இதன் மூலம் இவர்களுக்கு மின்சாரம், குடிநீர், சாலைப் போக்குவரத்து போன்ற அடிப்படை வசதிகள் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

**பணியாளர் நலன்**

★ சென்னை மற்றும் சென்னையைச் சுற்றியுள்ள நிலங்களின் விலை உயர்வை கருத்தில் கொண்டு திருக்கோயிலுக்குச் சொந்தமான காலியிடங்களைப் பாதுகாக்கும் நோக்கோடும், திருக்கோயில் வருவாயைப் பெருக்கிடவும், ஒரு தற்காலிக ஏற்பாடாக, திருக்கோயில்களுக்குச் சொந்தமான ஏழு இடங்களில், தனியார் வாகனப் பாதுகாப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

★ ஒருகால பூஜை திட்டத்தின் கீழ் மேலும் 500 திருக்கோயில்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

★ திருக்கோயில் பணியாளர்களுக்கு சம்பளத்துடன் 50% அகவிலைப்படி சேர்க்கப்பட்டது.



★ திருக்கோயில் பணியாளர்களுக்கு ஓய்வூதியத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு முதல் கட்டமாக 109 பேருக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது. திருக்கோயில் பணியாளர்கள் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்து பயனடைய, ஓய்வூதிய மையநிதிக்கு ரூ.20,000 செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையை நீக்கம் செய்து ஆணையிடப்பட்டது.

★ போதிய பாதுகாப்பு வசதியற்ற திருக்கோயில்களின் உலோகத் திருமேனிகளைப் பாதுகாத்திட கும்பகோணம், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, கடலூர், கோயம்புத்தூர், புதுக்கோட்டை, மதுரை, சிவகங்கை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள் கட்டப்பட்டுள்ளன.

★ ★ ★



# நெசவாளர்கள் பயன்பெற சிட்டா நூலுக்கு வரிவிலக்கு

திரு. **என்கேகே.பி. ராஜா** அவர்கள்
மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்

**கைத்தறி மற்றும் துணிநூல்துறை**

**இலவச வேட்டிகள் மற்றும் சேலைகள் விநியோகம்**

★ 15,000 கைத்தறி நெசவாளர்கள் மற்றும் 30,000 விசைத்தறி தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் இலவச வேட்டிகள் மற்றும் சேலைகள் வழங்கும் திட்டம் ஆண்டொன்றுக்கு ரூ.256 கோடி செலவில் இரண்டு ஆண்டுகளில் 320.59 இலட்சம் வேட்டிகளும் 317.43 இலட்சம் சேலைகளும், பொங்கல் திருநாளின் போது விநியோகம் செய்யப்பட்டன.

**இலவச சீருடைகள் விநியோகம்**

★ சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் 1 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் சுமார் 59 இலட்சம் பள்ளி மாணவ, மாணவியருக்கு வருடந்தோறும் ரூ.45.61 கோடி செலவில் 137.16 இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகள் விநியோகம் செய்யப்பட்டன. இது தவிர, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் நலத்துறைகளுக்குத் தேவையான 22.36 இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகளும் வழங்கப்பட்டன.

**சுகாதார காப்பீட்டுத் திட்டம்**

★ "சுகாதார காப்பீட்டுத் திட்டம்" அனைத்து கைத்தறி நெசவாளர்களுக்கும் விரிவுபடுத்தியுள்ளது. ஆண்டொன்றுக்கு ரூ.15,000 வரை மருத்துவ சிகிச்சைப் பெற 2 இலட்சம் நெசவாளர்களுக்கு "மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்" செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென ரூ.8.17 கோடி அரசால் வழங்கப்பட்டுள்ளது.

**ஓய்வூதியம் உயர்வு**

★ 60 வயதைக் கடந்த கைத்தறி நெசவாளர்களுக்கு ஓய்வூதியத் தொகை ரூ.200லிருந்து ரூ.400ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 14,141 கைத்தறி நெசவாளர்கள் பயன்பெற்று வருகின்றனர். 2007–08ஆம் ஆண்டில் மாநில அரசு ரூ.663.65 இலட்சம் வழங்கியுள்ளது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்,
கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட திருக்குறள் பட்டுச் சேலையினைப் பார்வையிட்டார்.

★ கைத்தறி நெசவாளர்களின் வாரிசுகளுக்கு வழங்கப்பட்டு வரும் குடும்ப ஓய்வூதியத் தொகை ரூ.550 ஆக உயர்த்தப்பட்டு, ரூ.66.73 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது. 1,029 நபர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

**இலவச மின்சாரம்**

★ இரு மாதத்திற்கு ஒருமுறை கைத்தறி நெசவாளர்களுக்கு 100 யூனிட்டுகள் வரையிலும், விசைத்தறி நெசவாளர்களுக்கு 500 யூனிட்டுகள் வரையிலும் இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. 1,34,981 கைத்தறி நெசவாளர்களும், 98,465 விசைத்தறித் தொழிலாளர்களும் பயன்பெறும் இத்திட்டத்திற்கு ரூ.136.90 கோடியை அரசு வழங்கியுள்ளது.

**வடிவமைப்பு மேம்பாடு**

★ தேசிய வடிவமைப்பு நிறுவனத்தின் மூலம் ரூ.65 இலட்சம் மதிப்பீட்டில் வடிவமைப்பு மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

★ பருத்தி மற்றும் பட்டு இரகங்களில் 1,602 புதிய வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டு, 15,000 நெசவாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதோடு, அவர்களது வருவாய் நாள் ஒன்றுக்கு ரூ.75 லிருந்து ரூ.120 ஆக உயருகிறது.

**அடிப்படை வசதிகள் மேம்பாடு**

★ நெசவாளர்களின் ஒட்டுமொத்தப் பொருளாதார நிலையினை மேம்படுத்த அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை உருவாக்கும் பொருட்டு, 5,000 நெசவாளர்கள் வாழும் பெரிய அளவிலான 3 செறிவுப் பகுதிகளுக்கு, செறிவுப் பகுதி ஒன்றுக்கு ரூ.2 கோடியும், 500 நெசவாளர்கள் வாழும் சிறிய அளவிலான 25 செறிவுப் பகுதிகளுக்கு, செறிவுப் பகுதி ஒன்றுக்கு ரூ.60 இலட்சமும் நிதியுதவி வழங்கப்படுகிறது.

**ஜவுளிப் பூங்கா – பதனிடும் பூங்கா**

★ ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்கள் அமைக்கும் திட்டத்தின் கீழ், 7 இடங்களில் உயர் தொழில்நுட்ப ஜவுளிப் பூங்கா – பதனிடும் பூங்கா அமைக்கும் திட்டங்களுக்கு






மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை கோ–ஆப்டெக்ஸ் வளாகத்தில், 'தேசிய கைத்தறிக் கண்காட்சி–2008'யினை தொடங்கிவைத்தார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் உடன் உள்ளனர்.(19.3.2008)

ரூ.572.53 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்த மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

★ எஞ்சியுள்ள 6 ஜவுளி சிறப்புத் திட்டங்களைப் பொறுத்தவரையில், பணிகள் நடைபெற்று வருகின்றன. ஜவுளித் தொழில் மையங்களுக்கான அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் குமாரபாளையத்தில் உள்ள காவேரி உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்காவும் தொடங்கப்பட்டுள்ளது. இவ்வகைப் பூங்காக்கள் அமைப்பதன் மூலம், மாநிலத்திலுள்ள 60,500 நபர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

**வரிவிலக்கு**

★ கைத்தறித் தொழிலுக்குப் பயன்படுத்தப்படும் சிட்டா நூலுக்கு 2 விழுக்காடு விற்பனை வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. இதனால் 6.08 இலட்சம் நெசவாளர்கள் பயன்பெறுகின்றனர்.

**கோ–ஆப்டெக்சுக்குத் தள்ளுபடி மானியம்**

★ 2006–07ஆம் ஆண்டில் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு தள்ளுபடி மானியமாக மொத்தம் ரூ.208 கோடி வழங்கப்பட்டுள்ளது.

★ 724 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும், 1,324 தனியார் நெசவாளர்களும் கைத்தறி முத்திரைத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

**புதிய மயில் தோகை பட்டுச் சேலை**

★ ஏழு உலக அதிசயங்களை உள்ளடக்கி 1,64,492 வண்ணங்களில் நெய்யப்பட்ட புதிய ரக மயில் தோகை பட்டுச் சேலை கோ–ஆப்டெக்ஸ் மூலம் விற்பனைக்கு அறிமுகம் செய்யப்பட்டது.

★ தேசிய கைத்தறிக் கண்காட்சியில் ரூ.7.37 கோடி மதிப்பிற்கு கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டன.

★ ★ ★



# 30,916 ஆசிரியர்கள் புதிதாக நியமனம். 1,880 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.118 கோடி மதிப்பில் கணிப்பொறிகள்

திரு. **தங்கம் தென்னரசு** அவர்கள்
மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்

**பள்ளிக்கல்வித் துறை**

**ஆசிரியர்கள் நியமனம்**

★ இரண்டாண்டுகளில் 30,916 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**கல்வி வளர்ச்சி நாள்**

★ இந்த அரசு 2006–07 நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி பள்ளிகளில் தமிழை ஒரு கட்டாய மொழிப் பாடமாக்கிட வகை செய்யும் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. பெருந்தலைவர் காமராஜரின் பிறந்த நாளான ஜூலை 15–ஐ "கல்வி வளர்ச்சி நாள்"ஆகக் கொண்டாடுவதற்கான சட்டமும் இயற்றப்பட்டுள்ளது.

**ஆசிரியர்களுக்குக் காலமுறை ஊதியம்**

★ அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் ஒப்பந்த முறையில் தொகுப்பூதியம் பெற்று பணியாற்றும் ஆசிரியர்களுக்கு 1.6.2006 முதல் காலமுறை ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் 45,987 ஆசிரியர்கள் பயனடைந்துள்ளனர்.

**அனைவருக்கும் கல்வி**

★ 'அனைவருக்கும் கல்வி'த் திட்டத்தின் கீழ் அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள 6,7,8 வகுப்புகளுக்கு 7,979 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், நடுநிலைப்பள்ளிகளில் 1,926 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், 150 மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டு, அப்பணியிடங்களை வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவு மூப்பு அடிப்படையில் நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ 'அனைவருக்கும் கல்வி' திட்டத்தின் கீழ், 14,354 வகுப்பறை கட்டடங்களும் 1,075 பள்ளி தொகுப்பு வள மையக் கட்டடங்களும் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இதற்கான செலவுத்தொகை ரூ.332 கோடி.

**இலவச சைக்கிள், இலவசப் பாடநூல்கள், இலவச பேருந்துப் பயணம், உடனடி சான்றுகள்**

★ மாணவர்களுக்கு இலவச சைக்கிள் மற்றும் இலவசப் பாடநூல்கள் வழங்கும் திட்டங்களும், பள்ளி மாணவர்களுக்கு இலவச பேருந்துப்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், +2 பொதுத்தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்று சாதனை படைத்த மாணவ–மாணவிகளுக்கு பரிசுத்தொகையினையும், அவர்களின் உயர்கல்விக்கான முழுச்செலவையும் அரசே ஏற்கும் என்பதற்கான சான்றிதழையும் வழங்கி, வாழ்த்தினார். (23.5.2007)

பயணத் திட்டமும், 10,12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சாதிச்சான்றிதழ், இருப்பிடச் சான்று, வருவாய்ச் சான்று ஆகியன பள்ளியிலேயே வழங்கும் திட்டமும் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

**பள்ளிகள் நிலை உயர்வு**

★ 220 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 200 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும், முறையே நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

**கணினி பயிற்றுநருடன் கணினி**

★ அனைத்து அரசு, நகராட்சி, மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வியை செயல்படுத்துவதற்காக 1,880 கணினிப் பயிற்றுநர், பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மேலும் இப்பள்ளிகளுக்கு 118 கோடி செலவில் கணினிகள் வழங்கப்பட உள்ளன.

★ 1,880 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.118 கோடி மதிப்பில் கணினிகள் எல்காட் நிறுவனம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. 125 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.8.38 கோடி மதிப்பில் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. 1,000 அரசு உயர்நிலைப்பள்ளிகளுக்கு ரூ.44.49 கோடி மதிப்பில் கணினிகள் வழங்கப் படவுள்ளன. மேலும் ICT திட்டத்தின் மூலம் ரூ.26.80 கோடி செலவில் 400 அரசு உயர்நிலைப்பள்ளிகளுக்கு கணினிகள் வழங்கப்படவுள்ளன.

- ★ கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களான தருமபுரி, விழுப்புரம், பெரம்பலூர், சேலம், ஈரோடு ஆகிய மாவட்டங்களில், சராசரிக்கும் குறைவான சதவீதத்தில் தேர்ச்சி பெற்ற 200 பள்ளிகள் கண்டறியப்பட்டு, அந்த மாணவர்களுக்குப் பள்ளியிலேயே சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஆண்டுக்கு ரூ.78 இலட்சம் செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**சமச்சீர் கல்வி**

- ★ அனைத்து மாணவர்களுக்கும் எவ்வாறு கல்வி அளிப்பது என்பது குறித்து ஆராய உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டது. அதனை எவ்வாறு செயல்படுத்துவது என்பது குறித்த ஒரு நபர் குழுவின் அறிக்கை பெறப்பட்டு, இதனை நுணுக்கமாக ஆராய ஒரு கல்வியாளர் குழு அமைக்கப்படவுள்ளது.
- ★ மாணவர்களுக்கு ஏற்படும் விபத்துக்களை எவ்வாறு தடுப்பது என்பது பற்றியும் சாலைப் பாதுகாப்பு விதிகளை எவ்வாறு கடைப்பிடிப்பது என்பது குறித்தும் ஆராய ஒரு பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

**புதிய கட்டடங்கள் – உள்கட்டமைப்பு வசதிகள்**

- ★ 1,583 அரசு உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைகளுக்கு ரூ.69.11 கோடி செலவில் உள்கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டு வருகின்றது.
- ★ மாணவர்களுக்கு 1,90,410 மேசை மற்றும் இருக்கைகளும், ஆசிரியர்களுக்கு 15,845 மேசை மற்றும் நாற்காலிகளும் வழங்கப்படவுள்ளன.
- ★ 1,583 பள்ளிகளில் ரூ.708 கோடி மதிப்பில் வகுப்பறைகள், ஆய்வகங்கள், குடிநீர் வசதி ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- ★ 26 அரசு உயர்நிலைப்பள்ளிகளில் மாணவர்களின் ஆங்கிலம் கற்கும் திறனை வளர்க்க ரூ.130 கோடி மதிப்பில் ஆங்கில மொழி கற்றல் ஆய்வகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**நவீன மாநில நூலகம்**

- ★ ரூ.100 கோடி செலவில், உலகத் தர நிலையில் சென்னை கோட்டூர்புரத்தில் நவீன மாநில நூலகம் அமைக்க ஆணையிடப்பட்டுப் பணிகள் நடைபெறுகின்றன.
- ★ அனைத்து நூல்களும் ஒரே இடத்தில் கிடைக்கும் வண்ணம் சென்னையில் மாபெரும் "புத்தகப் பூங்கா".

★ ★ ★



# ‘புதிய வரிகள் இல்லை’ நிருவாகச் சீர்திருத்தங்களால் வரிவிலக்கு, வரிகுறைப்பு செய்தும், வரி வருவாய் அதிகரிப்பு

**திரு. எஸ்.என்.எம்.உபயதுல்லா** அவர்கள்
மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர்

வணிகவரி

**மதிப்புக் கூட்டு வரிச் சட்டம்**

★ தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 1.1.2007 முதல் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. உபரி வரி, கூடுதல் விற்பனை வரி மற்றும் மறு விற்பனை வரி போன்ற வரிகள் நீக்கப்பட்டுள்ளன.

**புதிய சமாதானத் திட்டம்**

★ வரி நிலுவைகளைத் தீர்வு செய்யும் வகையில் வணிகர் நட்புறவான ஒரு சமாதானத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு 283 மனுதாரர் களிடமிருந்து ரூ.1.85 கோடி வரி வசூல் செய்யப்பட்டுள்ளது.

**வரித் தள்ளுபடி ஆய்வுக்குழு**

★ நிலுவையில் உள்ள வரி கைவிடுதல் பிரேரணைகளை ஆய்வு செய்ய வரித் தள்ளுபடி ஆய்வுக்குழு (Waiver Committee) ஒன்று அமைக்கப்பட்டு, 8 இனங்களில் ரூ.3.44 கோடி வரி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**வரிச்சலுகைகள்**

★ பருப்பு மற்றும் பயறு வகைகள், அவற்றின் மாவு, வறுகடலை, சமையல் எண்ணெய், தமிழ் மென்பொருட்கள், சாம்பிராணி, எரி சாம்பல், சிட்டா நூல், வெல்லம், தேங்காய், பட்டாணி, புண்ணாக்கு ஆகிய பொருட்களுக்கு முழு வரிவிலக்கு.

★ 2007–08ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், தேயிலை மீதான விற்பனை வரி ரூ.4லிருந்து ரூ.1ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

★ கோதுமை மீதான விற்பனை வரி ரூ.4லிருந்து ரூ.2ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

★ கலப்பு உரங்கள், விதைப்பதற்குப் பயன்படுத்தப்படும் விதைகள் உள்ளிட்ட 25 பொருட்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

★ பல்வேறு வகையான 25 பொருட்கள் மீதான வரி விகிதம் 23.3.2007 முதல் 12.5 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.




★ 5,000 விசைப்படகுகளுக்கு (ஒரு விசைப்படகிற்கு மாதம் ஒன்றுக்கு 1,000 லிட்டர் டீசல் வீதம்) விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்டு வந்தது. இந்த அளவு 1,500 லிட்டர் என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டு 1.8.2006 முதல் வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

**தமிழில் பெயரிடப்பட்ட திரைப்படங்கள்**

★ புதிய படங்களுக்குத் தமிழிலேயே பெயர் சூட்டப்படுமானால் அந்தப் படங்களுக்குக் கேளிக்கை வரியிலிருந்து முழுமையான விலக்கு அளிக்கப்படுகிறது.

**வருவாய்**

★ 2005–06ஆம் ஆண்டின் மொத்த வரி வசூல் தொகையான ரூ.16,615 கோடியை ஒப்பு நோக்குகையில், 2006–07ஆம் ஆண்டின் மொத்த வரிவசூல் ரூ.19,217 கோடியாகும். டிசம்பர் 2007 முடிய ரூ.14,677.63 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. மதிப்புக் கூட்டு வரி நடைமுறைப்படுத்தப்பட்டு உபரி வரி, கூடுதல் வரி, மறுவிற்பனை வரி ஆகியவை நீக்கப்பட்டும், வரிச்சலுகைகள் வழங்கப்பட்டும் டிசம்பர் 2006 வருவாயான ரூ.14,470.82 கோடியை விட ரூ.206.81 கோடி கூடுதலாக வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**வணிகர் நல வாரியம்**

★ குடும்ப நல உதவித் தொகை ரூ.20,000லிருந்து ரூ.50,000ஆக உயர்த்தப் பட்டுள்ளது. இதய அறுவை சிகிச்சை மற்றும் புற்றுநோய் அறுவை சிகிச்சைகளுக்கு ரூ.25,000 உதவித் தொகை ரூ.50,000ஆக உயர்த்தப்பட்டுள்ளது. வணிகர் நல வாரிய பெண் உறுப்பினர்களுக்குக் கர்ப்பப்பை அறுவை சிகிச்சைக்கு ரூ.20,000 உதவித் தொகை வழங்கப்படுகிறது.

★ உறுப்பினரின் வாரிசுகளின் கல்லூரிப் படிப்பிற்கு முன்னர் வழங்கப்பட்டு வந்த ரூ.3,000 கல்வி உதவித் தொகை ரூ.5,000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. தொழிற் கல்விக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டுக்கும் ரூ.10,000 வழங்கப்பட்டுள்ளது.

★ நலிவுற்ற உறுப்பினர்களுக்கு உதவித் தொகையாக ரூ.10,000 வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

★ ★ ★



# சுற்றுச்சூழல் காக்க சிறப்பு முயற்சிகள்

திரு. **டி.பி.எம்.மைதீன்கான்** அவர்கள்
மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர்

சுற்றுச்சூழல்

**சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம்கள்**

★ 7,500 தேசிய பசுமைப்படை மற்றும் 1,200 சுற்றுச்சூழல் மன்றங்கள் உள்ள பள்ளிகளின் மாணவர்களுக்கு மூன்று நாள் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம்கள் நடத்துவதற்காக ரூ.37.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் சுனாமி மறு சீரமைப்புத் திட்டம்**

**உயர் அலைமட்டக் குறியீடு வரைபடம் தயாரித்தல்**

★ தமிழகக் கடலோரத்தின் பாலாறு முகத்துவாரம் முதல் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தேங்காய்ப்பட்டினம் வரை அலை நீர்த் தாக்கத்திற்கு உட்படும் நீர் நிலைகளின் உயர் அலை மட்டத்தினைக் குறியீடு செய்து இதனை சர்வே எண்களுடன் கூடிய கிராம வரைபடங்களில் பதிவு செய்யும் பணி, சுனாமி மறுசீரமைப்புத் திட்டத்தில் ரூ.2.21 கோடி செலவில் அண்ணா பல்கலைக் கழகத்தின் தொலையுணர்வு மையம் மூலம் செப்டம்பர் 2006 முதல் தொடங்கப்பட்டு, 2007–08ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம்

**மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் அதிகமாக அமைந்துள்ள பகுதிகளை கண்காணித்தல்**

★ அதிக அளவில் தொழிற்சாலைகள் அமைந்துள்ள பகுதிகளில் ஏற்படக் கூடிய விபத்து மற்றும் ஏற்படும் மாசு ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், மணலி, கடலூர், தூத்துக்குடி, மேட்டூர், இராணிப்பேட்டை, திருப்பெரும்புதூர், பெருங்குடி தகவல் தொழில்நுட்ப பூங்கா பகுதி, பெருந்துறை, கும்மிடிப்பூண்டி மற்றும் திருப்பூர் (பொதுக்கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள்) ஆகிய இடங்களைத் தேர்வு செய்து, அப்பகுதிகளில் அமைந்துள்ள தொழிற்சாலைகளைத் தொடர்ந்து கண்காணிக்கவும் அங்குள்ள பொதுமக்களை நேரடியாகத் தொடர்புகொள்ளவும், தனித்தனியாக ஒரு உதவி சுற்றுச்சூழல் பொறியாளரை நியமித்துள்ளது.

**தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்கள் மேலாண்மை**

★ தீங்கு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்களைச் சுற்றுச் சூழலுக்கு எவ்வித பாதிப்பும் இன்றி பாதுகாப்பாக கையாளுவதற்கு



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தனது இல்லத்தின் வாயிலில் ஈஷா அறக்கட்டளை சார்பில் 7 இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தினைத் தொடங்கிவைத்தார். (15.10.2006)

கும்மிடிப்பூண்டியில் உள்ள சிப்காட் வளாகத்தில் அபாயகரமான கழிவுப் பொருட்களை சுத்திகரித்துப் பாதுகாப்பாக அகற்றுவதற்காக பொது வசதி ஏற்படுத்தப்பட்டு அது செயல்படத் தொடங்கியுள்ளது.

**நகர திடக்கழிவுகள் மேலாண்மை**

★ அறிவியல் ரீதியாக திடக்கழிவு மேலாண்மை செய்வதற்கு காஞ்சிபுரம், ஒசூர், நாகப்பட்டினம், திருச்செங்கோடு, ஆலந்தூர், அம்பாசமுத்திரம், தென்காசி, மற்றும் கடையநல்லூர் ஆகிய **8** நகராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு நகராட்சிக்கும் ரூ.**12.50** இலட்சம் வீதம் ஆக மொத்தம் ஒரு கோடி ரூபாயை வாரியம் வழங்கியுள்ளது.

**காற்றின் தன்மை கண்காணிப்பு**

★ சுற்றுச்சூழல் காற்றின் தன்மையை பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வண்ணம், கிண்டியில் உள்ள வாரிய தலைமை அலுவலகத்தில் மின்னணு தகவல் பலகை அமைக்கப்பட்டுள்ளது. இதில் சென்னை மாநகரின் சுற்றுச்சூழல் காற்றின் தன்மையின் அளவீடுகள் வெளியிடப்படுகின்றன. இது போன்று பிற முக்கிய நகரங்களிலும் அமைக்கப்படும்.

★ ★ ★



# விளையாட்டுகளை மேம்படுத்த ஊக்கத்தொகை, பரிசுகள்

திரு. **டி.பி.எம்.மைதீன்கான்** அவர்கள்
மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர்

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை**

★ 15ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம், வெள்ளிப் பதக்கம், வெண்கலப் பதக்கம் வென்ற நான்கு வீரர்களுக்கு ரூ.60 இலட்சம் ரொக்கப் பரிசுகளை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்.

★ கின்னஸ் சாதனை படைக்க விரும்பிய ஐந்தரை வயது சிறுமி எல்.எஸ். சிவஸ்ரீக்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்க அனுமதி.

★ வாள் வீச்சுப் போட்டியில் பங்குபெற்ற வீராங்கனை பவானி தேவிக்கு ரூ.2 இலட்சம் நிதியுதவி.

★ 2006–07ஆம் ஆண்டிற்கான முதலாவது தேசிய அளவிலான பள்ளிகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகளில் 170 பேர் கலந்து கொண்டு 99 பேர் தேசிய அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்றனர்.

★ ரூர்கேலா மற்றும் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற தேசிய பள்ளிகளுக்கிடையேயான பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழகத்தின் சார்பாக கலந்து கொண்டு 106 பதக்கங்கள் வென்றனர்.

★ தேசிய பெண்கள் விளையாட்டுப் போட்டிகளில் தமிழக கூடைப்பந்து அணி முதலிடம் பெற்றதுடன் தமிழக வீராங்கனைகள் ஜிம்னாஸ்டிக், நீச்சல் போட்டிகளில் அதிக அளவில் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் பெற்றனர்.

★ தானே மற்றும் மதுரையில் நடைபெற்ற தேசிய பெண்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் தமிழகத்தின் சார்பாக பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு 49 பதக்கங்கள் வென்றனர்.

★ தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள், கல்லூரி மாணவ, மாணவியர் 208 பேருக்கு ரூ.12.12 இலட்சம் ஊக்கத் தொகை வழங்கப்பட்டது.

★ விளையாட்டுப் பள்ளிகள், நவீன விளையாட்டு அரங்கங்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் தங்கும் விடுதிகளுக்கு உணவு மற்றும் செலவினங்களுக்கு ரூ.1.70 கோடி அனுமதி.

★ இரண்டு ஆண்டுகளில் நவீன விளையாட்டு அரங்கங்கள் பராமரிப்புச் செலவு மற்றும் பொது பராமரிப்புச் செலவிற்கு ரூ.15.84 கோடி அனுமதி.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மெல்போர்னில் நடைபெற்ற காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளிலும், இலங்கையில் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளிலும் பதக்கங்கள் வென்ற 38 தமிழக விளையாட்டு வீரர்களுக்கு ஒரு கோடியே 31 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசுகளை வழங்கினார். (5.10.2007)

★ 20 சிறப்பு மற்றும் கூடுதல் சிறப்பு விளையாட்டு அகாடமிகளுக்கு ரூ.1.5 கோடி அனுமதி.

★ குறுந்தூர ஓட்டம் மற்றும் குதித்தல் அகாடமிக்கு ரூ.5 இலட்சம் அனுமதி.

★ கபடி விளையாட்டு வீரர் திரு.ராஜரத்தினத்துக்கு ரூ.2,13,730 மதிப்பீட்டில் நிலம் ஒதுக்கீடு.

★ முதல் காமன்வெல்த் வாள்சண்டைப் போட்டி நடத்துவதற்கு தமிழ்நாடு பென்சிங் சங்கத்திற்கு ரூ.4 இலட்சம் நிதியுதவி.

★ சிறப்புப் பயிற்சி மற்றும் வெளிநாடுகளில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெறும் முன்னணி வீரர்களுக்கு ரூ.52.83 இலட்சம் நிதியுதவி.

★ தேசிய விளையாட்டுப் போட்டிகளில் மாநில விளையாட்டுச் சங்கங்கள் பங்குபெற ரூ.92.69 இலட்சம்.

★ பதக்கம் வென்ற பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியருக்கு ஊக்கத் தொகை ரூ.6.80 இலட்சம்.

★ சதுரங்கப் போட்டி மற்றும் படகுப் போட்டிகள் நடத்த ரூ.7 இலட்சம்.

★ மாவட்ட விளையாட்டு வளாகங்களுக்கு மத்திய, மாநில அரசு நிதியுதவியாக நாகப்பட்டினம், நாமக்கல், திண்டுக்கல், விழுப்புரம், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, திருவாரூர் மாவட்டங்களுக்கு ரூ.131.80 கோடி அனுமதி.

★ மயிலாடுதுறை, திருச்சி உள்விளையாட்டு அரங்கங்கள் கட்ட மத்திய, மாநில அரசு நிதியுதவி ரூ.115.60 இலட்சம் அனுமதி.

★ உலக திறனாளர்களைக் கண்டறிந்து பயிற்சி முகாம் நடத்திட ரூ.8 இலட்சம் அனுமதி.

★ பள்ளிகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் நடத்திட ரூ.10 இலட்சம் அனுமதி.

★ விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு விளையாட்டுச் சாதனங்கள் வழங்கிட ரூ.51.38 இலட்சம் அனுமதி.

★ சென்னை நேரு விளையாட்டு அரங்கம், சிந்தெடிக் தடகளப் பாதையை மாற்றி அமைக்க ரூ.2.50 கோடி அனுமதி.

★ திருநெல்வேலி மற்றும் சேலத்தில் சிந்தெடிக் டென்னிஸ் கோர்ட் அமைக்க ரூ.14 இலட்சம் அனுமதி.

★ மாநில விளையாட்டுகளை மாவட்ட, ஊராட்சி ஒன்றிய அளவில் நடத்திட ரூ.1.57 கோடி அனுமதி.

★ மாதாந்திரப் போட்டிகள் நடத்திட ரூ.48.26 இலட்சம் அனுமதி.

★ திறந்தவெளி டென்னிஸ் போட்டிகள் நடத்திட கடன் உதவித் தொகையாக ரூ.5 கோடி அனுமதி.

★ உலகக் கோப்பை டென்னிஸ் போட்டிகள் நடத்திட ரூ.2 கோடி அனுமதி.

★ தேனி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் நீச்சல் குளம் அமைக்க ரூ.1.21 கோடி அனுமதி.

★ கோவை எடிமடையில் மாதா அமிர்தானந்தமயி மடத்திற்கு நீச்சல் குளம் அமைக்க ரூ. 90 இலட்சம் அனுமதி.

★ சென்னை டால்பின் கிளப்பில் நீச்சல் குளம் அமைக்க ரூ.22.5 இலட்சம் அமைக்க அனுமதி.

★ நீச்சல் குளங்கள் சுகாதாரப்பராமரிப்பு மற்றும் கழிப்பிட வசதிகளுக்கு ரூ.15 இலட்சம் அனுமதி.

★ மாவட்டங்களில் சிறு விளையாட்டு அரங்குகள், பல்நோக்கு உள்விளையாட்டு அரங்குகள் உள்விளையாட்டுப் பூப்பந்து அரங்கம் அமைக்க ரூ.22.2 கோடி அனுமதி.

★ விளையாட்டு வீரர்கள் தங்கும் விடுதிகளை மேம்படுத்த மதுரை மற்றும் திருச்சி மாவட்டங்களுக்கு ரூ.66.5 இலட்சம் அனுமதி.

★ சென்னை பெரியமேடு உள்விளையாட்டு பல்நோக்கு அரங்கம் சீரமைக்க ரூ.2 கோடி அனுமதி மற்றும் மாவட்ட நவீன விளையாட்டு அரங்கங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்க ரூ. 1.2 கோடி அனுமதி.

★ மதுரை பந்தயத்திடல் மின்னொளி கூடைப்பந்துத்தளத்தை புதுப்பிக்க ரூ.50 இலட்சம் அனுமதி.

★ சிறப்புத்திட்டங்களுக்காக ரூ.1.70 கோடி, பயிற்சித்திட்டங்களுக்கு புத்துயிர் ஊட்டிட நிதியுதவி ரூ.49.8 இலட்சம் அனுமதி.

★ தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் சர்வதேச, அகில இந்திய அளவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று பல பதக்கங்களை வென்றனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், பிரான்ஸ் நாட்டில் நடைபெற்ற உலக கேரம் போட்டிகளில் சாம்பியன் பட்டம் வென்ற தமிழகத்தைச் சேர்ந்த செல்வி இளவழகிக்கு 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையினை வழங்கினார். (18.3.2008)

★ ஸ்ரீலங்காவில் நடைபெற்ற பத்தாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் பெற்றவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக ரூ.12.41 இலட்சம் அனுமதி.

★ உடற்கல்வி ஆசிரியர்களுக்கு மறுபயிற்சி முகாம் நடத்தியமைக்கு ரூ.14.5 இலட்சம் அனுமதி.

★ ஆசிய கப் வளைகோல்பந்து நடத்தியமைக்கு ரூ.25 இலட்சம் அனுமதி.

★ திறன் மேம்பாட்டு மையங்களுக்கு ரூ.30 இலட்சம் அனுமதி.

★ 15ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றுப் பதக்கங்கள் பெற்றவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்கியமைக்கு ரூ.11.25 இலட்சம் அனுமதி.

★ ஊராட்சி ஒன்றிய அளவில், மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவிலான போட்டிகள் நடத்துவதற்கு ரூ.77.70 இலட்சம் அனுமதி.

★ மாநிலத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்க ரூ.5 கோடி அனுமதி.

★ ஆசிய கபடி சேம்பியன்ஷிப் 2007இல் செல்வி எஸ்.கவிதா பங்கேற்றுச் சாதனை புரிந்தமைக்கு ரூ.5 இலட்சம் அனுமதி.

★ 20–20 வரிசை உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் பங்கேற்ற தமிழக கிரிக்கெட் வீரர் திரு தினேஷ் கார்த்திக் அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்கியமைக்கு ரூ.5 இலட்சம் அனுமதி.

★ அசாம் கௌகாத்தியில் நடைபெற்ற 33ஆவது தேசிய போட்டிகளில் தமிழக அணி பங்கேற்றமைக்கு ரூ.9.61 இலட்சம் அனுமதி.

★ 2007 உலக சதுரங்கப் போட்டியில் திரு. விஸ்வநாதன் ஆனந்த் அவர்கள் கலந்து கொண்டு சாதனை படைத்தமைக்கு உயரிய ஊக்கத் தொகை ரூ.25 இலட்சம் அனுமதி.

★ உலக சதுரங்கப் போட்டியில் செல்வி இளவழகி கலந்து கொண்டு சாதனை படைத்தமைக்கு ரூ.10 இலட்சம் அனுமதி.

★ திருநெல்வேலி மற்றும் ஈரோட்டில் விளையாட்டு விடுதிகள் கட்டுவதற்கு ரூ.56 இலட்சம் அனுமதி.

★ அனைத்து மாவட்டங்களிலும் கிராமப்புற விளையாட்டு மையங்கள் ஏற்படுத்தியமைக்கு ரூ.58 இலட்சம் அனுமதி.

★ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய நேரு பூங்கா விளையாட்டு வளாகத்தில் செயற்கை இழை டென்னிஸ் சிறப்பு மையம் ஏற்படுத்த ரூ.3 இலட்சம் அனுமதி.

★ கழைக்கூத்தாடிகள் மற்றும் மீனவர்களுக்கிடையே விளையாட்டுக்களை மேம்படுத்த ரூ.8.6 இலட்சம் அனுமதி.

★ கைப்பந்து விளையாட்டு வீரர் திரு.ஜி.இ.ஸ்ரீதரனுக்கு உயர் வருவாய் பிரிவு வீடு ஒதுக்கீடு வழங்கிட ரூ.15 இலட்சம் அனுமதி.

★ தெற்காசிய நாடுகள் கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகளின்போது கட்டப்பட்ட நவீன விளையாட்டரங்கங்களைச் சிறப்புப் பழுதுகள் பார்ப்பதற்கு நிதியுதவி ரூ.21.05 இலட்சம் அனுமதி.

★ மெல்போர்னில் நடைபெற்ற 18ஆவது காமன்வெல்த் விளையாட்டில் பதக்கம் வென்றவர்களுக்கும், பயிற்சியாளர்களுக்கும் (ஊக்கத் தொகை) வழங்கிட ரூ.1.035 கோடி.

★ பயிற்சி இயக்குநர்கள், விளையாட்டுப் பயிற்சி ஆசிரியர் சிறந்த பயிற்சியாளர்கள் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு முதலமைச்சரின் விருது வழங்கிட ரூ.8.4 இலட்சம் அனுமதி.

★ விளையாட்டுப் பயிற்சி ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சிகள் அளித்திட ரூ.13.25 இலட்சம் அனுமதித்து 6.12.2006 மற்றும் 12.1.2007இல் ஆணைகள்.

★ 2001–02 மற்றும் 2005–06 சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது வழங்கிட ரூ.22 இலட்சம் அனுமதி.

★ திருச்சியில் உள்விளையாட்டரங்கம் கட்ட, மத்திய அரசு மானியம் ரூ.67.66 இலட்சமும், மாநில அரசின் பங்குத் தொகை ரூ.30 இலட்சமும் அனுமதிக்கப்பட்டது.

★ ★ ★



# ஓங்கி வளரும் வனத்துறையின் சாதனைகள்

திரு. **என்.செல்வராஜ்** அவர்கள்
மாண்புமிகு வனத்துறை அமைச்சர்

**வனத்துறை**

**தனியார் நிலங்களில் மரம் வளர்த்தல்**

★ 2007–08ஆம் ஆண்டில் இப்புரட்சிகரமான திட்டத்தின் மூலம் தேக்கு, சவுக்கு, பெருமரம், புங்கன், மலைவேம்பு, புளியன் போன்ற மரங்களின் தரமான நாற்றுக்கள் 1 கோடி உற்பத்தி செய்து, 28,000 ஏக்கர் பரப்பில் இலவசமாக நட்டுக் கொடுக்கப்பட்டுள்ளது. நடப்பட்ட கன்றுகளை பராமரிக்க ஊக்கத்தொகையாக ரூ.3 கோடி வழங்கப்படுகிறது.

**நகர்ப்புற வனவியல்**

★ வேம்பு, புங்கன், மகிழம், மஞ்சக்கொன்றை, சரக்கொன்றை போன்ற மர வகைகள் 2007–08ஆம் ஆண்டில் 1,17,647 மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, மாநகராட்சிகளிலும் அவற்றின் புறநகர்ப்பகுதிகளிலும் நடப்பட்டுள்ளன.

**படுகை நிலங்களில் தேக்கு மரங்கள் வளர்த்தல்**

★ தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, ஈரோடு, சேலம், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களின் கால்வாய் ஓரங்களில் 6,440 எக்டர் பரப்பில் ரூ.1,016.88 செலவில் தேக்கு மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

**கடலோரப்பகுதி மேலாண்மை**

★ 2006–07 ஆம் ஆண்டில் 2,778 எக்டேரில் கடலோரத்தடுப்புக் காடுகளும், 1,462 எக்டேர் நிலப்பகுதியில் சதுப்புநிலக்காடுகளும் ரூ.1,325.55 இலட்சம் செலவிலும் 2007–08ஆம் நிதியாண்டில் கடலோரத் தொடர் தடுப்பு, சதுப்புநிலத் தோட்டங்களுக்கான பராமரிப்புப் பணிகள் ரூ.214.16 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**அரசு நிறுவனங்களுக்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் செடிகளை இலவசமாக வழங்குதல்**

★ 2006–07 மற்றும் 2007–08 ஆம் ஆண்டுகளில் 2.08 இலட்சம் உயரமான மரக்கன்றுகள் ரூ.62.50 இலட்சம் மதிப்பீட்டில் வளர்க்கப்பட்டு பள்ளி, கல்லூரிகள், கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள் மற்றும் பொது சுகாதார நிலைய வளாகங்களில் நடுவதற்கு இலவசமாக வழங்கப் பட்டுள்ளது.



தனியார் காடுகளில் மரம் வளர்ப்பு – திருவண்ணாமலை போளூர் பிரிவு

★ 2000–01 முதல் 2003–04 வரையிலான நான்கு ஆண்டுகளுக்கு சமூக/பண்ணைக் காடுகள் ஏல வருவாயில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய பங்குத் தொகையான ரூ.15.16 கோடி உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**தரம் குன்றிய காடுகளை மேம்பாடு செய்தல்**

**தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம்**

★ இந்தத்திட்டக்காலத்தில் 150 பழங்குடியினர் கிராமங்கள் உட்பட 800 கிராமங்களின் அருகாமையிலுள்ள 1,77,500 எக்டேர் காடுகளில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

★ 96,750 காடுவளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 435 கிராம வனக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1,662 மகளிர் சுய உதவிக்குழுக்கள் உருவாக்கப்பட்டு 24,284 மகளிர் பயன்பெற்றுள்ளனர். 1,980 தடுப்பணைகள், 600 கசிவு நீர்க் குட்டைகள், 548 கிராம வளர்ச்சிப் பணிகள் மற்றும் 319 கட்டடங்கள் கட்டப் பட்டுள்ளன. 81.96 இலட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

**12ஆவது நிதிக்குழு பரிந்துரையின் கீழ் வனப் பராமரிப்புப் பணிகள்**

★ ரூ.1,325.91 இலட்சம் மதிப்பீட்டில் நீலகிரி மற்றும் பழனி மலைகளில் 300 எக்டேர் தரம் குன்றிய காடுகளில் சுற்றுச்சூழல் மீட்பு மற்றும் பாதுகாப்புப் பணிகள், சாலைகளின் மேம்பாடு, வனத்துறைக்கட்டடங்களைப் பராமரித்தல் மற்றும் பழுது பார்த்தல் போன்ற பணிகள் ரூ.517.29 இலட்சம் மதிப்பீட்டில் 150 எக்டேர் சோலை மரக்காடுகள் உருவாக்குதல், சாலைகள் மேம்பாடு மற்றும் வனத்துறை கட்டடப் பராமரிப்புப் பணிகள் மற்றும் மேம்பாட்டுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**பழங்குடியினர் நலன்**

★ ஜவ்வாது மலை மற்றும் இந்திராகாந்தி வன உயிரினச்சரணாலயப் பகுதிகளில் தமிழ்நாடு வனத்துறை பழங்குடியினருக்கான 19 பள்ளிகளைச் சிறப்பாக நடத்தி வருகிறது. இப்பள்ளிகளின் உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் புறப்பாதுகாப்பு

பணிகளுக்கான திட்டத்திற்கு ரூ.507.05 இலட்சம் நபார்டு வங்கி உதவி அனுமதிக்கப்பட்டு, 2007–08ஆம் ஆண்டில் ரூ.101.42 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது.

**மகளிர் மேம்பாடு**

★ காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 1,662 மகளிர் சுயஉதவி குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**நீர்ப்பிடிப்புப் பகுதி மேலாண்மை**
**மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

★ இத்திட்டத்தின் கீழ், ரூ.442.73 இலட்சம் செலவில் மேம்பாடு மற்றும் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்**

★ இத்திட்டத்தின் கீழ் நீர்பிடிப்புப் பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ.432.30 இலட்சங்கள்.

**வன உயிரினத் திட்டங்கள்**

★ களக்காடு, முண்டந்துறை சரணாலயங்கள், 2007 ஆம் ஆண்டு ஆனைமலை வன உயிரினச் சரணாலயம் மற்றும் முதுமலை வன உயிரினச் சரணாலயம் ஆகியவை புலிகள் காப்பகங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

★ வன விலங்குகள் தாகம் தீர்க்க வனப்பகுதியில் நீர்த்தேக்கத்தொட்டிகள், தடுப்பணைகள் மற்றும் கசிவு நீர்க்குட்டைகள் அமைக்கப்படுகின்றன. வனவிலங்குகள் வனப்பகுதியிலிருந்து வெளியேறி, உயிர் சேதங்கள் மற்றும் பயிர், பொருட்சேதங்கள் ஏற்படுத்துவதைத் தவிர்க்கும் பொருட்டு, தமிழகத்தில் முதன் முறையாக மிக அதிக அளவில் சூரிய மின்வேலி, பாதிப்பு நிறைந்த பகுதிகளைக் கண்டறிந்து, வனங்களின் எல்லைப்பகுதியில் ரூ.4.745 கோடி செலவில் 578.25 கி.மீ தூரம் மின்வேலி அமைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் முதன்முறையாக இழப்பீடு தொகை வழங்குவது அங்கீகரிக்கப்பட்டு உயிரிழப்பு, காயமடைந்த நபர்கள், பயிர், கால்நடை மற்றும் பொருள் சேதத்திற்கு சேர்த்து ரூ.157.87 இலட்சம் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

★ வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் இரவுக் கானக உலா அமைப்பை ரூ.256 கோடி திட்டச்செலவில் ஏற்படுத்த முடிவு மேற்கொள்ளப்பட்டு, 2007–08ஆம் ஆண்டில் ரூ.5 கோடிக்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெறப்பட்ட ரூ.4.87 கோடி நிதியுதவியுடன், வண்ணத்துப்பூச்சி பூங்காவை உருவாக்கும் பணி தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, பணிகள் துவங்கப் பெற்றுள்ளது.

★ பல்லுயிரினப்பரவல் பாதுகாப்பு, அவற்றின் நிலையான பயன்பாடு, உயிரின வளங்களின் பயன்பாட்டிலிருந்து கிடைக்கும் பலன்களின் சரியான பங்கீடு மற்றும் உயிரின வளங்களின் பயன்பாட்டிற்கு வழங்கும் ஒப்புதல்களை முறைப்படுத்துதல்

போன்றவற்றை மாநில அளவில் முடிவெடுக்க பல்லுயிரினப் பரவல் வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.

**வனப் பாதுகாப்பு**

- ★ **2007–08**ஆம் ஆண்டில் மட்டும் **583.1** எக்டேர் வனப்பரப்பு ஆக்கிரமிப்பாளர் பிடியிலிருந்து மீட்டெடுக்கப்பட்டு, **31,998** நிலையான எல்லைக்கற்கள், நிறுவப் பட்டுள்ளன.
- ★ **2006–07** ஆம் ஆண்டில் ரூ.**10.28** கோடி மதிப்பீட்டில் சாலைகள் மேம்பாடு/ பராமரிப்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- ★ இரண்டு புதிய வனக்கோட்டங்கள் பெரம்பலூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் உருவாக்கப்பட்டுள்ளன.
- ★ கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள செங்கோட்டை வட்டம் ஆகியவற்றில் உள்ள தேக்கு மரம் மற்றும் ஈட்டி மரத்திற்கு உரிமைத் தொகை வசூலிப்பது ரத்து செய்ய ஆணை வழங்கப்பட்டுள்ளது.
- ★ 100 ஆண்டுகளுக்கு மேலாக வனத்துறையின் வசமுள்ள சாலைகளை விவசாயிகள், பழங்குடியினர், இதர மரபு வழி வன வாழ் மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் பயன்பாட்டிற்காக தற்பொழுது வசூலிக்கப்படும் உரிமக்கட்டணம் நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

**வனத்துறையில் மனித வள மேம்பாடு**

- ★ வன நிருவாகத்தை மேம்படுத்தவும், வனவாழ் மக்களின் நலனைப் பாதுகாக்கவும், தொழில்நுட்பத்திறனை ஊக்குவிக்கவும், வனக்கொள்கையை முழுவதுமாகச் செயல்படுத்தவும் வழிமுறைகளை ஆராய்ந்து பரிந்துரைக்க ஏற்படுத்தப்பட்டுள்ள வன ஆணையம், இந்தியாவில் மாநில அளவில் அமையப்பெற்ற முதல் வன ஆணையமாகத் திகழ்கின்றது.
- ★ குறைந்த பட்ச ஊதியத் திட்டத்தின் கீழ் தமிழக வனத்துறையில் பணியாற்றிவரும் சமூக வன ஊழியர்கள் / தோட்டக் காவலர்கள் ஊதியமானது ரூ.**817.50** லிருந்து உயர்த்தி ரூ.**2,126** மாத ஊதியமாக செப்டம்பர் **2006** முதல் வழங்கப்பட்டு வருகிறது.
- ★ வனத்துறையிலுள்ள களப்பணியாளர்களுக்கு மாதமொன்றுக்கு வழங்கப்பட்டு வந்த சலவைப்படி ரூ.**30**லிருந்து ரூ.**100**ஆக வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. **2007–08** ஆம் ஆண்டில் களப்பணியாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட காலணிகள் வழங்கப்பட்டுள்ளன.

**தேயிலைத் தோட்டக்கழகத் தொழிலாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட ஊதியம்**

- ★ தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கான ஊதிய ஒப்பந்தம் **5** ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையில் இருந்தது. புதிய ஒப்பந்தப்படி மேம்படுத்தப்பட்ட ஊதியம் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

★ ★ ★



# ரூ.4,690 கோடி செலவில் 31,740 கி.மீ. நீளச் சாலைகள் மேம்பாடு

திரு. **வெள்ளக்கோவில் மு.பெ.சாமிநாதன்** அவர்கள்
மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர்

## நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

**சாலைமேம்பாட்டுப்பணிகள்**

★ 2006க்குப் பின் கடந்த 2 ஆண்டுகளில் மொத்தம் 31,740 கி.மீ நீளச் சாலைகளில் மேம்பாட்டுப் பணிகளும் பராமரிப்புப் பணிகளும் ரூ.4,690 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

★ கிராமப் பகுதிகளில் பேருந்து செல்லும் சாலைகள் மற்றும் பிற ஊராட்சி ஒன்றியச் சாலைகளை தார்ச்சாலைகளாக மாற்றும் திட்டத்தின் கீழ் 3,012 கி.மீ. நீளச் சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

★ ஆதி திராவிடர் குடியிருப்புகளை இணைக்கும் மாவட்ட இதர சாலைகளை மேம்படுத்தும் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ரூ.94.15 கோடி மதிப்பில் 700 கி.மீ. நீளச்சாலைகள் மேம்படுத்தப் பட்டுள்ளன. முந்தைய 5 ஆண்டுகளில் பராமரிப்பு இன்றி இருந்த ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குச் செல்லும் 1,405 கி.மீ. நீள இணைப்புச் சாலைகள் ரூ.156 கோடி மதிப்பில் பராமரிக்கப்பட்டுள்ளன. இதனால் 105 ஆதிதிராவிடர் குடியிருப்புகள் தார்ச் சாலை வசதிகள் பெற்றுள்ளன.

★ பராமரிப்பின்றியிருந்த ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் சுமார் ரூ.250 கோடி செலவிலும் கரும்புத் திட்டச் சாலைகள் மற்றும் வேளாண் அபிவிருத்தித் திட்டச் சாலைகள் புதுப்பிக்கும் பணிகளும் ரூ.35 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு புதுப்பிக்கப்பட்டன.

★ தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாநில நெடுஞ்சாலைகளையும் படிப்படியாகக் குறைந்தபட்சம் இருவழித்தடமாக உயர்த்துவது என்ற அரசின் கொள்கைப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெறுகிறது.

**பாலப்பணிகள்**

★ கடந்த 2 ஆண்டுகளில் 343 பாலப் பணிகள் ரூ.214 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

★ ஆற்றுப் பாலங்களில் திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள பேரணைப் பாலம் ரூ.5 கோடி மதிப்பிலும், காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள திருமுக்கூடல் பாலம் ரூ.7.70 கோடி மதிப்பிலும், குமரி மாவட்டத்தில் மங்காடு பாலம் ரூ.2 கோடி மதிப்பிலும், 2007–08ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. கடலூர்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தமிழ்நாடு அரசுத் தேர்வாணையம் மூலம் நெடுஞ்சாலைத்துறைக்குப் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 211 உதவிப் பொறியாளர்களுக்கு பணி நியமன ஆணையினையும் மற்றும் 77 தினக்கூலிப் பணியாளர்களுக்கு பணி நிரந்தர ஆணையினையும் மற்றும் 35 நபர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணையினையும் வழங்கினார். (7.12.2007)

மாவட்டத்தில் விருத்தாசலம் நகரில் மணி முக்தா நதி பாலம் ரூ.5.50 கோடி மதிப்பிலும், திருவண்ணாமலை மாவட்டத்தில் தண்டராம்பட்டு அருகில் ராயண்டபுரத்தில் பாலம் ரூ.3.65 கோடி மதிப்பிலும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் மாணிக்கப்பங்கு அருகே பாலம் ரூ.1.30 கோடி மதிப்பிலும், மடவாமேடு அருகில் பாலம் ரூ.1.30 கோடி மதிப்பிலும், வேலூர் மாவட்டத்தில் கோமேஸ்வரம் பாலம் ரூ.1.70 கோடி மதிப்பிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் இட்டாமொழி பாலம் ரூ.1.30 கோடி மதிப்பிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் சாலியமங்கலம் பாலம் ரூ.2.10 கோடி மதிப்பிலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் குமாரலிங்கம் பாலம் ரூ.1.25 கோடி மதிப்பிலும், புதுக்கோட்டை மாவட்டம் கோங்குடி பாலம் ரூ.1.50 கோடி மதிப்பிலும், தேனி மாவட்டம் மேல்மங்களம் பாலம் ரூ.1.10 கோடி மதிப்பிலும் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

★ திருப்பத்தூர், கரூர், திருச்சி–பாலக்கரை, கோவை ஒண்டிபுதூர் மற்றும் உக்கடம், சேலம்–ஓமலூர், கோவில்பட்டி, மதுரை–கூடல் நகர் ஆகிய இடங்களில் 8 இரயில்வே மேம்பாலங்கள் ரூ.92 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

★ நபார்டு வங்கியின் உதவியுடன், கரூர், தஞ்சாவூர், கடலூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் முக்கிய ஆறுகளின் குறுக்கே 4 பெரிய பாலங்களைக் கட்ட மொத்தம் ரூ.121.50 கோடி மதிப்பில் திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ திருநெல்வேலி புறவழிச்சாலையில் செல்லப்பாண்டியன் சிலை அருகில் ரூ.16.40 கோடி செலவில் மேம்பாலம் கட்டுவதற்கு 4.12.2007ல் அரசு ஒப்புதல் வழங்கியது.

**சிறப்புத் திட்டங்கள்**

★ இராஜீவ் காந்தி தகவல் தொழில்நுட்ப சாலையின் முதல் கட்டமாக தரமணி – சிறுசேரி 6 வழித்தட ஓடுதளப்பணிகள் முடிவுற்றுள்ளன. 2ஆம் கட்டமாக சிறுசேரி முதல் மாமல்லபுரம் வரையிலான பகுதியையும் 6 வழிப்பாதையாக அகலப்படுத்தும் திட்டத்திற்கான நில எடுப்புக்கு ரூ.70 கோடி மதிப்பில் ஒப்புதல் அளிக்கப்பட்டு பூர்வாங்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ திருப்பூர் நகர சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 98.60 கி.மீ. நீளச் சாலைப் பணிகளும் 8 பாலப் பணிகளும் ரூ.70 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு 70.70 கி.மீ. நீளச் சாலைப் பணிகள் ரூ. 20.97 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

★ கோயம்புத்தூர் நகரில் தண்டுமாரியம்மன் கோவில் முதல் நீலாம்பூர் வரையுள்ள சேலம்–கொச்சி சாலையில் (அவினாசி சாலை) போக்குவரத்து நெருக்கடியைத் தவிர்க்க ரூ.27 கோடி மதிப்பில் ஆறு வழிச் சாலையாக அகலப்படுத்தவும், வழியில் வரும் குறுகிய 13 சிறுபாலங்களை அகலப்படுத்தவும் ஆணை வழங்கப்பட்டு இதுவரை ரூ.16.25 கோடி மதிப்பிலான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

★ மதுரையைச் சுற்றியுள்ள கிராமப்பகுதிகளில் மதுரை மாநகருடன் இணைக்கும் சாலைகளை மேம்படுத்துவதற்காக 122.3 கி.மீ நீளமுள்ள 14 பணிகள் ரூ.70.60 கோடி மதிப்பில் அனுமதிக்கப்பட்டு பணிகள் நடை பெற்று வருகின்றன.

**தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்**

★ உலக வங்கி நிதியுதவித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட, 742 கி.மீ. நீள தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் நிலவிய சுணக்கம் நீக்கப்பட்டு தேவைப்பட்ட 395.42 ஹெக்டேர் நிலத்தில் 13 ஹெக்டேர் நிலம் தவிர 382.42 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

★ 2006க்குப் பின் நில எடுப்பு – சாலைப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டு, இதுவரை சுமார் 380 கி.மீ சாலைப் பணிகள் முடிவுற்றுள்ளன. இத்திட்டச் செலவு ரூ.385 கோடி என்பது ரூ.700 கோடி அளவிற்கு அதிகரித்து மொத்தச் செலவு ரூ.1,085 கோடியாக உயர்ந்துள்ளது. இத்திட்டத்தை ஆய்வு செய்த உலக வங்கிக் குழுவினர் இத்திட்டம் மிகவும் திருப்திகரமாகச் செயல்படுவதாக தெரிவித்துள்ளனர்.

**தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் சாலை மேம்பாட்டுப் பணிகள்**

★ 195 கி.மீ நீள தேசிய நெடுஞ்சாலைப் பணிகள் முடிக்கப்பட்டு 1,184 கி.மீ நீளச் சாலைகளில் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 1,280 ஹெக்டேர் நிலம் ஆணையத்திற்காக கையகப்படுத்தப் பட்டுள்ளது. திருவலம் மற்றும் குழித்துறை ஆகிய இடங்களில் பெரிய பாலங்கள் 2007–08ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டன.

**கணினி மயமாக்குதல்**

★ இத்துறையின் பல்வேறு பிரிவுகளில் உள்ள சுமார் 750 அலுவலகங்களுக்கு 1,779 கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. இக்கணினிமயமாக்கும் திட்டம் ரூ.14.77 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கணினி மூலமாக ஒப்பந்தப்புள்ளி பெறும் முறை அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

**சாலைகளை நிலை உயர்த்துதல்**

★ சாலை வகைப்பாட்டை மாற்றி நிலை உயர்த்தும் திட்டத்தின்கீழ் கடந்த 2 ஆண்டுகளில் 6,475 கி.மீ நீளச் சாலைகள் நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

**பிற சாதனைகள்**

★ துறையின் நிருவாகத்தைச் சீர்படுத்தும் வகையில் தருமபுரி மாவட்டத்தில் புதிய கோட்டமும், திருவள்ளூர் மாவட்டம் பள்ளிப்பட்டில் புதிய உட்கோட்டமும் தொடங்கப்பட்டது.

★ மாநிலம் முழுவதும் 28 விபத்துப் பகுதிகளை ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு திட்டத்தின்கீழ் மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

★ பெரம்பலூர், ஒசூர், இராசிபுரம், தாராபுரம், திருத்துறைப்பூண்டி, தஞ்சாவூர், எட்டுக்குடி, பட்டுக்கோட்டை, ஈரோடு மற்றும் காஞ்சிபுரம் ஆகிய நகரங்களுக்கு புறவழிச்சாலை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**பணியாளர் நியமனங்கள்**

★ நெடுஞ்சாலைத் துறையில் பல்வேறு பதவிகளில் காலியாக இருந்த பணியிடங்களை நிரப்ப அரசு முனைப்புடன் உள்ளது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக 211 உதவிப் பொறியாளர்கள் 7.12.2007 அன்று பணி நியமனம் செய்யப்பட்டனர். 51 இளநிலை பொறியாளர் பணியிடங்கள், பதவி உயர்வுகள் மூலம் நிரப்பப்பட்டன.

★ 300 சாலைப் பணியாளர் பணியிடங்களை கருணை அடிப்படை பணி நியமன முறை மூலம் நிரப்ப அனுமதி வழங்கப்பட்டு, இதுவரை 144 பேருக்குப் பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.

★ 77 தினக்கூலிப் பணியாளர்களின் பணிகள் நிரந்தரமாக்கப்பட்டுள்ளன.

★ தன்னிறைவுத் திட்டம் அல்லாத இதரத் திட்டங்களில் 1986ஆம் ஆண்டுக்கு முன் பணிபுரிந்து பணிநீக்கம் செய்யப்பட்ட 45 பேர் சாலை ஆய்வாளர் பதவியில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

**சாலைகளில் வேகத்தடைகள்**

★ மாநிலம் முழுவதும் இருந்த 1,622 சீரற்ற வேகத் தடைகள் கண்டறியப்பட்டு சரி செய்யப்பட்டன.

**நெடுஞ்சாலைகளில் மரக்கன்றுகள்**

★ 2007–08ல், மாநிலம் முழுவதும் நெடுஞ்சாலையோரங்களில் 3,93,000 புதிய மரக் கன்றுகள் நடப்பட்டன.

**அரசு சாலைகளின் எல்லைகளை வரையறுத்தல்**

★ நெடுஞ்சாலைத்துறையின் பொறுப்பிலுள்ள பல்வேறு அரசு சாலைகளின் எல்லைகளை வரையறுத்து எல்லைக்கற்கள் நடும்பணி முதற்கட்டமாக மாநில நெடுஞ்சாலைகளில் மேற்கொள்ளப்பட்டது. இம்முறை பிற சாலைகளுக்கும் படிப்படியாக விரிவாக்கப்படும். இதன் மூலம் சாலைப் பகுதிகளின் முழு அளவைத் தெரிந்துக் கொண்டு சாலைகளை அகலப்படுத்த உதவும்.

★ ★ ★



# 74.71 இலட்சம் குழந்தைகளுக்கு வாரந்தோறும் 3 முட்டைகள்

திருமதி. **பி. கீதாஜீவன்** அவர்கள்
மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்

சமூகநலத்துறை

★ சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் 2 முதல் 15 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட வாரம் ஒரு முட்டை என்பது வாரம் இரண்டு முட்டைகளாக வழங்கப்பட்டது. 15.7.2007 முதல் வாரம் மூன்று முட்டைகளாக உயர்த்தி வழங்கப்பட்டது. இதன்மூலம் 74.71 இலட்சம் குழந்தைகள் பயனடைகின்றனர். குழந்தைகள் மையங்களில் 1 வயது முதல் 2 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு வாரம் ஒரு முட்டை வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் 2.40 இலட்சம் குழந்தைகள் பயனடைகின்றனர்.

★ மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்பட்டதோடு, நிதியுதவியும் ரூ.10,000லிருந்து ரூ.15,000ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 1,29,222 பெண்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவி ரூ.194 கோடி. இவ்வாண்டில் நிதியுதவி ரூ.20,000 என அதிகரிப்பு.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்,
பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்து,
பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவுடன் வாரம் மூன்று முறை முட்டை வழங்கும்
திட்டத்தைத் தொடங்கிவைத்தார்.




மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், தூத்துக்குடி மாவட்டத்தில் இலவச எரிவாயு இணைப்புடன் அடுப்புகளை வழங்கினார்.

★ முதியோர், ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர், ஆதரவற்ற விதவையர், ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்கள், கணவனால் கைவிடப்பட்ட / ஆதரவற்ற பெண்களுக்கு வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை ரூ.200லிருந்து ரூ.400ஆக உயர்த்தப்பட்டது.

★ கடும் ஊனமுற்றோர் பராமரிப்பு உதவித் தொகை ரூ.200லிருந்து ரூ.500ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. மன வளர்ச்சி குன்றியோருக்கும், பராமரிப்பு உதவித் தொகையாக ரூ.500 வழங்கப்பட்டது. 30,000 பயனாளிகள் பயனடைகின்றனர்.

★ ஊனமுற்றோரை மணந்துகொள்ளும் சாதாரண நபர்களுக்கு வழங்கப்பட்டு வந்த திருமண நிதியுதவி ரூ.10,000லிருந்து ரூ.20,000ஆக உயர்வு.

★ தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்புத் தேர்வுகளில் மாவட்ட மற்றும் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் பார்வையற்ற மாணவ, மாணவிகளை ஊக்கப்படுத்தும் வண்ணம் பரிசுத் தொகை வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

★ காதுகேளாத சிறு குழந்தைகளுக்கு சிகிச்சை அளித்து, சாதாரணப் பள்ளிகளில் பயில 10 மாவட்டங்களில் உட்படுத்தப்பட்ட கல்வி மையங்கள்.

★ மனவளர்ச்சி குன்றிய இளம் குழந்தைகளின் செயல்திறனை அதிகரிக்கும் வகையில் பயிற்சி அளிக்கவும், அவர்களின் மறுவாழ்விற்கு உதவும் வண்ணம் அவர்களின் பெற்றோர் / பாதுகாவலரைப் பயிற்றுவிக்கவும் 30 மாவட்டங்களில் ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

★ ஊனமுற்றோருக்கு தனியாக ஒரு நல வாரியம்.

★ டாக்டர் தருமாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவி திட்டப் பயனாளிகளின் வயது உச்சவரம்பு 35 என இருந்தது நீக்கப்பட்டுள்ளது.

★ 1,500 சத்துணவு மையங்கள் எரிவாயு இணைப்பு, குக்கர்கள் வழங்கப்பட்டு, நவீனப்படுத்த ரூ.300 இலட்சம்.

★ 3,940 குழந்தைகள் மையங்கள் நவீனப்படுத்த ரூ.2.82 கோடி.

★ உடல் ஊனமுற்றவர்கள் மோட்டார் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வண்டிகள் வாங்க ரூ.50 இலட்சம் மானியம்.

★ மகளிர் ஆணையத்திற்கு சட்ட அங்கீகாரம்.

★ ★ ★



# மாணவ, மாணவியர் விடுதிகளில் கூடுதலாக 2,000 இடங்கள்

திருமதி. **ஆ. தமிழரசி** அவர்கள்
மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

**உயர்நிலை விழிப்பு மற்றும் கண்காணிப்புக்குழு**

★ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் 1989ன் கீழ் உருவாக்கப்பட்ட வன்கொடுமைத் தடுப்பு விதிகள் 1995 விதி 16ன் படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையின் கீழ் மாநில அளவிலான உயர்நிலை விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு 3.8.2006 அன்று திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

**இலவச மிதிவண்டிகள்**

★ 2006–07ஆம் ஆண்டில் 13 கோடியே 61 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் செலவில் 65,609 ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிட மாணவர்களுக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கப்பட்டது. 2007–08ஆம் ஆண்டில், 71,042 மாணவியருக்கு ரூ.1502.79 இலட்சம் செலவிலும் 63,132 மாணவர்களுக்கு ரூ.1,397.35 இலட்சம் செலவிலும் மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

**பொது அறிவை வளர்க்கப் பத்திரிகைகள்**

★ இந்திய ஆட்சிப்பணி மற்றும் அரசு உயர் பணிகளுக்கான தேர்வுகளுக்குத் தயார் செய்ய உதவும் பொருட்டு, மாணவர்களின் பொது அறிவை வளர்க்கும் நோக்கத்தை கருத்தில் கொண்டு "Competitive Success Review" போன்ற பொது அறிவுப் பத்திரிகைகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் அனைத்து உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கும், விடுதிகளுக்கும் முதன் முறையாக 2006–07ஆம் ஆண்டு முதல் அரசுச் செலவில் வழங்கப்பட்டு வருகிறது. ஒரு ஆண்டிற்கு ஆகும் மொத்தச் செலவினம் ரூ.5.50 இலட்சம்.

**சிறப்புக் கட்டணம் நீக்கம்**

★ 2006– 07ஆம் ஆண்டில் 10,73,199 மாணவ, மாணவியர் பயன் பெறும் வகையில் 10ஆம் வகுப்பு வரை சிறப்புக் கட்டணம் (Special Fees)




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் இதர வகுப்பைச் சார்ந்த 11,12ஆம் வகுப்பு பயிலும் மாணவ–மாணவியர்களுக்கு இலவச மிதிவண்டிகளை வழங்கினார். (14.1.2008)

நீக்கம். 2007–08ஆம் ஆண்டில் 12,15,200 மாணவ, மாணவியர் பயன்பெற்றனர். 10ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கு மாநில சிறப்பு உதவித் தொகையாக 50,876 மாணவ, மாணவியருக்கு ரூ.3.97 கோடி வழங்கப்பட்டது.

**சிறப்பு உதவித்தொகை**

★ 10ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கு மாநில சிறப்பு உதவித் தொகையாக 33,373 மாணவ, மாணவியருக்கு ரூ.3.97 கோடியும், 2007–08ஆம் ஆண்டில் சிறப்பு உதவித் தொகையாக 50,876 மாணவ, மாணவியருக்கு ரூ.3.97 கோடியும் வழங்கப்பட்டது.

**100 விழுக்காடு மாணவர் சேர்க்கைக்காக**

★ பள்ளிச் சேர்க்கையை 100 விழுக்காடாக உறுதிப்படுத்திடும் வகையில் 3ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரையில் கல்வி பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பெண் குழந்தைகள் 60,000 பேருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.50 வீதம் 10 மாதங்களுக்கு மொத்தம் ரூ.3 கோடி செலவில் உதவித் தொகை வழங்கவும், இதே போன்று 6ஆம் வகுப்பில் சேர்ந்து கல்வி பயிலும் மாணவியர் கல்வியைத் தொடர ஊக்குவிக்கும் வகையில் 30,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100 வீதம் 10 மாதங்களுக்கு மொத்தம் ரூ.3 கோடி செலவில் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளன.

**மாணவ, மாணவிகளுக்கு சிறப்புப் பயிற்சி**

★ ஆதிதிராவிடர் நல உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியருக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்க ரூ.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளன.

★ 208 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பயனாளிகளுக்கு தட்டெழுத்து, சுருக்கெழுத்து, பொது அறிவு, கணிதம் மற்றும் கணினிக் கல்வி ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்க ரூ.5.56 இலட்சம் மத்திய சிறப்பு நிதியிலிருந்து விடுவித்து 29.1.2007 அன்று அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**மாணவ, மாணவிகளுக்குச் சீருடைகள்**

★ 2006–07ஆம் கல்வி ஆண்டு முதல் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் பள்ளி மற்றும் உண்டி உறைவிட பள்ளி, ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு வழங்கப்படும் சீருடைகளின் வடிவமைப்பில் மாறுதல் செய்து 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவிகளுக்குச் சுடிதாரும், 8ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முழுக் கால் சட்டையும் வழங்கப்பட்டது. 2007–08ஆம் ஆண்டில் 1,58,555 மாணவர்களுக்கும், 1,32,987 மாணவியருக்கும் ரூ.1,500.96 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

**தட்டெழுத்து – சுருக்கெழுத்துப் பயிற்சி**

★ 20 மாவட்டங்களில் 1,594 மாணவ/மாணவிகளுக்கு தட்டெழுத்துப் பயிற்சி அளிப்பதற்காகவும், 186 மாணவ/மாணவிகளுக்கு சுருக்கெழுத்துப் பயிற்சி அளிப்பதற்காகவும் ரூ.14,11,950 மத்திய சிறப்பு நிதியிலிருந்து விடுவிக்கப் பட்டுள்ளது.

**விடுதி மாணவர்கள் நலன்**

★ ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவ, மாணவியருக்கு சோப்பு, எண்ணெய் முதலியவைகள் வாங்கவும், மாணவர்களின் முடிவெட்டும் செலவுகளுக்காகவும், மாதந்தோறும் வழங்கப்படும் சில்லரைச் செலவினம் பள்ளி மாணவர்களுக்கு ரூ.15 என்பது ரூ.25 எனவும், கல்லூரி மாணவர்களுக்கு ரூ.25 என்பது ரூ.35 எனவும் உயர்த்தப்பட்டுள்ளது.

★ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ / மாணவியருக்கு 2006–07ஆம் ஆண்டு முதல் எண்ணெய், சோப்பு போன்ற பல்வகைச் செலவினத்திற்கு வழங்கப்படும் உதவித்தொகை பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியருக்கு மாதம் ரூ.15லிருந்து ரூ.25 ஆகவும், கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியருக்கு ரூ.15லிருந்து ரூ.35 ஆகவும், முதுகலைப் பட்டதாரி விடுதிகளில் தங்கிப் பயிலும்

மாணவ / மாணவியருக்கு ரூ.25லிருந்து ரூ.35ஆகவும் உயர்த்தப்பட்டு ரூ.129.73 இலட்சம் செலவில் 1,18,768 மாணவ / மாணவியர் பயனடைந்துள்ளனர்.

★ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ / மாணவியருக்கான விடுதிகளை நன்கு பராமரிக்கும் பொருட்டு சிறப்புப் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக ரூபாய் 10 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து 5.10.2006 அன்று அரசு ஆணை வெளியிடப்பட்டு, 706 விடுதிகளில் பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**விடுதிகள் மேம்பாடு**

★ 2006–07ஆம் நிதியாண்டில், 100 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ / மாணவியர் விடுதிகளுக்கு ஈர அரவை இயந்திரம் ஒன்று ரூ.10,000 வீதம் ரூ.10 இலட்சம் செலவினத்தில் 100 ஈர அரவை இயந்திரங்கள் வழங்கப் பட்டுள்ளன.

★ ஆதிதிராவிடர் நல விடுதிகளில் ஒரு விடுதிக்கு 15 மின்விசிறிகள் வீதம் 585 விடுதிகளில் மொத்தம் 8,775 மின்விசிறிகள் ரூ.99.45 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

★ ஆதிதிராவிடர் நல கல்லூரி மற்றும் முதுகலைப் பட்டதாரி மாணவர் விடுதிகளில் தங்கிப்படிக்கும் ஆதிதிராவிட மாணவ / மாணவியர் பயனடையும் வகையில் ரூ.94.71 இலட்சம் செலவில் அறைகலன்கள் வழங்குவதற்கு 15.9.2006 அன்று அரசு ஆணையிட்டு, 2,706 மாணவ / மாணவியர் பயனடைந்துள்ளனர்.

★ 14 அரசு ஆதிதிராவிடர் நல பெண்கள் விடுதிகளுக்கு ரூ.34.06 இலட்சம் செலவில் சுற்றுச் சுவர் கட்டப்பட்டுள்ளது.

**விடுதிகளில் கூடுதலாக 2,000 இடங்கள்**

★ விடுதிகளில் தங்கிப் படிக்க மாணவ, மாணவியர் விரும்புவதைத் தொடர்ந்து, 2006–07ஆம் ஆண்டு முதல் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை விடுதிகளில் ரூ.35.22 இலட்சம் செலவில் கூடுதலாக 1,000 இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன; 2007–08இல் ரூ.50 இலட்சம் செலவில் மேலும் 1,000 கூடுதல் இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**ஆதிதிராவிட மாணவர்களுக்குப் புதிய விடுதிகள்**

★ திருவாரூரில் ஆதிதிராவிடர் நலப் பள்ளி மாணவிகள் 50 பேர் தங்கிப் பயில்வதற்குப் புதிய விடுதி கட்டப்பட்டுள்ளது.

★ பாரதிதாசன் பல்கலைக்கழக வளாகத்திலும், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்திலும் ஆதிதிராவிட மாணவர்களுக்கென ஒரு விடுதியும், மாணவிகளுக்கென ஒரு விடுதியும் ஆக மொத்தம் நான்கு விடுதிகள் கட்டுவதற்கு மாநில அரசின் பங்காக ரூ.370.20 இலட்சம் ஒதுக்கீடு.

**பள்ளிகள் நிலை உயர்வு**

★ 5 அரசு ஆதிதிராவிடர் நல நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக ரூ.1.32 கோடி செலவிலும்,

★ 5 அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக ரூ.1.77 கோடி செலவிலும் நிலை உயர்த்தப்பட்டுள்ளது.

**புதிய பள்ளிக் கட்டடங்கள்**

★ 2006–07ஆம் நிதியாண்டில் 15 அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் ஒரு பள்ளிக்கு 2 கூடுதல் வகுப்பறைகள் வீதம் 30 கூடுதல் வகுப்பறைகள் ரூ.99 இலட்சம் செலவிலும், 3 ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் ஒரு உயர்நிலைப் பள்ளிக்கு ஆய்வுக் கூடங்களும், 10 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 12 மேல்நிலைப் பள்ளிகளில் மொத்தம் 43 கூடுதல் வகுப்பறைகள் ரூ.199.90 இலட்சம் செலவிலும் புதிய பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

★ 40 அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு எழுதும் மேசைகளுடன் நீண்ட பெஞ்சுகள் ரூ.138 இலட்சம் செலவில் வழங்கப் பட்டுள்ளது.

★ ஆதிதிராவிடர் நல சிறப்புக் கூறு திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக, தாட்கோ மூலமாகவும் மற்றும் பிற துறைகள் மூலமாகவும் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு மைய அரசிடமிருந்து ரூ.44.82 கோடி மைய சிறப்பு நிதியாக பெற்று தாட்கோவிற்கு விடுவிக்கப் பட்டுள்ளது.

★ அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிக்கு, பள்ளி ஒன்றுக்கு ரூ.10 இலட்சம் வீதம் மூன்று பள்ளிகளுக்கு ரூ.30 இலட்சம் செலவில் ஆய்வுக் கூடங்கள் கட்டப் பட்டுள்ளன. மேலும் 3 உயர்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.19.80 இலட்சம் செலவில் தலா 2 வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளன.

★ ஆதிதிராவிடர் நல உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக நபார்டு வங்கியின் கடனுதவி மூலம் ரூ. 45.80 கோடி செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ ஆதிதிராவிடர் நல சிறப்புக் கூறு திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக, தாட்கோ மூலமாகவும் மற்றும் பிற துறைகள் மூலமாகவும் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு மைய அரசிடமிருந்து ரூ.48.98 கோடி மைய சிறப்பு நிதியாகப் பெற்று தாட்கோவிற்கு ரூ.44.08 கோடி (90%) மற்றும் ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள் / விடுதிகள் மற்றும் ஆதிதிராவிடர் காலனிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்ய ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு ரூ. 4.90 (10%) கோடி விடுவிக்கப்பட்டுள்ளன.

**சட்டப் பட்டதாரிகளுக்கு உதவி**

★ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சட்டப் பட்டதாரிகள் ஒவ்வொருவருக்கும் சொந்தமாக சட்டத்தொழில் தொடங்க வழங்கப்படும் ஊக்குதவித் தொகை ரூ.5,000 லிருந்து ரூ.10,000 ஆக உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. 2002–03ஆம் ஆண்டு முதல் 2006–07ஆம் ஆண்டு வரை விண்ணப்பித்து நிலுவையிலுள்ள 500 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சட்டப் பட்டதாரிகளுக்கு சட்டத் தொழிலைத் தொடங்க ஒவ்வொருவருக்கும் ரூ.10,000 வீதம் மொத்தம் ரூ.50 இலட்சம் நிதியுதவி சிறப்பு மைய நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளன.

★ 2007–08 ஆம் ஆண்டிற்கு ரூ. 10,000 வீதம் மொத்தம் ரூ.50 இலட்சம் நிதி உதவி சிறப்பு மைய நிதியிலிருந்து வழங்கப்பட்டது.

**நாட்டில் முதன்முறையாக சிறப்பு மாநில நிதி**

★ 2006–07ஆம் நிதியாண்டில் நாட்டிலேயே முதன்முறையாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் பொருளாதார மேம்பாட்டுக்காக வருவாய் ஈட்டக்கூடிய திட்டங்களைச் செயல்படுத்த மைய அரசு வழங்கி வரும் சிறப்பு நிதி உதவியைப் போன்று, ரூ.25 கோடி மதிப்பீட்டில் ஒரு சிறப்பு மாநில நிதி உதவித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதேபோன்று 2007–08ஆம் நிதியாண்டில் ரூ.25 கோடி மதிப்பீட்டில் சிறப்பு மாநில நிதி உதவித் திட்டத்தை மாநில அரசு செயல்படுத்தியுள்ளது.

**பயிற்சி – மானியம்**

★ விமானப் பணிப்பெண் பயிற்சி, இளைஞர்களுக்கு விமானத்திற்குள் (Cabin Crew) பணி செய்யும் பயிற்சி, கட்டுமானத் தொழில், ஆடை வடிவமைப்பு, பிளாஸ்டிக் பொருட்கள் செய்தல், கணினி வடிவமைப்பு, காலணி வடிவமைப்பு, உணவு தயாரித்தல், உணவு பதப்படுத்துதல், செவிலியர் பயிற்சி, கணினி வன்பொருள் பயிற்சி, சில்லறை விற்பனை மேலாண்மை பயிற்சி, இளங்கலைப் பட்டம் பயிற்சி, பி.பி.ஓ. கால் சென்டர் பயிற்சி மற்றும் மெடிக்கல் டிரான்ஸ்கிரிப்ஷன் பயிற்சி போன்ற பயிற்சிகளை அளிப்பதற்கு ரூ.25 கோடி வழங்கப்பட்டன.

★ ஆதிதிராவிட மாணவ, மாணவிகள் நவீன வேலை வாய்ப்புகள் பெற ரூ.10 கோடி செலவில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

★ 6,000 ஆதிதிராவிட இளைஞர்கள் சுயதொழில் தொடங்கிட ரூ.7 கோடி மானிய உதவி வழங்கப்பட்டுள்ளது.

**துப்புரவுப் பணியாளர்களுக்கு மறுவாழ்வு**

★ கொத்தடிமைத் தொழிலாளர் குறித்து மைய அரசின் நிதியுதவியுடன் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் ரூ.60 இலட்சம் செலவில் மறு கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது.



மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.ஆ.தமிழரசி அவர்கள் சென்னையில், விமானப் பணிப்பெண் பயிற்சி மற்றும் விமானப் பணியாளர் பயிற்சியினை தொடங்கிவைத்தார். (28.02.2008)

★ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டங்களின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களில் பகு (Divisible) மற்றும் பகா (indivisible) இனங்களை அடையாளம் கண்டு, குறைந்த பட்சம் 19% நிதி ஆதிதிராவிடர் நலன்களுக்கும், 1.04% நிதி பழங்குடியினர் நலன்களுக்கும் செலவிடுவதை உறுதிசெய்யும் விதமாக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கண்காணிக்கும் துறையாக (Nodal Department) நியமனம் செய்யப்பட்டுள்ளது.

**சமுதாயக் கூடங்கள்**

★ 2006–07ஆம் நிதியாண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின குடியிருப்புப் பகுதிகளில் ரூ.74 இலட்சம் செலவில் புதிதாக 12 சமுதாய நலக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளது. 2007–08ஆம் நிதியாண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புப் பகுதிகளில் 8 சமுதாய நலக் கூடங்களை புதிதாகக் கட்டுவதற்கு ரூ.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**இலவச வீட்டுமனைப் பட்டா**

★ 12,215 ஆதிதிராவிட மக்களுக்கு ரூ.5.26 கோடி மதிப்புள்ள வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ 12,740 ஆதிதிராவிட மக்களுக்கு ரூ.5.71 கோடி மதிப்புள்ள வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ ஆதிதிராவிடர் நல விடுதிகளில் மாதம் ஒன்றுக்கு ரூ.500 தொகுப்பூதியம் பெற்று வந்த 112 சமையலர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கவும், மாதமொன்றுக்கு ரூ.70, ரூ.90, ரூ.100 மற்றும் ரூ.250 என வெவ்வேறு தொகுப்பூதியம் பெற்றுக் கொண்டிருந்த 102 சமையல் உதவியாளர்களின் ஊதியம் மாதம் ஒன்றுக்கு ரூ.500 ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளன.

★ தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம் சில்லாங்குளம் கிராமம் முத்துக்கருப்பன் நினைவு கல்வி அறக்கட்டளை நடத்தும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் 45 ஆசிரியர்களுக்கு காலமுறை ஏற்ற சம்பள விகிதத்தில் ஊதியம் வழங்க ஏதுவாக ரூ.57.65 இலட்சம் உதவித் தொகையாக 2006–07ஆம் கல்வி ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

**ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ் தேர்வுக்கு உதவி**

★ இ.ஆ.ப., இ.கா.ப. முதல் நிலைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்று முதன்மைத் தேர்வுக்குச் செல்லும் 100 ஆதிதிராவிட மாணவ, மாணவியருக்குத் தலா ரூ.25,000 வீதம் நிதியுதவி வழங்க ரூ.25 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

**புதிய நியமனங்கள்**

★ 32 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள், 299 பட்டதாரி ஆசிரியர்கள், 211 இடை நிலை ஆசிரியர்கள், 256 சமையலர்கள் மற்றும் 70 காவலர்கள் புதிதாக நியமிக்கப் பட்டுள்ளனர்.

## பழங்குடியினர் நலன்

**பழங்குடியின மாணவர் நலன்**

★ அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியருக்கு சிறப்புப் பயிற்சி வழங்க ரூ.53.70 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

★ திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலை குனிகாந்தூர் கிராமம் ஊரக வளர்ச்சித் தொண்டு நிறுவனம் நடத்தும் விடுதியில் பயிலும் 200 மாணவ/ மாணவியருக்கு உணவு மானியமாக 2006–07ஆம் நிதியாண்டில் ரூ.4.68 இலட்சமும், 2007–08ஆம் நிதியாண்டில் ரூ.57.87 இலட்சமும், விருதுநகர் மாவட்டத்தில் ராம்கோ குருப் டிரஸ்ட் நடத்தும் உண்டி உறைவிட பள்ளியில் பயிலும் 69 விடுதி மாணவர்களுக்கு உணவு மானியமாக ரூ.1.52 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

★ நீலகிரி, சேலம் மற்றும் தருமபுரி மாவட்டத்தில் முறையே கரிக்யூர், அறுநூத்துமலை மற்றும் வாச்சாத்தி அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக ரூ.97.92 இலட்சம் செலவில் நிலை உயர்த்தப்பட்டது.

★ வாடகைக் கட்டடங்களில் இயங்கும் ஐந்து பழங்குடியின மாணவ / மாணவியர் விடுதிகளுக்கு அனைத்து வசதிகளுடன் புதிய கட்டடம் ரூ.2 கோடி செலவில் கட்டப்பட்டது.

★ அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 50 ஆசிரியர்கள்/ 50 சமையலர்கள் தங்குவதற்கு வாடகையற்ற தனித் தனி குடியிருப்பில்லங்கள் கட்டுவதற்கு ரூ.1 கோடி ஒதுக்கீடு. செய்யப்பட்டது.

★ 95 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு பாதுகாக்கப்பட்டத் தூய்மையான குடிநீர் சுத்திகரிக்கும் கருவிகள் வழங்க ரூ.8.55 இலட்சம் செலவிடப்பட்டது.

**பழங்குடியினர் பள்ளிகள்**

★ 2006–07ஆம் நிதியாண்டில் சேலம் மற்றும் தருமபுரி மாவட்டத்தில் முறையே எஸ். தாதம்பட்டி மற்றும் கரியகோவில்வளவு அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளியாக ரூ.49.46 இலட்சம் செலவில் நிலை உயர்த்தப்பட்டது.

★ ஈரோடு மாவட்டம் ஆசனூர், சேலம் மாவட்டம் கருமாந்துரை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம் ஆனைக்கட்டி ஆகிய இடங்களில் இயங்கி வரும் மூன்று அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலை/மேல்நிலை பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டித்தரவும், அறை கலன்கள் வாங்கவும் அரசு ரூ.30 இலட்சம் செலவிட்டுள்ளது.

★ சேலத்தில் ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளியின் தொடராச் செலவினத்திற்கு ரூபாய் ஒரு கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

★ சேலத்தில் தொடங்கப்பட்டுள்ள ஏகலைவா மாதிரி மேல்நிலைப் பள்ளிக்கு 2006–07ஆம் ஆண்டில் தொடராச் செலவினமாக ரூ.150 இலட்சமும், தொடர் செலவினமாக ரூ.30 இலட்சமும் செலவிடப்பட்டது.

**பழங்குடியினருக்கு வீடுகள்**

★ 2006–07ஆம் நிதியாண்டில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் (விழுப்புரம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில்) மொத்தம் 46 வீடுகள் ரூ.16.79 இலட்சம் செலவில் கட்டப்பட்டது.

★ பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் பரவி வாழும் பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டிற்காக ஈரோடு, பெரம்பலூர், திருவண்ணாமலை, வேலூர் மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் உள்ள பழங்குடியினருக்கு

71 ஆடு அலகுகள் மற்றும் 25 கறவை மாடுகள் வாங்கி வழங்குவதற்கு அரசு ரூ.10.14 இலட்சம் செலவிடப்பட்டது.

★ சேலம் மாவட்டம் ஜருகுமலைப் பகுதியில் அமைந்துள்ள மேலூர் மற்றும் கீழூர் பழங்குடியின கிராமங்களில் பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் மின் வசதி அளிப்பதற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அரசு ரூ.27.57 இலட்சம் வழங்கியுள்ளது.

★ திருவண்ணாமலை, நாமக்கல், வேலூர், விழுப்புரம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் 8 பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்ய அரசு ரூ.32 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

★ ஜனஸ்ரீ பீம யோஜனா ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு ரூ.80 இலட்சம் நிதி விடுவிக்கப்பட்டு 16,000 பண்டைய பழங்குடியினர் பயனடைந்தனர்.

**பழங்குடியினருக்குத் தொகுப்பு வீடுகள்**

★ 2006–07ஆம் நிதியாண்டில் திண்டுக்கல், கிருஷ்ணகிரி மற்றும் சேலம் மாவட்டங்களில் பழங்குடியினருக்கு மொத்தம் 123 தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு ரூ.44.57 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

★ இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவுக்கூறு 275(1)ன் கீழ் பழங்குடியினர் பகுதிகளில் குடிநீர் வசதி அளித்தல், தெரு விளக்கு அமைத்தல், சாலைவசதி செய்தல், சிறு பாலங்கள் கட்டுதல், வீடுகள் கட்டுதல், கதிரடிக்கும் தளம் அமைத்தல் மற்றும் சிறு பாசன வசதி செய்தல், ஆகியவற்றிற்காக 2006–07ஆம் ஆண்டில் திருவண்ணாமலை, நாமக்கல், தருமபுரி, திருச்சிராப்பள்ளி, விழுப்புரம் மற்றும் ஈரோடு ஆகிய 6 மாவட்டங்களுக்கு முதல் தவணையாக மொத்தம் ரூ.144.595 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

★ திருவண்ணாமலை, சேலம், திருச்சி மற்றும் ஈரோடு ஆகிய 4 மாவட்டங்களுக்கு இரண்டாவது தவணையாக மொத்தம் ரூ.106.405 இலட்சம் செலவிடப்பட்டது.

★ 2006–07ஆம் ஆண்டிற்கான பழங்குடியினர் துணைத்திட்டத்தின் கீழ் மைய அரசு சிறப்பு நிதி உதவித் திட்டத்தில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகள் மற்றும் இதர பகுதிகளில் வருவாய் ஈட்டித்தரும் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ரூ.326.97 இலட்சம் செலவிடப்பட்டது.

★ பண்டைய பழங்குடியினருக்கான மைய அரசின் நிதியுதவித் திட்டத்தின் கீழ் 2007–08 ஆம் ஆண்டில் திருவள்ளூர் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் குடிநீர் வசதி,

திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் வீடுகள் கட்டும் திட்டம், மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் தெரு விளக்கு அமைத்தல் ஆகிய பணிகளுக்காக ரூ. **29.50** இலட்சம் விடுவிக்கப்பட்டது.

★ இந்திய அரசியலமைப்புக் கூறு **275(1)**ன் கீழ் ஈரோடு, வேலூர், தருமபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் சிறுபாசன வசதிக்காக ரூ.**139** இலட்சம் ஒதுக்கப்பட்டது.

★ திருச்சி மாவட்டம் துறையூர் வட்டம், உப்பிலியாபுரம் ஊராட்சி ஒன்றியப் மேல்செங்காட்டுப்பட்டி மற்றும் தென்பரநாடு கிராமத்தில் அருகே உள்ள பச்சமலை ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டுவதற்கு ரூ.**4.95** இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

★ **2007–08**ஆம் ஆண்டிற்கான பழங்குடியினர் துணைத்திட்டத்தின் கீழ் மைய அரசு சிறப்பு நிதியுதவித் திட்டத்தில் **7** மாவட்டங்களில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் வருவாய் ஈட்டித்தரும் திட்டங்கள் கறவை மாடுகள் மற்றும் ஆடு அலகுகள் வழங்குவதற்காக ரூ.**86.55** இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

★ பழங்குடியினர் துணைத்திட்டத்தின் கீழ் மைய அரசு சிறப்பு நிதி உதவித் திட்டத்தில் ஊக்கத் தொகை திருவண்ணாமலை, விழுப்புரம், திருச்சி, வேலூர், நாமக்கல் மற்றும் சேலம் ஆகிய **6** மாவட்டங்களில் செங்கல் சூளை அமைத்தல் மற்றும் கறவை மாடுகள் வழங்குதல் ஆகிய வருவாய் ஈட்டித்தரும் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ரூ.**48.55** இலட்சம் விடுவிக்கப்பட்டது.

★ பழங்குடியினர் துணைத்திட்டத்தின் கீழ் மைய அரசு சிறப்பு நிதி உதவித் திட்டத்தில் ஊக்கத் தொகை ரூ.**32.71** இலட்சம் தருமபுரி மாவட்டம் அரூர் வனக் கோட்டத்திற்கு பழங்குடியினர் நலத் திட்டங்களை செயல்படுத்துவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ நீலகிரியில் வாழும் பழங்குடியினர்களின் நலனுக்காக மலைவாழ் மேம்பாட்டுத் திட்டத்தினை (HADP) செயல்படுத்த ரூ.**1226.39** இலட்சம் செலவிடப் பட்டுள்ளது.

★ கோவை, திண்டுக்கல், தேனி, மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் பழங்குடியினர் நலப் பகுதிகளில் பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.**50.90** இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியத்தின் முதல் கூட்டம் **14.8.2007** அன்று நடைபெற்றது. தமிழ்நாடு நல வாரியத்தில் உறுப்பினர்கள் சேர்த்தல், பதிவினை சரிபார்த்தல், அடையாள அட்டை வழங்குதல், பழங்குடியினர் மற்றும் அவரது

குடும்பத்தை சார்ந்தவர்களுக்கான நலத் திட்டங்களை செயல்படுத்துவதற்கு பழங்குடியினர் நல வாரியத்திற்கு ரூபாய் 1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

★ ஆதிதிராவிட மகளிர் சமூக மற்றும் பொருளாதார மேம்பாடு அடையும் திட்டத்தின் கீழ், கடந்த இரண்டாண்டுகளில் 3,927 பயனாளிகளுக்கு ரூ.1,266.56 இலட்சம் மானியமாக செலவிடப்பட்டுள்ளது.

★ வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஆதிதிராவிடர்கள் சுய தொழில் தொடங்க, தனி நபர் கடன் திட்டத்தின் மூலம் கடந்த 2 ஆண்டுகளில் 23,539 பயனாளிகளுக்கு ரூ.2,323.27 இலட்சம் மானியமாக செலவிடப்பட்டுள்ளது.

★ ஆதிதிராவிட/பழங்குடியின மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதார நிதி உதவித் திட்டத்தின் கீழ், கடந்த 2 ஆண்டுகளில் 72,127 பயனாளிகளுக்கு ரூ.4,344.92 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

★ மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான சுழல் நிதி கடந்த 2 ஆண்டுகளில் 1,27,870 பயனாளிகளுக்கு ரூ.695.59 இலட்சம் மானியமாக செலவிடப்பட்டுள்ளது.

★ ஆதிதிராவிடர் / பழங்குடியின இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், கடந்த 2 ஆண்டுகளில் 2,745 பயனாளிகளுக்கு ரூ.611.96 இலட்சம் மானியமாக செலவிடப்பட்டுள்ளது.

★ மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை நிதித் திட்டத்தின் கீழ் கடந்த 2 ஆண்டுகளில் 8,720 பயனாளிகளுக்கு ரூ.651.91 இலட்சம் மானியமாக செலவிடப்பட்டுள்ளது.

★ மைய சிறப்பு உதவித் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர்கள் மட்டும் பயன்பெற வழிவகையுள்ளது. எனவே, ஆதிதிராவிடர்களுக்கு இணையாக பழங்குடியினர், மதம் மாறிய கிறித்தவர்களும் பயனடையும் வகையில் தமிழகத்தில் முதன் முறையாக மாநில அரசு 2006–07ஆம் ஆண்டில் இருந்து ஆண்டொன்றிற்கு ரூ.25 கோடி சிறப்பு மாநில உதவியாக அளித்து வருகிறது. 2006–07 ஆண்டில் விமானப் பணிப்பெண் பயிற்சி, செவிலியர் பட்டயப் படிப்பு, கணினிப் பயிற்சி, உணவு தயாரித்தல் பயிற்சி போன்ற பயிற்சிகள் 11,032 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு ரூ.10 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத்தொகையில் ரூ.8 கோடி மகளிர் குழுத் திட்டங்களுக்காக 13,124 பயனாளிகளுக்காகவும் ரூ.7 கோடி தனி நபர் கடன் திட்டத்திற்காக 6,183 பயனாளிகளுக்காகவும் செலவிடப்பட்டுள்ளது. 2007–08ஆம் ஆண்டில் சிறப்பு மாநில நிதி உதவியாக தொழிற் பயிற்சிகளுக்கு ரூ.25 கோடி ஒதுக்கப்பட்டு 20,199 பயனாளிகளுக்கு பயிற்சிகளுக்காக செலவிடப்பட்டுள்ளது.

★ ★ ★



# 3,55,699 மீனவர் மற்றும் 2,16,419 மீனவ மகளிருக்கு ரூ.67.86 கோடி தேசிய சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டப் பயன்

திரு. **கே.பி.பி.சாமி** அவர்கள்
மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர்

**மீன்வளத்துறை**

**தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத்திட்டம்**

★ கடந்த இரண்டாண்டுகளில் 3,55,649 மீனவர்களுக்கு ரூ.42,03,40,650 வழங்கப்பட்டுள்ளது.

**தேசிய கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்**

★ இத்திட்டத்தின் கீழ் இரண்டாண்டுகளில் 2,16,419 பேர் பயனடையும் வகையில் ரூ.25,82,33,450 வழங்கப்பட்டுள்ளது.

**மீனவர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்ட டீசல் எரியெண்ணெய் வழங்கும் திட்டம் (மாநிலத் திட்டம்)**

★ மீனவர்களுக்கு 100% வரிவிலக்கு அளிக்கப்பட்ட டீசல் எரியெண்ணெய் வழங்கி 20,200 மீனவர்கள் பயனடைந்துள்ளனர். இதன் விலை ஒரு லிட்டருக்கு ரூ.6 குறைத்து மீனவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

★ தமிழக அரசு ஆகஸ்ட் 2008 முதல் டீசல் எரியெண்ணெய் அளவை 1,000 கிலோ லிட்டரிலிருந்து 1,500 கிலோ லிட்டராக உயர்த்தியுள்ளது.

**மீனவர்களுக்கு டீசல் வாங்குவதற்கான உதவி வழங்கும் திட்டம்**

★ 2006–07ஆம் ஆண்டில் உதவித்தொகையாக ரூ.259 இலட்சம் வழங்கியுள்ளது.

★ 5,000 மீனவர்கள் பயனடைந்துள்ளனர்.

**மீனவர்களுக்கு இலவச வீடு வழங்கும் திட்டம்**

★ 2006–07ஆம் ஆண்டில் 2,000 வீடுகள் கட்டுவதற்கு ரூ.740 இலட்சம் ஒப்பளித்துள்ளது.

**செயற்கைப் பாறைகள் அமைக்கும் திட்டம்**

★ அரசு, தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளின் 10 இடங்களில் செயற்கைப் பாறை அமைக்க ரூ.20 இலட்சம் ஒப்பளித்துள்ளது.

★ பொன்விழா கிராம மேம்பாட்டு சிறப்புத் திட்டத்தின் கீழ் 16,837 பயனாளிகளுக்கு வேலைவாய்ப்பளிக்கவும், திறமையை ஊக்குவிக்கவும் ரூ. 83.25 இலட்சம் செலவழிக்கப்பட்டது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்,
சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திடும் வகையில்
கூடுதல் நிவாரணமாக கனரக மிதிவண்டிகள், உயிர்காக்கும் கவச உடைகள்
குளிரூட்டும் ஐஸ் பெட்டிகள், மீண்டும் எரியூட்டத்தக்க கைவிளக்குகள் மற்றும்
முதலுதவிப் பெட்டிகள் ஆகியவற்றை வழங்கினார். (12.10.2007)

★ மீன் பதப்படுத்தும் திட்டத்தில் சூரிய வெப்பத்தினால் மீன்களைப் பதப்படுத்தும் முறையில் 3,310 பயனாளிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டு ரூ.1,245.33 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.

★ கடல் மீன்கள் உற்பத்தியைப் பெருக்க கார்ட் என்னும் ஒரு சங்கத்தினை நிறுவி, பதிவு செய்யப்பட்டு, இடத்தைத் தேர்வு செய்யும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**நிலவள, நீர்வளத் திட்டம்**

★ உலக வங்கி ரூ.17.3 கோடி தொகையினைக் கொண்டு 63 சிறிய குளங்களில் உள்ள மீன்வளங்களை துறை மூலம் பெருக்க உதவி வழங்கியுள்ளது.

★ 2008–09ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.253.12 இலட்சம் செலவினம் மேற்கொண்டு 16 சிறிய குளங்களை மேம்படுத்த உள்ளது.

**மேற்குத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டம்**

★ 2006–07ஆம் ஆண்டில் சோலையாறில் மீன்பண்ணை அமைக்கரூ.10 இலட்சம் ஒப்பளித்துள்ளது.

★ 2006–07ஆம் ஆண்டிற்கு அரசு ரூ.22.50 இலட்சம் ஒப்பளித்துள்ளது.

**தேசிய விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒப்பளிக்கப்பட்ட திட்டங்கள்**

★ இத்திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்கள் மொத்தம் ரூ.703 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**விரிவாக்கம் மற்றும் பயிற்சி**

★ ரூ.65 இலட்சம் செலவில் இராமேஸ்வரம், குளச்சல் மற்றும் தூத்துக்குடி நகரங்களில் மூன்று பயிற்சி மையங்களும் பழவேற்காட்டில் விழிப்புணர்வு மையம் ஒன்றும் அமைத்திட அரசு ஆணை வழங்கியுள்ளது.

★ கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்துறை, ரூ.26 இலட்சமும், தமிழக அரசின் 20% பங்காக ரூ.13 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

**கடல்வள கல்வித் திட்டம்**

★ இத்திட்டத்தின் கீழ் தற்போதைய அரசு கடல்வள மற்றும் கப்பல் துறை அறிவியல் கல்வியினைப் பயின்ற 100 மீனவ இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பிற்காக ரூ.50 இலட்சம் செலவு செய்ய ஒதுக்கியுள்ளது.

**சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டம்**

★ தமிழ்நாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ரூ.110.36 கோடி செலவில் வலைகள், கவச உடைகள், கைவிளக்குகள், மிதி வண்டிகள் மற்றும் குளிர்சாதனப் பெட்டிகளை 42,000 மீனவர்களுக்கு வழங்கும் திட்டத்தினை அறிவித்துள்ளார். இத்திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு மீன்வள மேலாண்மை கூட்டுறவு இணையத்தின் மூலம் மீனவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் உதவி தள்ளுபடி செய்தல்.**

★ இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மீன்வள மேலாண்மை கூட்டுறவு இணையத்தின் மூலம் மீனவர்களுக்கு கட்டுமரம், வள்ளம், வலைகள் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் வழங்க கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது.

★ கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்துறை முதன்மை மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் 5,635 மீனவர்களுக்கு வழங்கப்பட்ட ரூ.19.56 கோடி கடனுதவி மற்றும் வட்டியினையும் தள்ளுபடி செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

★ ★ ★



# நாளொன்றுக்குப் பால் உற்பத்தி 26.27 இலட்சம் லிட்டராக உயர்வு


திரு. **உ.மதிவாணன்** அவர்கள்
மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்


பால்வளத்துறை

**கூட்டுறவுச் சங்கங்களில் பால் உற்பத்தி**

★ 7,662 கூட்டுறவுச் சங்கங்களில் மொத்தப் பால் உற்பத்தி நாள் ஒன்றுக்கு 25.10 இலட்சம் லிட்டர். 2007–08ஆம் ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் எண்ணிக்கை 7,833ஆக அதிகரித்து பால் உற்பத்தியும் நாளொன்றுக்கு 26.27 இலட்சம் லிட்டர் ஆக உயர்ந்துள்ளது.

**பால் கொள்முதல் விலை**

★ பாலின் கொள்முதல் விலை ஒரு லிட்டருக்கு, பசும்பாலுக்கு ரூ.2 கூடுதலாகவும், எருமைப் பாலுக்கு கூடுதலாக ரூ.4ஆகவும் உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது. 4.08 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

**குறிப்பிடத்தக்க சாதனைகள்**

★ பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.418 இலட்சத்தில் ரூ.218 இலட்சம் மானியமாக வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

★ 129 மகளிர் சங்கங்கள் உட்பட 364 புதிய பால் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

★ 178 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் புத்துயிரூட்டப்பட்டன.

★ அதிகபட்சமாக ஒரு நாளில் 29.40 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து முதல் முறையாக சாதனையை எய்தியுள்ளது.

★ மொத்தம் உள்ள 7,833 சங்கங்களில் 7,145 சங்கங்கள் இலாபத்தில் செயல்பட்டு வருகின்றன.

★ 1,500 சங்கங்களில் 3,20,741 பால் உற்பத்தியாளர்களுக்கு, ஈவுத் தொகை, போனஸ் மற்றும் கூடுதல் கொள்முதல் விலை மூலம், ரூ.524 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

★ ரூ.29.31 கோடி மதிப்பீட்டில் நாள் ஒன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள பால் பண்ணை மற்றும் 20 மெட்ரிக் டன் திறன் கொண்ட பால் பவுடர் தொழிற்சாலை திருவண்ணாமலையில் அமைக்க அரசால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. 2007–08ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டு ரூ.703.52 இலட்சம் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்திற்கு வழங்கப்பட்டது.

★ தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.600 இலட்சம் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.



மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.உ.மதிவாணன் அவர்கள்,
பால்வளத்துறையில் பணியாற்றிவரும் ஊழியர்களுக்கு பணி உயர்வு ஆணையை வழங்கி,
பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றிவரும்
பணியாளர்களுக்கு பொங்கல் ஊக்கத்தொகை வழங்கினார்.

**வழிவகைக் கடனை பங்கு முதலாக மாற்றுதல் மற்றும் மத்திய காலக் கடன் வழங்கியது**

★ வழிவகைக் கடனாக ரூ.25 கோடி வழங்கப்பட்டுள்ளது. வழிவகைக் கடன், வட்டி, அபராத வட்டி ஆகமொத்தம் ரூ.30.20 கோடி ரூபாயை பங்கு முதலாக மாற்ற ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

★ இத்திட்டத்தில் 24,500 பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட பல்வேறு பால்பொருட்களின் மொத்த மதிப்பு ரூ.50,22,500.

**போனஸ் மற்றும் கருணைத்தொகை**

★ 7,436 ஊழியர்களுக்கு ரூ. 431.16 இலட்சம் வழங்கப்பட்டது.

★ போனஸ் தொகையை கணக்கிடும்பொழுது ஏற்கெனவே அடிப்படை சம்பளம் மற்றும் பஞ்சப்படி ரூ.2,500ஆக இருந்த விதியைத் தளர்த்தி ரூ.3,500ஆக உயர்த்தியும் ஆணை வழங்கப்பட்டது. 7,279 ஊழியர்களுக்கு ரூ. 597.87 இலட்சம் வழங்கப்பட்டது.

**பொங்கல் திருநாளின் போது வழங்கப்படும் உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை**

★ 2002 முதல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஊக்கத் தொகையை பொங்கல் 2007 முதல் ஒவ்வொரு ஊழியருக்கும் ரூ.825 ஊக்கத்தொகையாக வழங்க ஆணையிடப்பட்டது. இதன் பயனாக இணையம் மற்றும் ஒன்றிய ஊழியர்கள் 7,700 பேர் பயனடைந்துள்ளார்கள். இவர்கள் பெற்ற மொத்த ஊக்கத்தொகை ரூ.63.53 இலட்சம்.

★ ரூ.825 ஆக வழங்கப்பட்ட ஊக்கத்தொகையை ரூ.1,000ஆக உயர்த்தி வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதனால் இணைய மற்றும் ஒன்றியப் பணியாளர்கள் 7,310 பேர் பயனடைந்தார்கள். இவர்கள் பெற்ற மொத்த ஊக்கத்தொகை ரூ. 73.10 இலட்சம்.

**மருத்துவச் செலவு ஈடு செய்யும் திட்டம்**

★ இணையப் பணியாளர்களுக்கு மருத்துவச் செலவினை ஈடு செய்யும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 266 நபர்களுக்கு ரூ.45.85 இலட்சம் மருத்துவச் செலவுக்காக வழங்கப்பட்டுள்ளது.

**தொழிலாளர் நலன்**

★ ஆண்களுக்கான சீருடை தையற்கூலி ரூ.300லிருந்து ரூ.400ஆகவும் மகளிருக்கு ரூ. 60லிருந்து ரூ. 90ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

★ சலவைப்படி ஒரு மாதத்திற்கு ரூ.25லிருந்து ரூ.50ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

★ இரவு நேரப்படியாக ரூ. 5 லிருந்து ரூ.10ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

★ வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட பணியாளர்களுக்கு 5 சதவீத தனி ஊதியம் (Personal Pay) வழங்கப்பட்டு வருகிறது.

★ காஞ்சிபுரம்–திருவள்ளூர் ஒன்றியத்தின் கால்நடைத் தீவன ஆலையின் 131 பணியாளர்கள் இணையத்தில் இணைக்கப்பட்டுள்ளார்கள்.

★ அனைத்து இலகு வாகன ஓட்டுநர்களுக்கும் விடுமுறை வசதிகளை மற்ற அலுவலர்களுக்கு உள்ளதுபோல் நீட்டித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

★ ★ ★



# பாரம்பரியத் தொழில்களுக்கு மறுவாழ்வு

திரு. கா. இராமச்சந்திரன் அவர்கள்
மாண்புமிகு கதர்வாரியத்துறை அமைச்சர்

கதர் வாரியத்துறை

**தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம்**

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், பணி நீக்கம் செய்யப்பட்ட தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியப் பணியாளர்களின் 97 பணியாளர்களுக்கும் பணி நியமன ஆணை வழங்கினார்.

★ வாரியப் பணியில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள் ரூ.5,18,98,335 தொகையை அரசு வழங்கியுள்ளது.

★ வணிகம் சார்ந்த பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க ரூ. 9 கோடி அரசு வழங்கியுள்ளது.

★ ஆறாவது ஊதியக்குழு பரிந்துரைப்படி ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்களுக்கு இறப்பு மற்றும் ஓய்வு காலப் பணிக்கொடை தொகுப்பூதியம் வழங்க ரூ.235.16 இலட்சத்தை அரசு வழங்கியுள்ளது.

★ வாரியப் பணியாளர்களுக்கு நீண்டகாலமாக வழங்கப் படாமல் நிலுவையிலிருந்த 14 சதவீதம் அகவிலைப்படி ரூ.90 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

★ பல்வேறு அரசுத் துறைகளில் இதுவரை ரூ.7.09 கோடி மதிப்பிற்கு தளவாடப் பொருட்கள் தயாரித்து விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

★ கதராணையகத்தின் பாரம்பரியத் தொழில்களின் மறுவாழ்வு நலத்திட்ட நிதியின் கீழ், கோவை மாவட்டத்திலுள்ள சூலூர் கதர்த் தொகுப்பினைச் செயல்படுத்திட ரூ.35 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 510 குடும்பங்கள் பயனடைவார்கள்.

★ கதர் ரகங்கள் ரூ.3,460.40 இலட்சம் தொகைக்கும், கிராமத் தொழில் பொருட்கள் ரூ.2,794.22 இலட்சம் தொகைக்கும், விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**பனைத் தொழிலாளர் நல வாரியம்**

★ இலக்கியச்செல்வர் குமரிஅனந்தன் தலைமையில் பனைத் தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.

★ 2006-07ஆம் ஆண்டில் பனைத் தொழிலாளர்களுக்கு இயந்திரங்கள் உபகரணங்கள் மற்றும் கருவிகள் முதலியவைகள் வழங்க மானியமாக ரூ.20 இலட்சம் வழங்கப்பட்டது.

★ பனைத் தொழிலாளர்களுக்கு கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கிடவும் பதநீர் பிரிவில் பாலீதின் பேக்கிங் இயந்திரம், பதநீர் குளிர் பதன இயந்திரம் மற்றும் இதர உபகரணங்கள் வழங்க மானியமாக ரூ.8 இலட்சம் வழங்கப்பட்டது.



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், நீலகிரி மாவட்டத்தில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். (23.05.2007)

★ வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ், பட்டுப்போன பனை மரங்களுக்கும் மற்றும் பனைவிதை நடவு செய்திட நிவாரணம் அளிக்க ரூ.42,33,500 தொகை வழங்கப்பட்டுள்ளது.

★ பனைத் தொழிலாளர்களுக்கு பதநீரை இறக்கவும், விற்கவும், இடம் பெயர்த்து எடுத்துச்செல்லவும், பதநீரிலிருந்து வெல்லம் உற்பத்தி செய்யவும் மூன்று ஆண்டுகளுக்கு உரிமம் நீட்டித்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

★ ★ ★


# 100 ஆண்டுகளைக் கடந்து மக்கள் சேவையில்

TNSC BANK

## TNSC வங்கி

**தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.,**

233, என்.எஸ்.சி.போஸ் ரோடு, த.பெ.எண்.226,
சென்னை - 600 001.
தொலைபேசி : 2534 0301, 2534 0304
தொலைநகல் : 044-2534 0508
மின்னஞ்சல் : tnscbank@vsnl.com

- தமிழ்நாட்டில் உள்ள அட்டவணையிடப்பட்ட ஒரே கூட்டுறவு வங்கி
- சென்னை நகரில் 46 கிளைகள்
- வைப்பீடுகளுக்கு அதிக வட்டி
- அனைத்துக் கிளைகளிலும் கணினி மூலம் துரித சேவை
- 5 கிளைகளில் ஏ.டி.எம். வசதி
- குறைந்த வட்டியில் நகைக்கடன்
- கூடுதல் சேவை நேரம்

வெளியீட்டு ஆணை எண்.1664/வரைகலை/விளம்பரம் 2007, நாள் : 11.10.2007

இணையதளம் : www.tnscbank.com



..ன - தமிழரசு அச்சகத்தில் வடிவமைக்கப்பட்டு அரசு மைய அச்சகம், சென்னை-600 079-ல் அச்சிடப்பட்டது.

# கோ-ஆப்டெக்ஸின் கோலாகலம்

## பருத்தி பட்டின் கோடி அழகு



**கோ-ஆப்டெக்ஸ்**
வழங்குகிறது
**20%**
அரசுத் தள்ளுபடி

குளிர்ச்சியான கோ-ஆப்டெக்ஸ் வண்ணங்களால் உங்கள் வாழ்வை இன்டமயமாக்குங்கள்.

கோ-ஆப்டெக்ஸின் கண்கவர் பட்டு, பருத்தி, ஆடைகளுக்கான துணிவகைகள் 20% அரசுத் தள்ளுபடியுடன்.

வாருங்கள்! வாங்கி மகிழுங்கள்!!

**புதிய வருகை**

"அழகு மயில்" பட்டுப் புடவைகள் "மருதம்" கலப்பிழை பட்டுப் புடவைகள் "கோலங்கள்" கலப்பிழை பட்டுப் புடவைகள்
"மாந்துளிர்" பருத்திப் புடவைகள் "மலையரசி" பருத்திப் புடவைகள் "நாச்சியார்" பருத்திப் புடவைகள் "திருவரங்கம்" பருத்திப் புடவைகள்
"மல்லிகை" பருத்திப் புடவைகள் "கிரி" பருத்திப் புடவைகள் "அரோமா" நறுமண சட்டைகள்

தலைமுறைகளாய் தொடரும் பந்தம் - கோ-ஆப்டெக்ஸ்

வெ.ஆ.எண்.219/வரைகலை/விளம்பரம்/2008 நாள் : 6.2.2008

தமிழரசு

R.N.I. No.21446/70-Regn.No.TN/ARD/48/06-08
TN/PMG(CCR) WPP-518/06-08

